# செஞ்சிக் கோட்டை



ஏ.கே.சேஷாத்திரி எம்.ஏ.,

பதிப்பகம்

## நூல் உருவாக்கியோர்

| | |
|---|---|
| ஆசிரியர் | ஏ. கே. சேஷாத்திரி, எம்.ஏ., |
| முகப்பு ஓவியம் | டாக்டர் உபால்டு |
| வரை படங்கள் | நூலாசிரியர்<br>ஆர். சதானந்தம்<br>நா. ரங்கநாதன் |
| உருலச்சு | அண்ணாமலை, தி. நகர் |
| அச்சுக் கோத்தோர் | து. முருகன், அ. சுந்தரி, விஜயா,<br>மணிமேகலை, எ. ஷர்மிளா. |
| நூல்அச்சிட்டவர் | இரா. திருஞானம், சீனிவாசன் |
| அச்சகத்தார் | S. அருள், S. புகழேந்தி<br>அமுதன் அச்சகம்,<br>எம். ஜி. ஆர். நகர்,<br>சென்னை-600 078 |
| பிழைதிருத்தம் | பேராசிரியர்<br>மது. ச. விமலானந்தம், எம். ஏ.,<br>சேலம் ம.அய்யாசாமி,<br>எம். ஏ., எம். எட்., |

## BIBLIOGRAPHICAL DATA

| | |
|---|---|
| Title of the Book | SENGIK KOTTAI |
| Author | A.K. Seshadri. M.A., |
| Language | Tamil |
| Subject | Archaeology & History |
| Edition | First |
| Published | April, 1994 |
| Paper used | White Printing 11.6 kg<br>& Indian Art paper<br>Double Crown 1×8 |
| Printing Type | 12 pt. |
| No. of Pages | 284 |
| No. of copies | 1000 |
| Printer | Amudhan Achagam<br>M.G R. Nagar,<br>Madras-600 078 |
| Binding | card Board |
| Price | Rs. 200. |
| Call Number | NA. 4421131'E<br>31 N 3 |

# செஞ்சிக் கோட்டை

ஏ. கே. சேஷாத்திரி, எம். ஏ.,

சேகர் பதிப்பகம்

தொலைபேசி : 4834325

66, பெரியார் தெரு, எம்.ஜி.ஆர். நகர்,
சென்னை - 600 078.

| | | | |
|---|---|---|---|
| ஆர்ட்தாள் நிழற்படங்கள் | 50 : | பக். | 32 |
| வரைபடங்கள் : பெரியன | 50 | | |
| நடுத்தரம் | 32 | | |
| சிறியன | 36 | | |
| | 168 | | |
| தலைப்பு, அணிந்துரை | | i — xvi | xvi |
| நூல் பக்கங்கள் 1 — முதல் 232 | | | 232 |
| வண்ண வரைபடம் 128-அ — 128-ஈ | | | 4 |
| மொத்த பக்கங்கள் : | | | 284 |

விலை ரூ. ***200.***

அச்சும் அமைப்பும்
அமுதன் அச்சகம்
66, பெரியார் தெரு, எம். ஜி. ஆர். நகர்,
சென்னை - 600 078 போன்: 4834385

**விற்பனைக்குக் கிடைக்குமிடம் :**

*ஏ. கே. சேஷாத்திரி எம்.ஏ.,*
7, லட்சுமணப் பெருமாள் முதலியார் தெரு
நல்லான் பட்டறை, வேலூர்-632 001



நூலாசிரியர்
ஏ.கே. சேஷாத்திரி



பதிப்பாளர்
வெள்ளையாம்பட்டு சுந்தரம்







ஓவியரகள்

ஆர். சந்தானம்

நா. ரங்கநாதன்

டாக்டர் உபால்டு





அச்சகத்தார்

சு. அருள்

சு. புகழேந்தி



அச்சு அமைப்பு
து. முருகன்



அச்சிட்டவர்
திருஞானம்



புகைப்படம்
புலவர் முத்து எத்திராசன்



சேகர் பதிப்பகத்தின் 'தஞ்சைப் பெரிய கோயில்'
நூல் வெளியீட்டு விழாக் காட்சிகள் —
25.10.93

# பொருளடக்கம்




நல்வாழ்த்து xi

அணிந்துரை xiii

முன்னுரை 1

நெஞ்சம் நெகிழ்ந்த நிலை 9

கல்லெல்லாம் கதை சொல்லும் 19

நுழைவாயில் 27

வரலாற்றில் செஞ்சிப் பகுதி 31

ஐரோப்பியரின் ஆதிக்கம் 61

செஞ்சிக் கோட்டை சிறந்தகோட்டை 69

கோட்டையும் அதன் அமைப்பும் 73

கிருஷ்ணகிரி கோட்டை 123

சந்திரகிரி அல்லது சக்கிலி துர்க்கம் 145

அரிய கட்டடங்கள் சில! 147

குறிப்பிடத்தக்க சிறப்பிடங்கள்! 159

கோட்டையின் நுழைவாயில்கள் 182

பிற முக்கிய இடங்கள் 187

தேசிங்குராஜன் வரலாறு 191

செஞ்சியில் சிதறிய சில முத்துக்கள் 200

இந்தியத் தொல்பொருள்
ஆய்வுத்துறையின் பராமரிப்பில்
செஞ்சிக் கோட்டை 207

செஞ்சியைச் சுற்றிலும் 213

பிழை திருத்தம் 225



# நல்வாழ்த்து!



**உயர்திரு**

**டாக்டர் B. நரசிம்மையா**

**இந்தியத் தொல்பொருள்
ஆய்வுத்துறை கண்காணிப்பாளர்,**

இந்தியத் தொல்பொருள்
ஆய்வுத்துறை, சென்னை சரகம்,
**புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-9**

நான் சார்ந்துள்ள துறையில் பல்லாண்டுகளாகத் தொல்பொருள் பராமரிப்புப் பணிபுரிந்து வருபவர் ஏ.கே. சேஷாத்திரி எம் ஏ., அவர்கள். அனுபவ முதிர்ச்சியோடும் மிக்க ஆர்வத்தோடும் இவர் வரலாற்று நூல் எழுதும் பெரும் பணியில் ஈடுபட்டுள்ளார். முதல்நூலாகத் 'தஞ்சைப் பெரிய கோயில்' என்னும் தரமான வரலாற்றுப் படைப்பைத் தந்தார். இரண்டாவது ஆய்வு நூலாக இச் செஞ்சிக்கோட்டை வரலாற்று நூலைத் தருகிறார்.

இத்தகைய அரிய முயற்சியில் சிறப்புடன் ஈடுபட்டுள்ள இவரால் எமது தொல்லியல் ஆய்வுத்துறைக்கும் பெருமை; வரலாற்றுக்கும் பெருமை. எனவே என் மனமார்ந்த வாழ்த்தினை இத் தருணத்தில் மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்திலுள்ள தொன்மை வாய்ந்த பல இடங்களை நம் இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறை மிகவும் கருத்தோடு செப்பனிட்டுப் பாதுகாத்து வருவதை அனைவரும் அறிவர்.

தஞ்சைப் பெரிய கோயில், செஞ்சிக் கோட்டை, வேலூர்க் கோட்டை போன்றவையும் எமது துறையின் காப்பிலுள்ள வற்றில் சில. இம் மூன்றிடங்களிலும் பணிபுரிந்து அனுபவம் பெற்றுள்ள திரு ஏ. கே. சேஷாத்திரி, இவற்றின் நீண்ட வரலாற்றினை முறையாகப் பகுத்தும்

தொகுத்தும் எளிமையாக எடுத்து விளக்கும் நூல்களை எழுதி வெளியிட்டு வருவதை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

தமிழகத்தின் தலைசிறந்த வரலாற்றுப் பீடமாகச் செஞ்சி மலைக்கோட்டை திகழ்ந்திருந்த நீண்ட வரலாற்றை ஆசிரியர் முறைப்படுத்தித் தந்துள்ளார். செஞ்சிக் கோட்டையின் செழுமையான கட்டடக் கலை, சிற்பக்கலை முதலியவற்றை நூற்றுக்கு மேற்பட்ட படங்களுடன் விளக்கிக் காட்டியுள்ளார்.

இந்த அரிய நூலைத் தயாரிக்க நன்கு பாடுபட்டுள்ள ஆசிரியரையும் நூல் வெளியீட்டாளர் சேகர் பதிப்பகம் வெள்ளையாம்பட்டுசுந்தரம் அவர்களையும் எல்லோரும் பாராட்டுவார்கள். முதலில் என் பாராட்டுதலையும் நல் வாழ்த்துக்களையும் கூறி மகிழ்கிறேன்.

இந்நூல் மூலம் தமிழகப் பெருமக்கள் செஞ்சியின் சிறப்பறிந்து இக் கோட்டையைக் காத்திடத் துணைபுரிய வேண்டுமென விரும்புகிறேன்.



# அணிந்துரை

**உயர்திரு ஜி. இராமகிருஷ்ணன், இ.ஆ.ப**
ஆணையாளர்
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
சென்னை - 600 034.

செஞ்சிக் கோட்டை, தமிழகத்தின் தலைசிறந்த பெரிய கோட்டையாகும். பண்டைய நாளில், சுற்றிச் சூழ்ந்திருந்த சிற்றரசரும் பேரரசரும் செஞ்சிக் கோட்டையைத் தமதாக்கிக் கொள்ள பெரும் போட்டியிட்டுள்ளதை ஐநூறாண்டு வரலாறு அழகாக விளக்குகிறது.

நான் தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவராகப் பணியாற்றியபோது சுற்றுலாத்துறையினால் செஞ்சி கருத்தில் கொள்ளப்பட்டது. சிறப்பான விழா எடுத்து மக்களிடம் சுற்றுலாப் பயன் வளர்க்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அது சமயம் தேசிங்குராஜன் சிலை வைத்தல், நினைவு வாயில் அமைத்தல், தசிங்குராஜன் வரலாறும் செஞ்சிக் கேட்டைபற்றிய வரலாறும் வெளியிடுதல் மற்றும் பட்டிமன்றம், கிராமியக் கலை நிகழ்ச்சிகள் நடத்துதல் என்பன போன்ற திட்டங்கள் வகுக்கப் பெற்றன. ஆனால் பல நடைமுறை வேலைகளால், அச்சிறப்பு நிகழ்ச்சி தள்ளி வைக்கப்பட்டது.

அந்த நேரத்தில் சேகர் பதிப்பகத்தார் வெள்ளையாம்பட்டு சுந்தரம் அவர்கள், ஆர்வமுடன் ஓர் வரலாற்று நூல் படைப்பதாகக் கூறினார். அவர் தொடர்ந்து பல வரலாற்று நூல்களை மக்களுக்கு அளித்து வருகிறவர். அத் தொடர்ச்சியில் செஞ்சிக்கோட்டை எனும் வரலாற்றுநூலையும் வெளியிட்டுள்ளார்.

பழம்பெருமை மிக்க வரலாற்றுச் செய்திகளை எளிய மக்களும் அறிந்து பயன் வளர்க்கவேண்டும் என்ற நல்ல நெறியில் அவர் தொடர்ந்து உழைத்து வருகிறார்.

**'இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து**
**அதனை அவன்கண் விடல்'**

என்னும் திருக்குறள் கருத்துக்கேற்ப, இவர், துறைசார்ந்த அனுபவம்மிக்கவரைத் தேர்ந்தெடுக்கும் முறையறிந்து செயல்பட்டு, நற்பயன் விளைவித்து வருகிறார்.

கல்வராயன் மலைமக்கள், குந்தவையின் கலைக்கோயில்கள், தஞ்சைப் பெரியகோயில் எனும் மூன்று நூல்களும் வெளிவந்தபோதெல்லாம் இவரது செயல் முறையை, உழைப்பை நான் கண்டறிந்துள்ளேன். இவற்றில் முதல் இரண்டு நூல் களும் தமிழக அரசின் முதற்பரிசைப் பெற்றன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

தஞ்சைப் பெரியகோயிலில் பணியாற்றிய அனுபவத்தில் திரு. ஏ. கே. சேஷாத்திரி எம்.ஏ., அவர்கள் அதுபற்றிய உண்மையான வரலாற்றை எல்லாரும் எளிதில் அறியும் வகையில் எழுதி முன்பு வெளியிட்டார்கள். செஞ்சிக்கோட்டையைச் செப்பனிட்டுக் காக்கும் பொறுப்பிலும் சிலகாலம்இருந்தவர் ஆதலால், அதன் வரலாற்றையும் சீருடன் படைத்து இப்பொழுது தந்திருக்கிறார். இத்தகைய அனுபவ அறிவாற்றலின் பலனை இந்நூலைப் பார்த்தவுடனே அறிகிறோம்.

ஆசிரியர், பல வரலாற்றுச் செய்திகள் முரண்படுவதையும் சுட்டுகிறார்; காலங்கள் வேறுபடுவதையும் காட்டுகிறார். சிக்கல்களை விடுவித்து செஞ்சியைப் பற்றி ஒரு தெளிவான வரலாற்றையும் வழங்குகிறார்.

தென்னகத்தின் *'ட்ராய் நகரம்'* எனும் புகழ் படைத்த செஞ்சி மலைக் கோட்டை எத்தனை எத்தனை பாதுகாப்புடனும் வனப்புடனும் வடிவமைக்கப் பெற்றுள்ளது என்பதை நன்கு கவனித்துப் பார்ப்போர் உணர முடியும்.

பல காலங்களில் இக்கோட்டை பலரால் சிறப்பாக உருப்பெற்றிருக்கிறது. நம் தமிழ்ப் பெருமக்கள் கோட்டைக் கட்டட அமைப்பு முறைகளை இந்த ஒரு கோட்டையில் பார்த்தே தெரிந்து கொள்ளலாம்.

செஞ்சிக் கோட்டை அமைந்துள்ள மூன்று மலைகள் மீதும் உள்கோட்டைக்குள் தரைப்பகுதியிலும் பத்துக்கு மேற்பட்ட திருக்கோயில்கள் உள்ளன. சந்திரகிரி மலைக்கு வெளியிலும் மிகப் பெரிய தான பட்டாபிராமர் கோயில் உள்ளது.

விஜய நகரப் பேரரசின் வழிவந்த செஞ்சிநாயக்க மன்னர்களின் பக்தியும் கலை உள்ளமும் இக் கோயில்களால் நன்கு விளங்குகின்றன.

கோட்டைக் காவல்வீரரும் அரசு அலுவலரும் பலநாள் தொடர்ந்து கோட்டைக்குள் தங்கும் நிலை நேரும் அல்லவா! கோட்டைக்குள் இருப்போர் தம் அன்றாட வழிபாடுகளை நடத்திட அக் கோயில்களை அமைத்துள்ளனர் என்பது தெளிவாகிறது.

மன்னராட்சி முடிந்து அந்நியராட்சி தொடங்கியது முதல் இங்குள்ள தெய்வத் திருவுருவங்கள் வேறெங்கோ போய்விட்டன. மக்கள் வந்து வழிபடும் நிலையும் போய்விட்டது. இப்பொழுது தெய்வங்கள் இல்லாத வெறுங்கோயில் களாகவுள்ளன. இக்கோயில்களை உருவாக்கிய முன்னோரின் குறிக்கோள் பிற் காலத்தில் சீரழிக்கப்பட்டதை எண்ணி வருந்தாமல் இருக்கமுடியவில்லை.

நாட்டில் இருக்கும் திருக்கோயில்களை முறையாகப் போற்றிக் காத்திட வேண்டும் என்ற நல்லஉறுதியைக் கோயில் சார்ந்தோரும்பொதுமக்களும் மனதில் கொண்டு ஒழுகுதலே கடமையாகும். புதிய கோயில்கள் கட்டுமுன் பழமையான கோயில்களைப் பராமரிப்பது பற்றி முதலில் சிந்திக்கவேண்டியதும் கடமையாகும்.

இந்த நூலில் பெருமுயற்சியோடு வரைபடங்கள் தொண்ணூறுக்கும்மேல் தந்திருக்கிறார்கள். நிழற்படங்களுக்கும் குறைவில்லை. இந்நூலைப் பார்ப்போரும் படிப்போரும் செஞ்சி மலைக் கோட்டையிலுள்ள அத்தனைப் பகுதி களையும் நெஞ்சில் பதித்துக்கொள்வர் என்பதுதிண்ணம். சுற்றுலாவுக்குரிய பயண நூல் பயனும், வரலாற்றுச் சிறப்பும், கோட்டை, கோயில், சிற்பக்கலைகள் பற்றிய விளக்கமும் ஒருசேர வழங்கும் ஆய்வு நூலாக, அழகிய கலைப் பேழையாக இந்நூல் காட்சி தருகிறது.

தமிழ்மொழியில் உயர்தரமான வரலாற்று நூல்கள் தர முடியும் என்பதை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ள நூலாசிரியரையும் சேகர் பதிப்பகத்தாரையும் அனை வரும் பாராட்டுவர் என்பது தெளிவு. என் பாராட்டுதலை மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அரிய, அழகிய, பயன் தரும் புதிய வரலாற்று நூலை நமது தமிழகம் பெற்று, படித்துப் பயன் துய்க்கும் என்று நம்புகிறேன்.

புதிய வரலாறு நன்கமைய, பழைய வரலாறு மிகவும் துணை புரியும் என்பதை அறிவுலகம் ஏற்கும். வாழ்க செஞ்சிக்கோட்டையின் புகழ்!



# முன்னுரை

நமது பாரத நாட்டின் பழம்பெருமைகளை இன்றைக்கும் பகர்கின்ற நிலையில் எண்ணற்ற வரலாற்றுச் சின்னங்கள் நம்மிடையே பரவிக்கிடக்கின்றன. அவை இன்றளவும் சிதைந்து போகாமல் காணப்படுவதற்குக் காரணமாய் அமைந்த இந்தியத் தொல்பொருள் பாதுகாப்புச் சட்டத்தை உருவாக்கியவர்களை முதலில் நன்றியோடு நினைவுகொள்வோம்.

ஏனெனில், அத்தகையதொரு சட்டம் அவர்களால் அன்று உருவாக்கப் படாமல் இருந்திருந்தால், இன்று நாம் காணும் எண்ணற்ற வரலாற்றுச் சின்னங்கள் என்றைக்கோ அழிந்து போயிருக்கலாம்.

இச்சட்டம் உருவான பின்னருங்கூட அதன் நேரடி ஆளுகையின் கீழ் கொண்டு வராமல் விடப்பட்ட பல அரிய வரலாற்றுத் தடயங்கள், கலைச் சின்னங்கள் போன்றவை அழிந்து போனதையும் நாம் அறிவோம்.

உதாரணமாகத் தமிழகத்தில் வந்தவாசி, ஆரணி, உத்திரமேரூர், சேந்தமங்கலம், எலவானாசூர்க் கோட்டை, தியாகதுருகம் முதலான ஊர்களில் இருந்த கோட்டைகள் யாவும் உருவிழந்து போனதை எண்ணி வருந்துகிறோம்.

இவை மட்டுமா? பல்வேறு காலங்களில் மன்னர் பலராலும் அரும்பாடு பட்டுக் கட்டப்பெற்ற அழகிய கலைக் கோயில்கள் கவனிப்பாரற்றுப் போனதால் சீரழிந்தும் பேரிழந்தும் மறைந்து கொண்டிருக்கின்றன என்பதும் கண்கூடாகும். அப்படி அழிந்தவைகளின் பட்டியலோ எண்ணிலடங்கா.

எடுத்துக்காட்டாக, செஞ்சிக்கு அருகிலேயே அமைந்துள்ள எண்ணாயிரம் பிரம்மதேசம், எசாலம் போன்ற ஊர்களில் உள்ள கோயில்களைச் சான்றுகளாகச் சுட்டிக் காட்டலாம். இவ்வாறாக அழிந்து மறைந்தவை தவிர, இந்தியத் தொல்பொருள் ஆய்வுச் சட்டத்தின் பிடியில் இல்லாத எண்ணற்ற கோயில்கள், மாற்றங்கள் பல பெற்றுத் தங்களின் பழம் பெருமைகளை இழந்து நிற்கும் கோரக் காட்சியைக் காண்கிறோம். தமிழகத்தில் இந்தியத் தொல்பொருள் துறையினால் பாதுகாக்கப்பட்டு வரும் பல கலைக் களஞ்சியங்களில் செஞ்சிக் கோட்டையும்

ஒன்று. அழிந்துபோன பல கோட்டைகளுக்கிடையே செஞ்சிமலைக் கோட்டை குறிப்பிடத்தக்க வகையில் இன்றும் சீருடன் விளங்குகிறது என்றால், அதற்கு இத் துறையின் பாதுகாப்பும் பராமரிப்புமே முக்கிய காரணங்களாகும் என்பதில் ஐயமில்லை.

நெஞ்சையள்ளும் செஞ்சிக் கோட்டை தமிழகத்துக் கோட்டைகளுள் தலை சிறந்ததாகும். பாதுகாப்புமிக்க மலையரண்கோட்டைக்கு நமக்குள்ள ஒரே எடுத்துக் காட்டாக விளங்குவது செஞ்சிக்கோட்டையேயாகும். கோனார் பரம்பரையினரால் 13 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது இச் செஞ்சிக்கோட்டை.

ஆயினும் இச் செஞ்சிக்கோட்டை, அனைவராலும் பதினெட்டாம் நூற்றாண்டைச்சேர்ந்த தேசிங்குராஜனுடன் மட்டுமே இணைத்துப்பேசப்படுகிறது. ஏன்? பாமர மக்கள் பலர் இதனைத் தேசிங்குராஜன் கோட்டை என்றே அழைக்கின்றனர். இக்கோட்டை அவனால் கட்டப்படவில்லை என்பதும், இங்கு அவன் பத்தே மாதங்கள் ஆட்சி செய்தான் என்பதும் பலர் அறிந்திருக்கவில்லை என்பதனையே இது உணர்த்துகின்றது. பதின்மூன்றாம் நூற்றாண்டு முதல் ஆட்சி புரிந்த பல அரசர்களின் ஆளுகையின் கீழ், பல கால கட்டங்களில் கோட்டை விரிவுபடுத்தப்பட்டுள்ளது என்பதைப் பாமர மக்கள் பலர் அறிந்திருக்கவில்லை என்பதும் புலனாகின்றது. இந்நூலை எழுதும் நோக்கமே இக்கோட்டையின் அனைத்து வரலாற்று உண்மைகளையும் அனைவரும் அறிந்து பயன் அடைய வேண்டும் என்பதேயாகும்.

'தென்னகத்து டிராய்'எனப்படுவது இச்செஞ்சிக்கோட்டை. 'கீழ்த்திசையின் வெல்லமுடியாத கோட்டை' இச் செஞ்சிக்கோட்டை. ஏறத்தாழ ஆறு நூற்றாண்டுக் கால வரலாற்றைக் கண்டது இச் செஞ்சிக்கோட்டை. எத்தனையோ சிற்றரசர்கள் எண்ணி எண்ணி முயன்று கட்டி வளர்த்து வாழ்ந்துமுடிந்த இடம் இச் செஞ்சிக் கோட்டை.

தமிழகத்தில் ஆங்காங்கே யிருந்த அரசர்களின் கவனத்தை ஈர்த்திருக்கிறது இச்செஞ்சிக் கோட்டை. அது மட்டுமல்ல, இந்தியப்பேரரசாக அப்பொழுது டெல்லியில் விளங்கிய முகலாயரையும் மோகம் கொள்ள வைத்தது இச் செஞ்சிக் கோட்டை! மேலும், மராட்டிய மன்னர் வீரசிவாஜியின் சிந்தனையையும் ஈர்த்தது இச் செஞ்சிக்கோட்டை.

இவர்களைத் தவிர, அந்நிய நாட்டவர்களான பிரெஞ்சியரையும் பரங்கியரையும்கூடப் போட்டியிட்டுப் போராட வைத்ததும் இச் செஞ்சிக் கோட்டையே!

இராஜகிரி, கிருஷ்ணகிரி, சக்கிலிதுர்க்கம் ஆகிய மலைகளை உள்ளடக்கிய நீண்ட கோட்டை மதிலை, எழில்மிகு கல்யாணமகால், தர்பார் ஹால், வேங்கட ரமணர் ஆலயம், மசூதி, களஞ்சியங்கள், உடற்பயிற்சிக் கூடம், யானைக்குளம் போன்ற கலையம்சங்கள் பொருந்திய கட்டடங்களைத் தன்னகத்தே கொண்டது இச் செஞ்சிக்கோட்டை!

இத்தகைய வரலாற்றுப் பெருமைகளையும் வளமான கட்டடக் கலைச்சிறப்பு களையும் கொண்ட இச் செஞ்சிக் கோட்டையைப் பராமரித்துப் பாதுகாக்கும் பாக்கியம் எனக்கு வாய்த்தது என்பதில் மட்டற்றமகிழ்ச்சியடைகிறேன். இத்தகைய தொரு அரிய வாய்ப்பினை எனக்கு நல்கி ஆதரித்துவரும் இந்தியத்தொல்பொருள் துறைக்கு என்றும் மறவா நன்றியுடையவன் ஆவேன்.

செஞ்சிக்கோட்டை வரலாற்றையும் அதன் கட்டடக் கலை வண்ணம்பற்றியும் பாமரரும் படித்தோரும் புரிந்து போற்றும் வண்ணம் நூல் ஒன்றை எழுத வேண்டும் என்ற எனது நெடுநாள் ஆர்வத்தை அறிந்தவர் போல, சென்னை சேகர் பதிப் பகத்தின் உரிமையாளர் வெள்ளையாம்பட்டு சுந்தரம் அவர்கள் ஒருநாள் தொலை பேசி மூலம் தொடர்புகொண்டார். அந்த நாள் மறக்க முடியாத நாள்!

அவ்வமயம் (1993) தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித்தலைவர் மதிப்பிற்குரிய ஜி. இராமகிருஷ்ணன், ஐ. ஏ. எஸ். அவர்கள், செஞ்சியைச் சுற்றுலாத்துறை மைய மாக அமைக்கும் தொடக்கவிழா ஏற்பாடு செய்து கொண்டிருந்தார். அவ்விழாவை யொட்டிச் செஞ்சி வரலாற்று நூல் வெளியிடும் கருத்தைத் திரு. சுந்தரம் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடன் கலந்து முடிவெடுத்ததன் விளைவே அத் தொலைபேசித் தொடர்பு என்பதைப் பின்னர் அறிந்தேன்.

நெடு நாளைய நினைவைச் செயற்படுத்த இது ஓர் அரிய தூண்டுகோலாயிற்று. உடனே எழுதத் தொடங்கினேன். முடித்தேன். ஆனால், இதை அடுத்து, நான் எழுதிய 'தஞ்சைப் பெரிய கோயில்' என்னும் நூல் முதலில் (25. 10. 1993) வெளி வந்தது. அதனையடுத்து, செஞ்சிக்கோட்டை வரலாறு இரண்டாவதாக வெளி வருகிறது

இந்நூல் சிறந்த முறையில் உருவாக ஒவ்வொரு கட்டத்திலும் உறுதுணையாக நின்றவர் பதிப்பாளர் வெள்ளையாம்பட்டு சுந்தரம். தமிழில் தரமான வரலாற்று நூல்கள் சிறப்பாக அச்சிட்டு வெளியிட வேண்டும் என்ற ஆர்வமும் தன்னம்பிக்கை யும் கொண்டு செயல்பட்டு வருபவர் இவர். பணத்திற்காக வேண்டித் தமது பதிப்பு களில் பகட்டினைச் சேர்க்காதவர் இவர். தமிழரின் பண்பாடு, முன்னேற்றம் கருதி அவர்தம் பழம் பெருமையினைத் தமது பதிப்புகளின் வாயிலாகப் பறைசாற்றி வருபவரும் இவரே. அதனால்தான் தொல்பொருள் ஆய்வுத்துறை அறிஞர் டாக்டர்

இரா. நாகசாமி அவர்களால் 'வீரப் பதிப்பாளர்' என்று பாராட்டப்பெற்றிருக்கிறார். அன்னாரின் துணைகொண்டு இந்நூல் வெளிவருவதை நான் பெரும் பேறாகக் கருதுகிறேன். அவர்களுக்கு முதற்கண் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல்உருவாக முதற்காரணராய் அமைந்ததோடு, இதற்கு அணி சேர்த்தாற் போல் அன்புடன் அணிந்துரையும் வழங்கியமைக்குத் திரு.ஜி. இராமகிருஷ்ணன் ஐ. ஏ. எஸ். (ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை) அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றி உரியது.

எனது அன்புக்குரிய உயர் அதிகாரியும் தொல்பொருள் துறை வல்லுநரு மான டாக்டர் B. நரசிம்மையா அவர்கள் இந்நூல் உருவாவதற்குப் பலவழிகளில் உதவியதுடன் நல்வாழ்த்தும் வழங்கியமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் அழகிய முறையில் சிறப்புடன் உருவாக உதவிய அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் என் மன மார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வரலாற்றுலகம் எனும் சங்கப் பலகையில் இந்நூலும் இடம் பெறும் என எண்ணி மகிழ்கிறேன்.

*ஏ.கே. சேஷாத்திரி*





## நூலாசிரியர்

### ஏ. கே. சேஷாத்திரி, எம். ஏ.,

தோற்றம் : 15-7-1936, காஞ்சிபுரம்.

பெற்றோர் : திரு அ. கிருஷ்ணமாச்சாரி
திருமதி அலர்மேலுமங்கை

தம் இருபத்திரண்டாம் வயதில் (1958) இந்தியத் தொல்பொருள்துறைப் பணியில் சேர்ந்தார்.

தஞ்சை, மாமல்லபுரம், செஞ்சி, பெங்களூர் முதலிய ஊர்களில் பணியாற்றினார்.

1977 முதல் பழங்கலைப் பராமரிப்பு அலுவலராக வேலூர்க்கோட்டையில் பணியாற்றி வருகிறார்.

1993 அக்டோபர் 25 ஆம் நாளன்று, இவர் எழுதிய '*தஞ்சைப் பெரியகோயில்*' எனும் முதல் வரலாற்று நூல், தஞ்சையில் இராஜராஜ சோழனின் சதயநாள் பெருவிழாவில் வெளியிடப்பெற்றது. அறிஞர் பெருமக்களால் பாராட்டும் பெற்றது. ஆங்கிலத்திலும் அது வெளிவரவுள்ளது.

இவரது இரண்டாவது வரலாற்றுப் படைப்பு *செஞ்சிக்கோட்டை*.

இவரது மூன்றாவது அரிய வரலாற்றுப் படைப்பு, *வேலூர்க் கோட்டை*. இந்நூல்அச்சில் உள்ளது; அடுத்து வெளிவரப் போகிறது.

மேலும்,

'*இந்தியாவில் தொல்பொருள் பராமரிப்பு*' எனும் நூலையும் உருவாக்கியுள்ளார். இது தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளிவரவுள்ளது.

பழங்கால வரலாற்றுச் சின்னங்களைப் போற்றிப் பாதுகாப்பதைப் பெரும் பேறாகக் கருதிச் செயலாற்றும் களப்பணியாளர் இவர்.

வரலாறு காக்கும் வன்தொண்டர் வாழ்க !

## உதவிய துணை நூல்கள்


1 ஆதிசெஞ்சி — ச. கிருஷ்ணமூர்த்தி, எம். ஏ.,

2 கர்நாடக தேச ராஜாக்கள் சரிதம்

3 சித்தாமூர் வரலாறு — ஏ. ஏகாம்பரநாதன்

4 செஞ்சிக்கோட்டை — திரு. கிருஷ்ணமாச்சாரி

5 செஞ்சிக்கோட்டை வரலாறு — திரு. கோவிந்தசாமி

6 செஞ்சியைப் பார் — திரு. மா. கோவிந்தசாமி

7 தமிழக வரலாறும் மக்களும் பண்பாடும் — கே. கே. பிள்ளை

8 தென் ஆர்க்காடு கெஜட் — கோயில்கள்

9 பல்லவன் கண்ட பனைமலைக்கோயில் — வில்லியனூர் ந. வேங்கடேசன்

10 மகேந்திரவர்மன் — மயிலை சீனி. வேங்கடசாமி




# நன்றி

வணக்கத்திற்குரிய காஞ்சி காமகோடி பீடம் பரமாச்சாரியார் அவர்களது பேரருள் துணையுடன் தமிழ்த்தாய்க்கு எனது இரண்டாவது காணிக்கையாக இந் நூலை உருவாக்க உடனிருந்து உதவிய பேருள்ளங்கள்!

திரு. டாக்டர் B. நரசிம்மையா
,, K. T. நரசிம்மன்
,, S. அசோக் குமார்
,, S. இராஜவேல்
,, திருமூர்த்தி
,, சி. பலராமன்
,, N. கோவிந்தராஜன்
,, N. விஜயகுமார்
,, R. மணி
,, P. லெனின்

மற்றும் நண்பர்கள், இந்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறையினர்

அனைவர்க்கும் நன்றி

*ஆசிரியர்*



இந்நூல்,
அமரராகி
என் நெஞ்சில் ஆட்சி புரியும்
அருமைத் தந்தை
அத்தி. கிருஷ்ணமாச்சாரியார்
அவர்கட்கு

**அன்புக் காணிக்கை**

செஞ்சிக்குக் கிழக்கேயுள்ள சங்கராபரணி ஆற்றின் தோற்றம்





சங்ககிரிமலை மீதிருந்து உள்கோட்டை காட்சி





இராஜகிரி மீதிருந்து உள்கோட்டை தோற்றம்



இராஜகிரி மலையுடன் கல்யாணமகால் தோற்றம்



உள்கோட்டை அகழியும் நுழைவாயிலும்



கல்யாணமகால் – ஒரு தோற்றம்



கல்யாணமகால் – பகுதி



அகழ்வாராய்ச்சியில் – கல்யாணமகால் அருகில் – புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்ட



அரண்மனை வளாகப் பகுதி

கோட்டை மதிற்சுவர் சீரழிந்துள்ள காட்சி





திருத்திச் செப்பனிட்டபின் கோட்டை மதிற்சுவர்



அகழ்வாராய்ச்சியில் கண்ட தர்பார்மேடை ஆசிரியர் மேற்பார்வையில் சீராக்கப்பெறுகிறது.



பாறையில் உருவாக்கப்பட்டுள்ள புடைப்புச் சிற்பங்கள்
வேணுகோபாலர் கோயில்.



உடற்பயிற்சிக்கூடம் எனப்படும் தளவாட அறை



இராஜகிரி தொங்குபாலம்



பாலரங்கநாதர் ஆலயம்



இராஜகிரி ரங்கநாதர் ஆலயத்தின் அழகிய தோற்றம்



ரங்கநாதர் ஆலயமும் மணிக்கூண்டும்



சாதத்துல்லாகான் மசூதி



புதுச்சேரி வாயிலின் பின்புறமும் வடக்கு வாயிலும்



புதுச்சேரி வாயில் – உள்புறம் அமைப்பு

புதுச்சேரி வாயிலின் வடபுறம்; குன்றின்மீது குமரன்கோயில்





புதுவை வாயில் வடபகுதி - அகழி, சுற்றுமதில், நடைபாதை, உயர்ந்த உள்மதில்

*பதிப்புரை*

# நெஞ்சம் நெகிழ்ந்த நிலை !

பழைமையான வரலாற்றின் பசுந்திட்டாக விளங்குவது நமது தமிழகம், தமிழகத்தின் ஒவ்வொரு பகுதியும் தகுதிமிகு வரலாறு கொண்டதாகவே விளங்கி வருகிறது.

கிடங்கில், மேல்மாவிலங்கை, காஞ்சி மல்லை, சிராப்பள்ளி, தஞ்சை, மதுரை, கொற்கை, வஞ்சி, கரூர், தகடூர், திருக்கோயிலூர்என்னும் பெயர்களோடு நீண்டு செல்லும் பெருந் தொடரில் செஞ்சியும் இணைந்தே உள்ளது.

மிகப் பழங்கால மக்கள் வாழ்ந்ததற்குரிய சிறந்த அடையாளங்களைச் செஞ்சியைச் சுற்றிலும் கண்டெடுத்துள்ளனர். நிலையற்றுத் திரிந்த கற்கால மக்களும் வாழ்ந்துள்ளனர்; நிலையாகத் தங்கி வாழ்ந்த பிற்கால மக்களும் இப் பகுதியில் வாழ்ந்துள்ளனர்.

பேச்சு முறையும் எழுத்து முறையும் அறிந்த மக்களினம் தொடர்ந்து வாழ்ந்த சிறந்த பழம் பகுதியாகவும் இப்பகுதி இருந்துள்ளது.

அச்சமும் அறியாமையும் கொண்ட மானிடரும் அடுத்தடுத்த காலவளர்ச்சியில் ஓரளவு அறிவும் திறமும் கொண்டு வளர்ந்த மானிடரும் இங்கே தொடர்ந்து வாழ்ந்துள்ளதை எண்ணற்ற சான்றுகள் எடுத்துக்காட்டுகின்றன.

பழமையான கல்லாயுதங்கள்; பாறை ஓவியங்கள், அடையாளக் குறியீடுகள், இறந்த மனிதரைப் புதைத்து அடக்கம் செய்த கல்திட்டைகள், மண்பானைகள் முதலான பழமைச்சான்றுகள் பலவிடங்களில் பார்வைக்கு வந்துள்ளன; மேலும் பலவும் வெளிவர வுள்ளன...

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் முன்பிருந்த வரலாற்றோடு இணைந்துள்ள சமண முனிவர்களின் படுக்கைகளையும் அவர்களது பெயர்கள் பொறித்த நிலைகளையும் பார்க்க முடிகிறது; அவர்களது மரபு வழியில் பெரிதும் மாறாமல் இப்பொழுதும் வாழ்கிற சமணச் சான்றோர்களையும் அச் சமயத்தைப் பற்றி யொழுகும் பல்லாயிர மக்களையும் பார்க்கிறோம்.

குகைகளிலும் காடுகளிலும் குனிந்துக் குறுகிக் கிடந்த விலங்குநிலை மனிதனில் தொடங்கும் மனித இனத்தின் மாபெரும் வளர்ச்சிப் பெருக்கத்தின் அடுத்தடுத்த பல பருவங்களையும் எடுத்துக்காட்டும் எண்ணற்ற சான்றுகளோடு இச் செஞ்சிப்பகுதி இன்றும் சிறப்போடு உள்ளது. இது வரலாற்றுப் பெருமை யாகக் கொள்ளத்தக்கது.

கல்வி, கலைகள், சமயங்கள், சடங்குகள், விழாக்கள் எனும் சூழலில் வளர்ந்துள்ள மனித வாழ்வின் பொதுவான தாக்கம் இங்கேயும் இருந்திருக்கிறது. பழமைக்குப் பழமையாகவும் புதுமைக்குப் பக்குவமுடையதாகவும் தொடர்ந்து வாழ்ந்து வளர்ந்து வருகிற மக்கள் சமுதாயம், செஞ்சிப் பகுதிக்குச் சிறந்த வரலாற்றைச் சேர்த்து வருகிறது.

காலவேகத்துடன் காலெடுத்துப் பாய்ந்தோடும் வாழ்க்கை ஓட்டத்தில், சிறிது பின்னோக்கித் திரும்பிப் பார்க்கும் கண்ணோட்டமாக, ஒரு நினைவுத் துளியாக, பழமையின் ஒரு சிறு பரலாக (சிறு கல்லாக), ஓர் அகல் விளக்கின் சிற்றொளியாக இந் நூல் உருவாக்கப் பெற்றுள்ளது.

மனக்கோட்டை பெரிதாயிருந்தாலும் கட்டுவதற்குரிய பணக் கோட்டை தேவையல்லவா? தினமும் காணும் மலைக்கோட்டை நினைவில் நெருப்பெனப் பற்றி எரிந்து, நடந்துபோன வாழ்வை நாளும் ஒளிபடக் காட்டிக் கொண் டிருக்கிறது.

சுந்தரசோழனின் மூத்தமகனும் இராஜராஜசோழன் எனும் அருண்மொழி வர்மனின் தமையனும் ஆன ஆதித்தகரிகாலன் பகைவர் சூழ்ச்சியால் கொலை யுண்ட சம்புவராயரின் மாளிகையிருந்த கடம்பூர், செஞ்சி-திண்டிவனம் சாலையில் ஐந்து கிலோமீட்டர் தொலைவில் உள்ளது.

சிறுபாணாற்றுப்படை நூல் கூறும் புகழ் மிக்க சிற்றரசன் ஓய்மாநாட்டு நல்லியக்கோடன் வாழ்ந்த பகுதியும் அருகில் உள்ளது.

மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன், ராஜசிம்மன் முதலான பல்லவப் பேரரசர்களின் பழம் பெரும் கலைச்சின்னங்கள் இப் பகுதியைச் சுற்றிலும் காணலாம். மண்டகப்பட்டு, தளவானூர் குடைவரைக் கோயில்களும், பனைமலை மலைக் கோயிலும் அதிலுள்ள வண்ண ஓவியம் முதலியனவும் காலத்தைக் காட்டும் வரலாற்றுச் சின்னங்களாகும்.

இம் என்றால் எழுநூறு கவிகளை மழைபோல் பாடிப்பொழிந்தவர் கவி காள மேகம். அவர் பிறந்த எண்ணாயிரம் எனும் வரலாறு படைத்த ஊரும் செஞ்சிக்கு அருகிலேயே உள்ளது.

திருநாவுக்கரசர் எனும் அப்பர் பெருமான் பிறந்த திரு ஆமூர், அவர் வாழ்ந்து நடமாடிய திருவதிகை, திருப்பாதிரிப்புலியூர் முதலான திருப்பதிகளும் அண்டையிலே அமைந்துள்ளன.

சுந்தரமூர்த்தி நாயனார் தோன்றிய திருத்தலம் திருநாவலூரும், அவரை ஆட்கொண்ட சிவத்தலமான திருவெண்ணெய் நல்லூரும் செஞ்சிக்குத் தெற்கே திகழும், பகுதிகளே! நடுநாடு என்றும் திருமுனைப்பாடி நாடு என்றும், சான்றோர் வாழும் தொண்டைநாடு என்றும் பல காலங்களில் பல பெயர்களுடன் திகழ்ந்த பகுதியில் உள்ளடங்கிய செஞ்சி, மலையரண் சிறப்புடையதாகும்.

தமிழ் மன்னர்தம் ஆட்சிகள் முடிந்து அந்நியர் துருக்கரின் ஆட்சியிலும் நாயக்கர், மராட்டியர், பிரெஞ்சுக்காரர், பிரிட்டிஷ்காரர் ஆட்சியிலும் நம் செஞ்சிக் கோட்டை தலைமையிடம் பெற்றுத் தனிச் சிறப்புடன் திகழ்ந்துள்ளது.

பாதுகாப்புடன் கூடிய படைக்கோட்டமாகவே செஞ்சி விளங்கியுள்ளது. வேலூர், ஆற்காடு, தெள்ளாறு, வந்தவாசி, செய்யாறு, செஞ்சி, திண்டிவனம் முதலிய ஊர்கள் அக்கால ஆட்சியின் மாட்சிமைக்குரியனவாக இருந்துள்ளன.

இருந்த இடத்திலிருந்தவாறே எத்தனையோ பேர்களின் இதயத்தை
மலர்விக்கும் பேராற்றல் கொண்டது செஞ்சிக்கோட்டை!

ஒட்டிச்சேர்த்து அடுக்கிய கற்கோட்டைத் தொடர்கள், வெட்டிச் சாய்க்கும் மனிதர்களின் தாக்குதல்களாலும், மாறிக் கொண்டிருக்கும் காலப் பருவங்களின் தாக்குதல்களாலும், கட்டுவிட்டுக் கெட்டுக் குலைந்து, தட்டுத்தடுமாறி விழுந்தன; தடமும் எழிலும் மறைந்தன.

கொட்டிக் குலைந்து கிடக்கும் கோட்டைக் கொத்தளங்களைத் தட்டி எடுத்துச் சரி பார்த்து மீண்டும் கட்டிப் புதுப்பித்து உயிர்கொடுக்கும் உயர்ந்த திருப்பணியில்இணைந்துள்ள திருத்தொண்டர் **சேஷாத்திரியார்**, செஞ்சியின்செம்மாந்த வரலாற்றைச் செம்மையாக நினைவூட்டுகிறார்.

சித்தம் தெளிவின்றி உள்ளோர்க்கும், நித்தம் பிழைத்தலன்றி வேறு நினைவற்றவர்களுக்கும், நாடு மொழி பண்பாடு வாழ்வு என்று நல்ல பித்தம் கொண்டோர்க்கும் ஒத்து வருமாறு ஒரு வரலாற்றுச் சுருக்கம் வழங்குகிறார்.

வாழ்வாங்கு வாழ்வோரின் வரலாற்றுப் புகழ் வழியில்
தாம் ஒருவர் என்று தகுதியுடன் காட்டிவிட்டார்.
செஞ்சியில் பிறந்தாரா? சிங்கவரத்தில் பிறந்தாரா?
காஞ்சிபுரம் என்னும் கலையூரில் தோன்றியவர்.
பல ஊர்கள் சென்று பணியாற்றும் பேறு பெற்றவர் இவர்!

பல்லோர் மதித்திருக்க வல்லவராய் வாழ்ந்தவர்கள்,
கல்லால் விளங்க வைத்த கற்கோட்டை எத்தனையோ!
கலைக் கோயில் எத்தனையோ!

புத்தி விளக்கங்கள் புதிதாகத் தருவனவாம்;
கத்தி விளக்கங்கள் அழிவிலே முடிவனவாம் !

கோயிலும் கோட்டைகளும் தந்து வரும் விளக்கங்கள்
தற்காலத்துக்கும் தகும், தகும் என்பதுண்மை!

குன்றைடுத்த கோயில்களும் கோட்டைகளும்
நின்றுரைக்கும் நீள் கதையை நன்கறிய வேண்டுமென்று
நல்லாசை கொண்டதனால் நவின்றுள்ளார் இந்நூலில்.

கஞ்சிக்கும் பஞ்சுக்கும் நெஞ்சொடிந்து வாடுகையில்,
இஞ்சி தின்ற குரங்காக, இடித்த புளித் திண்டாக வாடுகையில்,
தஞ்சை புகழ் பாடிவிட்டுச் செஞ்சியையும் பாடுகிறார்
சேஷாத்திரிப் பெரியார்.

தினம் பேசுவது மானம் 'பேணுவது ஈனம்'
எனும் நிலையில் வாழ்வோரைச் சாராமல்,
தினம்காணும் திருமுறைகள், தினந்தோறும் திருப்பணிகள்
செய்யும் பெருநெறியில் சிந்தை மிக ஊறியதால்
நிந்தனையைச் சேர்க்காமல், வந்தனையை மேற்கொண்டார்.
இந்த நிலை வாய்த்தவரின் சிந்தை செயல் வாழ்த்திடுவோம்!

செந்தமிழர்ப் பெட்டகமாய், செம்மாந்த வரலாற்றைச்
செஞ்சிமண்ணின் சீர்க்கதையை, சிக்கல் வரலாற்றைச்
செப்பமுறச் சேர்த்தளித்தார் சித்திரப் பெட்டகமாய்!
பார்த்தே மகிழ்ந்திடலாம்; படித்தும் மகிழ்ந்திடலாம்!

கல்லெல்லாம் கதை சொல்லும்!
காலமெல்லாம் கண் முன்னால்
நேரில் வரும்; காட்சி தரும்!

செஞ்சியிலே ஆதி முதல் நேர்ந்தவையோ
கொஞ்சமல்ல, குறைவல்ல, கோடியுண்டு.
அத்தனையும் கொட்டியளக்க ஆகாது என்பதனால்
ஒத்ததும் உவந்ததும் ஊக்கமுடன் காட்டுகிறார்.

பச்சைமரங்களென்னும் பட்டாடை இல்லாமல்
அம்மணமாய்க் காட்சிதரும் அடுக்கடுக்காய் குன்றுகளும்;
வெறிச்சோடிக் காட்சி தரும் வறட்சி மலைக்கூட்டம்!
கோட்டை மலைமீது காணும் சில மரமும்
வெட்டி முறிக்கின்றார்; விறகாக்கிக் கொள்ளுகின்றார்.

நாள் தோறும் காடழித்தால் நல்ல மழைவருமா?
பாறைஅனல் எழுந்தால் மேகம் பறந்தோடிப் போகாதா?
வெந்ததெல்லாம் போதாதா? மரம் வெட்டியது போதாதா?

ஒருத்தர் சுகங்காண ஊரே கெடலாமா?
நாற்பதுபேர் பிழைக்க, நாற்பது ஊர் அழிவா?

சிலபேர்கள் காடழித்தால் பல ஊர்க்கு மழை இல்லை!
நல்லவர்கள் வல்லவர்கள் நன்றாகச் சொல்லட்டும்!
எங்கும் மரம் வளர்த்து பொங்கும் மழை காண்போம்!
செஞ்சிக் கோட்டை மரங்கள் செழித்து வளரட்டும்;
செஞ்சி மக்கள் வாழ்வும் செழித்தோங்கி மலரட்டும்!

எத்தனையோ எண்ணங்கள், எத்தனையோ செய்திகள்!
அத்தனையும் ஒன்றாக, அழகழகாய்ப் படங்களுடன்
கொத்தாக வைத்துள்ளோம்; கொள்ளுங்கள் கொள்ளுங்கள்!
சொத்தாகும் வீட்டுக்கு! சுவையூறும், படியுங்கள்!

செஞ்சிக் கோட்டையைப் பழுது பார்த்துப் பாதுகாக்கும் பெரும் பணியை இந்தியத் தொல்பொருள்துறை மேற்கொண்டுள்ளது. அத்துறையில் இன்று வேலூர்க்கோட்டை அலுவலராகப் பணிபுரியும் திரு. ஏ. கே. சேஷாத்திரி எம். ஏ., அவர்கள் 15 ஆண்டுகட்கு முன்னர் செஞ்சியில் பணியாற்றினார். அந்த அநுபவத்திலும் ஆர்வத்திலும் எழுதப்பெற்ற நூல் இது. முற்றிய அநுபவத்தில் முகிழ்த்த வரலாற்றுப் படைப்பு இது

இது, சுற்றுலா அன்பர்களுக்கான சுவைதரும் கையேடு மட்டுமல்ல;
பல காலத்தின் வரலாற்றுப் பின்னணிகளையும் கொண்ட
வரலாற்று விளக்கமும் ஆகும்.

அகழிகள், கோட்டை மதில்கள், கோட்டைப் பகுதிகள், மலைப்பகுதியுடன் பிணைந்து கலந்துள்ள கட்டட அமைப்பு முறைகள் முதலானவைபற்றிய விளக்கங்களையும் அறியலாம்; அவற்றுக்குரிய வரைபடக் காட்சிகளையும் கண்டு மகிழலாம். இந் நூலைப் பார்த்தபின் கோட்டையைப் பார்ப்போர் நல்ல விளக்கம் பெறுவர்.

தமிழ்நூல்கள் தமிழ்நாட்டுக்குள்ளேயே குறுகிய வட்டத்தில் பயன்படும் நிலையிலுள்ளன. ஓரளவே இலங்கை, மலேயா நாடுகளுக்குச் செல்கின்றன. தமிழர்களோ நல்ல புத்தகங்களை வாங்கிப் படிக்கும் பழக்கம் பெறாமலே உள்ளனர். படித்தவர், அலுவலகங்களில் பணியாற்றுவோர் அனைவரும் படித்து மனத்தைப் பண்படுத்தப் பழகும் நாளே தமிழரின் சிந்தனைக்கண் திறக்கும் திருநாளாகும்! பள்ளிகளிலும் நூலகங்கள் பெயரளவுக்கே உள்ளன. பயன்படுத்த வழி செய்வோர் கல்வித்துறையில் எப்போது நுழைவார்களோ!

அரசின் பொதுநூலகத்துறை, நூல்கள் வாங்கிப்பரப்பும் பணியாற்றுகிறது. அங்கேயும் ஒரு பெருந்தடை! புத்தகத் தயாரிப்பாளர் உருவாக்கத்திற்கேற்ப விலை வைப்பதைப்பொதுநூலகத்துறை ஏற்பதில்லை. இந்தியாவிலும், ஏன், உலகிலேயே

வேறெங்கும் இல்லாத ஒரு விந்தையான முறையை உருவாக்கி வைத்துள்ளனர். எத்தகைய நூலாயினும் ஒரு விலைதான்! தனி உழைப்பு, சிறந்த தயாரிப்பு, கள ஆய்வுகள், புகைப்படங்கள் எனும் எதையும் கருத்தில் கொள்வதில்லை. கண் மூடித்தனமாக, அறிவுக்குப் பொருந்தாத ஒரு முடிவை, கற்றவர்கள் என்னும் மூன்று பெரிய உயர்மட்ட அலுவலர்கள் உருவாக்கிச் செயல்படுத்தி வருகின்றனர்.

இதை எழுதுகிறவன் 1970 முதலே அமைச்சர்கள், பொதுநூலகத்துறை இயக்குநர்களிடம் தொடர்ந்து சொல்லிச் சொல்லி அலுத்துப் போனவன்.

தமிழ்நாட்டுப் பதிப்பாளர்கள் தனித்தனியாக, இதுபோன்ற குறைகளுக்குத் தீர்வு காண மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி செல்வி ஜெயலலிதா அவர்கட்கு மனுக்கள் அனுப்பியும் அவர் சந்திக்க அழைக்கவும் இல்லை; சரியான முடிவுஎடுக்க வழிகாட்டவும்இல்லை. திரைப்படத்துறையில்ஆர்வம் செலுத்துவதில் ஒருசிறு அளவாவது, முக்கியமான அறிவுபுகட்டும் இப்புத்தகத் துறையில், பதிப் புத்துறையில் கவனம் செலுத்த முனைந்திருக்கலாம். ஆனால், கவனிக்கவே இல்லை. பதிப்பாளர் மேற்கொண்ட பல முயற்சிகள் வீணாயின.

இத்தகைய ஆதரவற்ற சூழ்நிலை தமிழ்நூல் வெளியீட்டில் பெரும் தேக்கத்தை விளைவித்துள்ளது. சாதாரண பொழுதுபோக்கு நூல்கள் மூடத் தனத்தை வளர்க்கும் ஒருசில நூல்கள் ஒருவகை.

சிந்தனை வளர்க்கும் சிறந்த ஆய்வுநூல்கள், வரலாற்று நூல்கள், சிறுவர்க்கேற்ற அழகிய நூல்கள், படவிளக்கங்களோடு வெளியிடப்படும் நூல்கள் அதற்குரிய விலையில் வாங்காமல், விலை குறைத்து, எளிய அமைப்பில் உருவான நூல்களுடன் ஒப்பவைத்து வாங்கும் இழிநிலை இருக்கலாமா?

தரம் பார்த்து வாங்கும் அறிவார்ந்தநிலை அரசினரிடம் ஏற்படும்போது, அரசில்சிந்தனையாளர் இருப்பதை நாடு அடையாளம் கண்டு கொள்ளும்.

எதுவானாலும் ஒரேவிலை எனும் இழிநிலை, சிறந்த அறிவு நூல்களுக்கு சிறந்த அழகிய பதிப்புகளுக்கு ஏற்படுத்தப்பட்ட தடையாகும்.

சிறந்த நூல் எழுதியோர்க்குப் பரிசு தருவது ஒருபுறம்; சிறந்த தயாரிப்பு களுக்கு விலையைக்குறைத்துத் தண்டிப்பது மறுபுறம். இது, தமிழ்நாட்டுக் கல்வித் துறையின் மாபெரும் சாதனையாகும். அழகிய, சிறந்த தமிழ் நூல்களை உருவாக் காமல் தடுக்கும் நடைமுறைத் திட்டமாகும்.

நஷ்டப்பட்டாலும் நாட்டு மக்களுக்கு நல்ல தமிழ்நூல்களை உருவாக்கித் தரும் புத்தகப் பதிப்பாளர்க்குத் தமிழக அரசு பாராட்டுப் பத்திரம் என்பதாக ஒரு அச்சிட்ட சான்றிதழை, மிக அவசரக்கோலத்தில் அள்ளித்தருகிற ஓர் அவலக் காட்சியைப், பலஆண்டுகளாக அறிவுடையோர் மனம் வருந்திப் பார்த்துக் கொண் டிருக்கின்றனர். ஓவியக் கலை, அச்சுக்கலை முதலானவும் மதிக்கப்பெறுவதில்லை.

அறிவுக்கும் அறிவு வளர்ச்சிக்கும் உரிய மதிப்புத் தந்திடமல் அலட்சியப் படுத்தப்படும் இத்தகைய அவல நிலையில், கல்வியார்வத்துடனும், நாட்டு வளர்ச்சிப்பற்றுடனும், சமுதாய உணர்வுடனும் மிக முயன்று, பொருள், உழைப்பு முதலியவற்றைக் கொட்டி ஆர்வமுடையோர் சிலர் உயர்தரமான சிறந்த தமிழ் நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டு வருகின்றனர்.

நம் தமிழ்நூல்கள் உலக அளவில் மதிக்கப் பெறல் வேண்டும் என்ற உயர்ந்த நோக்கோடு படைக்கப்படும் வரிசையில்இந்நூலும் சேர்கின்றது.

தமிழில் பலதுறைகளில் நூல்களே படைக்கப்படவில்லை என்பது உண்மை; இதை எண்ணும்போதே கவலைப்படவேண்டியுள்ளது. ஆனால் அரசுத்துறையினர் எண்ணிப் பார்ப்பதே யில்லை. அதற்கான முயற்சிகளை மேற்கொள்வதுமில்லை.

கோட்டைக் கட்டடக்கலை பற்றித் தமிழில் நூல்கள் இல்லை. கோட்டைகள் பற்றிய விவரங்களை ஒரு சேரத் தருபவர் யாரோ? அதுவும் எப்போதோ?...

உலகத்து நாடுகளைப் பற்றி யெல்லாம் படித்துப் பட்டம் பெற வாய்ப் புள்ளது; வழியுள்ளது. ஆனால்பிறந்தநாட்டின் இயற்கை, தொழில்,பொரு ளாதாரம் பற்றி நூல்களும் இல்லை; பட்டப்படிப்பும் இல்லை.

நமது நீர் நிலைகள், நமது மலைகள், நம் நாட்டின் காட்டுச்செல்வங்கள் பற்றியெல்லாம் நாம் கற்றால்தானே நம் ஊர்ப்புறத்தை முன்னேற்ற சிந்திக்கலாம்; பொருளாதார உயர்வுக்கும் வழி பிறக்கும்?

ஏரிகள் தூர் வாராமல் விடப்படுகின்றன. அதில் மக்கள் குடியேறு கின்றனர். எங்கெங்குப் பார்த்தாலும் குளங்கள், குட்டைகள் தூர்க்கப்படுகின்றன. அதைத் தடுக்க வேண்டாமா? நீர் நிலைகள் இருந்தால்தானே நிலத்தடி நீர் வற்றாதிருக்கும்? பஞ்சாயத்துகளோ, நகராட்சிகளோ, மாநகராட்சிகளோ எந்தக் குளத்தைக் காப்பற்ற முனைகின்றன? அது, யார் பொறுப்போ?...

இத்தகைய சமுதாயக் கடமைகளை எண்ணுவதால்தான் பலதுறை நூல்களை மிகப் பாடுபட்டு உருவாக்கிப் படைக்கின்றோம்.

அவ்வகையில் கடந்த ஆண்டில் தஞ்சைப்பெரிய கோயில் எனும் நூலை ஒரு கலைக் களஞ்சியமாக உருவாக்கி வெளியிட்டோம். இப்பொழுது செஞ்சிக் கோட்டை பற்றிய வரலாற்று நூலையும் பெரும்பாடுபட்டுப் பலரது கூட்டுழைப்பில் உருவாக்கிப் படைக்கின்றோம்.

அரசும் பல்கலைக் கழகங்களும் கல்வித்துறையும் ஆற்ற மறந்துள்ள பல வற்றைத் தனி ஆர்வலர்களே முடிக்க வேண்டியுள்ளது. அப்படிச் செய்பவரை அரசு மதிப்பதும் இல்லை; பாராட்டி ஊக்குவித்து உதவுவதும் இல்லை.

எந்த ஓர் உறுதுணையும் இன்றிச் செயல்படும் பதிப்பாளர்க்கும், அரிய ஆய்வாளர்க்கும், புத்தகப் பதிப்புத் தொழிலுக்கும், ஆதரவற்ற நூல் அச்சிடுவோர்க் கும், அத்துறை தொழிலாளர்கட்கும் எப்போதுதான் ஒரு நன்னிலை வாய்க்குமோ?

இத்தகைய கலக்கச் சூழலிலே தொடர்ந்து ஆய்வு நூல்களை, அழகுறப் பதிப்பித்துச் சிறந்த நூல்களாக வெளியிட்டு வருகிறோம். தமிழ்நூல்களின் தரம் உயர, எங்களோடு ஒத்து உளம் மகிழ்ந்து உறுதுணையாயுள்ள எழுத்தாளரை, ஆய்வாளரை நாங்கள் நெஞ்சார்ந்த அன்போடு மதித்துப் போற்றி வருகிறோம். பொருள் இழப்பையும் துன்பத்தையும் கருதாது தகுந்த பணிபுரியும் அவர்களை வரலாறு மறக்காது; வருங்கால அறிவுலகம் போற்றும் என்பது உறுதி.

அன்பர் திரு. ஏ. கே. சேஷாத்திரியார் தாம் தொடர்ந்து பணியாற்றிப் பெருமைப்படுகின்ற உள்ளத்தோடு முன்பு **தஞ்சைப் பெரியகோயில்** எனும் நூலை படைத்தளித்தார். இப்பொழுது '*செஞ்சிக் கோட்டை*' பற்றியவரலாற்று விளக்கப் படைப்பைத் தந்துள்ளார். அவர்களது பண்பட்ட அறிவும் அநுபவமும் இந்நூலை அழகுறப் படைக்க உதவியுள்ளன. வரலாற்று வாழ்வை வடித்துத் தரும் வள்ளலாக அவர் வாழ்கிறார். அவரது குடும்பத்தாரும் அவரது அயராத அரும் பணிகளுக்கு ஒத்துழைத்து உறுதுணை புரிகின்றனர். அவர்கள் அனைவரது ஒத்துழைப்போடும் ஊக்கத்தோடும் இந்த நூலை அச்சிட்டு வெளியிடுகிறோம். அவர்கள் அனைவருக்கும் எங்கள் நெஞ்சார்ந்த நன்றி உரியது. நாடே அவர்களைப் போற்றும்! பாராட்டும்!

இந்நூல் உருவாக முதன்மையாக உதவியோர் அகில இந்தியத் தொல்பொருள் துறையினரே. அத்துறையின் தமிழகக் கண்காணிப்பு அலுவலர் டாக்டர் B. நரசிம்மையா அவர்கட்கும், படங்கள் முதலானவற்றை உதவிய அத்துறையினர் அனைவர்க்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். செஞ்சியில் உள்ள அத்துறை அலுவலகத்தார் எமது களஆய்வுப் பணிகளுக்குத் தக்கபல உதவி களைத் தந்தது மறக்க முடியாது. அவர்கள் அனைவர்க்கும் அன்பான நன்றி யுடையோம்.

எனது வேண்டுகோளை ஏற்று என்னுடன் பலமுறை செஞ்சியில் தங்கி இருந்து வரைபடங்களை எழுதி தந்த ஓவியர்கள் திரு ரங்கநாதன், திரு. R. சதானந்தம், புகைப்படம் எடுத்துதவிய புலவர் முத்து. எத்திராசன் எம். ஏ., பி. எட்., அவர்கட்கும், மாமல்லபுரம் சிற்பக்கல்லூரி ஆசிரியர் இராஜேந் திரன் அவர்கட்கும் மிக்க நன்றியுடையோம்.

நூலின் முகப்போவியம் அமைத்துதவிய டாக்டர் உபால்டு அவர்களுக்கும் களஆய்வுக்கும் கருத்துப் பரிமாற்றத்திற்கும் உதவியாய் அமைந்த தமிழ்நாடு தொல் பொருள் ஆய்வுத் துறையைச் சார்ந்த அலுவலர் திருவாளர் மா. சந்திரமூர்த்தி, ச. கிருஷ்ணமூர்த்தி முதலீயோர்க்கும், கல்வெட்டுப் பகுதியைப் படி எடுத்துத்தந்து

வரலாற்று விளக்கம் தந்த வில்லியனூர் புலவர் ந. வேங்கடேசன் அவர்களுக்கும் அனந்தபுரம் கோ. கிருஷ்ணமூர்த்தி, எம்.ஏ., முதலியோர்க்கும் எமதுநெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நூல் உருவாக்கிய பிளாக் மேக்கர், அமுதன் அச்சகத்தார் சு. அருள், சு. புகழேந்தி முதலானவர்க்கும் நன்றியுடையோம்.

தமிழில் கட்டடக்கலை பற்றிய நூல்கள் உருவாக இந்நூல் ஒரு முன்னோடியாய் அமையும்; அதற்காகவே வரை படங்கள் பலவற்றையும் பெருஞ்செலவில் உருவாக்கிச் சேர்த்துள்ளோம்.

தமிழ்மண்ணின் வரலாற்றுணர்வோடும் சமுதாயப் பற்றோடும் தமிழக மக்கள் உருவாகவேண்டும் எனும் நோக்கத்திற்கு இத்தகைய நூல்கள் அடிப்படையாகும்; உறுதுணையாகும்.

எப்பணியும் தமிழ்ப் பணியாய் இயற்றும் எங்கள் செயலுக்கு நல்லாரும் நாட்டாரும் துணைபுரிய வேண்டுகிறோம்.

தமிழக வரலாற்றுலகுக்கு, கல்வியுலகிற்கு மற்றொரு காணிக்கையாக இந்த அழகிய வரலாற்றுப் பேழையைப் படைத்து வணங்குகிறோம்.

கல்விப் பயன் சிந்தனையாக மலர்ந்து, பொது நலமாக வளர்ந்து, சிறந்த மக்கள்சமுதாயம் உருவாகவேண்டும் என்ற விழைவோடு இந்த நூலை வெளியிடுகிறோம்.

தமிழகம் வாழ்க! தமிழ், தமிழ்க்கலைகள் செழித்திடுமாக!

அன்பன்
வெள்ளையாம்பட்டு சுந்தரம்
சேகர் பதிப்பகம்



செஞ்சி இருப்பிடமும் சுற்றுப்புற நகர்களும்





# கல்லெல்லாம் கதை சொல்லும்!

வரலாற்று மலரின் வண்ண இதழ்களின் நடுவே வனப்புமிகு மகரந்தமொட்டினை ஒத்த மாட்சியுடையது செஞ்சி மலைக்கோட்டை.

சிதம்பரம், சேந்தமங்கலம், பரங்கிப் பேட்டை எலவானாசூர்க்கோட்டை, தியாக துருகம், கள்ளக் குறிச்சி, திருக்கோவலூர், திருவண்ணாமலை, போளூர், வந்தவாசி, வேலூர் ஆர்க்காடு, காஞ்சிபுரம், திண்டி வனம், மரக்காணம், எசாலம், எண்ணாயிரம், விழுப்புரம், கடலூர் என்பனவாகிய அக்கால நகரங்களும் பேரூர் களும் சுற்றிலும் சூழ்ந்திருக்க, செஞ்சிமலைக் கோட்டை நடு நாயகமாக, பாதுகாப்பு மிக்க உயர்ந்த கோட்டை அரணாகச் சிறந்து விளங்கியிருந்துள்ளது.

இந்த வரலாற்றுப் பின்னணி வரைபடக் காட்சி யுடன் செஞ்சியை உற்று நோக்கினால்தான் அக் காலத்து நிலைமை ஓரளவு புலனாகும்.

நடுங்கும் குளிர் நாடாம் ஐரோப்பிய நாட்டைப் பார்த்து, நம் வெப்பநாட்டிலே பெட்டிகளைப் போன்று கட்டடங்களை எழுப்பித், தமது அறியாமையையும் பொருந்தாத பழக்கத்தையும் வெளிப்படுத்தி வரும் கற்றவர் என்போரை நம் நாடு சுமந்து கொண்டிருக்கிற காலம் இது.

நம் சுற்றுச் சூழல், தட்பவெப்பநிலைகளைப் பற்றிய உணர்வும் அறிவும் சிறிதும் அற்றவர்களாக, மொத்தமாக அந்நியப் பட்டவர்களாகி வாழும் மக்கள், சுதந்திர நாட்டவர் எனும் தகுதிக்கும் உரியவராகாமல், பழைய



அடிமைகளாகவே நடமாடித் தாழ்ந்துத் திரிகிறார்கள். இது இன்றைய இழிநிலை.

வெளிநாட்டுஇசுலாமியரும் மேலைநாட்டுப் பிரெஞ்சுக் காரரும் ஆங்கிலேயரும், உள்நாட்டு மராட்டியரும், ஆந்திரரும் மாறி மாறி இந்த மண்டலத்தை அடிமை கொண்டதும் ஆட்சி புரிந்ததும், மானமும் வீரமுமற்ற மக்களின் மதிமயக்கமும் செயலற்ற கோழைத்தனமும் அமைத்த அடித்தளத்திலிருந்துதான்! இதை வெட்க மின்றி வெளிப்படையாக ஒப்புக்கொள்வதே அறிடைமை யாகும்.

அளவற்ற அவலங்களுக்கிடையே அங்கு மிங்குமாக நம் முன்னோரின் தனிப் பண்புகள் சிலவும், தனித் திறன்கள் சிலவும் பதிவாகியுள்ளதையும் நாம் கருத்தோடு காண்கிறோம். அவற்றை வெளிப்படுத்துவது தலையாய கடமை யாகும் என்பதை உணர்கிறோம்.

கோட்டை என்று எண்ணும்போது, கோட்டைகளை நேரில் காணும் பொழுது எத்தனை யெத்தனை எண்ணங்கள் எழுகின்றன!

அகநானூறு, பெரும்பாணாற்றுப்படை, மதுரைக்காஞ்சி, மணிமேகலை, சிலப்பதிகாரம் முதலான நூல்களில் ஆங்காங்கே காணப்படும் சொற்கள் சில நெஞ்சில் மின்னலிடுகின்றன.

செல்வச் செழிப்புடையோர் கலைவனப்பு மிக்க பெரும் பெரும் மாட மாளிகைகளைக் கட்டி வாழ்ந்துள்ளனர். வான் நோக்கி எழும்பி நிற்கும் உயர்ந்த, மாடங்கள் கொண்ட பலமாடிக் கட்டடங்களை எழுப்பியுள்ளனர்.

| | |
|---|---|
| நெடுநிலை மாடம் | நிறைநிலை மாடம் |
| மங்குல்தோய் மாடம் | மலைபுரை மாடம் |
| முகில் தோய் மாடம் | வான்தோய் மாடம் |

வேயாமாடம் என்றெல்லாம் சங்ககாலப்பாடல்கள் தெரிவிக்கின்றன.

குவிந்தமாடம் என்பது முன்புறம் அமைந்திருக்கும். அது போன்றே மதலை மாடம் என்பதும் மகளிர் மேலிருந்து தெருவில்வரும் காட்சியைக் காணத்தக்கவாறு அமைத்திருந்தனராம்.

கீழ்ப்பகுதி அதிகப் பரப்பாக வைத்து,மேலே வளரும் கட்டடம்ஒவ்வொரு அடுக்கும் சிறிது சிறிதாகக் குறுகிச் செல்லும்! இவ்வாறு கோயில் விமானம் போன்று குவிந்து செல்வதாக அமைப்பதே குவிமாடம் எனப்பட்டது.

**செல்வமும் அதிகாரமும் பாதுகாப்புடன் சேர்ந்தே இருக்கும்!**

செல்வத்திற்கும் பகை. உண்டு; தலைமைக்கும் பகை உண்டு. தேடலும் திரட்டலும் பாதுகாப்புக்கு உட்பட்டே தீரும். பாதுகாப்பு உணர்வு பண்டைய காலம் முதலே தோன்றிவிட்டது

ஆதி மனிதன் விலங்குகளிடமிருந்து தற்காத்துக் கொள்ள, பாதுகாப்பாகத் தன் வாழ்விடத்தை அமைக்கத் தொடங்கினான். போட்டியும் பொறாமையும் பேராசையும், அவற்றால் எழும் பகையும் வஞ்சமும், ஒருவரை யொருவர் தாக்கி அழிக்கும் நிலையைத் தோற்றுவித்தன.

இந்த நிலையால், தங்களை எதிரிகள் அணுகாமல் இருக்கப் பலமான தடைகளை ஏற்படுத்திக்கொண்டனர். பாதுகாப்பு எண்ணங்கள் பல்கிப் பெருகின. கட்டுக்காவல் மட்டின்றி வளர்ந்தன.

வீட்டுக்குச் சுவர், கதவு என்பவை போதும். ஒரு பெரிய கோட்டைக்கு?

நாட்டின் ஆட்சிக்குரிய நடுநாயகமாக விளங்கும் அரண்மனை, படைக்கூடம், வீரர் கோட்டம் பெரும் பாதுகாப்புக்கு உரியனவாகும். பலமான தடைகள் அமைக்க வேண்டியதாயிற்று.

எதிரிநாட்டுப் படைகள் எளிதில் முன்னேறி வந்து தாக்கக் கூடாது; திடீரென்று எதிரிகள் உள்ளே நுழைந்து விடலாகாது என்பதில் ஒவ்வொரு ஆட்சியினரும் கருத்தாக இருந்துள்ளனர். அன்று இருந்த நிலை இப்பொழுதும் உள்ளது. ஆனால், கால வளர்ச்சிக்கேற்றவாறு மாற்றம் பெற்றுள்ளது.

ஓர் அரசனின் கோட்டை அமைப்பு எவ்வாறு இருந்தன என்பதை
நம் சங்ககாலப் பாடல்கள் உணர்த்துகின்றன.

கோட்டைக்கு உள்ளே, பலவித மறைவிடங்கள், பாதுகாப்பு நிலைகள், கருவிகள் சேமிப்புஅறைகள் எனப் பலவித அமைப்புகள் இருந்துள்ளன. கோட்டைச் சுவர்கள், பல குதிரைவீரர்கள் செல்லத்தக்கவாறு அகன்றிருக்கும்; இரு ஓரங்களிலும் பதுங்கு அறைகள் அமைந்திருக்கும்; பலவேறு வகையிலும் அவை அமைந்திருக்கும்.

கோட்டைச் சுவர்களை, அதன் அமைப்பை வைத்து வெவ்வேறு பெயர்களில் வழங்கியதை அறிகிறோம். இஞ்சி, எயில், ஞாயில், புரிசை, மதில் என்னும் பெயர்களை நாம் காண்கிறோம்.

அரிய கோட்டை மதில்கள் நான்கு விதச் சிறப்புகளைப் பெற்றிருக்கும். 1. உயரமாயிருத்தல், 2. அகன்றதாயிருத்தல், 3. திண்மை எனும் உறுதியுடன் இருத்தல், 4. அரிய பாதுகாப்பு அமைப்புகள் கொண்டிருத்தல்.

வெளிமதில், உள்மதில் என இருவகை அமைப்புகள் இருக்கும். வெளிக் கோட்டை, உள்கோட்டை எனப்படும் பிரிவுகளும் இருக்கும். இவ் அமைப்பைச் செஞ்சியிலும் காணலாம்.

மதிற்சுவர் ஓரங்களில் அரும்புகள் போல் அழகுறக் காணும் அமைப்பை அரிய பாதுகாப்புக்கு என்றே உருவாக்கினர். அதன் பின்புறம் காவல் வீரர் மறைந் திருப்பதற்கு வசதியிருக்கும். மேலும் கோட்டையை நோக்கி நெருங்கிவரும் எதிரி கள்மீது, மதில்மேல் மறைந்துள்ள வீரர் கவண்கல் எறிந்து தாக்குவர்; கொதிக்கும் வெந்நீர், கொதிக்கும் எண்ணெய் முதலியவற்றை மேலிருந்து வீசுவார்கள்; கொட்டுவார்கள்.

வேல், அம்பு, ஈட்டி, எழு, சீப்பு, கணையம், குந்தம், கோல் முதலான கருவி களை மதிலின் மேல் உள்ள துளைகள் வழியாக வெளியிலுள்ள பகைவர் மீது எறி வர். கண்போன்று உள்ள சிறிய துளைகள், மறைந்திருந்து கணைகளை எய்திட உதவும் அரிய அமைப்புகளாகும். அச்சிறு துளைகளைக் 'குரூஉக்கண்' என்றனர் முன்னோர். அவற்றையே பொய்க்கண் என்றனர்; கல்துளை என்றனர்.

மதிலின் உட்புறங்களில் பலவகை இயந்திரங்களை வைத்திருந்தனர். வீரர் இயக்கும் விசையுடைய பல பொறிகள் அமைத்திருந்தனர். அவை மறைவி லிருந்து வெளியிலுள்ள எதிரிகளைத் தாக்கி அழிக்க வல்லவை.

நம் சங்ககால நூல்கள் அத்தகைய பல பொறிகளைப் பற்றிக் கூறுவதைக் காண்போம்.

| | |
|---|---|
| கவை எனும் பொறி | கவண் பொறி |
| கழுப் பொறி | உலைப்பொறி |
| குரங்குப் பொறி | பன்றிப் பொறி |
| விற்பொறி | மறைஊசிப் பொறி |
| வெந்நீர்ப் பொறி | தூண்டிற் பொறி |
| வெல்லப்பாகு காய்ச்சி ஊற்றும் பொறி | தொடக்குப் பொறி |
| | ஏவறை |

என்பனவற்றை யெல்லாம் படித்து நாம் அறியும்போது அக்காலப் பாதுகாப்பு முறைகள் புலனாகின்றன. பகைமையின் கொடிய கருவிகள்! பகைவரை அழிப்பது போல் காட்டிப், பகை வளர்ப்பன அன்றோ அவை!

கோட்டைக் கதவுகள் பற்றி எண்ணிப் பார்ப்போம். உயரமான கதவுகள், மிகுந்த கனமான கதவுகள், இரும்பு, பித்தளைக் குமிழ்கள் படைத்த உறுதியுடைய கதவுகள். கீழும் மேலும் கல் திம்மைகளில் குழிவு செய்த, பூண்கள்உடைய கதவு கள்! திறந்து மூடினால் சத்தம் எழும்; ஒருவர் இருவர் திறக்க முடியாத கனம்

உடையவை; வீரர் பலர் பலம்கூட்டி முயன்று திறக்க வேண்டியவை. அவை மூடப் பட்டால், யானைகள் கூடி முட்டி மோதினாலும் உடையாத, தகர்க்க முடியாத உறுதியுடையவை. அத்தகைய கதவுகள் இருந்ததற்கான அடையாளங்களை இன்றும் செஞ்சியில், வேலூர் வாயில் எனும் கோட்டை வாயில் முகப்பில் காணலாம்.

சில கோட்டை வாயில் கதவுகளில் சிறு கதவுகள் அமைப்பதுண்டு. இப்பொழுதும் பல கோயில் கதவுகளைப் பார்த்தால் தெரியும்; அவை திட்டிவாசல் என்படும். முற்காலத்தில் அத்தகைய சிறிய கதவுகள் கொண்ட பெருங்கதவைப் புதை கதவு, புதவக் கதவம் என்று பெயரிட்டு அழைத்துள்ளனர்.

உயர்ந்த கோட்டை மதிலுக்கு வெளியே அகன்ற அகழியை அமைப்பர். ஆற்றுநீர் அதில் வரச் செய்வர்; வேறு ஊற்று நீர் தங்கச் செய்வதும் உண்டு. அகழியைக் கிடங்கு, கிடங்கில் என்றும் அழைப்பர். பகைவர் நீரில் இறங்கினால் அவர்களை அழிக்கக் கொடிய முதலைகளை அகழியில் வளர்ப்பதுண்டு

அகழி மீது கோட்டை வாயிலுக்குச் செல்ல கனமான மரப்பாலம் மிகவும் உறுதியாய் அமைந்திருக்கும். அதை வேண்டும்போது இறக்கவும், வேண்டாத போது தூக்கவும் தகுந்தவாறு அமைப்பது வழக்கம், யானைகள், குதிரைகள், தேர்கள், வண்டிகள், படைவீரர்கள் செல்வதற்கு ஏற்றவாறு அகன்றும் உறுதி யாயும் இருக்கும். இத்தகைய அகழிப் பாலங்களைச் சுருங்கை என்பர்; சுருங்கைவீதி என்றும் சங்ககாலப் புலவர் குறித்துக் காட்டியுள்ளனர்.

> இத்தகைய பாலம் செஞ்சி அகழியிலும் இருந்திருக்கும். அதன் சுவடு இப்பொழுது அறிய முடியவில்லை.

வேலூர் வாயில் என்னுமிடம் மட்டும் நுழைவாயிலுக்குரிய அமைப்புடன் காணப்படுகிறது. ஆயினும், அகழிப் பாலம் இருந்த இடத்தில் இப்பொழுது தரைப் பாலம்தான் காணப்படுகிறது. இது பிற்கால அமைப்பாகவும் இருக்கலாம்.

அகழிக்கு வெளிப் புறத்தில் காடுகளும் முள்காடுகளும் வளர்த்துப், பகைவர் எளிதில் நெருங்க முடியாதவாறு பாதுகாப்புகள் செய்துள்ளனர். அத் தகைய காடு 'காவற்காடு' என்று குறிப்பிடப்படுகின்றது. மிளை என்றும் வழங்கப் படுகின்றது. அதிலும் பல பிரிவுகள் இருந்துள்ளன.

> அருங்குழு மிளை, இலைசூழ் மிளை, கருமிளை, வாழ்முள்வேலி
> எனச் சங்கப் புலவோர் வரைந்து சென்றுள்ளனர்.

இத்தகைய முள் புதர்க் காடுகள் செஞ்சிக் கோட்டையைச் சுற்றிலும் இருந்துள்ளது. இன்றும் தெற்கில் விழுப்புரம், அனந்தபுரம் செல்லும் சாலைகளில் தரைக்காடு என்னும் புதர்க்காடுகள் இருப்பதைக் காணலாம். தென்மேற்கிலும், மேற்கிலும், வடமேற்கிலும்கூட காடுகளும் மலைகளும் தொடர்ச்சியாக இருப்பதை இன்றும் கண்டு உணரலாம்.

கிழக்கில் சங்கராபரணியாறும் சுற்றிலும் பல ஏரிகளும் அமைந்துள்ளன. இவ்வாறு நீர் அரணும் காட்டரணும்மலையரணும் கொண்டதாக உள்ளது செஞ்சிக்கோட்டை.

கோட்டை மதிலின் உருண்டு திரண்ட கற்கள் ஒவ்வொன்றும் நம் கண்களில் வியப்பை விளைவிக்கின்றன; நெஞ்சில் திகைப்பையும் மலைப்பையும் உருவாக்குகின்றன.

அக்கற்கள், எந்தக் குன்றில் எங்கே இருந்தனவோ! அவை தோன்றி எத்தனை காலம் ஆயிற்றோ?

செஞ்சிக் கோட்டைக்கற்களே! உங்கள் கதைதான் என்ன? பூர்வீகம்தான் என்ன?

பெரும் பெரும் குன்றுகளை வெடி வைத்துப் பிளந்தவர் எத்தனை பேர்? உளிகொண்டு வெட்டித் துண்டித்தவர் எத்தனை பேர்?

பாறைகளும் குன்றுகளும் பலவாறு உருவங் கொள்ளப் பாடுபட்டவர் எத்தனை பேர்?

ஏ, கற்களே! உங்களிடமும் பல பிரிவுகளை மனிதன் கண்டு கொண்டானே! அதனால் அவற்றுக்கு ஏற்ற பெயர்களையும் தந்துள்ளானே!

ஆண்கல் ஒரு வகை; பெண்கல் ஒருவகை; இவை இரண்டும் அல்லாதது அலிக் கல்! இதற்கும் புறம்பான வகையும் இருக்கிறதாம்!

கட்டுக்கல்லும் படிக் கல்லும் ஒரு வகை; தூணும் தூலங்களும் ஒருவகை. கலைப் படைப்பாகவும் கடவுள் சிலைகளாகவும் உருவாகும் கற்கள் ஒருவகை!

செஞ்சி, திருவண்ணாமலை சுற்றுப்புறப் பகுதிகளில் கலைவடிவக் கற்கள் காணப்படுகின்றன. தாதாபுரத்திற்கு மேற்கே, செஞ்சிக்கு வடக்கே பச்சைக்கல் எனும் ஒருவகைக் கல் காணப்படுகிறது.

அது பச்சைமலை என்றே இன்றும் அழைக்கப்படுகின்றது. பச்சை மலையிலிருந்து கற்கள் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இவ்வாறே கல்சொல்லும் கதைகள் பலப் பல ஆகும்.

செஞ்சிக்குத் தெற்கிலுள்ள மண்டகப்பட்டு, தளவானூர்க் குடவரை மண்டபங்கள், செஞ்சிக்கு வடக்கிலுள்ள சிங்கவரம் ரங்கநாதர், மேலைச்சேரி சிவபெருமான் குடைவரைக்கோயில்கள், வடகிழக்கிலுள்ள மேல் மாவிலங்கை குடைவரைச் சிற்பம் முதலியன கருங் கல்லில் விளைந்த கலைக்களஞ்சியங்கள், அல்லவா!

பல்லவ மன்னர்களால் பெருமை பெற்ற பாறாங் கற்களே! பாண்டிய மன்னர்களால் பெருமை பெற்ற கருங் கற்களே! சோழ மன்னர்களால் சுடர்விடும்

கலைக் குன்றுகளே! நாயக்க மன்னர்களின் நயம்மிகு கலைக்கு உரித்தான கற்குன்றுகளே! காலங் காலமாகக் கல்தச்சர்களாலும் அற்புதக் கலைகளை அழகாக வடித்து உருவாக்கும் அரிய கலைச் சிற்பிகளாலும் மேன்மை யடைந்து மேதினியைக் கவர்ந்து நிற்கும் கற்களே! கற்களே!

ஏ, கல்லே! இந்த மானுடர் வாழ்வின் மாற்றங்களை உரைத்துக் காட்டும் உரைகல்லாகவும் நீ உள்ளாய்! மானிடரின் அறிவு, அழகுக்கலை, பகை, எதிர்ப்பு, அழிப்பு என்னும் அனைத்தையும் உரைக்கும் உரை கல்லாகவும் விளங்குகிறாய்! அத்தனையும் கண்டும் கல்லாகவே இருக்கிறாய்!

தேவைக்கு உதவும் திருக்கல்லே, அழிவுக்கும் நீயே ஆதாரமாய் இருக்கின்றாய்!

கல்லே, உன்னால் வாழ்ந்தவர் எத்தனையோபேர்! உன்னால் ஆதரிக்கப் பெற்றோர் அளவற்றோர்; உன்னால் அழிந்தோரும் ஆயிரம் ஆயிரம் பேர்! ஆக்கத் திற்கும் ஆதரவுக்கும் அழகுக்கும் ஆராதனைக்கும் காரணமாயுள்ள கல்லே, எண்ணற்றோர் அழிவுக்கும் நீயே காரணமாயுள்ளது பெரிய விந்தையும் ஆகும்; வேதனையும் ஆகும்!

எல்லாம் மனிதன் செயல்; யாவும் மனிதர் செயல்! எல்லாமே மனி ஆசையின் விளைவே ஆகும்! அல்லவா!

செஞ்சிக்கோட்டை எங்கும் உள்ள கற்கள் ஒவ்வொன்றும் இவ்வாறான எண்ணங்களைத் தோற்றுவிக்கின்றன. கற்களால் ஆன கோட்டைகளும் கட்டடங் களும் காண வருபவர் நெஞ்சத்தில் பலவிதமான கதைகளைக் கூறாமல் கூறுகின்றன.

இனிச் செஞ்சிக் கோட்டையின் கதைகளை இந்நூலாசிரியர் வாயிலாகக் கேட்டறிய வாசகர்கள் அனைவரையும் வாயிலில் நின்று வரவேற்கிறோம்.

— *பதிப்பாசிரியர்*



தென்னிந்தியக் கோட்டை நகரங்களில் சில.





## நுழைவாயில்

பண்டைய தமிழகத்தின் சிறப்பினை விளக்கிட இன்றும் நம்மிடையே சான்றுகள் பல உள்ளன. கோயில்கள், கோட்டைகள் அரண்மனைக் கட்டடங்கள், கல்வெட்டுகள், ஓவியங்கள், சிற்பங்கள் முதலியன யாவும் இவற்றுள் அடங்கும்.



புராதனக் கட்டடங்கள் தவிர, புராண இதிகாசங்கள், சைவ, வைணவ பக்தர்களின் வரலாறுகள், பாடல்கள் முதலியனவும் தமிழகத்தின் தன்னிகரில்லாப் புகழை அன்றும் இன்றும் என்றும் எடுத்துரைப்பவையாய் உள்ளன.

இத்தகைய சரித்திரப் புகழ் வாய்ந்த இடங்களுள் செஞ்சிக் கோட்டையும் ஒன்று.

முதலில் இந்தக் கோட்டையைக் கட்டியவர்கள், 'ஆனந்தக்கோனார்', 'கிருஷ்ணக்கோனார்', 'புலியக்கோனார்' முதலியோர் ஆவர்.

பின்பு இவர்கள் தவிர, இக்கோட்டையை விரிவுபடுத்திக் கோயில்கள் பலவற்றை உருவாக்கிய நாயக்க மன்னர்கள், அதைப் பின்பு கைப்பற்றி ஆட்சி செய்த மராத்தியர்கள், முகமதியர்கள், ஆர்க்காட்டு நவாப், பிரெஞ்சுக்காரர்கள், மற்றும் ஆங்கிலேயர்கள் முதலானோர் தங்கள் ஆளுகையில் இக் கோட்டையில் தேவையான பணிகளைச் செய்திருக்கின்றனர். ஆயினும் செஞ்சிக்கோட்டை என்ற பெயரை நாம் கேட்டவுடன் நம் நினைவுக்கு வருபவர் மாவீரன் ராஜா தேசிங்கு என்பவர் மட்டுமே. மேற்கூறிய அரசர்களோ அல்லது அவர்கள் ஆட்சியோ தேசிங்கு ராஜனைப் போல் நம் நினைவில் நிற்கவில்லை.

இத்தனைக்கும் தேசிங்கு ராஜன் செஞ்சியை ஆண்ட காலம், பத்தே மாதங்கள் தான். இக்குறுகிய காலத்தில் இவன் அடைந்த புகழை ஏனைய அரசர்கள் அடைய முடியாமல் போனதற்கு முக்கியக் காரணங்கள் பல இருப்பினும் சிறப்பாக மூன்றை மட்டும் இங்கே கூறுவோம்.

1 பெரியவர்களாலும் செய்ய முடியாத வீர சாகசச் செயல்கள் பலவற்றை இவன் தன் பதினாறு வயதிற்குள் செய்து காட்டினான்.

2 அச்சிறுவயதிலேயே 'யாருக்கும் கப்பம் கட்டி, அடிமை அரசனாக இருக்க மாட்டேன்' என அடிமைத்தனத்தை எதிர்த்துப் போரிட்டு மாண்டான்.

3 தேசிங்கு ராஜனைப்பற்றி நாட்டுப்பாடல்கள் பல இயற்றியும் நாடகங்கள் பல நடத்தியும் வந்தவர்களால் அவனது புகழ் மக்கள் மனதில் தொடர்ந்து நிலைத்து நிற்கின்றது. அதேசமயம் அவனுக்கு முன்பு செஞ்சியை ஆண்ட அரசர்களைப்பற்றி அவ்வாறான தனிப்பட்ட நாடகங்களோ பாடல்களோ இயற்றப் படாதது மட்டுமல்ல, தேசிங்குராஜனின் பாடல்களிலும் நாடகங்களிலும்கூட அவர்களைப்பற்றிச் சரியான குறிப்புகள் ஏதும் இல்லை தவிர, தேசிங்கு ராஜனுக்கு முன்பு செஞ்சியை ஆண்ட அரசர்களது வரலாற்றை, மக்கள் மனதில் பதியும் வண்ணம் இதுவரை வரையவில்லை. முக்கியமான இம்மூன்று காரணங்களால் தேசிங்கின் புகழ் நாட்டுமக்களிடையே பிரபலமாகி உள்ளது. இவனது வரலாற்றை நாம் பின்பு தனி ஒரு அத்தியாயத்தில் கூறியுள்ளோம்.

'செஞ்சி' என்ற ஊர் அதே பெயரிலான வட்டமாக இப்போதைய விழுப்புரம் இராமசாமி படையாச்சியர்ர் மாவட்டத்தில் 'சங்கராபரணி'ஆற்றின் மேற்குக் கரையில் அமைந்துள்ளது.

சென்னையிலிருந்து 150 கி. மீ. தூரத்தில், திருவண்ணாமலை செல்லும் சாலையில் அமைந்துள்ள இவ்வூர், சுற்றிலும் மலைகள் சூழ்ந்து காணப்படுகின்றது. பெரிய பாறாங்கற்களை ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கியது போன்றுள்ள அம் மலைகளும் அதைச் சார்ந்த காடுகளும் செஞ்சிக்கு இயற்கையாகவே கண்கவரும் சூழ்நிலையை ஏற்படுத்தி உள்ளன.

இவ்வூரை இரயில் மார்க்கமாக வந்தடைய சென்னையிலிருந்து திண்டிவனம் இரயில் நிலையத்திலும் தெற்கிலிருந்து வருபவர்கள் விழுப்புரம் இரயில் சந்திப்பிலும் இறங்கி, அங்கிருந்து பேருந்து மூலமாக வந்து சேரலாம். விழுப்புரத்திலிருந்து செஞ்சி 35 கி. மீ. தொலைவிலும் திண்டிவனத்திலிருந்து 27 கி. மீ. தூரத்திலும் உள்ளது.

திருவண்ணாமலையிலும் இரயில் நிலையம் உள்ளது. அங்கிருந்தும் (38 கி. மீ.) தூரம் செஞ்சியைப் பேருந்துகள் மூலமாக வந்தடையலாம்.

அவை தவிர, இவ்வூர் தமிழகத்தின் மற்ற முக்கிய ஊர்களுடன் சாலை மூலமாகத் தொடர்புடையதாக உள்ளது. மலைப்பாங்கான பிரதேச மாதலால் இங்குப் பயிர் சாகுபடி சிறிதளவே நடைபெறுகிறது. புன்செய்ப் பயிர்களே அதிகம்.

செஞ்சி வட்டத்தின் மக்கள் தொகை 3, 64, 824 என்றும் செஞ்சி நகரில் மக்கள்தொகை மட்டும் 57, 674 என்றும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் புள்ளி விவரம் கூறுகின்றது.

செஞ்சி வட்டத்தின் பரப்பளவு 1, 06, 117 சதுர கி. மீ. ஆகும்.
செஞ்சி வட்டத்தில் 270 கிராமங்கள் உள்ளன.

புகழ் வாய்ந்த இச்செஞ்சிக் கோட்டையைப் பற்றி எளிய மக்களும் அறிந்து கொள்ளத்தக்கவாறு சரியான முறையில் வரலாற்று நூல்கள் இதுவரை வெளிவரவில்லை என்று பலர் கருதுகின்றனர்.

இந்தியத் தொல்பொருள் இலாகாவில் சுமார் 35 வருடங்களாகப் பணி புரிந்து வரும் எனக்கு, செஞ்சியிலேயே மூன்று வருடங்கள் இருந்து பணிபுரியும் வாய்ப்பு (1974 — 77) கிட்டியது. அவ்வாறு பணி புரியும் சமயம் பெற்ற அனுபவத்தையும் செய்த ஆராய்ச்சியையும் கொண்டு, நாமே ஏன் இந்த வரலாற்று நூலை எழுதக்கூடாது என்ற எண்ணம் ஏற்பட்டது. இத்தகைய எண்ணத்தின் விளைவே இந்நூலின் தோற்றம்.



## விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டம்





# வரலாற்றில் செஞ்சிப்பகுதி



செஞ்சியைப் பற்றிய ஏற்றுக்கொள்ளத்தக்க ஆதாரங்களைக் கொண்ட வரலாற்றுக் குறிப்புகள், சான்றுகள் நமக்கு கி. பி. 15 ஆம் நூற்றாண்டுக்குப் பிறகே கிடைக்கின்றன. ஆயினும், அதன் சுற்றுப்புறத்தில் அமைந்துள்ள பல பழங் காலச் சான்றுகளின் வாயிலாக இவ்வூரும் இவ்வூரைச்சுற்றியுள்ள இடங்களும் பண்டையக் காலம் முதலே மிகவும் புகழ் வாய்ந்திருந்ததாக நாம் அறிகிறோம்.

செஞ்சிக்கு மிக அருகிலுள்ள திருநாதன் குன்று எனும், ‘சிறுகடம்பூர்’ என்ற இடம் சமணர்களின் திருத்தலமாக விளங்குகிறது.

அங்குள்ள மிகப் பெரிய பாறையின் மீது புடைப்புச் சிற்பங்களாகக் காட்சி யளிக்கும் இருபத்து நான்கு சமண தீர்த்தங்கரர்களின் சிலை உருவங்களும், ‘சல்லேகனம்’ என்னும் நோன்பிருந்து உயிர் துறந்த சமண முனிவர் சந்திர நந்தி ஆசிரியர் பற்றிய பிராமி எழுத்துக் கல்வெட்டுக் குறிப்புகளும், இவ்விடம் ஒரு காலத்தில் சமணர்களின் முக்கியப் புகலிடமாக விளங்கியதற்குச் சான்றாக அமைந் துள்ளன.

செஞ்சியிலிருந்து கிழக்கே 10 கி. மீ. தூரத்தில் உள்ள சித்தாமூரில் உள்ள சமணர்களது கோயில்கள் தமிழகத்தில் உள்ள திகம்பர சமணப் பிரிவினரின் முக்கிய (ஒரே) வழிபாட்டு இடமாக அமைந்துள்ளது. இங்குள்ள சமணர்களின் மடமும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

இது தவிர, செஞ்சி வட்டத்தில் பெரும்புகை, மங்கலம், கன்னலம், வளத்தி, மேல் மலையனூர், தொரப்பாடி, தாயனூர், சிண்டிப்பட்டு, எய்யில், கள்ளப்புலியூர்,

தொண்டூர், அகலூர், பென்னகரை, வீரணாமூர், மேல் அத்திப்பாக்கம், ஏதாநெமிலி, கீழ்வயலாமூர் மற்றும் காட்டு சித்தாமூர் ஆகிய ஊர்களும் சமணர்களின் கோயில்கள் உள்ள முக்கிய இடங்களாகும். நெகமம் அடுக்கன் கல் எனும் ஊர்க் குன்றில் அண்மையில் சமணர் படுக்கையும் பழங்கால ஓவியக் குறியீடுகளும் கண்டுபிடிக்கப் பெற்றன.

ஆகவே செஞ்சியிலும், அதைச் சுற்றியுள்ள ஊர்களிலும் கி பி. இரண்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்திலிருந்து கி. பி. 19 ஆம் நூற்றாண்டு வரையில் கட்டப்பட்டுள்ள சமணர்கள் கோயில்களைக் கொண்டு இவ்வூர்ப் பகுதி மிகத் தொன்மை வாய்ந்தது எனக் கருதலாம்.

***விசித்திர சித்தன்*** எனத் தனது கல்வெட்டில் தன்னைப்பற்றிக் கூறிக் கொள்ளும் பல்லவப் பேரரசனான மகேந்திரவர்மனால் (கி பி. 580-630)பாறையில் குடைந்தெடுக்கப்பட்ட குடைவரைக் கோயில் செஞ்சியிலிருந்து தெற்கில் 17 கிலோ மீட்டர் தொலைவில் மண்டகப்பட்டு என்ற இடத்தில் அமைந்துள்ளது. இது தவிர தளவானூர், சிங்கபுரம் முதலிய ஊர்ப்புறங்களில் அமைந்த கற்றளிகளும் குறிப்பிடத்தக்கவை. செஞ்சிக்குத் தெற்கில் பனமலை என்ற ஊரில், மலைமீது அமைந்த கல் கட்டுமானக் கோயிலும், அங்குள்ள கல்வெட்டுகளும் வண்ண ஓவியமும்— இவ்வூரும் இதன் சுற்றுப்புறமும் பல்லவர் காலத்திலேயே, (கி. பி. 6 ஆம் நூற்றாண்டு முதலே மிகவும் புகழ்) வாய்ந்த இடங்களாக இருந்திருக்க வேண்டும் என்பதை நமக்குப் புலப்படுத்துகின்றன.

சிங்கபுரம் என்ற ஊர், பல்லவ மன்னன் சிம்மவர்மனையோ அல்லது சிம்ம விஷ்ணுவையோ பெயராகக்கொண்டு தோன்றியது என்பர்.

'கச்சியும் தஞ்சையும் கொண்ட' கன்னர தேவன் காலத்திலும் பின்னர் சோழர்காலக் கல்வெட்டுகளிலும் இச்சிங்கபுரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இச் சிங்கபுரத்தின் மலைமீது அமைந்த பல்லவர்காலக் குடைவரைக் கோயில் இன்றும் சிறப்புவாய்ந்த நிலையில் காணப்படுகின்றது. குன்றின் மேலுள்ள பாறையில் குடைந்துள்ள பெரும் மண்டப அறையின் உள்ளே நீண்ட நெடுமாலாகப் பள்ளிகொண்டுள்ள திருவரங்கன், பார்க்கப் பரவசமூட்டும் தெய்வமாகும்.

சிங்கவரத்தின் அருகில் உள்ள ஊரே மேலைச் சேரியாகும். பல்லவப் பேரரசன் மகேந்திர வர்மன் சிங்கபுரத்தில் திருமாலுக்கும் மேலைச் சேரியில் சிவபிரானுக்கும் குடைவரைக் கோயில்கள் எடுப்பித்துள்ளான். கல்வெட்டில் '***சிகாரி மல்லேஸ்வரம்***' என்றுள்ள இக்கோயிலில் குடிகொண்டுள்ள சிவபிரானுக்கு '***மத்தனீஸ்வரர்***' என்ற திருநாமம் உண்டு.

செஞ்சிக்குக் கிழக்கில் நாட்டார்மங்கலத்திற்கு அருகிலுள்ள ஆனாங்கூர் என்ற ஊரில், பாறையின் மீதுள்ள கல்வெட்டு ஒன்று அண்மையில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இது முதலாம் ஆதித்த சோழ மன்னனுக்குரியது. (கி. பி. 871 - 907)

ஆகவே செஞ்சியும் அதன் சுற்றுப்புறமும் தொன்றுதொட்டே புகழ் வாய்ந்த இடங்களாக இருந்தன என்பது புலனாகிறது.

எனினும் செஞ்சியைப்பற்றித் தொடர்ச்சியான வரலாறு நமக்கு 15 ஆம் நூற்றாண்டுக்குப் பின்புதான் கிடைக்கிறது எனலாம். அதற்கு முந்தைய கல்வெட்டு களிலும் நூல்களிலும் செஞ்சியைப்பற்றிச் சில குறிப்புகள் மட்டுமே கிடைக் கின்றன.

கி. பி. 12, 13ஆம் நூற்றாண்டில் மாறவர்மன் வீரபாண்டியன் காலத் தில், 'சிங்கபுரம்' கல்வெட்டில் செஞ்சிமலையைப் பற்றிய குறிப்புகள் காணப்படு கின்றன.

இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் (கி. பி. 1135 — 1150) வாழ்ந்த ஒட்டக்கூத்தர் எழுதியுள்ள 'விக்கிரமசோழன் உலா' என்ற நூலில், 'செஞ்சியர் கோன்' என்ற குறுநில மன்னன், முதலாம் குலோத்துங்கனின் ஆட்சிக் காலத்தில் இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

புகழேந்திப் புலவர் செஞ்சி அரசன் ஒருவனைப் பற்றிக் 'கலம்பகம்' பாடியதாகத்' தொண்டை மண்டல சதகம்' கூறுகின்றது.

## 1. குறிப்புகள், செவிவழிச் செய்திகள்

அறிஞர் 'மெக்கன்சி' என்பவரின் குறிப்புகளே செஞ்சிக் கோட்டையின் சரித்திரத்தை உருவாக்க ஓரளவு உபயோகமாக உள்ளன என்று கூறலாம். இவர் தம் குறிப்பில், நாயக்க மன்னர்களின் மரபினைக் கீழ்கண்டவாறு கூறியுள்ளார்.

| | | |
|---|---|---|
| 1 | வையப்ப நாயக்கர் | கி. பி. 1490 |
| 2 | துபாகி கிருஷ்ணப்ப நாயக்கர் | கி. பி. 1490 — 1520 |
| 3 | அச்சுத விஜயராமச்சந்திர நாயக்கர் | கி. பி. 1520 — 1540 |
| 4 | முத்தியாலு நாயக்கர் | கி. பி. 1540 — 1550 |
| 5 | வெங்கடப்ப நாயக்கர் | கி. பி. 1570 — 1600 |
| 6 | வரதப்ப நாயக்கர் | கி. பி. 1600 — 1620 |
| 7 | அப்பு நாயக்கர் | கி. பி. 1620 முதல் (முகமதியர் ஆட்சி ஏற்படும் வரை) |

செ—4

எஸ். எம். எட்வர்ட்ஸ் என்பவர் குறிப்பிட்டுள்ள அரசமரபுப் பட்டியலில் கூறியுள்ளதைப் பார்ப்போம்.

(செஞ்சி அரசர்களின் சரிதம் — கையெழுத்துப் பிரதி)

| | | |
|---|---|---|
| 1 | முத்தியால் நாயக்கர் | கி. பி. 1476 |
| 2 | கிருஷ்ணப்ப நாயக்கர் | 1516 |
| 3 | சேனம நாயக்கர் | 1536 |
| 4 | விஜயப்ப நாயக்கர் | 1555 |
| 5 | கங்கம நாயக்கர் | 1580 |
| 6 | வெங்கடராம நாயக்கர் | 1625 |
| 7 | வெங்கடகிருஷ்ண நாயக்கர் | 1605 |
| 8 | கிருஷ்ணப்ப நாயக்கர் | 1645 |
| 9 | வரதப்ப நாயக்கர் | 1655 |

மேலே கூறப்பட்ட இரண்டு குறிப்புகளின்படி பார்ப்போமேயானால் நாயக்க மன்னர்களின் பெயர்கள் மட்டுமல்ல, அவர்கள் ஆட்சி செய்த காலங்களும் வேறுபடுவதை உணர்வோம்.

ஆகவே, எந்தவொரு நிச்சயமான ஆதாரமும் இல்லாத சூழ்நிலையில் இவர்களின் வரலாற்றுக் காலத்தை வரையறுப்பது மிகவும் கடினமான செயல். ஆயினும் இவற்றை மட்டுமன்றிக் கட்டடக் கலையையும் ஆராய்ந்து ஓரளவுக்கு இவர்களது *வரலாற்றை* முழுமையாகவும் மேற்கோள்களுடனும் இங்குத் தருகிறோம்.

'கர்னாடக தேச ராஜாக்கள் சவிஸ்தார சரித்திரம்' என்ற நூலில் கோனார் அல்லது இடையர்கள் பரம்பரையைச் சேர்ந்த *ஆனந்தக்கோனார், கிருஷ்ணக் கோனார், புலியக்கோனார்* என்ற சிற்றரசர்கள் செஞ்சியைக் கி. பி. 13 ஆம் நூற்றாண்டில் ஆண்டு வந்தனர் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் ஏற்கெனவே குறிப்பிட்டவாறு அதற்குண்டான வரலாற்றுச் சான்றுகள் ஏதும் கிடைக்கவில்லை.

எனினும் இங்குள்ள கோட்டைகளை முதலில் கட்டியவர்கள் இவர்களே என்பது மட்டும் பல வரலாற்று ஆசிரியர்களும் ஒருமித்தநிலையில் ஒப்புக்கொள்ளும் உண்மையாகும்.

## விஜயநகரக் காலம்

14ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் செஞ்சிக்கோட்டை 'கோபண்ண ராயர்' என்பவரின் பொறுப்பில் இருந்தது என்பதை விஜய நகர காலத்திய நூல் களின் மூலம் அறிகிறோம்.

கோபண்ணராயர் என்பவன் விஜயநகர அரசத் தளபதி. இவன் கம்பண ராயன் தெற்கே படையெடுத்து வந்த சமயம் அவனுக்கு உதவியாக இருந்ததுடன், ஸ்ரீரங்கம் கோவிலில் முன்னர் வெளியேற்றிய திருவரங்கனை மீண்டும் கொலு விருக்கச் செய்த திருப்பணியிலும் முக்கிய பங்கேற்றுள்ளான்.

## நாயக்கமன்னர் ஆட்சிக் காலம்

நாயக்கமன்னர் ஆட்சியில் செஞ்சி மிகவும் முக்கியத்துவம் அடைந்தது. அதன் கோட்டை, கொத்தளங்கள் பலப்படுத்தப்பட்டு நல்ல பாதுகாப்புடனும் கட்டடக்கலையின் கவர்ச்சியுடனும் அமைக்கப்பட்டன.

கிருஷ்ணதேவராயர் [கி.பி.1509—29], கிஷ்ணப்ப நாயக்கர் என்பவரைச் செஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்ய நியமித்திருந்தார். கிருஷ்ணப்ப நாயக்கரே செஞ்சி நாயக்க வம்சத்தின் ஆட்சியைத் தொடங்கிய தாகக் கொள்ளலாம்.

பிறகு சுமார் 150 வருட காலம் அம்மன்னர்களின் வழி வந்தோர் ஆட்சி நடத்தினர். இவர்கள் காலத்தில், செஞ்சியில் விஜயநகர பாணியில் கோட்டை அமைப்பும் அதனுள் பல அழகிய கட்டடங்களும் கட்டப்பட்டன.

மிகப் பெரிய அகன்ற கற்களாலான கோட்டைச் சுவர்களும் சிற்ப வேலைப்பாடுள்ள மண்டபங்களும், கோயில்களும், அடியில் கற்களாலும், மேலே செங்கற்களாலும் ஆன அழகிய சிற்பவேலைப்பாடுள்ள உயர்ந்த கோபுரங்களும் கட்டப் பெற்றன. அவை நமக்கு விஜயநகர சாம்ராஜ்யத்தின் தலைநகரான 'ஹம்பி' யின் கட்டடக்கலையை நினைவூட்டுகின்றன.

## இருசமயத் திருப் பணிகள்

பட்டாபிராமர், வேங்கடரமணர், ரங்கநாதர், வேணுகோபால சுவாமி முதலிய தெய்வங்களுக்குக் கோயில்களைக் கட்டியிருப்பதிலிருந்து விஜய நகர அரசர்களைப் போலவே இவர்களும் வைணவக் கடவுளர்க்கு அதிகமாகக் கோயில் களை அமைத்துள்ளனர் என்பது புலனாகிறது.

ஆயினும் சிவன், சுப்பிரமண்யர் முதலான கடவுள்களுக்கும் கோயில்கள் எழுப்பப்பட்டுள்ளன.

இங்குள்ள சில கோயில்களில் நாயக்கர் காலத்திய கல்வெட்டுகளும் உள்ளன.

இவர்கள் மற்ற மதங்களையும் போற்றி வந்தனர் என்பதும் தெளிவாகிறது. ஏனெனில் கிருத்துவர்களும் தங்கள் வழிபாட்டிற்கு ஆலயம் அமைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளனர். நாயக்கர் ஆட்சியில் பாமெண்டே என்ற பாதிரியார் கி. பி. 1597 ஆம் ஆண்டில் வந்து சென்றிருக்கிறார்.

செஞ்சியை ஆண்ட நாயக்க அரசர்களில் கிருஷ்ணப்ப நாயக்கர் சிறந்து விளங்கினார். இவர் சிதம்பரம் கோவிந்தராஜர் கோயிலுக்கும் மான்யம் வழங்கி யுள்ளார்.

## முகமதியர் வருகை

மதுரை, தஞ்சை மற்றும் செஞ்சி நாயக்க மன்னர்கள் தங்களுக்குள் ஒன்றுமையின்றியும், தலைமையுடன் ஒத்துழையாமையுடனும் இருந்ததனால், அரசியலில் குழப்பம் ஏற்பட்டு இருந்தது. அதனால் கோல்கோண்டா, பிஜப்பூர், சுல்தான்களின் படைகள் 1649 இல் செஞ்சியைக் கைப்பற்றின.

கோல்கொண்டாவின் தளபதியான 'மிர்ஜிவ்வா' என்பவன் கிருஷ்ணப்ப நாயக்கர் என்பவரைத் தோற்கடித்து, செஞ்சியை பிஜப்பூர் அரசிடம் ஒப்படைத் தான்.



## மராட்டியர் வருகை

மாவீரன் சிவாஜி, கி. பி. 1677ஆம் ஆண்டில் செஞ்சியைக் கைப்பற்றி யுள்ளார். அவரது ஆட்சிக் காலத்தில் அதன் கோட்டைக் கொத்தளங்களைப் பலப்படுத்தினார். மேலும்அவர், தமதுசகோதரரான சாம்பாஜி என்பவரைக் கி.பி. 1690 இல் செஞ்சியின் அரசராக்கி ஆளச் செய்தார்.

அதன்பின்பு சாம்பாஜி மகாராஜாவின் தம்பியான ராஜாராம் என்பவர் செஞ்சியை அரசாண்டார்.

கி. பி. 1697 - 98 இல் மொகலாயத் தளபதி ஜுல்பிர்கான் செஞ்சிக்கோட்டையை மிகுந்தசிரமத் துடன் கைப்பற்றி, 'ஃபேதக் தர்வாஜா' என்னும் வெற்றி வாசல் வழியாக ஊருக்குள் நுழைந்தான்.

**நவாபு கைப்பற்றல்**

கி .பி. 1700 இல் பண்டேல்கண்டில் இருந்த 'சொரூப்சிங்' என்ற படைத் தலைவனிடம் மொகலாய அரசர் செஞ்சியின் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்து அவனைச் செஞ்சிக்கு அனுப்பிவைத்தார். அவர், கர்நாடக சாதத்துல்லாகானின் கீழ் வரி வசூல் செய்து ஆட்சிபுரியும்படி நியமிக்கப்பட்டார்.

சிறிது காலத்தில் சொரூப்சிங் இறந்தார். பிறகு. அவனது மகன் தேசிங்குராஜன் ஆட்சிக்கு வந்தான். ஆட்சிப்பீடத்தில் அமர்ந்ததும் அடிமைத் தனத்தை எதிர்த்து நவாபுக்குக் கப்பம் கட்ட மறுத்ததான். அதன் காரணமாகப் போர் மூண்டது. பயங்கரமான போரின் இறுதியில் தேசிங்கு போர்க் களத்தில் சுடப்பட்டு மாண்டான். கி. பி. 1714 ஆம் ஆண்டு சாதத்துல்லா கான் செஞ்சியைக் கைப்பற்றினான். குறுகிய காலமே ஆட்சியில் இருப்பினும் தேசிங்கின் புகழ் அவனது வீரத்தினாலும் சாகசச் செயல்களாலும் சிறந்து விளங்கியது.

**பிரஞ்சு, ஆங்கிலேயர் பிடி!**

கி.பி.1750இல் பிரெஞ்சுக்காரர்கள் இரவோடு இரவாகப் புஸி என்பவர் தலைமையில் செஞ்சி மீது திடீர்த் தாக்குதல் நடத்தி அதைக் கைப்பற்றினர்.

செஞ்சி சுமார் பத்து ஆண்டுகள் பிரெஞ்சுக்காரர்களின் ராணுவக் கூடமாக இருந்தது. பின்பு 1761 இல் ஏப்ரல் 6 ஆம் தேதி கேப்டன் ஸ்டீபன் ஸ்மித் என்ற ஆங்கிலேயரிடம் சரணடைந்தது. இதன் பின்பு கர்னாடகத்திற்கு ஏற்பட்டமாற்றங் களில் சிக்கி, செஞ்சி தன் அரசியல் முக்கியத்துவத்தை இழந்து நின்றது.

மேற்குறிப்பிட்டவை சரித்திரச் சான்றுகளை ஆதாரமாகக் கொண்டவை. இனி, செவி வழி மற்றும் வரலாற்றுக் குறிப்புகளின்படி இச் செஞ்சியின் வர லாற்றைக் கவனிப்போம்

## 2. *செஞ்சியின் வரலாறு*

தென்னிந்தியாவிலுள்ள மலைக்கோட்டைகளில் செஞ்சிக்கோட்டை மிகவும் புகழ் வாய்ந்ததாகும். அரிய, பாதுகாப்புக்கு உரிய பல அமைப்புகளைக் கொண்ட தாக இன்னும் விளங்குவது செஞ்சிக் கோட்டை ஒன்றேயாகும்.

'செஞ்சி அழிந்து சென்னைப் பட்டணம் உண்டாயிற்று' என்னும் பழமொழியிலிருந்து. இப்பொழுதுள்ள சென்னைப்பட்டினம்உருவாவதற்குமுன்பே செஞ்சிப் பட்டணம் மிகவும் சிறப்புப்பெற்ற ஊராக இருந்திருக்க வேண்டும் என்று நினைக்கத் தோன்றுகிறது.

## ஊர்—பெயர்க் காரணம்

'செஞ்சி' என்ற பெயர் உண்டாகப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. முற் காலத்தில் இப்பிரதேசம் 'சிங்கபுரநாடு' என வழங்கி வந்ததாகவும், அது நாளடைவில் சிங்கி நாடு என மாறிப் பிறகு செஞ்சி என அழைக்கப்படுவதாகவும் சிலர் கூறுவர்.

மற்றுமொரு சாரார், இப்பிரதேசங்களைக் காக்கும் ஏழு கன்னிகைகளில் (இன்றும்) இவ்வேழு தெய்வங்களுக்கான கோயில்கள் செஞ்சியில் உள்ளன; அவை கமலக்கண்ணியம்மன், காளியம்மன், செல்லியம்மன், பூவாத்தம்மன், மாரியம்மன், மற்றும் பச்சை அம்மன் முதலியோர்க்கான கோவிலாகும். மூத்த கன்னிகையான 'கமலக் கண்ணியம்மன்' பெயரில் இவ்வூர் வழங்கி வருவதாகக் கூறுவர்.

பிரிதொரு சாரார் கூற்றுப்படி, அனுமார் சஞ்சீவி மலையைக்கொண்டு செல்கையில் அதிலிருந்த ஒரு சிறு பகுதி சிதறி அங்கு வீழ்ந்தது; அதனால் அவ்விடம் சிரஞ்சீவி என்று அழைக்கப்பட்டு, பின்பு அச்சொல்லே செஞ்சியாக மருவியது என்பர்.

சஞ்சீவிராயன் மலை என்ற இடத்தின் பெயர், இதை யொட்டியே ஏற்பட்டிருக்கவேண்டும் எனவும் கூறுவர்.

முதலாம் ஆதித்தன் (கி. பி. 87.-907) காலத்திய சிங்கபுரத்திலுள்ள கல்வெட்டின்படி இந்தப் பிரதேசம் 'சிங்கபுரநாடு' என்றே அழைக்கப்பட்டதாக அறிகிறோம்.

சிங்கபுரம், மேலச்சேரி முதலான பகுதிகள் விஷ்ணு செஞ்சி என்றும், தற்போதுள்ள செஞ்சியும் அதன் தெற்குப் பகுதியும், சிவசெஞ்சி என்றும் அழைக்கப்பட்டு வந்ததாகவும் தெரிகின்றது.

கி. பி. 1200 ஆம் ஆண்டுக்குப் பின்னர் செஞ்சிப் பகுதி புதிய வரலாற்று முக்கியத்துவம் பெற்றது எனலாம்.

## ராஜகிரிக் கோட்டையின் தோற்றம்

ஆனந்தக்கோன் (கி. பி. 1200 — 1240) என்ற இடையர் குலத்தைச் சேர்ந்தவன் இப்பகுதியில் தினமும் ஆடு மேய்த்து வந்தான்.

ஒரு நாள் அவ்வழியே சென்ற முனிவர் ஒருவர் மூலமாக ஒரு மரத்தின் கீழ் நிறைய செல்வங்கள் மறைந்திருப்பதாக அங்கு ஒரு கல்வெட்டில் குறிப்பிட்டிருப்பது இவனுக்குத் தெரிந்தது. இவன் பின்பு அச்செல்வங்களை அடைந்து,

இங்கே கோட்டை ஒன்றைக் கட்டினான். அதை முதலில் கமலகிரி அல்லது ஆனந்த கிரி எனப் பெயரிட்டு அழைத்தான். சுற்றுப்புற ஊர்களைச் சேர்த்து இவன் சுமார் 40 ஆண்டு காலம் சிற்றரசனாக ஆட்சி புரிந்தான்.

அவனுக்குப் பிறகு அவனது மகன் கிருஷ்ணக்கோன் (கி. பி. 12 40 — 1270) என்பவன் கி. பி. 1240 இல் தந்தை வழியைப் பின் பற்றி ஆனந்தகிரிக்கு வடக்கில் அமைந்துள்ள மலையில், கோட்டை ஒன்றை அமைத்து, அதற்குக் கிருஷ்ணகிரி என்று பெயரிட்டான்.

அவனது குமாரர்கள் கோனேரிக்கோன் (கி. பி. 1270 — 1290), கோவிந்தக்கோன் (கி. பி. 1290 — 1310) முதலானவர்கள் காலத்தில் கோட்டைக்குப் படிகள் அமைக்கப்பட்டுப் பலப்படுத்தப்பட்டன. ஆனந்தகிரி அடிவாரத்தில் வேணுகோபால்சுவாமிகோயில் கட்டப்பட்டது. ஒரு காலத்தில் உன்னதமாக அமைக்கப்பட்ட இக்கோயில் இப்பொழுது முற்றிலும் உருவிழந்து காணப்படுகின்றது.

## குளங்கள், மண்டபங்கள்

பின்பு ஏறத்தாழ கி. பி. 1300 இல் பதவியேற்ற 'புவியக்கோன்' (கி. பி. 1310 — 1330) என்பவர் காலத்தில் கோட்டைக்குள் இரண்டு குளங்கள் அமைக்கப்பட்டன. கோட்டைக்கு வெளியேயும் ஊரை விரிவுபடுத்தி ஆங்காங்கே குளங்களும் மண்டபங்களும் அமைக்கப்பட்டன.

## சுற்று மதில்கள்

அதன்பின் செஞ்சிக்கோட்டை கோபிலிங்கன் என்ற 'குறும்பர்கள்' இனத்தவனின் வசமாயிற்று. இவன் காலத்தில் கி.பி. 1330 — இல் கோட்டையைச் சுற்றி அலங்கங்கள் அமைக்கப்பட்டன. கோட்டைக்குள் குதிரை மற்றும் காலாட்படைகள் தோன்றலாயின.

உளுந்தூர்ப்பேட்டை வட்டத்தில் உள்ள சேந்தமங்கலத்தில் செங்கற்களாலாகிய கோட்டையும் கட்டப்பட்டது.

பின்பு கி. பி. 1341 அல் ஆனகுத்தி அரசன் மகாராயன் என்பவன் சோழர் துணைகொண்டு செஞ்சியைக் கைப்பற்றி, நரசிங்கராயர் என்பவரைப் பிரதிநிதியாக்கி ஆளவைத்தான்.

நரசிங்க உடையாருக்குப் பிறகு வீர விஜயராயரும், பின்பு வெள்ளாளர்ாயரும் செஞ்சியை ஆண்டனர்; வள்ளாலராஜன் என்றே வழங்கப்பட்டுள்ளது.

இவ் வள்ளாளராஜன் காலத்தில்தான் திருவண்ணாமலைக் கோயிலில் திருப்பணிகள் நடந்ததாகத் தெரிகிறது. கோயிலில் பல மண்டபங்கள் அமைக்கப்

பட்டு உயர்ந்த கோபுரம் ஒன்றும் கட்டப்பட்டது. இன்னும் அவனால் கட்டப்பட்ட கோபுரம் '*வள்ளாளராயன் கோபுரம்*' என்றே அழைக்கப்படுகிறது.

பின்னர் செஞ்சி 14ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சில காலம் ஹொய்சலர்கள் வசம் இருந்தது.

அதன் பின்னர் விஜயநகர அரசர்கள் செஞ்சியைக் கைப்பற்றினர். விஜயநகரப் பேரரசர்கள் *கெம்பண்ணா, கோபனார்யா* என்ற அந்தணரைத் தங்கள் பிரதிநிதிகளாக நியமித்து (கி. பி. 1338) ஆட்சி செய்தனர்.

கி.பி. 1327 - 28 இல் மாலிக்காபூர் என்ற முகமதிய தளபதி செஞ்சிமீது படையெடுத்தான். அவ்வமயம் அந்த முஸ்லீம் தளபதியால் பெரும் நாசம் விளைந்தது. அப்போது பழுதடைந்த சிங்கவரம், சிதம்பரம், ஸ்ரீரங்கம் ஆகிய ஊர்களிலுள்ள ஆலயங்களுக்கும் கோபனார்யா என்பவர் காலத்தில் (கி. பி.1371-72இல்) திருப்பணிகள் நடந்ததாகத் தெரிகிறது.

## செஞ்சி நாயக்கர்கள்

பின்பு தக்காணப் போரில் விஜயநகர அரசர்கள் வெற்றிக்குப் பெரிதும் உதவியாயிருந்த நாயக்கர்களிடம் செஞ்சி ஒப்படைக்கப்பட்டது. அதனால் கிருஷ்ணப்ப நாயக்கர் என்பவன் மூலமாகக் கி. பி. 1397 இல் '*செஞ்சி நாயக்கர்*' ஆட்சி நிறுவப்பட்டது. இவரே இவ் வம்சத்தவரின் ஆட்சிக்கு இங்கு முதலில் வித்திட்டவர்.

அதன் பின் ராகவநாயக்கர், வெங்கடப்ப நாயக்கர் என்ற இருசேனாதிபதிகளுடன் செஞ்சி ஆட்சி விரிவு படுத்தப்பட்டது.

கி. பி. 1464ஆம் ஆண்டுக்குரிய செப்பேட்டில், செஞ்சி அரசராயிருந்த வெங்கடபதி நாயக்கர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. அது முதலே செஞ்சியில் நாயக்க மன்னர்களின் ஆட்சி தொடர்ச்சியாக இருந்தது என்று திரு. *சீனிவாசாச்சாரி* தனது 'செஞ்சியின் வரலாறு' என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

## சுற்றுப்புற அரண்

இவர்கள் வழிவந்த துபாகி கிருஷ்ணப்பா என்ற அரசர் மிகவும் பிரசித்தி பெற்றவராயிருந்தார். இவர் காலத்தில் (கி. பி. 1490-1520) மூன்று மலைகளையும் இணைத்துக் கோட்டை அமைக்கப்பட்டது. இதையொட்டி அகழி முதலியனவும் அமைக்கப்பட்டது.

**ஆனந்தகிரி என்ற பெயர் ராஜகிரி என்று மாற்றப்பட்டது.**

## துபாகி கிருஷ்ணப்பா

இவர் காலத்தில் திருமுட்டம், திருக்கோவலூர் முதலிய ஊர்களில் கோயில் பணிகள் நடந்துள்ளன. இக்கோயில் மண்டபங்களில் உள்ள தூண்களில் அமைந்துள்ள நாயக்க மன்னர் உருவங்களில் இம்மன்னனின் உருவச் சிலையை யும் காணமுடிகிறது. திருமுட்டத்தில் அமைந்துள்ள 'பூவராக சுவாமி' கோயில் சிற்பங்களும் கட்ட்டங்களும் மிகவும் நேர்த்தியான கலையம்சத்துடன் அழகாக அமைந்துள்ளன.

இவை தவிர, செஞ்சி மலைமீதுள்ள கோயில்கள், கல்யாண மஹால், நெற்களஞ்சியங்கள் முதலானவைகளும் கட்டப்பட்டன.

சந்திரகிரியில் தோல்நாண யங்கள் முதலியன செய்யும் தொழிற்சாலை ஒன்று இவரால் நிறுவப்பட்டது.

இவர் காலத்திலும் பழமை யானவர்களான ஜைனர்களும் தங்கள் மதத்தைப் பரப்பி வந்த னர். இவ்வரசன் கி பி. 1521 வரை நெல்லூர்முதல், கொள்ளி டம் வரையிலான நாட்டிற்கு அதிபதியாக ஆட்சி செய்தான்.



இவருக்குப் பின் அச்சுத விஜய ராமச்சந்திர நாயக்கர் என்பவர் கி. பி. 1520 முதல் 1540 வரை செஞ்சி மன்னராக இருந்தார். இவர் காலத்து எழுத்துப் பொறித்த நாணயம் ஒன்று சமீபத்தில் ஆரணிஅருகே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவர் கோட்டை மதில்சுவ ரைப்பலப்படுத்தினார். உணவுத் தானியங்களைச் சேமித்து வைக் கக் களஞ்சியங்கள் கட்டினார்.

பின்பு வேங்கடபதி நாயக்கர், முத்தியாலு நாயக்கர் மற்றும் அச்சுத நாயக்கர் முதலியவர்கள் செஞ்சியை ஆண்டனர். அவர்களில் முத்தியாலுநாயக்கர் காலத்தில், செஞ்சியில் புகழ் பெற்ற வேங்கட ரமணர் ஆலயம், பட்டாபிராமர் கோயில் ஆகிய இரண்டும் கட்டப்பட்டன.

இவர்களுக்குப் பின்பு, வெங்கடப்ப நாயக்கர், கோபால் நாயக்கர் முதலானோர் கி. பி. 16 14 ஆம் ஆண்டு வரையில் செஞ்சியை ஆண்டனர்.

இவ்வழியில் வந்த கடைசி மன்னரான அப்பு நாயக்கர் காலத்தில் பிஜப்பூர் சுல்தான் 'மீர்ஜம்லா' என்பவர், செஞ்சி மீது படையெடுத்து வந்தார். அவ்வமயம் விஜயநகரப் பேரரசு வலு இழந்திருந்த காரணத்தினால் செஞ்சி நாயக்கர்களுக்கு உதவி ஏதும் செய்யும் நிலையில் இல்லை. இந்தச் சூழ்நிலையே பீஜப்பூர் சுல்தானின் படையெடுப்புக்கு ஏதுவாக இருந்தது.

## முகமதியர் வசமாதல்

மீர்ஜம்லா கி. பி. 1648 இல் செஞ்சியைக் கைப்பற்றி அங்கு சுல்தான்கள் ஆட்சியை நிறுவினார். இவர்கள் காலத்தில் செஞ்சி 'பாதுஷாபாத்' என்றும், அதன் அரசன் 'கில்லேதார்' என்றும் அழைக்கப்பட்டனர். சுல்தானின் ஆதிக்கத்தை அழிக்க மதுரை திருமலை நாயக்கர் செய்த முயற்சி தோல்வியுற்றது.

செஞ்சியிலும், அதன் சுற்றுப்புற ஊர்களிலும் முகமதியர்கள் குடியேற ஆரம்பித்தனர்.

பிஜப்பூர் சுல்தான் பிரதிநிதிகளின் ஆட்சியில் செஞ்சிக் கோட்டை மிகவும் பலப்படுத்தப்பட்டது. ராஜகிரியின் உள்கோட்டையில் தெற்குச் சுவரில் (கிழக்கே) உள்ள இரு பாரசீகக் கல்வெட்டுகளின் வாயிலாக இதை நாம் அறிகிறோம்.

கர்நாடகத்தின் கிழக்குப் பகுதியில் செஞ்சிக்கோட்டை மிகவும் முக்கியத்துவம் பெற்றிருந்தது.

## சிவாஜியின் வெற்றி!

அவ்வமயம், புதுச்சேரி சிறு கிராமமாய் இருந்தது. கி. பி. 1674 இல் இவ்வூரில் தங்கி வியாபாரம் செய்யப் பிரெஞ்சுக்காரர்கள் அனுமதிக்கப்பட்டனர். ஆயினும், தாவுத்கான், நஸீர்கான் என்பவர்களின் ஆட்சியின்போது மராத்திய மன்னரான சிவாஜியின் படைகள் கி. பி. 1677 இல் செஞ்சியைக் கைப்பற்றின. அவ்வாறு சிவாஜி மன்னர், சுல்தான் ஆட்சியை மறையச் செய்தார்.

## பகை வளர்க்கும் படைக் கருவிகள்!

அன்பற்ற வாழ்க்கை அவலமானது ! தலைமை வெறியோ தாழ்வுக்குரியது!
பேராசைகொண்டோர் போர்முறை கொண்டார் !
மனிதன் மனிதனை நம்பாமல் அழிக்கும் கருவிகளை நம்பினான்.
வஞ்சமனத்தின் பகைமை கண்டெடுத்த உயிர்க்கொல்லிகளில் ஒருசில!



கிழக்கு அகழியை அடுத்துக் காணும்





இருவேறு தோற்றங்கள்





சிவாஜியின் முதல் தாக்குதலிலேயே சுல்தானின் ஆட்சி முடிவு பெற்றது. சிவாஜி தனது நம்பிக்கைக்குப் பாத்திரரான சேனாதிபதி ராட்ஜிநளக்என்பவனைச் செஞ்சியில் தன் பிரதிநிதியாக நியமித்தார்.

மராத்தியர்கள் காலத்திலும் செஞ்சிக் கோட்டையின் வெளிச்சுவரையொட்டி மிக அகலமான பாதையுடன் கூடிய உட்சுவர்கள் அமைக்கப்பட்டன.

அவ்வமயம் முகலாயர்களுக்கும், மராத்தியர்களுக்கும் அடிக்கடி போர் நடந்து வந்தது. சிவாஜியின் இரண்டாவது மகன்செஞ்சிஅரசனானார். பலமுறை இம்மராட்டியர்கள் முகலாயர்களின் படையெடுப்பை முறியடித்து வந்தனர்.

கி.பி 1680 இல் சிவாஜி மறைந்தார். அவருக்குப் பின்,கி பி. 1681இல், சாம்பாஜி என்பவர் செஞ்சி அரசரானார்.

கடலூரில் ஆங்கிலேயர்கள் காலூன்ற இந்தச் சாம்பாஜி கி.பி. 1684இல் அனுமதி அளித்தார்.

பின்பு கி. பி. 1689 இல் மொகலாயர் படையெடுப்பின்போது சாம்பாஜி மன்னர், குடும்பத்துடன் கைது செய்யப்பட்டார். எனினும் மொகலாயர்கள் செஞ்சியைக் கைப்பற்றாதவாறு தடுக்கப்பட்டனர்.

பின்னர் சாம்பாஜியின் சகோதரர் ராஜாராம் என்பவர் கி. பி.1690 இல் மராட்டிய அரசரானார். இவர் காலத்தில் ஔரங்கசீப்பின் சேனாதிபதி ஜுல் பிகாகான் நாஸ்ரத்என்பவன் படையுடன் செஞ்சியை ஏழுஆண்டு காலம் முற்றுகையிட்டான் (கி. பி. 1691 - 98). வேறு வழியின்றி ராஜாராம் மாறுவேஷத்தில் கோட்டையை விட்டு வெளியேறினார். பின்பு அவரது படைகள் கி. பி. 1698 இல் மொகலாயரிடம் சரணடைய வேண்டியதாயிற்று.

செஞ்சிப் பகுதி மராட்டியர் ஆட்சியில் 1674 முதல் 1698 வரையிலான 24 ஆண்டுகள் இருந்துள்ளது என அறிகிறோம்.



## மீண்டும் மொகலாயர்

அதன் பிறகு ஔரங்கசீப்பின் தலைமைத் தளபதியான ஜுல்பிகாகான் என்பவர் செஞ்சியில் மொகலாயர் ஆட்சியை ஏற்படுத்தினார். இரண்டு ஆண்டுகள் செஞ்சியில் ஔரங்கசீப்பின் பிரதிநிதியாக ஆட்சி செய்தார். இவர் காலத்தில் செஞ்சியில் அடிக்கடி மராட்டியர்களுடனும் முகமதியர்களுடனும் போர் நடந்த வண்ணமிருந்தது.



பேரரசர் ஔரங்கசீப்

1694 இல் ஜுல்பிகாகான் செஞ்சியிலிருந்து தஞ்சை வரை படையெடுத்துச் சென்றான்.

கி. பி. 1698 ஆம் வருடம் ஜுன் திங்கள் முதல் நாகர்கான் என்பவன் செஞ்சியை ஆண்டான். ஆயின், அவன் அதே வருடம் நவம்பர் திங்களில் இறந்துவிட்டான்.

## ஸரூப் ஸிங் (1700 ஜனவரி முதல் 1713 டிசம்பர் முடிய)

பின்பு ஔரங் கசீப்பின் உத்தரவுப்படி 18-1-1700 இல் செஞ்சி, மத்தியப் பிரதேசத்தில் உள்ள பந்தேல்கண்டு என்ற பகுதியைச் சேர்ந்த சரூப்சிங் என்பவரிடம் செஞ்சி ஒப்படைக்கப்பட்டது. இவர் கி. பி. 1714 ஆம் ஆண்டுவரை செஞ்சியின் அரசராக ஆண்டு வந்தார்.

இவர் ஔரங்கசீப்பின் தென்னாட்டுப் படையெடுப்பின்போது மிகவும் உதவி யாக இருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது அதன் காரணமாகவே இவருக்கு செஞ்சியின் ஆட்சிப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. மேலும் இவர் திறமைமிக்க ஆட்சிசெய்து இந்து — முஸ்லீம் ஒற்றுமைக்காகப் பாடுபட்டார். இவர் சிங்கவரம் அரங்கனிடம் பக்திகொண்டவர். அக்கோயிலுக்கு இவர் சுரங்கப்பாதை அமைத்துத் தினமும் சென்று வழிபட்டு வந்ததாகக் கூறப்படுகின்றது.



**டெல்லியில் மாற்றம் !**

ஒளரங்கசீப் கி. பி. 1707இல் காலமான பிறகு அவரது மகன் **ஷா ஆலம்** என்பவர் டில்லிப் பேரரசரானார். இவர் பதவி ஏற்றதும் சாதத்துல்லா **கான்** என்பவரைக் கி. பி. 1708 இல் ஆர்க்காட்டு நவாபாக நியமித்து, செஞ்சி அரசின் மேற்பார்வையையும் அவரிடம் ஒப்படைத்தார். இந்தியநாடு முழுதும் இக் காலகட்டத்தில் முகமதியர் ஆட்சிக்கு உட்பட்டு இருந்தது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்

**ஆர்க்காடு நவாப் சாதத்துல்லாகான் ஆங்கிலேயர்களுக்கு மிகவும் வேண்டியவராக இருந்தார்.**

அதே சமயம் சருப்சிங், ஆங்கிலேயர்களுக்குக் கப்பம் கொடுக்க மறுத்த துடன் ஆங்கில அதிகாரிகளைச் சிறைப்படுத்தியும் வைத்திருந்தார். இதனால் ஆங்கிலேயர்கள் கி. பி. 1711 இல் கடலூரில் கலகம் செய்தனர். எனினும் சருப்சிங் மிக்க திறமையுடன் அதை அடக்கி வெற்றி பெற்றார்.

பின்பு வேறு வழியின்றி ஆங்கியேர்சமாதானம் செய்துகொண்டதால், சிறையிட்ட பிரிட்டிஷ் அதிகாரிகளை சருப்சிங் விடுவித்தார். பிரெஞ்சு அதிகாரிகளும் ஆங்கிலேயர்களும் தனது செஞ்சி அரசுக்கு வரி செலுத்தும்படி சருப்சிங் வகை செய்தார்.

டில்லியில் மொகலாய மன்னர் ஆட்சி நிலைகுலையத் தொடங்கியது. டில்லிக்கு செஞ்சி அரசன் கட்ட வேண்டிய கப்பம் நிர்பந்திக்கப்பட்டது அதனால் கவலையடைந்து நோய்வாய்ப்பட்டு, கி. பி. 1714 இல் சருப்சிங் உயிர் நீத்தார் இவர் ஆட்சிப் பொறுப்பில் இருந்த காலம் பதினான்கு ஆண்டுகள் எனத் தெரிகிறது.

அவரது குமாரர் (தேஜ்சிங்)ராஜா தேசிங்கு 1714 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் டெல்லி அரசை அலட்சியம் செய்து, தானே அரசரானார். ஆயினும் தேசிங்கின் ஆட்சி அதே ஆண்டு அக்டோபர் திங்களில் முடிவடைந்தது. பத்து மாதங்களே ராஜாதேசிங்கு ஆட்சிப் பொறுப்பில் இருந்துள்ளார்.

## தேசிங்கு மன்னன்

அஞ்சாநெஞ்சமும் வீரமும் படைத்த இளைஞனான தேசிங்குராஜன், சுதந்திர எண்ணமும் கொண்டவன்;சிறந்த குதிரைவீரன்; வாட்போரில் வல்லவன். தந்தையைப் போன்றே இவனும் சிங்கபுரம் அரங்கநாதரிடம் பக்தி கொண்டிருந்தான்.

'டெல்லியில் உள்ள மொகலாய மன்னனுக்கு இங்குள்ள நாம் அடிமையாகிக் கப்பம் கட்டுவதா?' என்று எண்ணிய தேசிங்கு வெகுண்டான்.

ஆகவே, டெல்லிப் பேரரசுக்குக் கப்பம் கட்ட தேசிங்கு மறுத்தான். அதை வசூலிக்க வந்த நவாபின் தூதரையும் வெறுங்கையுடன் திருப்பி அனுப்பினான்.

தேசிங்கு, நாட்டு மக்களிடையே நற்பெயர் பெற்றிருந்தான்.

மகமத்கான் என்ற நண்பனைத் தளபதியாக்கிச் சிறந்த படையை ஏற்படுத்தியிருந்தான் தேசிங்கு.

### போர் மூண்டது

தேசிங்கு கப்பம் கட்ட மறுத்ததாலும் அடிமைத்தனத்தை எதிர்த்ததாலும் கோபம் கொண்ட டெல்லிப் பேரரசு, ஆற்காட்டு நவாபான சாதத்துல்லாகானை செஞ்சி மீது போர் தொடுக்க ஏவியது.

நவாபு ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர் உதவியும் இருந்தது. இவர்களுடன் சுற்றிலுமிருந்த வேறு சில சிற்றரசர்களும் நவாபுக்கு உதவியதால், செஞ்சியுடன் போர் மூண்டது.

அவ்வமயம் தேசிங்கின் நண்பனான தளபதி மகமத்கான், திருமணம் செய்துக்கொள்ள வழுதாவூர் சென்றிருந்தான்.

தன் நண்பன் தேசிங்குராஜன் அபாயத்தில் சிக்கியிருப்பதைக் கேள்விப் பட்ட மகமதுகான், தன் திருமணத்தை நிறுத்திவிட்டு, உடனடியாக விரைந்து வந்து, படையை நடத்திச் சென்று நவாபு படையுடன் போரிட்டான் எனினும் தோல்வி அடைந்தான். போர்க்களத்தில் தேசிங்கு வீரமரணம் எய்தினான்.

### வீரகாவிய நாயகன்

தன் ஆருயிர் நண்பனும் தளபதியுமான மகமத்கான் போரில் இறந்த செய்தி கேட்டதும் தேசிங்குராஜன் வெகுண்டெழுந்து தானே போருக்குப் புறப் பட்டான். போர்க்களத்தில் வீரப்போர் புரிந்தான். எதிரிகள் அச்சமுற்றுத் திகைத்தனர். ஆயினும் எதிரிகளின் வஞ்சனையான மறைமுகத் தாக்குதலால் 3. 10. 1714 இல் போர்க் களத்திலேயே தேசிங்கு உயிர் துறந்தான்.

தேசிங்கு ராஜன் இறந்ததும் அவனது இளவயது மனைவியும் உடன் கட்டை ஏறி உயிர் துறந்தாள். அந்தச் சோக நிகழ்ச்சி எதிரிகளையும் திடுக்குறச் செய்தது.

செஞ்சி மக்கள் அடைந்த துயருக்கு அளவில்லை. தேசிங்கின் அந்தத் திடீர் மரணம், நாட்டு மக்களை மீளாத் துயரில் ஆழ்த்தியது. மக்கள் நெஞ்சம் குமுறி அழுது புலம்பினர்.

அப்புலம்பல், முந்நூறாண்டுகளாகியும் மறையா வடுவாய், வீரத்தழும்பாய், நாட்டு மக்கள் மனதில் இடம் பெற்றுள்ளது. தேசிங்கு ராஜனும் வரலாற்றில் பாடல் பெற்று 'வீரகாவிய நாயக'னாகத் திகழலானான்.

ஆங்கிலேயர்களும் பிரஞ்சுக்காரர்களும் ஆர்க்காட்டு நவாப்புக்குப் போரில் உதவி செய்தது மட்டுமன்றி, அவர்கள் போர் முறைகள் தவறிப் போரிட்டதாலும் தேசிங்கின் படைகள் அழிந்தன. போரில் தோற்ற தேசிங்கு ராஜன் எதிரிகளின்

அடிமையாவதை விரும்பாமல் (3. 10. 1714 இல்) தானே தன்உயிரைப் பிரித்துக் கொண்டான் எனவும் ஒருசில வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

எது எப்படி இருப்பினும் மகாபாரதத்தில் மங்காப் புகழ் கொண்ட மாவீர அபிமன்யுவைப் போல, மராட்டிய வீரனான தேசிங்கும் புகழ் மிக்க வீரனாகத் தமிழ் மக்களின் நெஞ்சில் கொலுவிருந்து ஆட்சிபுரிந்து கொண்டிருக்கிறான்.

### மீண்டும் மாற்றங்கள்

செஞ்சி, சாதத்துல்லாகான் வசமாயிற்று நான்கு வருட காலம் அவர் ஆட்சிநீடித்தது. பின்பு, ஆட்சியை, சததியர் கான் என்பவரிடம் ஒப்படைத்துவிட்டு அவன் ஆர்க்காடு திரும்பினான். அவருக்குப் பின் குலாம் ஹுசேன் என்பவன் செஞ்சியை ஆண்டான். பின்பு ஆண்டவர்களிடமிருந்து செஞ்சியை 17. 9. 1750 அன்று பிரெஞ்சுக்காரர்கள் கைப்பற்றினார்.

கி பி. 1648இல் மீர்ஜம்லா என்பவனால் தொடங்கப்பெற்ற முகமதியர் ஆட்சி, ஏறத்தாழ 102ஆண்டுகள்தொடர்ந்திருக்கிறது. முகமதியர் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தவர் பிரெஞ்சுக்காரர்களாவர். இவர்களது பிடியில் ஏறத்தாழ [1750 - 1761] பதினொரு ஆண்டுகள் செஞ்சி உட்பட்டிருந்தது எனத் தெரிகிறது.

பின்பு ஆங்கிலேயர்களும் இதைக் கண்டு பொறாமை கொண்டு செஞ்சியைக் கைப்பற்ற முயற்சி செய்தனர். ஆனால், அதில் அவர்கள் வெற்றி பெறவில்லை.

செஞ்சி, பிரெஞ்சுக்காரர்களின் தலைநகர் போல விளங்கியது. எனினும் கி. பி. 1761 இல் பிரெஞ்சுக்காரர்களுடன் ஆங்கிலேயர்கள் மீண்டும் போர் செய்து, செஞ்சியைக் கைப்பற்றினர்.

பின்னர் பிரெஞ்சுக்காரர்களின் தூண்டுதலினால் மைசூரை ஆண்டு வந்த ஹைதர் அலி செஞ்சியின் மீது படையெடுத்தான். எனினும் அவனால் வெற்றி பெற முடியவில்லை.

ஆங்கிலேயர்கள் காலத்தில், செஞ்சி தன் முக்கியத்துவத்தை இழந்து, சரித்திர முக்கியத்துவம் இல்லாமல் போனது. ஆங்கிலேயர்கள் சென்னையிலேயே தங்கி அதைத் தலை கராக உருவாக்கலாயினர். எனவேதான் 'செஞ்சி சீரழிந்து சென்னைப்பட்டினம் உருவாயிற்று' என்ற சொல் ஏற்பட்டது என்றும் கூறலாம்.

மூவேந்தர்களின் வழிவந்த தமிழர்கள் பல்லாண்டுகள் உரிமையுணர்வு அற்றவர்களாக வாழ்ந்துள்ளனர். நாட்டுமக்கள் அனைவரும் யார் ஆள்கிறார்கள் எனும் நினைவு அற்றவர்களாக இருந்துள்ளனர்.

★



அகழியும் மதிற்சுவரும்



# ஐரோப்பியரின் ஆதிக்கம்



## ஒற்றுமைக் குலைவு

ஆங்கிலேயர்களும் பிரஞ்சுக்காரர்களும் இந்தியாவில் வாணிபம் செய்து பிழைக்க வந்தனர். பின்பு அவர்கள் இந்திய அரசியலில் தலையிட்டு, அரசுரிமைத் தகராறுகளிலும் ஈடுபட்டனர்.



டுப்ளே

அப்போதிருந்த சிற்றரசர்களிடையே நிலவிய சிறுசிறு சண்டைகள் அவர்களுக்குச் சாதகமாக அமைந்தன.

இதில் முக்கியமாக ஆங்கிலேயத்தளபதிராபர்ட்கிளைவ், பிரஞ்சியர் தளபதி டுப்ளே ஆகிய இருவரும்அச்சூழ்நிலையில் மிகுந்த ராஜதந்திரத்துடன் செயல்பட்டனர்.



இராபர்ட் கிளைவ்

## பிரித்தாளும் வஞ்சகம்

பதவிப் பித்தும், ஒருவர்மீது ஒருவர் பொறாமையும் கொண்டு சண்டையிட்டுக்கொண்டிருந்த சிற்றரசர்களிடையே, வெளிநாட்டார் இருவரும் மேலும் பகைமையை உண்டாக்கிப் பிரித்தாளும் சூழ்ச்சியில் ஈடுபட்டனர். ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்' என்பது இவர்களுக்கே பொருந்தும்.

வயிற்றுப் பிழைப்புக்காக வாணிபம் செய்ய வந்தவர்கள், இங்குள்ளவர்களுள் வாரிசுச் சண்டையை உண்டாக்கி, முடிவில் தாங்களே வாரிசுகளாயினர். அதன் பலனாகப் பாண்டிச்சேரியில் பிரெஞ்சுக்காரர்களும், கோவாவில் டச்சுக்காரர்களும், இந்தியாவின் மற்றெல்லாப் பகுதிகளிலும் ஆங்கிலேயர்களும் கால் பதித்து ஆளத் தொடங்கினர்.

மெல்ல மெல்ல நாட்டை அடிமைத்தனம் ஆட்கொண்டது. இத்தகைய சூழ்நிலையில் செஞ்சியைப் பொறுத்த வரையிலான வரலாற்றை நாம் இங்கே அறிவது அவசியம்.

## முஸ்லீம்களில் இரு பிரிவுகள்

கி பி. 1748 இல் ஐதராபாத்தில் நிஜாம் பட்டத்திற்காக நாஸர்ஜங்கும், முஸ்பர்ஜங்கும் போட்டியிட்டுப் போரிடத் தொடங்கினர். அதே சமயத்தில், கர்நாடக நவாபு பதவிக்காக அன்வர்த்தீனும் சந்தாசாகிப்பும் போட்டியிட்டனர்.

இந்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு, ஆங்கிலேயர்கள் ஐதராபாத்தில்நாஸர்ஜங்குக்கும் கர்நாடகத்தில் அன்வர்த்தீனுக்கும் உதவி செய்ய முன் வத்தனர்.

## பிரெஞ்சுக்காரர் வெற்றி

ஆனால் அதற்கெதிராகப் பிரெஞ்சுக்காரர்கள் முஸபர்ஜங்குக்கும், கர்நாடகத்தில் சந்தாசாகிப்புக்கும் உதவி செய்தனர்.

இதன்மூலம் கர்நாடகத்தில் பெரும் போர்மூண்டது. தொடக்கத்தில் சில காலம் பிரெஞ்சுக்காரரே வெற்றியடைந்து வந்தனர்.

செஞ்சிக் கோட்டையின் முக்கியத்துவத்தை முன்னரே அறிந்திருந்த பிரெஞ்சுக்காரர்கள் இச்சயத்தைப் பயன்படுத்திக்கொண்டு சந்தாசாகிப்பின் உதவியுடன் செஞ்சி அரசின் மீது படையெடுத்தனர். 17 9. 1750 இல் கோட்டையைக் கைப்பற்றிக்கொண்டனர்.

செஞ்சிக்கோட்டை பிரெஞ்சுக்காரர்கள் வசமானதையறிந்த ஆங்கிலேயர் அதிர்ச்சியடைந்தனர். அதன் மூலம் பிரெஞ்சுக்காரர்கள் பலம் அதிகரிக்கும் என்றும், தங்கள் முன்னேற்றம் பெரிதும் தடைப்படுமென்றும் எண்ணிய ஆங்கிலேயர்கள் அஞ்சி, ஒரு பெரும் படையைத் திரட்டிச் செஞ்சிககோட்டையைக் கைப் பற்றிக்கொள்ளும்படி நாஸர் ஜங்கையே போகுமாறு அனுப்பி வைத்தனர்.

நாஸர்ஜங் தனது போர்வீரர்களுடன் செஞ்சி நோக்கி வரும் வழியில், வந்தவாசியில் கில்லேதாராய் இருந்த குலாம் தாக்யாகான் என்பவர், நாஸர் ஜங்கை வரவேற்று வேண்டிய உதவிகள் செய்தார்.

## தேசூரில் தாக்குதல்

அங்கிருந்து நாஸர், தன் படைகளை இரண்டாகப் பிரித்து, ஒரு பிரிவைத் தெள்ளாறு, வெள்ளிமேடுப் பேட்டை வழியாக, செஞ்சிக்கோட்டையின் கிழக்குப் பகுதியைத் தாக்கும்படி அனுப்பினார். செஞ்சிக்கோட்டையின்வடக்குப் பகுதியைத் தாக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் நாஸர்ஜங் தானே பயணமானார். வரும் வழியில், தேசூர் என்ற இடத்தில் அவர் தன் படைகளை நிறுத்தினார்.

அவ் விவரம் அறிந்த பிரெஞ்சுக்காரர்கள், நாஸர்ஜங் படையை வரும் வழியிலேயே தாக்கி நிறுத்தும்படி சிறந்த போர் வீரர்களைக்கொண்ட முன்னணிப் படை ஒன்றை அனுப்பினர்.

அம் முன்னணிப்படை தேசூரில் தங்கி இருந்த நாஸர்ஜங் படையை இரவு நேரத்தில் தாக்கியது. இருளில் ஏற்பட்ட குழப்பத்தில் நாஸர்ஜங் அவருடைய போர்வீரன் ஒருவனாலேயே கொல்லப்பட்டார். அரசர் இறந்தவுடன் அவருடைய இரு பிரிவுப் படைகளும் சோர்வடைந்துச் சிதறியோடிப் போயின.

அவ்வகையில் செஞ்சியைக் கைப்பற்றிக்கொள்ள வேண்டுமென்று நாஸர்ஜங் செய்த முயற்சியும் பிரெஞ்சுக்காரருடைய முன்னேற்றத்தைத் தடுக்க வேண்டுமென்ற ஆங்கிலேயரின் எண்ணமும் பயனற்றுப் போயின.

அதே சமயத்தில், புஸ்ஸி என்ற பிரெஞ்சுத் தளபதி, ஆங்கில ஆதரவாளரான அன்வர்தீனை ஆம்பூரில் எதிர்த்துக் கொன்றுவிட்டார். அதனால் பிரெஞ்சு ஆதரவாளரான முஸபர்ஜங் ஐதராபாத் நிஜாமாகவும், சந்தாசாகிப் கர்நாடக நவாபாகவும் நியமிக்கப்பட்டனர். அதன் மூலம் பிரஞ்சுக்காரர்களுடைய பலம் அதிகரித்துவிட்டதால், செஞ்சிக்கோட்டை அவர்கள் வசமே நிலைத்து விட்டது.

பிரெஞ்சுக்காரர்கள் கோட்டையின் இடிந்த பாகங்களைப் புதுப்பித்து, வாயில்களைப் பலப்படுத்தினர். அலங்கங்கள் ஆங்காங்குத் தாங்கிகள் கட்டி, அவற்றின்மேல் பீரங்கிகளை நிறுத்திக் கோட்டைக்குள் பகைவர்கள் நுழையாதபடி பாதுகாத்து வந்தனர்.

## செல்வம் கொள்ளை!

ஆனால் அவர்கள் அங்கிருந்த ஆலயங்களைப் பராமரிக்காமல் அவற்றின் சில பகுதிகளை இடித்துப் புதுச்சேரியில் டூப்ளே சிலை வைக்கவும், அங்குப்

பெரிய மாதா கோயில் கட்டவும் ஏராளமான கருங்கற்கள் எடுத்துப் போன தாகச் சொல்லப்படுகிறது.

கோட்டை மணிக்கூண்டிலிருந்த மிகப் பெரிய வெண்கல மணியையும் ஆலயங்களிலிருந்த விலை மதிப்புள்ள வெள்ளி, தங்கச்சிலைகளையும் பிரெஞ்சியர் அப்புறப்படுத்திவிட்டனர்.

இன்னும் பாரிஸ் நகரத்திலுள்ள ஒரு பொருட்காட்சிச்சாலையில் செஞ்சியிலிருந்து எடுத்துப்போன சில விலையுயர்ந்த சிலைகள் வைக்கப்பட்டுள்ளன.

இதற்கிடையில், ஆங்கிலேயர்கள் தென்னகத்தில் சென்னையைத் தாங்கள் தலைமை இடமாக்கிக்கொண்டதாலும், அங்குப் பண்டகசாலையும் துறைமுகமும் இருந்ததாலும், சென்னை நகரம் நாளடையில் விரிவடையத் தொடங்கியது. அவ்வாறே, கடலூர், புதுச்சேரி முதலிய இடங்களும் முன்னேற்ற மடைய ஆரம்பித்தன.

அதற்கு மாறாக, பல தடவைகள் தாக்கப்பட்டதால் ஏற்பட்ட இழப்பை அழிவைப் பொறுக்க முடியாத காரணத்தாலும், விவசாயமும் தொழிலும் பாதிக்கப்பட்டு உணவுத்தட்டுப்பாடு ஏற்பட்டதாலும், செஞ்சி நகரிலிருந்த மக்கள் கொஞ்சம் கொஞ்சமாகச் செஞ்சியைவிட்டு வெளியேறிச் சென்னையில் குடியேறத் தொடங்கினார்கள்.

நாளடைவில் செஞ்சி நகரின் பெருமையும் மக்கள் தொகையும் குறைந்து, சென்னை நகரின் பெருமையும் மக்கள் தொகையும் அதிகரிக்கலாயிற்று. இதன் காரணமாகத்தான் 'செஞ்சி அழிந்து சென்னைப்பட்டினம் உருவானது' என்ற பழமொழி ஏற்பட்டிருக்கவேண்டும்.

## அடுத்தடுத்த மாற்றங்கள்

ஐரோப்பாவில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சியருக்கும் போர் மூண்டால் இந்தியாவிலும் அவ் விருசாராருக்கும் போர் மூளுவதும், அதன் மூலம் வட இந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் குழப்பம் ஏற்படுவதும், அக்குழப்பமே காரணமாகத் தென்னகத்தில் செஞ்சிக்கோட்டை தாக்கப்படுவதும் வழக்கமாகி விட்டது.

செஞ்சிக் கோட்டையைப் பிரெஞ்சுக்காரர்கள் கைப்பற்றிக் கொண்டதும், தென்னகத்தில் நடந்த போரில் தோல்வி ஏற்பட்டதும் ஆங்கிலேயரை அதிர்ச்சிக் குள்ளாக்கியது.

செஞ்சிக்கோட்டை, பிரெஞ்சுக்காரர்கள் வசமிருந்தால் தென்னிந்தியாவில் அவர்கள் ஆதிக்கம் பலப்பட்டுவிடும் என்று பயந்த ஆங்கிலேயர்கள், எப்படியும் செஞ்சிக்கோட்டையைக் கைப்பற்றிக்கொள்ள வேண்டுமென்ற முடிவுக்கு வந்தனர்.

அந்த முடிவுப்படி ஆங்கிலேயர்கள் கி. பி. 1752 இல் *சின்னீர்* என்ற தளபதி மூலம் ஒருபெரும் படையுடன் செஞ்சியைத் தாக்கினர். ஆனால், பிரெஞ்சுக் காரர்கள் தீவிரமாகப் போராடி ஆங்கிலப் படையைத் துரத்திவிட்டனர்.

இரண்டாவது கர்நாடக யுத்தத்தில் திருச்சிராப்பள்ளி, ஆரணி, காவேரிப் பாக்கம் முதலிய இடங்களில் ஏற்பட்ட தோல்வி காரணமாகவும் சந்தாசாகிப் கொல்லப்பட்டதாலும் தென்னிந்தியாவில் பிரெஞ்சுக்காரர்களுடைய செல்வாக்கு குன்றத் தொடங்கியது

இத்தகைய சூழ்நிலையில் ஐரோப்பாவில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ் சியருக்கும் மறுபடியும் போர் மூண்டது. வழக்கம்போல் இந்தியாவில் ஏற்பட்ட சண்டை முடிவில் கர்நாடகத்தைப் பிரெஞ்சுக்காரரே கைப்பற்றிக்கொண்டனர்.

மற்றும் கி. பி. 1760இல் பிரெஞ்சியர் வசமிருந்த வந்தவாசியையும், கி. பி. 1761 ஜனவரியில் புதுச்சேரியையும் ஆங்கிலேயர் கைப்பற்றிக்கொண்டனர்

அச்சமயம், பிரெஞ்சுக்காரருக்குச் செஞ்சிக்கோட்டையே புகலிடமாயிருந் தது. அங்கிருந்தே அவர்கள் அடிக்கடி ஆங்கிலேயரைத் தாக்கித் தோல்வி கண்டு வந்தனர்.

ஆனாலும், ஆங்கிலேயர் விடாமுயற்சியுடன் *ஜெனரல் கூட்* என்றதளபதி மூலம் ஒரு பெரும்படையை அனுப்பிச் செஞ்சியைத் தாக்கிப் பிரெஞ்சுக்காரரை முறியடித்து 6. 4. 1761இல் கோட்டையைக் கைப்பற்றிக்கொண்டனர்.

செஞ்சிக்கோட்டையை இழந்த பிரெஞ்சுக்காரர்கள் இந்தியாவில் தங்கள் சிறப்பை முற்றும் இழந்தவர்கள் போலாயினர்.

ஆனால், கி. பி 1763 இல் ஐரோப்பாவில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் ஏற்பட்ட பாரிஸ் உடன்படிக்கையின்படி, இந்தியாவில் புதுச்சேரி, மாஹி, ஏனாம் என்ற மூன்று இடங்களும் ஆங்கிலேயரால் பிரெஞ்சுக் காரரிடம் ஒப்படைக்கப்பட்டது. செஞ்சிக்கோட்டை ஆங்கிலேயர் வசமே நிலைத்து நின்றது.

இதன் மத்தியில் மைசூரில் தளபதியாக இருந்த ஐதர் அலி என்பவர், தன் திறமையினால் கி. பி. 1761 இல் மைசூர் அரசரானார்.

ஆனால், அவர் ஆங்கிலேயரோடு நட்பு பாராட்டவில்லை. அந்நிய நாட்டவராகிய ஆங்கிலேயர்கள் இந்தியாவில் ஆதிக்கம் பெற விரும்புவதை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. அதனால், அடிக்கடி பிரிட்டிஷ் கும்பினியாருடன் சண்டையிட்டு வந்ததோடு, தென்னகத்தில் முக்கியத்துவம் பெற்ற செஞ்சிக் கோட்டையிலிருந்து ஆங்கிலேயரைத் துரத்தவேண்டுமென்று முடிவும் செய்தார்.

அம்முடிவுக்கிணங்க, ஐதர் அலி ஒரு பெரும் படையுடன் திருவண்ணா மலை மார்க்கமாகச் செஞ்சி நோக்கி வந்தார். ஆனால், ஆங்கிலேயருடைய முன்னணிப்படைகள் அவரைத் திருவண்ணாமலையிலேயே தடுத்து நிறுத்தித் தோற்று ஓடும்படி செய்தன. அதனால் அவருக்குச் செஞ்சிக் கோட்டையைத் தாக்கும் நிலை ஏற்படவில்லை.

ஆயினும் அவர் ஆங்கிலேயருடன் அடிக்கடி சண்டையிட்டு அவர் களுடைய முன்னேற்றத்திற்குத் தடை செய்து வந்தார். அதனால் ஆங்கிலேயர்கள் ஓர் உடன்படிக்கையால் ஐதர் அலியோடு சமரசம் செய்து கொண்டனர்.

சில வருடங்கள் கழித்து, வாரன் ஹேஸ்டிங்ஸ் இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்த காலத்தில் ஏற்பட்ட சமரச உடன்படிக்கையின்படி ஆங்கிலே யர்கள் நடந்து கொள்ளவில்லை என்று காரணம் காட்டி, கி. பி. 1780இல் ஐதர் அலி போளூர், வந்தவாசி மார்க்கமாகச் செஞ்சிக்கோட்டையைத் தாக்கினார் ஆனால், அவர் ஆங்கிலேயரால் முறியடிக்கப்பட்டுத் துரத்தப்பட்டார்.

ஐதர் அலியின் தாக்குதலே செஞ்சிக் கோட்டையின் கடைசித் தாக்குதல் ஆகும்.

கி. பி. 1780க்குப் பிறகு செஞ்சியின் சரித்திர இழை அறுந்தது; அரசியல் அரங்கில் அது தனது இடத்தை முற்றும் இழந்தது.

தென்னகம் முழுவதும் எதிர்ப்பின்றி ஆங்கிலேயர் வசமாய்விட்டபடியால் செஞ்சிக்கோட்டையை அறவே புறக்கணித்துவிட்டு ஆங்கிலேயர் சென்னை யிலேயே தங்கிவிட்டனர்.

## அந்தோ அவலம்!

செஞ்சிக்கோட்டை ஆங்கிலேயர் கைக்குப் போவதற்கு முன்பே, கோட்டைக்குள்ளிருந்த அரண்மனை அந்தப்புரப் பகுதிகள் முற்றும் தகர்க்கப் பட்டுவிட்டன. பல முறை தாக்குதலுக்கு உட்பட்ட காரணத்தால் கோட்டையின் சில பகுதிகள் சேதமடைந்திருந்தன.

இடிந்த பாகங்களைப் புதுப்பிக்கவோ, கோட்டையைப் பராமரிக்கவோ அப்போது ஆங்கிலேயர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை.

ஆனால், கோட்டையின் கிழக்கிலும் மேற்கிலும் இருந்த உயர்ந்த அலங் கங்களை ஆங்கிலேயர்கள்இடித்துவிட்டுக் கோட்டையைச் சுற்றி வடபுறமாயிருந்த பகுதியில் திண்டிவனம்—திருவண்ணாமலைச் சாலையை அமைத்துக் கோட்டைப் பகுதி வழியாகவே போகும்படி செய்துவிட்டனர்.

சுமார் ஐநூறு வருடகாலம் சீரும் சிறப்புமாய் முதன்மை பெற்றிருந்த செஞ்சிக் கோட்டை, அரசர் பலர் தங்கள் அரசியல் நாடகங்களை அரங்கேற்ற மேடையாக அமைந்த இந்தச் செஞ்சிக்கோட்டை, பலம் மிகுந்த படைகள் பலவற்றினால் ஏற்பட்ட பல தாக்குதல்களைத் தாங்கி நின்றும் நிற்கமுடியாமல் இடிந்து கிடக்கும் செஞ்சிக்கோட்டை, இன்று சாதாரண காட்சிக்களமாக இருந்து வருகிறது.



குளத்திலிறங்க அமைக்கப்பட்டுள்ள படிகளும் அழகிய மண்டபமும்
மலைக்குன்றுகளின் பின்னணியுடன் காணப்படுகின்றன.







# செஞ்சிக் கோட்டை சிறந்த கோட்டை!

## பாதுகாப்பு நிலை

கோட்டைக் கொத்தளங்கள் என்பது வழக்கத்தில் உள்ள சொல்லாகும். முற்காலத்தில் அரண் என வழக்கத்திலிருந்து பின்பு கோட்டையென்று அழைக்கப் படலாயிற்று. அரண்களில் மலையரண், காட்டரண், நீர் அரண், நிலஅரண் என நான்கு வகைப்படும்.

மலையரண் என்பது குன்றின்மீது அமைந்துள்ள கோட்டை. அதுபோல நிலஅரண் என்பது தரைமேல் அமைந்த கோட்டையைக் குறிக்கும். செஞ்சிக்கோட்டை குன்றிலும் தரையிலுமாகச் சேர்ந்தமைந்துள்ளதுஎன்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## தாக்குதலில் அழிதல்

பெரும்பாலான முற்காலத்திய கோட்டைகள், கால மாற்றத்தினால், தம்மை அழித்தவர்களை மட்டும் சரித் திரத்தில் இடம் பெறச் செய்துவிட்டு அவை மறைந்து விட்டன.

பிற்காலத்தில் கட்டப்பட்ட கோட்டைகள் சில வேனும் தற்சமயம் நம்மிடையே காணப்படுவது ஆறுதலளிப்பதாக உள்ளது.

ஐநூறு ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட பழைய கோட்டைகளை முழுமையாகக் காண்பது அரிது. நம் தமிழகத்தில் அவை ஆங்காங்கே சிதைந்து சீரழிந்த நிலையில் காணப்படுகின்றன.

இதற்கு முக்கிய காரணம், அக்காலத்தில் அரசர்களிடையே ஒற்றுமை யின்மையும் அதனால் அடிக்கடி மூண்டப் போர்களின் விளைவும் ஆகும்.

ஏனெனில், அத்தகைய போர்களின்போது கோட்டைகளும் அரண்மனை களும் முதலில் தாக்கப்படுவது இயற்கையே. அதிலும், நில அரண் அல்லது தரை மீது அமைந்த கோட்டை எதிரிகளால் சுலபமாகத் தாக்கப்படுவதால் விரைவில் அழிதல் தவிர்க்க முடியாதவையே.

## மலைக்கோட்டை

இதற்கு விதிவிலக்காக வேலூர் தரைக் கோட்டை இன்றும் நல்லநிலை யில் உள்ளது.

மலை மீதும் மலையை ஒட்டித் தரைமீதும் கட்டப்பட்ட அரண்கள், மதில்கள் ஓரளவு தாக்குப்பிடித்துத் தலை நிமிர்ந்து நிற்பதைக் காண்கிறோம். இவ்வாறு தற்போதுள்ள பல கோட்டைகளில் குறிப்பிடத்தக்கதாகச் செஞ்சிக் கோட்டையைக் கூறலாம்.

இக்கோட்டை அரிய அமைப்பினாலும், மலையை ஒட்டியும் மலை மீதும் இருப்பதாலும் பெரிதும் சிதைந்து போகாமல், இன்றும் ஓரளவுக்குச் சிறப்புறக் காட்சி தருகிறது என்றால் மிகையாகாது.

## பாதுகாப்புக்குரிய அமைப்பு

கோட்டை என்றாலே பாதுகாப்புக்காக அமைக்கப்படும் அரண் என்று பொருள்.

எதிரிகளின் படையினால் எளிதில் சேதம் விளைவிக்காதவாறும் அவர்கள் சுலபமாக உள்ளே நுழையாதவாறும் நுணுக்கங்களுடன் கட்டப்பட்டுள்ள செஞ்சிக்கோட்டை நம் முன்னோர்களின் சீரிய அறிவுத்திறன், பொறியியல் நுணுக்கம், முன்னேற்பாட்டுத் திட்டம் முதலியவற்றை நன்கு உணர்த்துவதாக உள்ளது.

முக்கியமாக இக்கோட்டையின் நுழைவாயில்கள் யாவும் நேருக்கு நேராக அமையாமலும், வளைந்தும் குறுகியும் எதிரிப்படைகள் எளிதில் உள்ளே நுழைந்துவிடாதவாறும் திட்டமிட்டு அமைக்கப்பட்டுள்ளன.

## மறைந்திருந்து தாக்குதல்

மீறி நுழையும் எதிரிப் படை வீரர்கள் வேகமாக முன்னேறாதவாறு தடுக்கப் பலவித உத்திகள் கையாளப்பட்டுள்ளன. ஆங்காங்கே பக்கவாட்டில் பதுங்கி இருந்து பாய்ந்து எதிரிகளை அழிக்கவும், தடுக்கவும் தகுந்தவாறு மறைவு இடங்களும் அமைத்திருப்பது அவர்களின் நுண்ணறிவைப் புலப்படுத்துகின்றன.

தவிரவும் கோட்டைச் சுவர்மீதமைந்த மறைவான நிலைகளின் மூலமாக வும் கீழே வரும் எதிரிகளைத் தாக்க வசதி செய்யப்பட்டிருந்ததையும் கண்டு உணர முடிகிறது.

செஞ்சிக்கோட்டையில் இயற்கையாக அமைந்த இம்மலையின் மேடு பள்ளத்திற்கு ஏற்றவாறும், திருப்பங்களுக்குத் தகுந்தவாறும், அடுத்தடுத்து உள் மதில்சுவர்கள் அமைந்திருப்பது அக்காலத்தில் அரசர்கள், இயற்கைஅமைப்பைத் தங்களுக்குச் சாதகமாக்கிப் பாதுகாப்புக்குப் பயன்பட வைத்திருக்கும் அறிவுத் திறனை வெளிப்படுத்துகின்றது.

குன்றுகளுக்கிடையே பக்க வாட்டுகளில் நீண்டு பரந்து உயர்ந்து காணப் படும் மதில்சுவர்களும் அதையொட்டிப் பாதுகாப்புப் படையினர் குதிரைமேல் செல்லத் தக்கவாறு அமைக்கப்பட்டுள்ள படிக்கட்டுகளும் செஞ்சிக்கோட்டையின் கட்டடங்களின் சிறப்பை மேலும் உணர்த்துகின்றன.

## எடுத்துக்காட்டு!

மலையரண் எனும் நிலையில், செஞ்சிக்கோட்டை மூன்று மலைகளை யும் ஒன்றாக இணைத்தவாறு அமைந்துள்ளது. வெளி அரண்களும் உள்கோட்டை யும் அவற்றிற்கான அரண்களும், வாயில்களும் அமைக்கப்பட்டுள்ள விந்தை யைக் காணும்போது, கோட்டைக் கட்டடக்கலைக்குரிய சிறந்த, முழுமையான எடுத்துக்காட்டாக இது அமைந்துள்ளது என்று கூறலாம்.

பண்டைய தமிழகத்தின் அரசர்கள், தம்மையும் தமது நாட்டையும் அரண் அமைத்துப் பாதுகாத்துக்கொள்ளக் கட்டிய கட்டடக் கலைக்குச் செஞ்சிக் கோட்டையும் அதன் அமைப்பும் ஒரு தலையாய சான்றாகத் திகழ்கின்றது. இது வெறும்புகழ்ச்சியல்ல, மாபெரும் உண்மை என்பதை இக்கோட்டையை நேரில் காண்பவர்கள் முழுதும் உணரமுடியும்.

13 ஆம் நூற்றாண்டு முதல் 18 ஆம் நூற்றாண்டு வரையிலான காலத்தில் இதனைத் தலைநகராகக் கொண்டு அரசாண்ட மன்னர் பலரால் சிறுகச் சிறுக அமைக்கப்பட்டுள்ள பகுதிகளே இன்றைய முழுமையான செஞ்சிக்கோட்டையும் அதில் அடங்கிய பல கலைக்கோயில்களும், கட்டடங்களும் ஆகும்.

காலத்தின் கோலத்தினாலும் கடுமையான பல போர்களினாலும் அவை பழுது பட்டிருப்பினும் இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறையின் அயராத பராமரிப்பினால் அவை மீண்டும் உயிர் பெற்று விளங்கி வருகின்றன என்றால் அது மிகையாகாது.





↑ கன்னிமார் கோயில்கள்

மரணக்கிணறு எனும் பகுதி →




இராஜகிரி மலை அடிவாரத்தில் உள்கோட்டையும் முக்கிய கட்டடங்களும்

1. இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறை அலுவலகம்
2. சிவன் கோயில்
3. சிவன் கோயில்
4. சாதத்துல்லாகான் மசூதி
5. உள்கோட்டை நுழைவு வாயில்
6. கல்யாண மகால் (ராணி மகால்)
7. ராஜா மகால்
8. அரச குலப் பெண்கள், பணிப் பெண்கள் தங்கும் விடுதி
9. யானைக் குளம்




10. உடற்பயிற்சி தளவாடக் கூடம்
11. நெற்களஞ்சியம்
12. வேணுகோபால சுவாமி கோவில்
13. தென்புற வாயில்
14. இராஜகிரி மலை மீது உள்ள முதல் நுழைவாயில்
15. ஏழு கன்னியர் கோயில்கள்
16. தேசிங்கு ராஜனின் உடல் எரியூட்டப்பெற்ற இடம்
17. சக்கரைக்குளம்
18. செட்டிக்குளம்
19. ஆஞ்சநேயர் கோயில்
20. வேலூர் வாயில்



# கோட்டையும் அதன் அமைப்பும்

இன்று நாம் காணும் செஞ்சி நகர், கோட்டைக்கு வெளியே கிழக்குத் திசையில் சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரம் தள்ளியே அமைந்துள்ளதால், முற்காலத்தில் இச் செஞ்சிக்கோட்டை, அரசகுடும்பத்தினரும் படைகளும் மட்டுமே தங்குவதற்குப் பயன்பட்டு வந்திருக்க வேண்டும் என நாம் ஊகிக்க முடிகிறது.

ராஜகிரி, கிருஷ்ணகிரி, சந்திரகிரி [சங்(க்)கிலி துர்க்கம்] ஆகிய மூன்று மலைகளையும் கிட்டத்தட்ட ஒரு முக்கோண வடிவில் இணைத்து அமைக்கப் பட்டுள்ள இக்கோட்டை மதிற்சுவர்கள், சுமார் ஐம்பதடி அகலத்தில் எட்டு கிலோமீட்டர் நீளம் தரைப்பகுதியில் அமைந்துள்ளது. கோட்டைச் சுவரை யொட்டிச் சுமார் எண்பது அடி அகலத்தில் அகழிகள் அமைக்கப்பட்டுள்ளன.

தற்சமயம் கோட்டையின் நடுவேயுள்ள — செஞ்சியிலிருந்து திருவண்ணாமலை செல்லும் — நெடுஞ்சாலை, கிழக்கிலும் மேற்கிலும் உள்ள கோட்டைமதிற்சுவர்களைக் குறுக்காக வெட்டியதுபோல் பெயர்த்தெடுத்து ஆங்கிலேயர் காலத்தில் கி.பி. 1867இல் அமைக்கப்பட்ட வழியாகும்.



1. இராஜகிரி (மலை) 2. கிருஷ்ணகிரி (மலை)
3. சங்ககிரி (மலை) (சங்கிலி துர்க்கம்) 4. புதுச்சேரி வாயில்
5. உள்கோட்டை வாயில் 6. உள்வாயில் 7. கல்யாணமகால்



■ மஹால் அமைப்பு

## உள்கோட்டை முன்பகுதி





உள் கோட்டை மதிற்சுவர் அமைப்பும்



உள்ளே தோன்றும் கல்யாண மகாலும்

அதற்கு முன் கோட்டைக்குள் நுழைய *வேலூர் வாயில், புதுச்சேரி வாயில்* என்னும் இரண்டே நுழைவாயில்கள் தாம் இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

தென்புறத்தில் திருச்சிராப்பள்ளி வாயில் என்பதும் உபயோகத்தில் இருந்திருக்கவேண்டும்.

இப்பொழுது திருவண்ணாமலையிலிருந்து பேருந்தில் வருபவர்கள் இக்கோட்டை முகப்பிலேயே சாலையில் இறங்கிக்கொள்ளலாம். மற்ற பகுதியிலிருந்து வருபவர்கள் கிழக்கிலுள்ள அகழிமீதுள்ள சாலையின் வழியே வரலாம்; தென்புறம் செல்லும் வழியே உள் கோட்டைக்குச் செல்லலாம்.

செஞ்சிப் பேருந்து நிலையத்தில் இறங்கி, அங்கிருந்து மூன்று சக்கர மிதிவண்டி மூலமாகத்தான் கோட்டையை அடைய முடியும். சொந்த வாகனங்களில் வருபவர்கள் கோட்டைக்குள் அதற்குண்டான இடத்தில் பாதுகாப்புடன் நிறுத்திவிட்டுச் சுற்றிப் பார்க்க முடியும். நடந்தவாறு வருவதும் இனிய மன நிலையைத் தரும் என்பது திண்ணம்.

## இந்திய அரசுத் தொல்பொருள் ஆய்வுத்துறை

பிரதான சாலையிலிருந்து தெற்குப்புறமாகக் கோட்டைக்குப் பிரியும் பாதையில் திரும்பினால், வலதுபுறமாகச் சற்று உயர்ந்த பாறை மீது அமைந்துள்ள தொல்பொருள் ஆய்வுத் துறையின் அலுவலகக் கட்டடம் முதலில் நம்மை வரவேற்கின்றது.

கோட்டையையும் கட்டடங்களையும் பராமரித்துப் பாதுகாக்கும் பணியில் இத்துறை ஈடுபட்டுள்ளது. ஆகவே இவற்றைப் பற்றிய விவரம் ஏதேனும் அறிய வேண்டின் இவ்விலாகா அதிகாரிகளை அணுகலாம்.

இதையடுத்து, சற்றுத் தூரம் சென்றால், சாலையின் தெற்கில் அருகருகே இரு சிவன் கோயில்கள் காணப்படுகின்றன. இதன் கருவறையில் சிவபெருமானை லிங்கவடிவில் காணலாம். இக்கோயில் மேற்கு நோக்கி அமைந்துள்ளது. ஆயின் இதிலுள்ள மற்றுமொரு சந்நிதியான அம்பாளின் கருவறை கிழக்குநோக்கி அமைந்துள்ளது. முன் மண்டபங்களும் மற்ற பகுதிகளும் சிதைந்த நிலையில் உள்ளன.

இதையடுத்து நாம் தெற்கு நோக்கிச் செல்லும் பாதையில் தொடர்ந்து சென்றால், ராஜகிரிக் கோட்டையின் முகப்புவாயிலை அடையலாம். நடுவில் வலதுபுறம் பிரியும் மண்பாதை, மேற்கேயுள்ள வேலூர்வாயில் வரை அமைக்கப்

பட்டுள்ள பாதையாகும். வேலூர் வாயில் முகப்புவாயிலுடன் நன்கு திகழ்வதால், வருவோர்க்கு அது முதல்நுழைவாயிலாக இருந்தால், கோட்டைக் காட்சி நன்கு மக்கள் மனத்தில் பதியும்.

இராஜகிரியின் உள்கோட்டை முகப்பு, நான்கு பாதைகள் சந்திக்கும் இடத்தில் அமைந்துள்ளது. இதன் கிழக்குப் பாதையில் சென்றால், அருகிலேயே அமைந்துள்ள சாதத்துல்லாகான் மசூதியையும், சற்றுத் தூரத்தில் வலப்புறப் பாதையில் சென்றால் வேங்கடரமணர் ஆலயத்தையும், கிழக்கில் நேரே சென்றால் புதுச்சேரி வாயிலையும் அடையலாம். இவற்றை நாம் பின்பு தனித்தனியே காண்போம்.

தெற்குப்புறமாக அகழியையொட்டி அமைந்துள்ள மண்பாதையில் நேராகச் சிறிது தொலைவு சென்றால், தேசிங்கு ராஜனின் சமாதி, ஏழு கன்னியர்களின் கோயில்கள், செட்டிக்குளம், சக்கரைக்குளம், ஆஞ்சநேயர் கோயில் முதலிய இடங்களை அடையலாம்.

வடக்குப்புறமாக அமைந்த பாதையின் மூலமாகவே நாம் இவ்விடத்தை அடைந்தோம்.

கோட்டை முகப்பில் நான்கு வழிப்பாதையின் மேற்குப் புறத்தில் திரும்பினால், உள்கோட்டையின் முகப்புவாயில் நம்மை வரவேற்கும். இவ்வாயில் வழியே நாம் கோட்டைக்குள் நுழைந்து சென்றால் உள்ளே காணப்போகும் அதிசயங்கள் பல உள்ளன.

### அ) இராஜகிரிக் கோட்டை (உயரம் 800 அடி)

அகழியின்மீது குறுக்கே அமைந்த பாலத்தின்மேல் அமைந்த பாதை மூலம் சென்றால், கோட்டை நுழைவாயிலில் நுழைந்து, இடது பக்கம் திரும்பி மீண்டும் வலப்பக்கம் வளைந்து செல்வோமானால், கோட்டையின் பிரதான நுழைவுவாயிலை அடையலாம். சுமார் 3 மீட்டர் அகலமுள்ள இவ்வாயிலுக்குப் பெரிய மரக்கதவுகளும் அமைக்கப்பட்டுள்ளன.

இதைக் கடந்து சென்றால், மண்டபம் போன்ற அமைப்பில் 18 தூண்களைக் கொண்டு, தெற்கு வடக்காக 16 மீட்டர் நீளமும், கிழக்கு மேற்காக 7. 40 மீட்டர் அகலமும் கொண்டு இரு பக்கங்களிலும் சிறிய திண்ணைகளுடன் அமைந்துள்ள பகுதியை அடைகிறோம்.

இப்பகுதி, காண்போர் கருத்தைக் கவரும் வண்ணம், காவலர்கள் கண் காணிப்புக்கு ஏற்றவாறு கட்டப்பட்டுள்ளது.

மண்டபத்தில் தெற்குப்புறமாக இப்பொழுது உள்ள அலுவலகத்தில் நுழைவுச் சீட்டுப் பெற்றுக்கொண்டு உள்ளே செல்லவேண்டும்.

இம்மண்பத்தைக் கடந்து வலதுபுறம் திரும்பிப் பாதையில் சென்றால், சற்றுத் தூரத்தில் மற்றும் ஒரு நுழைவாயில் மண்டபம் எதிர்ப்படுகிறது. இது இடதுபக்கத்தில் அமைந்துள்ளது. இதைக் கடந்து சென்றால், மீண்டுமொரு நுழைவு மண்டபம்! இது உட்பகுதியில் 8 தூண்களைக் கொண்டு இருபுறமும் திண்ணைகளுடன் காணப்படுகின்றது.

மேற்கூறிய இரண்டு வாயில்களுக்கும் இடையே கோட்டைச் சுவரை யொட்டியுள்ள இரு மண்டபங்களிலும் இந்தியத் தொல்பொருள் இலாகாவினால் செஞ்சியிலும் மற்றும் சுற்றுப்புறத்திலும் தனித்தனியாகக் கேட்பாரற்றுக் கிடந்த சிலைகளைத் திரட்டிச் சிறந்த அருங்காட்சியகமாக மாற்ற ஏற்பாடு செய்யப்பட்டு வருவதைக் காணலாம்.

இதைக் கடந்தால் 100 அடி தூரம் இடைவெளிக்குப் பின் மற்றுமொரு மண்டப நுழைவாயிலுள்ளது. இதில் வளைவுகளுடன் கூடிய மொகலாயர்கள் கட்டடப் பாணியில் அமைந்துள்ள கட்டடக்கலை காணத்தக்க காட்சியாகும்.

வலதுபுறமும் இடதுபுறமும் கருங்கல்லால் கட்டப்பட்ட உயர்ந்த பெரிய மேடைகளைக் காண்கிறோம். இவை பீரங்கிகள் வைக்கவும், வீரர்கள் காவல் காப்பதற்கும் ஏற்றவாறு அமைக்கப்பட்டவை என உணரலாம். இவ்வாறுள்ள ஒன்றிரண்டு மேடைகள் கொடிக்கம்பம் இருந்தவை என்றும் சிலர் கூறுவர்.

நான்காவது நுழைவாயிலைக் கடந்து சென்றால், இடதுபுறம் கட்டடங்கள் இடிந்து மண்மேடிட்ட நிலையும் வலதுபுறம்பிரமிக்கவைக்கும் கல்யாணமகால் எனும் கட்டடப் பகுதியும் காட்சிதருகின்றன. அழகிய கல்யாண மகாலை யொட்டி வடக்கிலும் மேற்கிலும் சிறிய மாடப்பிறைகள்போன்ற சிறுசிறு அறைகள் தொடர்ச்சியாயுள்ளன. இவை குதிரைலாயங்கள் என முன்பு அழைக்கப்பட்டு வந்தன.

ஆனால் இவை அரண்மனை வளாகப் பகுதிகளாகவே காணப்படுகின்றன

இதைத் தவிர, எதிரே தெற்கில் அழகிய யானைக்குளம் உள்ளது. அதன் சுற்று மண்டபம் எழிலாகக் காணப்படுகிறது. மேற்கிலுள்ள நுழைவாயில் எடுப்பான தோற்றத்துடன் புதுமையாக விளங்குகிறது. வடக்கில் தரையில் படிகள் அமைத்துக் கீழே இறங்கிக் குளத்திற்குச் செல்லும் பாதை வழியும் வியப்பிலாழ்த்துகின்றது.

அதற்கு மேற்கில், உடற்பயிற்சிக்கூடம் ஒன்று காணப்படுகின்றது.

அடுத்துச் சற்றுமேற்கே இராஜகிரி மலை ஏறும் வாயிலுக்கு அருகில் நெற்களஞ்சியக் கட்டடம், பேருருவில் காண்கிறோம். களஞ்சியம் இரு சிறகாக அமைந்துள்ளது. உள்ளே நடுவில் இரு பக்கங்களிலும் படி அமைப்பு காணப்படுகிறது.





ஆனைக்குளம் எனும் அழகிய குளம்


கிழக்கு


மேலிருந்து காணும்
தோற்றம்



இராஜகிரியின் அடிவாரத்தில்
அகன்று உயர்ந்து காணப்படும் மூன்று தானியக் களஞ்சியங்களின்
கட்டட வரைபடம்.



தானியக் களஞ்சியம் மூன்றினை
ஒரு கட்டடத்திலேயே அமைத்துள்ள
முன்னோரது மதி நுட்பமும் திறமும் நம்மைப் பெரும் வியப்பில்ஆழ்த்துகின்றன.
மூன்று நுழைவாயில்களும் படிவழிகளும் காணலாம்.



எண்ணூறு அடி உயரமுள்ள இராஜகிரி எனும் பெரியமலை யின் கிழக்குத் தோற்றம். அடிவாரத்தில் உள்ள முதல்நுழை வாயிலும், மலையின் நடுவில் வளைந்து செல்லும் பாதையும் மதிற்சுவர்களும், உச்சியில் உள்ள கட்டடப் பகுதிகளும் ஒரு சேரக் காணும் காட்சி.

மேற்கில் குறுக்காக ஒரு களஞ்சியக்கூடம் சேர்ந்தாற்போன்று கட்டப் பட்டுள்ளது. அரிய அமைப்பு அதற்கு எதிரில் கிழக்கே பாறையில் பூமிக்கடியில் குடைந்து அமைக்கப்பட்ட வெடிமருந்துக் கிடங்கும் காணப்படுகிறது.

களஞ்சியத்தின் பின்புறம் மிகவும் பாழடைந்த நிலையில் உள்ள வேணுகோபாலசுவாமி கோயில் உள்ளது. இவை உள் கோட்டை வளாகத்தில் அமைந்துள்ள கட்டடங்களாகும்.

பெரிய பாறையின் தென்புறம் புடைப்புச் சிற்பமாக உருவாக்கப் பெற்றுள்ளது வேணுகோபாலரின் திருவுருவம்; இது செஞ்சிநாயக்கர்காலச் சிற்பக்கலையைச் சிறப்புற விளக்குவதாகும். இப்பொழுது இப் பாறைப் புடைப்புச் சிற்பத்தின் முன்புறம், தரையில் உள்ள அழகிய விரிந்து பரந்துள்ளகற்பலகையும் கண்ணைக் கவர்கின்றது. இவ்விடத்தின் மேற்கூரை முற்றிலும் இடிந்துள்ளது. பொது மக்கள் வேணுகோபாலரின் பாறைச் சிற்பத்தைக் கண்ணாரக் கண்டு களிக் கின்றனர்.

வேணுகோபாலஸ்வாமி கோயிலின் அருகில் உட்கோட்டையின் தென்புற வாயில் உள்ளது. இது உட்புறமாக இருபக்கமும் மிக உயரமான, கற்களாலமைந்த திண்ணைகள் கொண்டது. மரக்கதவுகளை உடையதுமாகும். இதுவே தெற்கு

வாயில்' அல்லது 'திருச்சிராப்பள்ளி வாயில்' என அழைக்கப்படும் நுழைவு வாயிலாகும். இதன் வழியாகத் தெற்காக வெளியே சென்றாலும் கன்னிமார் கோயில்களையும், செட்டிக்குளம், சக்கரைக்குளம் செல்லும் பாதையையும் அடைய லாம்.




நடந்து செல்லும் வழிப் பாதையும், வழியின் ஓரங்களில் ஆங்காங்கே அமைந்துள்ள கட்டடங்கள், பாலங்கள், கோயில்கள், குளம் முதலியனவற்றையும் படத்தில் விளக்கமாக அறிந்து மனத்தில் கொள்ளலாம்.

## இராஜகிரி (இராஜாமலை)

பெரிய நெற்களஞ்சியத்தின் அருகே இராஜகிரி மலைமீது ஏறிச் செல்லும் படிகள் அமைந்துள்ளன.

செஞ்சிக்கோட்டை அமைந்துள்ள மூன்று மலைகளில், கம்பீரமாகவும் உயரமாகவும் காணப்படுவது இராஜகிரி மலையேயாகும். சுமார் அறுநூறு அடி உயரமுள்ள பகுதிவரை சற்றுச் சரிவாகவும், அதன்பின் வடமேற்குமூலையிலிருந்து சுமார் இருநூறு அடிகள் உயரத்திற்கு மிகவும் செங்குத்தாகவும் உயர்ந்ததாக இம் மலை அமைந்துள்ளது.

மலையின் அடிவாரத்திலிருந்து உச்சிவரை வளைந்து வளைந்து செல்லும் மலைப் பாதையில் ஆங்காங்கே ஒன்பது நுழைவு வாயில்கள் உள்ளன.

மண்டபம் போன்ற அமைப்புடனும் இருபக்கங்களில் திண்ணைகளுடனும் கூடியதாய் அவை அமைந்துள்ளன. இந்தநுழைவாயில்கள் அக்காலத்தில் காவலர் கள் தங்குவதற்காக அமைக்கப்பட்டவை. இப்பொழுது சுற்றுலாவுக்காக மேலேறி வருபவர்கள் இளைப்பாறவும் சற்றுநேரம் தங்குவதற்கும் மண்டபத் திண்ணைகள் பயன்படுகின்றன.



***ஒவ்வொரு மண்டபத்தின் இடையே அமைந்துள்ள படிகளின் விவரம்:***

| | | |
|---|---|---|
| கீழேயிருந்து முதல் வாயில்வரை | 29 | படிகள் |
| அங்கிருந்து இரண்டாவது வாயில்வரை | 34 | ,, |
| அங்கிருந்து மூன்றாவது வாயில்வரை | 284 | ,, |
| அதுமுதல் நான்காவது வாயில்வரை | 27 | ,, |
| அங்கிருந்து ஐந்தாவது வாயில்வரை | 272 | ,, |
| அது முதல் ஆறாவது வாயில்வரை | 86 | ,, |
| அங்கிருந்து ஏழாவது வாயில்வரை | 183 | ,, |
| அங்கிருந்து எட்டாவது வாயில்வரை | 77 | ,, |
| ஒன்பதாவது வாயில்வரை | 20 | ,, |

இவ்வாறாக இம்மலைப் பாதையில் மொத்தம் 1012 படிகள் உள்ளன.

கீழேயிருந்து நான்காவது நுழைவு வாயில் மண்டபம் வரையில் செங்குத்தான படிகளில் ஏறிச் செல்லவேண்டும். பின்பு படிகளாகவும் நடைபாதையாகவும் மாறி மாறி வழி அமைந்துள்ளது. இப்பகுதிகளின் இயற்கைக் காட்சி கண்ணையும் கருத்தையும் கவரக்கூடியதாகும்.

மேலும், மலைக் குன்றுகளோடு கைகோத்தவாறு அமைந்து செல்லும் மதிற்சுவர்கள் நம் சிந்தையில் சிலிர்ப்பைச் சேர்க்கின்றன. அக்காலப் பாது காப்பு முறையும் நோக்கும் நம் நினைவில்மின்னலிடுகின்றன. சுவர்கள் மலைக் குன்றுகளில் இணைந்து வளைந்து செல்லும் பாங்கு பார்ப்போரை மலைக்க வைக்கின்றது.

இக்காலக் கட்டடக் கலை வல்லுநர்கள் இத்தகைய பழங்காலக் கட்டட முறைகளைப் பார்த்து, பயன்மிகு புதுமைகளை உருவாக்க வேண்டும் என்ற எண்ணமும் நெஞ்சில் தோன்றுகின்றது.

*பழமைச் சான்றுகள் புதுமைக்கு உரமாகின்றன; வித்தாகின்றன; புதிய சிந்தனைகளை மலர்விக்கின்றன.*

நான்காவது மண்டபத்தின் மீது ஒன்பதடி நீளத்தில் ஒரு பீரங்கியை வைத் துள்ளதைக் காணலாம். இதன் மீது 2470 என்ற இலக்கம் பொறிக்கப்பட்டுள்ளது. அதுபோன்ற பீரங்கிகள் பிரெஞ்சுக்காரர்கள் காலத்தில் செஞ்சிக் கோட்டையில் பல இடங்களில் அமைக்கப்பட்டனவாம்.

## பாலரங்கநாதர் ஆலயம்

சற்றுத் தூரம் சென்றால், வடக்கில் சிறிய பாறையின் மீது அழகாக அமைந்துள்ள பாலரங்கநாதர் கோயிலைக் காணலாம்.

இந்த பாலரங்கநாதர் ஆலயம் கருங்கற்களால் கட்டப்பட்டுச் செங்கல் சுதை விமானத்துடன் அமைந்துள்ளது. உண்ணாழியுடன் வெளி மண்டபம் கொண்டு கிழக்கு நோக்கியவாறு இது அமைந்துள்ளது. இச் சிறிய கோயில் தற்சமயம் சிலையேதும் இன்றிக் காணப்படுகின்றது.

இக்கோயிலுக்குச் செல்லத், தனியாக ஓர்பாதை படிக்கட்டுகளுடன் அமைந்துள்ளது.

கருவறையின் வெளிச்சுவரில் பரிவார தேவதைகளுக்கான கூடுகள் அமைந்துள்ளன. ஆயினும் தற்சமயம் அவைகளுக்குரிய கோட்டதேவதைகள் ஏதும் காணப்படவில்லை.

## அரங்கன் மண்டபமும் தெப்பக்குளமும்

தொடர்ந்து மேற்கு நோக்கி நடந்து சென்றால், நம் இடதுபுறம் மிக அழகியபடிக்கட்டுகளுடன் அமைந்த ஆழமான பெரியகுளம் ஒன்று உள்ளது. அதன் அருகில் திறந்த மண்டபம் ஒன்றும் இருப்பதைக் காணலாம். இதன் படிக்கட்டுகள் இடிந்தநிலையில் காணப்படுகின்றன.

அக்காலத்தில் சிங்கபுரத்திலிருந்து அரங்கனின் உற்சவ மூர்த்தி (விக்கிரகம்) இங்கே கொண்டு வரப்பட்டு, இக்குளக்கரையிலுள்ள மண்டபத்தில் எழுந்தருளச் செய்து, விழாக்கள் எடுத்து இக் குளத்தில், தெப்பல் திருவிழா நடத்துவது வழக்கமாம். ஆகவே இம்மண்டபத்திற்கு ‘அரங்கர் மண்டபம்’ என்றும் இக்குளத்திற்குத் தெப்பக்குளம் என்றும் பெயர் வழங்கி வருகிறது. இம்மண்டபம் இன்றும் அழகுறக் காணப்படுகிறது.

## கமலக்கண்ணி அம்மன் கோயில்

இக்குளத்தைக் கடந்ததும் நடைபாதையின் வலப்புறம் இராஜகிரியின் செங்குத்தான பாறைப்பகுதி, தென்படுகிறது. அதன் அடிவாரத்தில் ஒரு சிறிய மண்டபம், மூன்றுவரிசைகளில் பதினெட்டுக் கற்றூண்களைக் கொண்டு அமைந்துள்ளதையும் காணலாம்.

குளத்தின் வடப்புறம் செங்கற்களால் ஆன பிற்காலத்திய சிறிய கோயில் ஒன்று காணப்படுகிறது. இது இவ்வூர்க் குலதெய்வமான கமலக்கண்ணி என்னும் அம்மனுக்காக அமைக்கப்பட்ட ஆலயமாகும்.

## காட்சி தரும் கடவுள் சிலை!

தெய்வச்சிலைகள் காணப்படுவது இந்த ஒரு இடமேயாகும். இது ஒரு ஆறுதல்! அதே சமயம், ஓர் ஐயம்! செஞ்சியில் அமைதி திரும்பிய பின், உள்ளூர் மக்கள் இக்கோயிலைப் புதிதாக உருவாக்கியும் இருக்கலாம்.

ஒவ்வொரு வருடமும் சித்திரை மாதத்தில் (ஏப்ரல்) இத்தெய்வத்திற்குப் பத்துநாட்கள் திருவிழா நடத்தப்படுகிறது.

இக்கோயிலைச் சுற்றிலும் மூன்று அடி அகலத்திற்குக் கருங்கல்லால் அமைக்கப்பட்ட மேடை ஒன்று அமைந்துள்ளது. கோயிலின் உள்ளே அழகிய சிலை வடிவில் கமலக்கண்ணி அம்மன் காட்சியளிக்கிறாள். இச்சிலை நாயக்கர்கள் காலத்தைச் சேர்ந்தது. சிறந்த கலைப்பாணியுடன் ஒயிலாக நின்ற கோலத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

இக்கோயிலின் முன்புறம் சுமார் இரண்டரையடி உயரமுள்ள துர்க்கையின் சிலை ஒன்று (உடைந்த சிற்பமாக) இருக்கிறது. இது தவிர இரண்டு விநாயகர் சிலைகளும் மற்றுமொரு (உடைந்த) அம்மன் சிலையும் காணப்படுகின்றன. ஆண் உருவம் ஒன்று கைகூப்பிய நிலையில் காதில் குண்டலங்களும் தலையில் தலைப்பாகையும் அணிந்து தோற்றம் அளிக்கிறது.

## சதுரமான மேடை

இக்கோயிலின் முன் சதுரமான மேடை ஒன்று உள்ளது. அதன் மீதுள்ள கல்லில் அமைந்த சிற்பத்தில் முகம் போன்ற அமைப்பு செதுக்கப்பட்டுள்ளது. துண்டிக்கப்பட்ட நான்கு மனிதத் தலைகள் நான்கு மூலைகளிலும் உருவகப் படுத்தப்பட்டுள்ளது. நடுவிலேயே நீண்ட சதுரமாக வுள்ள உருவம் தெளிவில்லாமல் இருக்கிறது.

வடக்கிலும் தெற்கிலும் மனிதத் தலைகளுக்கு நடுவில், கொம்புள்ள எருமைகளின் தலைகள் இரண்டு செதுக்கப்பட்டுள்ளன. இதன் மேற்புறம் சூலாயுதம் இரு பக்கங்களிலும் காணப்படுகின்றன.

இச்சிற்பங்களுக்குப் பக்கத்தில் நீளவாட்டில் அம்பு, பிறையுடன் கூடிய அம்பு முதலான ஆயுதங்களும் செதுக்கப்பட்டுள்ளன.

கிழக்குப்புறத்தில் தலைகளையடுத்து நீண்டஒருவில்லும் அம்பும் வடக்குத் தெற்காக அமைக்கப்பட்டுள்ளன. இம்மேடை இத்தகைய சிற்ப வடிவங்களைக் கொண்டு இவ்வம்மன் சந்நிதிக்கு எதிரே அமைக்கப்பட்டுள்ள பலிபீடமாகும். சமீபகாலம்வரையும் இவ்வம்மனுக்குக் கடா எருமையைப் பலிகொடுப்பது வழக்கத்தில் இருந்ததாகக் கூறுகின்றனர். இப் பலிபீடம் அருமையாகவும் அதிசயிக்கத் தக்க வகையிலும் அமைந்துள்ளது என்றால் அது மிகையாகாது.



## நாயக்கர் கால ஓவியம்

கமலக்க்ண்ணியம்மன் கோயிலின் பின்புறமாக அமைந்துள்ள செங்குத்தான பாறையின்மீது நாயக்கர் கால ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. காலத்தின் கோலத்தால் இவை மிகவும் சிதைந்த நிலையில் இருக்கின்றன. ஆயினும் இருப்பவற்றைப் பாதுகாப்பதற்கான முயற்சியில் இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறை ஈடுபட்டுள்ளது. இது சற்றே ஆறுதல் அளிக்கும் செயலாகும்.

மழை நீர் ஓவியத்தின் மீது விழாமல் மேலே நீண்ட குடைபோன்ற தடை ஒன்றை அமைத்துள்ளனர். இவ் ஓவியத்தில் திருமால், ஸ்ரீதேவி, பூமாதேவியுடன் இரு கரங்களிலும் சங்கு சக்கரங்கள் ஏந்தி, அபயக்கரம், ஆட்கொள்ளும் கரம் என்ற மற்ற இருகரங்களுடனும் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறார்.

சுமார் ஐந்தடி நீளமும் நான்குஅடி உயரமும் உள்ள இவ்வோவியத்தின் மேற்குப்புறத்தில் உள்ள மற்றும் இரு ஓவியங்கள் முற்றும் அழிந்த நிலையில் காணப்படுகின்றன.

சிறந்த கலையம்சம் கொண்ட இவ்வண்ணச்சித்திரங்கள் சின்னாபின்னமாகிக் காட்சியளிப்பது மிகவும் வேதனைக்குரிய நிலையாகும்.

கமலக்கண்ணி அம்மன் கோயிலின் மேற்கே வலதுபுறமாக, அண்மையில் அமைக்கப்பட்ட கற்கட்டு மேடை மீது சிறிய சிவலிங்கமும், தாமரை இதழ்களைப் போன்று அமைந்த வட்டவடிவ பீடத்தில் சிவலிங்க வடிவான வெறும் பாணம் மட்டும் அமைந்துள்ளது. இதன் அடிப்பாகமான ஆவுடையார் காணப்படவில்லை. இதிலே சற்றுத் தாழ்வான மேடைமீது நந்தியம் பெருமானின் சிலை ஒன்று உடைந்த நிலையில் உள்ளது.

## சுவைமிகு சுனைநீர் - பொன்மண்டபம்!

இவ்வழகிய காட்சிகளைக் கண்டு களித்து, சற்றுத் தொலைவு(சுமார் 100 அடி), சென்றால் இடதுபுறம், அதாவது தெற்குத் திசையில் அழகிய (சுனை) நீர் நிலை ஒன்றைக் காணலாம். அதன் ஆழத்திற்குச் செல்வதற்கு வசதியாக அழகிய 43 படிகளை அமைத்துள்ள பாங்கு வியக்கத்தக்கதாகும். இச் சுனையைச் சுற்றிப் பெரிய சுற்றுக்கட்டு மண்டபம் இருந்ததாகக் கூறுவர்.

இங்கு உள்ள மூலிகைகளைக் கொண்டு செயற்கை முறையில் பொன் செய்வதற்கு ஏற்ற இடமாக இம் மண்டபத்தைப் பயன்படுத்தி வந்தனர் என்றும் ஆகவே இதற்குப் 'பொன் மண்டபம்' என்னும் பெயர் வழக்கத்தில் உள்ளதாகவும் கூறுவர்.

எது எப்படியாயினும் பார்வையாளர்கள் வெய்யிலில் களைத்து வரும் போது அவர்களின் தாகத்தைத் தீர்க்க இன்றும் சுவையான நீர் பயன்படுகிறது என்பது கண்கூடானது; போற்றத்தக்கது. ஏனெனில், களைப்புடன் வருபவர் தம் தாகம் தீர்ந்தால் பொன் கிடைத்ததைவிடப் பெருமை கொள்வார் அல்லவா!

இதைக் கடந்து இராஜகிரியை நோக்கி மேலும் நடக்கையில், இடதுபுறம் (தெற்கில்) மிகப் பெரிய மண்டபம் ஒன்று உள்ளது. பதினான்கு படிகள் ஏறி இம்மண்டபத்தை அடைந்தால் கிழக்கு மேற்காகப் பத்துத் தூண்களும் தெற்கு வடக்காக எட்டுத் தூண்களும் கொண்டுள்ளதைக் காண்கிறோம். மேலே தளம் பழுதடையாமலும் உள்ளது. நடுவில் திறந்தவெளி விட்டுக் கட்டப்பட்டுள்ள விதத்தைக் காணலாம்.

## காட்சியும் கருத்தும்!

மண்டபத்தைத் பார்த்து வியந்தவாறு நடைபாதைக்கு வருகிறோம். அங்கிருந்து மேற்கிலும் வடக்கிலும் நமது பார்வையைச் செலுத்தினால் ஓர் விந்தை மிகு காட்சி தெரிகிறது. வளைந்து செல்லும் பாதைகளின் பக்கச் சுவர்கள் பழங்காலத்தைப் படமாக விரித்துக்காட்டுகின்றன. வடபுறம் தோன்றும் வாயிலும் மதிலும் காவல் மாடப் பிறைகளும் வான்முட்ட நிற்கின்றன

இரு நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னால் பல நூறு காவல்வீரர்கள் காவல் புரிந்த காட்சி கண்முன் விரிகிறது சுறுசுறுப்பும் பரபரப்பும் கொண்ட போர்க்காலச் சூழ்நிலைகளைச் சிந்தித்தால், அந்தநாள் வாழ்வும் நினைவில் புரள்கிறது. எண்ணற்ற போர்வீரர்தம் கடமையும் தெரிகிறது; தம் மன்னர்களது வாழ்வுக்காகவே தம் இன்னுயிரைப் பணயம் வைத்த பெருமையும் தெரிகிறது!

பேராசையும் பகையுணர்வும் எத்தனை எத்தனை அழிவுகளைச் செய்து வருகின்றன! மனிதமனம் என்றைக்குத்தான் அமைதியில் நிறைவு காணுமோ...!

இதையடுத்துச் சிறிது தொலைவு நடப்போம். மேல் நோக்கிச் செல்லும் படிகளின்மூலமும் சமவெளியிலும் நடந்து மண்டபத்தை இராஜகிரியின் செங்குத்தான பகுதியை நெருங்குகிறோம்

எதிரே மேற்குச் சுவர் நம்மைத் தடுப்பது போல அமைந்துள்ளது வலது புறமாகச் சென்று திரும்பி, கிழக்கு நோக்கிச் சுமார் நாற்பது படிகளைக் கடந்து, இச்செங்குத்தான குன்றைச் சுற்றியமைந்த மதிற்சுவரோடு கூடிய வழிப்பாதையில் நடந்து செல்கிறோம்.

பின்பு, வலதுபுறம் கைப்பிடிச்சுவர் போன்ற சற்றுத் தாழ்வான சுவர் ஒன்று நெடுகிலும் அமைந்துள்ளதைக் காண்கிறோம்.

சற்றுத் தொலைவில் ஐந்தாவது நுழைவாயில் மண்டபம் நம்மை எதிர்கொள்கிறது. இம் மண்டபத்திற்குள்ளேயே பதினொரு படிக்கட்டுகள் அமைந்

துள்ளன. இருபுறங்களிலும் திண்ணைகளும் நான்கு தூண் வரிசைகளும் வைத்துக்கட்டப்பட்டுள்ளது. இம்மண்டபம், பதினான்குஅடி நீளமும் எட்டடி அகல மும் கொண்டதாகும்.

இம்மண்டபத்தின் மீது முதல்நிலைக் கட்டடம் ஒன்று இருந்ததற்குச் சான்றாகச், செங்கல்லால் கட்டப்பட்ட தூண்களும் சிதைந்துபோன தளமும் இன்றும் காணப்படுகின்றன.

**பக்திக்குரியன!**

இம்மண்டபத்திலிருந்து இடது புறமாகத் திரும்பி மறுபடியும் வலப்பக்கம் படிகளில் ஏறினால், அருகில் உள்ள ஒரு சிறிய பாறையில் ஆஞ்சநேயர் உருவம் பொறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இவரது தூக்கிய வால்பகுதி 'ஓம்' என்ற எழுத்தைப்போல் செதுக்கப்பட்டுள்ளது; அநுமனின் காலடியில் அரக்கியின் உருவம் ஒன்று இருப்பதையும் காணலாம்.

இது தவிர, இரண்டு பாதங்கள் மட்டும் கீழே கல்லில் செதுக்கப்பட்டுள்ள தையும் காணலாம்.

மீண்டும் இடதுபுறம் நோக்கி மேற்கே தொடர்ந்து படிகளைக் கடந்துப் பயணம் செய்தால் ஆறாவது நுழைவாயில் உள்ள மண்டபத்தை அடையலாம். இம் மண்டபம் தென்புறம் திண்ணை போன்றும், வடபுறம் அவ்வாறு ஏதுமின்றியும் ஓர் அறை போன்றும் சிறிதாகக் காணப்படுகிறது.

அங்கிருந்து 57 படிகளில் இறங்கிப் பின்பு தாழ்வாக அமைந்துள்ள பாதையில் செல்லவேண்டும்.

நமது இடதுபுறம் கருங்கல் மதிற்சுவரும் இதையொட்டி ஓர் அநுமனின் சிலையும் உள்ளது.

வலதுபுறம் இராஜகிரிக் குன்றின் செங்குத்தான பகுதியில் உள்ள இவ் வியற்கைக் காட்சியை ரசித்தவாறே மீண்டும் 30 படிகள் ஏறிச் சென்றால் ஏழாவது நுழைவாயில் மண்டபத்தை அடைகிறோம்.

இங்கு வலப்புறம் திரும்புவதற்கு முன்னால் குன்றையொட்டி நீர் நிலை ஒன்று செங்கல் கட்டடத்தில் அமைந்துள்ளதைக் காணலாம். இந் நீர்நிலையின் தெற்குப்புறம் (நாம் செல்லும் பாதைக்குத் தெற்காக) 'காவலர் மேடை' கள் இரண்டு (அழிந்த நிலையில்) காணப்படுகின்றன. அவற்றின் தென்புறமுள்ள பாறையில் வீரஅநுமன் சிலை ஒன்று மேற்கு நோக்குவது போல் அழகாகச் செதுக்கப்பட்டுள்ளது. அநுமன் கோட்டைக்காவல் தெய்வம் போலும்!

ஏழாவது மண்டபத்தின் இருபுறமும் திண்ணைகள், காவலர்கள் தங்கு மிடங்கள் உள்ளன. பக்கத்திற்கு நான்கு தூண்கள் வீதம் உள்ள இந்த நுழை வாயில் சதுர வடிவில் அமைந்துள்ளது. வலதுபுறம் திண்ணைச்சுவரில் எட்டு இதழ்கள் கொண்ட மலர்வடிவம் ஒன்று செதுக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

இம்மண்டபத்தைக் கடந்து இடது புறமாகத் திரும்பிச் செங்குத்தான அமைப்பில் நாற்பத்தியொரு படிகள் ஏறிச் சென்று சிறிய சமதளப்பகுதியை அடைகிறோம். இவ்விடத்தில் இடதுபுறம் (தென்மேற்கே) வெளிமதில் ஓரம் சதுரவடிவில் படைவீரர்கள் தங்கும் இடம் இருந்தது எனக் கூறுவர்.



## காவலர் கூண்டு!

அதற்கு முன்பாகச் சற்றுத் தொலைவில் ஒரு படைவீரன் தங்கும் 'காவல் கூண்டு' அமைந்துள்ளதைக் காணலாம். இதைப் படத்தில் காண்க.

இதுபோன்ற காவலர்க் கூண்டுகள் இக் கோட்டையில் பல இடங்களில் அமைந்துள்ளன. இவை அநேகமாகப் பெரிய 'தபால் பெட்டி'யைப் போன்ற அமைப்புள்ளவையாகும். ஒருவர்மட்டும் மறைந்து நின்று, வெளியில் வருவோரைப் பார்க்கத் தக்கவாறு அமைந்துள்ளது.

சிறிய சமதளத்திலிருந்து வலது புறமாய்ச் செல்லும் படிகளில் மீண்டும் ஏறிச் சென்றால், நாற்பத்தியெட்டுப் படிகளைக் கடந்த பின் நமது இடது புறம் இயற்கையாக அமைந்த குகைச் சுனை ஒன்றைக் காணலாம்.

அச் சுனைப் பகுதியின்மீது மீண்டும் சிறிய குறுகலான பாதையில் வலது புறமாக நுழைந்து சென்றால், முப்பத்தியொரு படிகள் கடந்த பின் மீண்டும் வலப்புறம் திரும்பும் பாதை குறுக்கிடுகிறது.

இங்கிருந்து புதியபடிகள், கைப்பிடிச் சுவர்களுடன் அமைக்கப்பட்டுள்ளன.

## தொங்கும் பாலம்!

நான்கு நிலைகளில் உள்ள அப் படிகள் நாற்பத்தியேழைக் கடந்து மேலே ஏறிச் சென்றால் அதிசயிக்கத்தக்க 'தொங்கு பாலம்' எனப்படும் மரப்பாலம் தென் படுகிறது.

சுமார் 6மீட்டர் நீளமும் 2 மீட்டர் அகலமும் கொண்ட இந்தத் தொங்கும் பாலம் இதுவரை கடந்து வந்து நாம் நிற்கும் இடத்தையும் இராஜகிரியின் செங் குத்தான பகுதியையும் இணைக்கும் பாலமாகும்.

இரண்டு குன்றுகளுக்கும் இடையே இயற்கையாக அமைந்த ஆழமான பள்ளத்தைக் கடக்க இப்போதும் இப்பாலம் உபயோகத்தில் உள்ளது.



இராஜகிரி மலை உச்சிப் பகுதியை இணைக்கும் தொங்குபாலம்

அக்காலத்தில் இப் பாலம் தேவையானபோது மட்டும் இறக்கப்பட்டு மற்ற நேரங்களில் மேலே இழுக்கப்பட்டுவிடும் என்பதை உணரலாம்.

முக்கியமாக எதிரிகளின் படையெடுப்பின்போது இப் பாலம் மேலே தூக்கப்படும். இப்பாலத்தின் உதவி யின்றிச் செங்குத்தான பாறைமீது அமைந்த மேல்பகுதிக்குச் செல்ல இயலாது. ஆனால் தற்சமயம் அவ்வாறான அமைப்பு

தேவையில்லாத காரணத்தால், ஒரே நிலையில் நிரந்தரமாகப் பாலம் பொறுத்தப் பட்டுள்ளது. இதன் இருபுறமும் கம்பிகள் பொறுத்தப்பட்டு, பார்வையாளர்கள் பயமின்றிப் பற்றிச் செல்ல ஏதுவாக அமைக்கப்பட்டுள்ளது.

இதைக் கடந்து பதினாறு படிகளைத் தாண்டிச் செல்வோமேயானால், எட்டாவது நுழைவு வாயில் மண்டபப் பகுதியை அடைகிறோம். இச்சிறிய மண்டபம், அதற்கு மேலே வலது மூலையில் காவலர் கூண்டு ஒன்றைத் தாங்கி நிற்கிறது.

## களஞ்சியக் கட்டடம்

எட்டாவது மண்டபத்தைக் கடந்து சென்றால் வடபுறம் எதிரே படிகள் கொண்டு அமைந்த ஒரு நீண்டசதுரக் கட்டடம் நம் முன்னே காட்சியளிக்கிறது.

பாறை மீது தொடரும் நான்கு படிகளைக் கடந்து சென்றால், கட்டடத்தின் குறுகலான வழியைக் காண்கிறோம். இக்கட்டடத்தின் ஒருபகுதியில் சுவருடன் கூடி அமைந்த 'முப்பத்து ஐந்து படிகள் மீதேறி மேலே சென்றால், களஞ்சியக் கட்டடத்தின் கூரைப் பகுதியை அடையலாம்.

இந்தப் பகுதியைச் சுற்றி நடைபாதை போன்றுள்ள அமைப்பு நம்மை வியப்பில் ஆழ்த்தும். மேற்கூரை வில்போன்று வளைந்த வடிவில் (Voulted roof) அமைக்கப்பட்டுள்ளது. இக்கூரையின் நடுப்பகுதியில் மூன்றடி அகலமும் நான்கடி உயரமும் உள்ள திறப்பு ஒன்று உள்ளது.

தானியங்களைப் படிகள் வழியாக மேலே கொண்டுசென்று இத்திறப்பின் வழியாகக் களஞ்சியத்தின் உள்ளே கொட்டிச் சேமித்து வைப்பார்கள்.

இது 29 மீட்டர் அகலமும், 39 மீட்டர் நீளமும், 20 மீட்டர் உயரமும் கொண்டு, ஒரே சமயத்தில் சுமார் 8 முதல் 10 ஆயிரம் மூட்டைத் தானியங்களைக் கொள்ளும் வகையில் அமைந்துள்ள களஞ்சியமாகும்.

கீழே உள்ள வாயில் வழியாகத் தானியங்களைத் தேவைப்படும்போது வெளியே எடுத்துச் செல்வர். தற்சமயம் தானியங்கள் ஏதுமின்றி உள்ள இக்களஞ் சியத்தின் உட்பகுதியைக் காணும்பொழுது இதன் அமைப்பைப் பார்த்து பெருவியப்பில் ஆழ்கிறோம்.

அதேசமயம், ஒருகாலத்தில் எத்தனை எத்தனையோ அரசப் பிரதானி யருக்கு இக்களஞ்சியமும் இதே போன்றமைந்த கோட்டையிலுள்ள மற்ற களஞ் சியங்களும் உணவு சேமித்து வைத்திருந்தன! பல்லாயிரம் படைவீரர் வயிற்றுப் பசிக்குஉணவு படைத்துள்ளன என்று எண்ணும்போது மேலும் 'வியந்து மலைத்து நிற்கிறோம்.

இக் களஞ்சியத்தை அடுத்து, செங்கற் கட்டடம் ஒன்று, அழகிய வேலைப்பாடுகளின் நேர்த்தியுடன் காட்சியளிக்கிறது. பாதையில் வலப்புறம் அமைந்த இக்கட்டடம் பதினாறு அடி நீளமும் பத்தடி அகலமும் கொண்டு ஓர் அறைபோலக் காணப்படுகிறது.

**ஒன்பதாம் வாயில்**

இதையடுத்துச் சில படிகள் ஏறிச் சென்றால், ஒன்பதாம் நுழைவு வாயில் மண்டபத்தை அடைகிறோம். இது நீளமான மூன்று அமைப்புகளில் படிகளைக் கொண்டது. இதன் இருபுறமும் திண்ணைகள் அமைந்துள்ளன.

இதன் மேற்புறம், சிதைந்த நிலையில் சில பகுதிகளை மட்டும் கொண்ட கட்டடம் ஒன்று அமைந்துள்ளதைக் காணலாம். இவ்வாயிலுக்கு வலப்புறம் இச் சிதைந்த கட்டடத்தின் எதிரே வளைவான மதிற்சுவர் தனித்தன்மையுடன் காணப்படுகிறது.



இவ்வாயிலிலிருந்து இடதுபுறம் திரும்பிப் பதின்மூன்று படிகளைக்கடந்து சென்றால், சம தரையை அடைகிறோம். கோட்டைச்சுவரில் அமைக்கப்பட்டுள்ள துவாரங்கள், கவனிக்கத் தக்கவை. அவை, காவலர் வெளியில் நடப்பவற்றைக் கண்காணிப்பதற்காக அமைக்கப்பட்டவையாகும். அக் காலத்தில் மதிற்சுவர் நெடுகிலும் இத்தகைய மறைவிட அமைப்பு இருந்திருக்கும்; பின்னாளில் சிதைந்து இருக்கலாம். மறைவிலிருந்து அம்பு,வேல்கள் எறியக்கல்துளை உதவும்.

சமதரையிலிருந்து வலப்புறம் திரும்பிப் படிகளில் ஏறிச் சுமார் நூறு அடி தூரம் சென்றால், அங்குப் பாதை இரண்டாகப் பிரிந்து செல்லும் ஓர் இடத்தை அடைகிறோம்.

சற்றுத் தொலைவில் இடதுபுறம் நீண்ட சதுரக்கல் மண்டபம் ஒன்று உள்ளது.

வலதுபுறம் படிகளில் ஏறும் தொடக்கத்தில் இருபுறமும் சுனை நீர் நிலைகள் உள்ளன. இச் சுனையின் ஓரமாக உள்ள படிகளில் சென்றால் அங்குள்ள ஒரு களஞ்சியத்தைத் அடையலாம்.

**மண்டபம்**

கிழக்கு நோக்கிச் செல்லும் படிகளில் ஏறிச் சென்றால், பெரியதொரு மண்டபத்தை அடையலாம். இது அகலவாட்டில் ஐந்து தூண்களும் நீளத்தில் ஆறு தூண்களுமாக அமைத்துக் கட்டப்பட்ட மண்டபம்.

இம்மண்டபத்திற்கு வடக்காகவும் சுனை நீர்நிலைக்குக் கிழக்காகவும் வளைவுகள் (Arches) அமைந்த செங்கல் கட்டடம் ஒன்று அமைந்துள்ளது இரண்டுபுறம் சன்னல்களும் நடுவில் நுழைவு வாயிலும் அமைத்துக் கட்டப் பட்டுள்ள இக்கட்டடம் படைத் தலைவர்கள் தங்கும் இடமாக இருந்திருக்கலாம். இச் சுவரின் அகலம் இரண்டே கால் அடியும், உயரம் பத்தடியும் உள்ளன.

அருகில் ஒருகாலத்தில் நாணயக் கிடங்கு எனப்படும் 'கஜானா' எனும் கட்டடம் இடிந்த நிலையில் காணப்படுகிறது.

**களஞ்சியமும் மண்டபமும்!**

இதனையடுத்து, கிழக்கில், மற்றுமொரு பெரிய களஞ்சியக் கட்டடம் உள்ளது. இதன் மேற்கூரை தற்சமயம் காணப்படவில்லை. இதன் நடுவில் ஒரு நுழைவு வாயிலும் கோடியில் மேலே செல்ல நாற்பத்திரண்டு படிகளும் அமைந் துள்ளன. கூரைப்பகுதியை இழந்து காணப்படும் இக் கட்டடம் முன்பு நாம் கண்ட களஞ்சியத்தைப் போலவே அமைந்துள்ளது.

பிறகு வடக்கு நோக்கிச் சிறிது தூரம் நடந்தால் தூண் போன்ற செங்கல் கட்டடப் பகுதி இடிந்து, மறைந்த கட்டடப் பகுதியின் நினைவுச் சின்னமாக நிற்கிறது.

மேலும் வடக்கே சென்றால், நம் எதிரே மற்றுமொரு களஞ்சியக் கட்டடம் தோற்றமளிக்கிறது. முன்பு கூறிய களஞ்சியங்களைப் போலவே இதற்கு நடுவே ஒரு நுழைவு வாயிலும் மேலே ஏறிச் செல்வதற்கேற்பப் படிகளும் அமைந்துள்ளன.

மேல் மாடியுடைய சபா மண்டபம் (Dharbar Hall) எனும் மிகப் பெரிய கட்டடம் உள்ளது. இது மிகப் பெரிதாக இருந்தாலும் இதனுள்ளே நுழைய ஒரேயொரு வாயிலும் பக்கவாட்டில் இரண்டு ஜன்னல்களும் உள்ளன. இதனை ஆலோசனை மண்டபம் என்றும் கொள்ளலாம்.

**அரங்கனின் அழகிய கோயில்**

இதன் வடக்கே, அரங்கநாதரின் திருக்கோயில் ஒன்று அழகாக அமைந் துள்ளதைக் காணலாம். எண்ணூறடி உயரத்தில் மலை முகட்டில் எழிலாக அமைக்கப்பட்டுள்ள இக் கோயிலைப் பார்க்கும்போது அக்கால மன்னரது பக்தி மிக்க கலையுள்ளம் புலனாகிறது!

இச் செஞ்சிக்கோட்டை, பிரெஞ்சுக்காரர்கள் வசம் இருந்த காலத்தில் இதிலிருந்த வெண்கல மணியைப் புதுச்சேரிக்கு எடுத்துச் சென்றுவிட்டதாகக்கூறப் படுகிறது.

இம் மணிக்கூண்டின் தெற்கே ஒரு செங்கல் கட்டடம் வளைவுகளுடன் கூடியதாய் அமைந்துள்ளது.

**அழகிய அமைப்பு**

அரங்கன் கோயிலின் எதிரில் கீழே இறங்கும் படி வழியே சென்றால், நான்கு புறமும் நடைபாதை அமைந்திருப்பதைக் காணலாம். நடுவிலே ஒரு நுழைவு வழியுடன் கூடிய சதுரவடிவமுள்ள அறை ஒன்று அமைந்துள்ளது. இது அரிய இயற்கைக் காட்சியாகும்.

தரைத் தளத்திற்கு மேலே முதல்நிலை, நடுவில் அறையாக உள்ளது. இதன் உச்சியில் வட்ட வடிவக் கூண்டு மேலே மூடப்பட்ட நிலையில் அமைந் துள்ளது. இதன் மேற்கே நுழைவு வாயிலும் கிழக்கே சிறு இரும்புக்கதவும் அமைந் துள்ளன. வடக்கிலும் தெற்கிலும் ஒன்றரை அடி அகலத்தில் சதுரமான திறப்புகள் உள்ளன.

முதல் நிலையிலிருந்து மேலே கூண்டுக்கு ஏறிச் செல்லக் குறுகியவழியும் அதில் படிகளும் உள்ளன. இந்த நிலை அரங்கநாதர்க் கோயிலின் மண்டப தளத் திற்குச் சமமாக அமைந்துள்ளது.

மாடிக் கூண்டிற்குரிய மதிற்சுவருக்கும் தரைக் கட்டடத்தின் மேல் கைப்பிடிச் சுவருக்கும் இடையில் உள்ள தூரம் சுமார் எட்டடி அகலம் ஆகும். அக் காலத்தில் இங்கு வளைவுடன் கூடிய அழகிய கட்டடம் ஒன்று இருந்த தற்குச் சான்றாக, அதன் இடிந்த பகுதிகள் மட்டும் இப்பொழுது உள்ளன.

கட்டடத்தின் கிழக்கு, தெற்குப் பகுதிகளில் பார்வையாளர்கள்கீழே விழுந்து விடாத வண்ணம் இந்தியத் தொல்பொருள் துறையினர் இரும்புக் குழாய்த் தடுப்புகள் அமைத்துப் பாதுகாப்புச் செய்துள்ளனர்.

**பீரங்கி!**

மணிக்கூண்டுக்குத் தெற்கில் தூண்கள் கொண்ட மண்டபம் ஒன்று உள்ளது. இதில் பன்னிரண்டடி நீளமுள்ள பீரங்கி ஒன்று கிழக்கு நோக்கி வைக்கப் பட்டுள்ளது. இதன் நுனிப் பகுதியில் நெ. 930 என்ற இலக்கமும், நடுவில் நெ.616 என்ற இலக்கமும், அடிப்பகுதியில் நெ. 7560 என்ற இலக்கமும் 'சோட்டேஜ்' என்ற தமிழ் எழுத்துக்களும் உள்ளன. இன்னும் உள்ள சில எழுத்துக்கள் சரியாகத் தெரிய வில்லை. இப்பீரங்கி பிரெஞ்சுக்காரர்களால் இங்குப் பொருத்தப்பட்டது எனத் தெரிகிறது.





இராஜகிரி மலை மீது உள்ள முதல் வாயில்

மலையின் இயற்கைக் காட்சிகளுடன் செயற்கையான கட்டட, கோட்டை அமைப்புகளை யெல்லாம் பார்த்த நிறைவு நம்மை ஆட்கொண்டு விடுகிறது.

மலை உச்சியிலிருந்து நாற்புறமும் சுற்றிலும் பாருங்கள்! காடுகள்,
மலைகள்,வயல்கள், ஏரிகள், கிழக்கில் செஞ்சித் திருநகர்...!

இராஜகிரிக் கோட்டையின், ஒவ்வொரு பகுதியையும் கண்டு வியந்து மகிழ்ந்த நாம் கீழே இறங்கி வர மனமின்றித் திரும்புகிறோம்.

இக்கோட்டைக் கொத்தளங்களை அமைக்க நம் முன்னோர்கள் பயன் படுத்திய அறிவுத்திறன், பொறியியல் திறன், உழைப்பு இவை யாவும் நாம் கற்பனை செய்து பார்க்க முடியாத அளவுக்கு உயர்ந்து, சிறப்பாக உள்ளன என்பதை நம் எண்ணத்தில் அசைபோட்டவாறு கீழே இறங்கி வருகிறோம்.

உடலுக்குகந்த நல்ல காற்று கிடைக்கிறது! இந்த அரிய அநுபவத்தை நாம் அடையுமாறு, இதனை அமைத்த முன்னோர்க்கு மரியாதை செலுத்து வதோடு மனம் நிறைந்த மகிழ்வான நன்றியையும் செலுத்துகிறோம்!



## சுற்றுலாப் பயணிகளுக்கு!
## செஞ்சியும் சுற்றுப்புற நகரங்களும்





## கிருஷ்ணகிரி மலை வரைபடம்




இராணிக் கோட்டை எனப்படும் இம்மலையிலுள்ள சுற்று மதில்களும், வழிப் பாதையும், கட்டடங்கள் அமைந்துள்ள இடங்களும் குறித்துக் காட்டி விளக்கும் வரைபடம்.

இராணிக் கோட்டை எனும் கிருஷ்ணகிரி மலை உச்சியில் உள்ள
கட்டடங்களின் கண்கவரும் காட்சி!



இராஜகிரி மலை அடிவாரத்தில்— உள்கோட்டையில் புதிதாக அகழ்வுசெய்து கண்டு பிடித்துள்ள 'இராஜா மகால்' எனக் கருதப்பெறும் கட்டடப் பகுதிக்குத் தெற்கில் அமர்ந்து வரையப் பெற்ற தூரத்துக் காட்சி.



# கிருஷ்ணகிரி கோட்டை

திருவண்ணாமலைச் சாலையின் வடக்குப்புறம் கிருஷ்ணகிரி மலை அடிவாரத்தை நோக்கிப் பாதை ஒன்று செல்கிறது. அப்பாதை மலையின் வெளி அகழியை அடுத்துள்ள மதிற்சுவரின் உட்பகுதியாகும். இப்பாதையும் மதிற்சுவரும் சேர்ந்து சுமார் 50 அடி அகலம் உள்ளதாகும் என்பது குறிப்பிடத் தக்கது. இதன் நடுவே கீழ்ப்புறத்தில் இடைவெளிவிட்டுக் குறுக்கே கவனியுங்கள். மேற்குநோக்கிய வாறு கல்தூண்களைக் கொண்ட மண்டபங்கள் இரண்டு அமைந்துள்ளதைக் காணலாம்.

கோட்டைச் சுவரில் அமைந்துள்ள மண்டபம் காவலர்கள் தங்கும் வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

கோட்டைக்கு உள்ளிருந்து மழைநீர் வெளியேறி (கிழக்கே) அகழியை அடைய ஏதுவாக, இக்கோட்டைச் சுவரின் குறுக்காகக் கால்வாய் அமைக்கப் பட்டுள்ளது.

இதுபோன்ற மண்டபம் மேற்கிலுள்ள அகழியை ஒட்டியமைந்த கோட்டைச் சுவர் நடைபாதையின் அடியிலும் ஒன்று அமைந்திருக்கிறது.



மலையடிவாரத்திலும் அகழியை ஒட்டி ஒரு மண்டபம் அமைந்துள்ளது. இம் மண்டபத்தில் இப்பொழுது உள்ள அலுவலகத்தில் அனுமதிச் சீட்டுப் பெற்று மேலே செல்ல வேண்டும். இம் மண்டபத்தின் பின்புறம், அகழியின் கிழக்கு மூலையில் மலையடிவாரத்தில் செஞ்சியின் பிரசித்திப் பெற்ற ஏழு கன்னியர்களின் கோயில்களுள் ஒன்றான 'பூவாத்தா அம்மன்' கோயில் ஒன்று உள்ளது.

## இரு வழிகள்!

சுமார் 500 அடி உயரமுள்ள இம்மலைக்குச் செல்ல இரண்டு பாதைகள் அமைந்துள்ளன. இதில் ஒன்று, கிழக்கில் வெளிமதிற் சுவரையொட்டி உட்புறமாகக் கருங்கற்களாலான அகன்ற படிகளுடன் அமைந்துள்ளது. இத்தகைய படிகள் கோட்டை வெளிச்சுவரை ஒட்டி மூன்று மலைகளையும் இணைத்தவாறு அமைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இப் பாதை முக்கியமாகக் குதிரை வீரர்களும் மற்றும் காவலரும் மட்டுமே செல்ல அமைக்கப்பெற்றதாகும்.

இம் மலைமீது மற்றவர்கள் செல்ல மலையின் நடுவேயமைந்த படிகளே உபயோகத்தில் உள்ளன. ஆங்காங்கே இளைப்பாற வசதியாகவும், காவலர்கள் தங்கும் அறைகளுடனும் அமைக்கப்பட்ட மண்டபங்களுள்ளன. சீரான படிக்கட்டுகளைக் கொண்ட இப்பாதையின் மூலமாகவே நாம் மலையின் உச்சியை அடைய வேண்டும். இப்பாதை, கற்களாலான 557 படிகளைக் கொண்டுள்ளது. பல இடங்களில் படிகளின்றிக் கற்களின்மீதும் பாறைகளின் மீதும் நடந்து செல்லவேண்டும்.

## முதல் மண்டபம்

கிருஷ்ணகிரி ராணிக்கோட்டையில் சற்றுத் தூரம் ஏறியதும் முதல் மண்டபத்தை அடைகிறோம். இம்மண்டபத்திலுள்ள வலப்புறத் தூணில் பிள்ளையார்சிலை ஒன்று காணலாம். இதை அடுத்து வலதுபுறம் கோட்டை மதிற்சுவரை ஒட்டியவாறு அமைந்துள்ள வட்ட வடிவமுடைய கட்டடம் உள்ளது. இது பாதுகாப்புக்குரிய 'காவல் மேடை' ஆகும். இது போன்ற பல மேடைகளை இராஜகிரி உள்கோட்டையிலும் உள்ளதை முன்னரே கண்டோம்.



இரவுக்கால வெளிச்சத்திற்கு அக்காலத்தில் பெரிய அகல் விளக்குகளும் பந்தங்களும் பயன்பட்டிருக்கும்; அல்லவா! அதற்குத் தேவைப்படும் எண்ணெய், இயற்கையான பாறையிலேயே வைத்திருக்க இங்கு வழி கண்டுள்ளனர். அதையும் பின்னர் காணலாம். கிழக்கே காவல் கூண்டு ஒன்றும் உள்ளது.

இரண்டாம் மண்டபத்தில் இருபுறங்களிலும் திண்ணைகள் அமைந்துள்ளன. வலது புறம் கிழக்கில் உள்ள மேடை இரு அறைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவை காவலர் தங்குவதற்கு அமைக்கப்பட்டனவாகும்.

## மூன்றாம் மண்டபம்

இதன் முன்புறமும் நடுவிலும் வாயிற்படிகள் உள்ளன. மரக்கதவும் அமைந்துள்ளது. மண்டபத் தூணின் இடதுபுறம் அநுமனின் உருவம் பொறிக்கப் பட்டுள்ளது.

அங்கிருந்து இடதுபுறம் சென்றால் இரண்டு பெரிய களஞ்சியங்களைக் காணலாம் முதல் களஞ்சியத்தின் அருகில் காவல்கூண்டு ஒன்று உள்ளது.

## எண்ணெய்க் கிணறு

அவற்றுக்கு இடையில் 10 மீட்டர் நீளமும், 5 மீட்டர் அகலமும், 3 மீட்டர் உயரமும் உள்ள, கட்டடம் ஒன்று தெரிகிறது பாறைக்குடைவின்மீது கல்கட்டடம் அமைத்துள்ளனர். இது எண்ணெய்க்கிணறு என்று அழைக்கப்படுகிறது. இரண்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ள இதில், ஒருபாதி அறையில் எண்ணெயும் மறுபாதி நெய்யும் சேமித்து வைத்திருந்ததாகக் கூறுவர். இவ்விரு அறைகளின் மேற்புறமும் சதுர வடிவில் சிறிய வாய்ப்புறம் தனித்தனியாக அமைக்கப்பட்டுள்ளன.

இதன் மூலமாகச் சூரியவெளிச்சம் உள்ளே செல்லும். அதனால் எண்ணெய், நெய் கெடாமல் இருக்கும்.

பின்பு அங்கிருந்து செல்லும் படிகள் வழியாக மேலே சென்றால், அழகிய விசாலமான ஆலயத்தைக் கண்டு மகிழ்கிறோம்.





கிருஷ்ணகிரி எனும் இராணிக்கோட்டையில் நடைபாதைக்கு மேற்கில் களஞ்சியத்திற்குக் கிழக்கில் அமைந்துளள எண்ணெய்க்கிணறு, நெய்க்கிணறு கட்டடம். இரு தனியறைகளைக் கொண்ட ஒரு முழுமையான தொட்டி போன்றுள்ளதைக் காணலாம், அதன் மேல் ஏற அமைந்துள்ள படிகளும் காணப்படுகின்றன.



இரவில் பந்தங்கள், விளக்குகள் ஏற்றுவதற்குரிய
எண்ணெயும் நெய்யும் சேமித்து வைத்த இடங்கள்.



எண்ணெய் வைத்திருந்த கட்டடம். (வெட்டுத்தோற்றம்)



பாறை மீதுள்ள எண்ணெய் இருந்த கட்டடத்தின் அமைப்பு
வரைபட விளக்கம்.

## அழகூட்டும் ஐந்தாவது மண்டபம்!

வலதுபுறம் கிழக்காக நீண்ட மண்டபம் ஒன்று உள்ளது. நான்காவது மண்டபத்தைக் கடந்து ஐந்தாவது மண்டபத்தை அடைகிறோம். இங்கிருந்தும் படிகள் மூலமாக அரங்கநாதர் ஆலயத்தை அடையலாம்.

இம் மண்டபம் இருபுறங்களில் திண்ணைகளுடன் காணப்படுகிறது மண்டபத்தின் அடிப்பாகத்திலும் மேல்புறத்திலும் தோரண அலங்காரம் போன்ற சிற்பங்களுடன் காணப்படும் கட்டடக்கலைச் சிறப்பு நம்மைக் கவர்ந்து களிப்பூட்டு கிறது. இதன் நடுவில் வாயிலின் இருபுறத்து இருநிலைகளிலும் நாயக்க மன்னரின் திருஉருவங்கள் கரங்கூப்பிய நிலையில் செதுக்கப்பட்டுள்ளன. இவ்விரண்டு சிலை களும் தலையில் நீண்டுயர்ந்தகிரீடமும், மார்பினில் பூணூலுடன் இரட்டைவட மணி மாலைகளும், அதன் அடியிலே பதக்கங்களும் கொண்டு, கச்சங் கட்டிய வேட்டி யுடன் அழகாக உருவகப் படுத்தப்பட்டுள்ளன.

மேலே பாலகிருஷ்ணனின் உருவமும், அதே போன்று வலதுபுறம் அமைந்த மன்னரின் சிலைக்கு மேல் கிருஷ்ணனின் திருவுருவமும் அமைந்துள்ளன.

வாயில் நிலையின் இருபுறமும் வளைந்த பூங்கொடி போன்ற தோரண வேலைப்பாடுகள் அமைந்துள்ளன உள்ளே இரு பக்கமும் திண்ணைகள் உள்ளன. அதற்கு அப்பால் பக்கத்திற்கு ஆறு தூண்கள் வீதம் 12 தூண்களைக்கொண்டு நீண்ட சதுரமான மண்டபம் ஒன்று அமைந்துள்ளது. அந்த நீண்ட அரங்கின் முடிவில் மேடை ஒன்று அழகுறக் காணப்படுகிறது.

## அழிந்த ஓவியம்!

இங்குள்ள தூண்களும் அற்புதமான புடைப்புச் சிற்பங்களைத் தாங்கி நிற்கின்றன. மேடையின் முன்புறம் கீழே வரிசையாக யானைகளும் நடுவில் கஜலட்சுமி உருவமும் செதுக்கப்பட்டுள்ளன.

மண்டபத்தின் மேற்கில் மேலே செல்லும் படிகள் உள்ளன. 13 படிகளைக் கடந்து சென்றால் மேற்குப்புறம் நோக்கியவாறு அமைந்த வாயில் வழியாக வெளியே செல்லலாம். அங்கு 'தர்பார் மண்டபம்' அமைந்துள்ளது. மேற்கு வெளிச்சுவரில் அரவணை மீது பள்ளிகொண்ட அரவிந்தனின் (பாம்பணையில்) ஓவியம் எழிலுறக் காட்சியளிக்கிறது. இவ்வோவியத்தில் செவ்வண்ணமும் கரிய வண்ணமும் மட்டும் இன்றும் அழியாமல் காணப்படுகின்றன. மற்ற வண்ணப் பூச்சுகள் காலத்தால் அழிக்கப்பட்டுவிட்டன. பள்ளி கொண்ட பரமனின் பாதங் களின் அருகில், மது கைடபர் என்ற இருஅசுரர் உருவங்களும், நாபிக்கமலத்தில் நான்முகன் உருவமும் காணப்படுகின்றன. பாதங்களின் அருகே மகாலட்சுமியின் திருவுருவம் அழிந்த நிலையில் காணப்படுகிறது.


அழகிய



தர்பார்
மண்டபம்



தர்பார் மண்டபம் (வெட்டுத் தோற்றம்)

கிருஷ்ணகிரியில் அமைந்துள்ள அரங்கனின் திருக்கோயிலும் அழகிய மண்டபமும்



## கிருஷ்ணகிரி மலைமீது உள்ள அரங்கன் ஆலயத்தில் உள்ள ஒரு கல்தூண்



வாயிலைக் கடந்து மேற்கில் அறுபடிகள் ஏறி சென்றதும் சுற்று மண்டத்தின் நடுவே அரங்கனின் திருக்கோயில் அமைந்துள்ளதைக் காண்கிறோம். சுற்றுப்புற வெளிமண்டபத்தில் ஒரு காலத்தில் மாடங்களும் கூடங்களும் எழிலுற அமைந்திருந்து பின்பு அழிந்திருப்பதைக் காணமுடிகிறது.

---

வளைந்து வளைந்து செல்லும் வழியும் கோட்டை மதிற்சுவர்களும்
அடுக்கியது போல் காணும் அழகிய அமைப்பு → அடுத்த பக்கம் (131)





(ஐந்தாவது மண்டபம்) வசந்த மண்டபம்



வெளிவாயிலின் வலதுபுற மேடை அமைப்பு.

கோயிலுக்கு வடமேற்கில் உற்சவ மண்டபம் அழகிய சிற்பவேலைப் பாடுகளுடன் அமைந்துள்ளது. இம்மண்டபம் பக்கத்திற்குநான்கு வீதம் மொத்தம் சிற்பமுள்ள பனிரெண்டு தூண்களைக் கொண்டு அமைந்துள்ளது. இதன் நடுவே சமசதுர பீடத்துடனும் நான்கு சிற்பத் தூண்களுடனும் அழகிய மேடை ஒன்றும் காணப்படுகின்றது. இம் மண்டபத்திற்கு அருகே மற்றொரு சிறிய மண்டபமும் அதற்குப் பின்புறம் தனித்தனியே இரண்டு மண்டபங்களும் உள்ளன.

தர்பார் மண்டபத்திற்குப் பின்புறம் செங்கற்களால் கட்டப்பட்ட, உள்ளே இறங்கும் படிகளுடன் சதுரவடிவமான கிணறு ஒன்று உள்ளது. இதன் வலது புறம் கிழக்கில் தெரியும் அழகிய கோயில், கிருஷ்ணன் கோயில் ஆகும்.

இதன் விமானம் செங்கல், சுதையினால் ஆனது.

வெளியே நீண்டசதுர அமைப்பில் மண்டபம் ஒன்று உள்ளது. கீழே உள்ளதுபோல முதல் நிலையிலும் திருச்சுற்று மண்டபம் உள்ளது.

**தர்பார் மண்டபம்**

அதையடுத்துக் கிழக்கில் இரண்டு மண்டபங்களுக்கும் இடையே டூம் (Dome) எனப்படும், மேற்கூண்டு எழிலுடன் காணப்படுகிறது. இது செங்கல் சுண்ணாம்புக் கலவையால் ஆனது. இதன் இரண்டாவது நிலைக்குப் படியேறிச் சென்று மேல் தளத்தை அடையலாம். அங்கிருந்து 6 படிகள் ஏறிச் சென்றால் மூன்றாம் நிலையான தர்பார் மண்டபம் காணப்படும்.

இது அழகிய வளைவுகளுடன் கூடிய கூட்டு முகப்புகள் அமைக்கப்பட்டு எழிலோடு பொலிவுற்று விளங்கு கட்டடமாகும். சுற்று நடைபாதையும் கொண்டு நடுவே அமைந்த மேடையும காண்பதற்குரிய கலையம்சங்களாகும்.

இந்த மேடையின் நடு உச்சி முகட்டில் அழகிய அரைக்கோணமுடிவில் சிறப்பான வளைவுகளுடன் அமைந்த கட்ட டப்பகுதி பளிங்குப் பூச்சுகளுடன் கூடி மஞ்சள் நிறத்தோடு கண்ணைக் கவரும் வண்ணம் காட்சியளிப்பதால், இம் மண்டபத்திற்கு 'மஞ்சள் மகால்' என்ற வழக்கில் உள்ள பெயர் மிகவும் பொருத்த மானதே.

இதன் கீழே நான்கு தூண்களைக்கொண்டு அழகிய முறையில் உள்ள ஊஞ்சல்மண்டபம் ஒன்றைக் காணலாம்.

இம்மலையுச்சியில் இந்த இடத்தில் நின்று நாம் சுற்றிலும் பார்ப்போமானால் அடிவாரத்தில் தெரியும் செஞ்சி நகரமும், அதன் அருகில்உள்ள ஊர்களும், எதிரே கண்களுக்கு எட்டிய தூரம் வரை மலைகளும், கோட்டைகளும், காடுகள் போன்ற இயற்கைக் காட்சிகளும் நம் கண்ணுக்கு விருந்து படைப்பவையாக உள்ளன.



கிருஷ்ணன் கோயிலுக்கு முன்னால், வடகிழக்கு மூலையில் கோட்டை மதில்சுவரை ஒட்டிய வழியும், உயர்ந்த மேடையும், காவலர் நிற்கும் கூண்டும்அமைந்துள்ள எடுப்பான காட்சி!

கிருஷ்ணகிரி மலையில் கோட்டைச்சுவரையொட்டி ஆங்காங்கே படை வீரர்கள் நிற்கும் காவல் கூண்டுகள் அமைந்துள்ளன. அதிசயிக்கத்தக்க வகையில் இவை தற்கால அஞ்சல் பெட்டியைப் போன்ற வடிவில் அமைந்துள்ளதைக் காணலாம்.

கிருஷ்ணன் கோயிலுக்கு அருகே சுவையான நீர் நிலை ஒன்றும் அமைந்துள்ளது.

கோயிலின் முன்புறம் பலிபீடம், கருடன் சன்னிதி, மற்றுமொரு சிறிய சன்னிதி முதலியவற்றைக் காணக்காண இவற்றையமைத்த நாயக்க மன்னர்களின் கலையார்வத்தையும், அவர்களது கோயிற்பணிகளையும் போற்றிப் புகழாமல் இருக்க முடியாது.

இம் மலையைச் சுற்றிப் பார்த்து மகிழ்ந்த பின்பும் கீழே இறங்கி வர மனமின்றி நிற்கிறோம். அதற்குக் காரணம், இங்கே அமைந்த, இயற்கையோடு இணைந்த கலைமிகும் காட்சிகள் என்றால் மிகையாகாது. மேலும், உடலையும் உள்ளத்தையும் ஒருங்கே தடவிக் கொடுக்கும் குளிர்ந்த காற்று தரும் இன்பம் குறிப்பிடத்தக்கதாகும்.





கண்கவரும் கலைவனப்பு மிக்க காட்சிகள் (கிருஷ்ணகிரி வசந்த மண்டபம்)



கிருஷ்ணகிரி மலையிலிருந்து சக்கிலி மலைக்குச்செல்லும்
கோட்டை மதிற்சுவரின் நீண்ட தோற்றம்



கிருஷ்ணகிரி மலையிலுள்ள உணவுத் தானியக் கிடங்கு

மலைஏறும் படிகளும் கட்டடங்களும் கிருஷ்ணகிரி மலையில் ஒரு காட்சி





அழகுடன் காட்சி தரும் தர்பார் மண்டபம்



அரங்கன் கோயில்

கொலுமண்டப நுழைவாயிலில்

வணங்கிய நிலையில்

தோற்றம் தரும் நாயக்கமன்னர் திருவுருவம்

அரங்கன் திருக்கோயிலின் அழகிய தோற்றம்





அரங்கன் ஆலய மண்டபமும் திருச்சுற்றும்



கிருஷ்ணகிரி – கிருஷ்ணன் திருக்கோயில் தர்பார் மண்டபத்தின் கிழக்கிலிருந்து காணும் தோற்றம்



போர்க்களத்தில் தேசிங்குமன்னன் உயிர்பிரிந்த இடம்
சிதைந்து சீரழிந்து காணப்படுகிறது. (ஊர்: கடலி)



தேசிங்கின் நண்பன் மகமத்கான் சமாதி
முன்புறம் சிதைந்துள்ள செங்கற்கட்டடம்
அவனது குதிரை நீலவேணியின் சமாதி (ஊர்: கடலி)



தேசிங்கு போரிட்டு மாண்ட பகுதியில் (கடவி)

காணப்படும் உருதுமொழிக் கல்வெட்டு



கோட்டை அலுவலகத்திற்கு அருகிலுள்ள
சிவன் கோயிலின் முன்புள்ள அம்மன் கோயில்

# சந்திரகிரி
# அல்லது
# சக்கிலி துர்க்கம்



இராஜகிரி, கிருஷ்ணகிரி மற்றும் சந்திரகிரிஎன்ற மூன்று மலைகளும், மதிற் சுவராலும் படிக்கட்டுகளாலும் இணைக் கப்பட்ட இச் செஞ்சிக் கோட்டையின் தெற்கே உள்ள மலைப்பகுதி சந்திரகிரி அல்லது 'சக்கிலி துர்க்கம்' என்று அழைக் கப்படுகிறது.

சங்கரி துர்க்கம் என்றும் கூறுவர்.
(துர்க்கம், துருகம் — மலை.)

இம் மலைத்தொடர் கிழக்கு மேற் காக நீண்டு வியாபித்திருக்கிறது. இதன் உச்சியில் சிறு சிறு மண்டபங்களும் கோட்டைச் சுவரும் தவிர முக்கியமான கட்டடங்கள் ஏதும் இல்லை.



இம் மலைமீது அக்காலத்தில் தோல் தொழிற்சாலை ஒன்று இருந்த தாகவும், அப்பணியைச் செய்யும் சக்கிலி என்ற இனத்தவரின் பெயரில் இம் மலை அழைக்கப்படுவதாகவும் ஒருசாரார் கூறுவர்.

கிழக்கு அலங்கம், தெற்கு அலங்கம் ஆகிய பகுதிகளிலிருந்து இம் மலை மீது ஏறப் படிகள் உண்டு. ஆயினும், அவை தற்சமயம் ஆங்காங்கே இடிந்து விழுந்திருப்பதால் மலைமீது ஏறிச் செல்வது கடினம். கிழக்கில் ஏறிச் செல்லலாம்.

இம்மலையின் மீது நான்கு சிறிய மண்டபங்கள் உள்ளன. இங்கிருந்ததாகக் கூறப்படும் தோல் தொழிற்சாலையில் படைவீரர்களுக்கு, படைத்தலைவர்களுக்கு வேண்டிய தோல்பட்டை, செருப்பு மற்றும் குதிரைச்சேணங்கள் தயாரிக்கப்பட்டன வாம். இவை தவிர, தோல் நாணயங்களும் செய்யப்பட்டு வந்ததாகக் கூறுவர். ஆயினும் இக்கூற்றுகளுக்குப் போதுமான ஆதாரங்கள் ஏதும் இல்லை.

கிழக்கிலிருந்து மலைமீது ஏறி மேலே செல்கிறோம். மலையின் கிழக்கு முகப்பில் உச்சியில் மண்டபம் உள்ளது. அதன் பக்கவாட்டில் குதிரைவீரர் செல்ல அமைந்த படிகளோடு கூடிய மதிலுடன் இணைந்த பாதை வளைந்து வளைந்து, பாறைகளை அணைத்தவாறு நீண்டு செல்வதாக அமைத்திருக்கின்றனர். சிறிது தொலைவு மேற்கு நோக்கிச் சென்றதும் 7 தூண்கள் வைத்த நீளமான மண்டபம் கட்டப்பெற்றுள்ளது. அகலத்தில் 3 தூண்கள் உள்ளன.

அதையடுத்து மேலும் சிறிது தொலைவு நடந்தால் ஒரு கோயில் காணப் படுகிறது. அருகில் சுனை ஒன்றும் உள்ளது. பிற இடங்களில் உள்ளது போன்றே இச்சுனையிலும் வற்றாமல் என்றும் நீர் நிறைந்திருக்குமாம். ஆடு, மாடு மேய்ப் போர் சிலர் தாகம் தீர்த்துக் களைப்பாறிக்கொள்ள இச் சுனைநீர் பயன்படுகிறது.

மற்றொரு கட்டடம் பெரிதாயுள்ளது. மேற்கூரை அறவே இல்லை. முற்றும் இடிந்துள்ளது. சுற்றுச் சுவர்கள்மட்டும் காணப்படுகின்றன.

இம்மலையின் தென்மேற்குச் சரிவில், குன்றின்மேல் அமைந்த வெள்ளை மண்டபம் ஒன்று உள்ளது. அந்நிய நாட்டு அரசர்களோ அல்லது தளபதிகளோ கைது செய்யப்பட்டுக் கோட்டைக்குள் கொண்டு வரப்பட்டால், இம்மண்டபத்தில் கைதியாக வைத்திருப்பார்களாம். ஆகவே இதைக் 'கைதியின் மண்டபம்' என்று அழைப்பர். தற்போது இம்மண்டபம் உள்ள இடத்திற்குச் செல்ல சரியான வழிகள் ஏதும் இல்லை.



# அரிய கட்டடங்கள் சில!

## இராஜகிரி உள்கோட்டையில் அமைந்துள்ள கட்டடங்கள், கோயில்கள்

**கல்யாண மகால்**

இங்கு அமைந்துள்ள கட்டடங்களிலேயே பார்வையாளர்களை உடனடியாகக் கவரக்கூடியதும் மிகவும் உயர்ந்து நிற்பதுமான கட்டடம் 'கல்யாண மஹால்' ஆகும். 'ராணிமகால்'எனவும் அழைக்கப்படுகிறது. இக்கட்டடம் அரசியாரின் அரண்மனையாகும்.

இது 'இந்து' - கட்டடக் கலைச் சேர்க்கையில் உருவானதாகும்.

அடுக்கடுக்காக எட்டு நிலையங்களைக் கொண்டது இந்த மகால். பத்து மீட்டர் சதுரமும், 27 மீட்டர் உயரமுள்ள பிரதான கட்டடமும் கொண்டது இது. இதன் மீது உச்சியில் சதுர வடிவமான கோபுரமும் அமைந்துள்ளது.

இப்பிரதான கட்டடத்தின் முன்பு சதுர வடிவமான சிறிய குளமொன்றும் காண்கிறோம். இதைச்சுற்றி அமைந்த சுற்று மாளிகையும் அழகான அமைப்புடையது. அதையொட்டி முப்புறங்களிலும்குளத்தை நோக்கியபடி கட்டப்பட்டுள்ள அறைகளும் மிகவும் அழகிய முறையில் அமைந்துள்ளன.

நாயக்கர் கலைப்பாணியிலான கட்டடக் கலைக்கு இவை எடுத்துக் காட்டாக விளங்குகின்றன.

கல்யாண மகால் கட்டடத்தின் ஒவ்வொரு நிலைக்கும் மேலே செல்ல ஒரு புறமும், அங்கிருந்து கீழிறங்கிவர மறுபுறமாகவும், இரு பக்கங்களிலும் படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. இது ஓர் அரிய கட்டட அமைப்பாகும்.

கல்யாண மகால் சுவரின் உட்புறம் ஒவ்வொரு அறையையும், மேலும் கீழும் இணைத்தவாறு வடக்கில் உட்புறமாகச் சுடுமண் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலமாக மேலே ஒவ்வொரு நிலைக்கும் தண்ணீர் எடுத்துச் செல்லப்பட்டது தெளிவாகிறது.



கல்யாண மகாலின் மீது கைப்பிடி,
கொடுங்கை முதலியவற்றின் அமைப்பு
0·45
0.70
0.75
0·18
·47
·10
0.68
12.00
5.60
மேடை
சுற்று மாளிகை

# செஞ்சிக்கோட்டை

## கல்யாண மகால்(அ) ராணி மகால் — வெட்டுத் தோற்றம்



இக்கட்டடம் முழுவதும் கருங்கல், சுண்ணாம்பு, ஓடு முதலியனவற்றால் விஜயநகர - நாயக்கர் பாணியில் கட்டப்பட்டுள்ளது.

கல்யாணமகாலின் முன்புறம் உள்ள சிறிய குளத்தினுள் நடுவே ஐந்தரை மீட்டர் சதுரமேடை யொன்றுள்ளது. மேடைமீது ஏறுவதற்கு வசதியாகப் பக்கத்தில் படிகளும் அமைத்துள்ளனர். அதையொட்டி நீரூற்றுக் குழாய்களும் பொருத்தப்பட்டு இருந்துள்ளதாகத் தெரிகின்றது.

ஆகவே, இது ஒரு நீராடும் (முக்கியமாக அரசியர் நீராடும்) குளமாக இருந்திருக்கவேண்டும் எனக் கூறலாம்.



**அரச குடும்பப் பெண்களும், தோழியரும், பணிப்பெண்களும் வசித்து வந்த வளாகம்**

கல்யாண மஹாலுக்கு மேற்குப் புறமாகப் 'ப' வடிவில் அமைந்துள்ள கட்டடங்கள் யாவும் இதுவரை 'குதிரை லாயம்' எனவும் 'தளவாட அறைகள்' எனவும் கருதப்பட்டு வந்தன.

சமீபத்தில் இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறை நடத்திய அகழ்வாராய்ச்சியின்போது கிடைத்த சான்றுகளின்படி மேற்கூறிய கருத்தை மாற்றிக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அகழ்வாராய்ச்சி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. பல புதிய கண்டு பிடிப்புகளும் கிடைத்து வருகின்றன. இதுவரை கிடைத்துள்ள ஆதாரங்களைக் கொண்டு ஆராய்ச்சியாளர்கள் கணித்துள்ளபடி இங்கே நாம் கூறியுள்ளோம்.

**புதிய கண்டுபிடிப்பு!**

கல்யாண மஹாலிலிருந்து ஆரம்பித்துப் 'ப' வடிவில் தொடங்கும் இக்கட்டடங்களின் மறு முனையில், அதாவது கல்யாண மஹாலுக்கு நேர் எதிராக மேற்கே, சமீபத்தில் நடந்த அகழ்வாராய்ச்சியில் கிடைத்த கட்டடங்கள் மற்ற ஆதாரங்கள் இவற்றைக் கொண்டு ஆராய்ந்தால், இங்கும் கல்யாண மகாலைப் போன்ற பல நிலைகளை கொண்ட மற்றுமொரு அரண்மனைக் கட்டடம் இருந்திருக்க வேண்டும் என்பதை நாம் நிச்சயமாகக் கூறலாம்.

இப் புதிய கண்டுபிடிப்புகளால் ஏற்பட்ட கணிப்புப்படி இப்போதுள்ள கல்யாண மஹாலை 'ராணி மஹால்' என்று அழைக்கவேண்டியுள்ளது.

ஏனெனில், கர்நாடக மாநிலத்தில் உள்ள ஹம்பியிலும் ஆந்திர மாநிலத்திலுள்ள சித்தூர் மாவட்டம் சந்திரகிரியிலும் இதே பாணியில் கட்டப்பட்டுள்ள விஜயநகர நாயக்கர்காலக் கட்டடங்கள், ராஜா-ராணி மஹால் என்று அழைக்கப்படுகின்றன. அவையும் இதே போன்று இரு தனித்தனி மாளிகைகளாக அருகருகே அமைந்துள்ளன.

அவற்றுடன் இங்குள்ள கட்டடங்களை ஒப்பிட்டுப் பார்க்கையில், இவையும் அவைபோன்றே அமைந்துள்ளன என்பது தெளிவாகிறது. ஆகவே இவற்றையும் அப் பெயராலேயே அழைக்க வாய்ப்புள்ளது. எனவே இக்கட்டடங்களை 'ராணி மஹால்' 'ராஜா மஹால்' என்று அழைக்கலாம்.

மேற்கூறிய புதிய கண்டுபிடிப்புகளினால் இவ்விரு அரண்மனைக் கட்டடங்களுக்கிடையே' 'குதிரை லாயங்கள்' அல்லது தளவாட அறைகள் இருப்பதற்கு வாய்ப்பு இல்லை என்பதும் அறியலாம்.

புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட 'ராஜாமஹால்' கட்டடத்தின் முன்பாக கருங்கல்லால் கலையம்சத்துடன் கட்டப்பட்ட 'அரசரின் கொலு மண்டபம்' ஒன்று (மேடை மட்டும்) அகழ்ந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது. இம்மேடையைச் சுற்றிலும் கட்டடப்பகுதிகளும் அகழ்ந்து காணப்பட்டுள்ளன. அவை பார்வை யாளர் மண்டபம், நடன மண்டபம் அல்லது கொலு மண்டபம் என ஓரளவு ஊகிக்கப்பட்டுள்ளன.

இது தவிர, இக் கொலுமண்டபத்தையொட்டி அரண்மனைக் கட்டடங்கள் இருந்தன என்பதும் அதற்குரிய சான்றுகள் கிடைத்துள்ளதிலிருந்து தெரிகிறது; இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறையின் (ASI) கண்காணிப்பாளர் டாக்டர் நரசிம்மையா அவர்களின்ஆய்வுப்படி, இதுவரை குதிரைலாயம் என அழைக்கப் பட்டு வந்த கட்டடங்கள் அரசகுடும்பத்துப் பெண்டிர் வாழ்ந்த மாளிகைகளாகவே இருக்கவேண்டும். மற்றுமொரு தொல்லியல் ஆராய்ச்சியாளரான திரு கே.டி. நரசிம்மன் அவர்களும் இதே கருத்தை வலியுறுத்துகிறார்.

ஒவ்வொரு முன் அறையிலும், அரச குடும்பத்தின் முக்கிய பெண்டிரும், அதற்கு நேர் எதிரான பின்புறம் அமைந்த அறைகளில் அவர்களின் பணிப் பெண்களும் இருந்திருக்க வேண்டும். இக்கூற்றை உறுதிப்படுத்தும் வகையில், இதுபோன்ற அமைப்பான கட்டடங்கள், கர்நாடகத்திலுள்ள ஹம்பியில் சமீபத்திய அகழ்வாராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்டன.

அழகிய பளிங்குக் கற்களால் ஆன படிக்கட்டுகளும் நடுவில் சுதை வேலைப் பாடுகளுடன் கூடிய பளிங்குப் பூச்சுடன் அமைந்த மேடையும், பளிங்குத் தரையும் கொண்ட இக் கட்டடங்கள் மூன்று நூற்றாண்டுகட்கு முன் நம்மை அழைத்துச் செல்கின்றன. இன்னமும் தொடர்ந்து கல்யாணமகாலின் தெற்கில் அகழ்வாராய்ச் சியில் ஈடுபட்டுப் புதியன கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன.

எனவே, வருங்காலத்தில் பல புதிய கண்டுபிடிப்புகளினால் செஞ்சியின் கட்டடக்கலை வரலாற்றில் அதிசயிக்கத்தக்க மாறுதல்கள், உண்மைகள் தோன்ற வாய்ப்புகள் உள்ளன.



## உணவுத் தானியக் களஞ்சியம்

இராஜகிரி மலைப்பகுதியின் உள்கோட்டையில் அமைந்துள்ள கட்டடங்களில் மிகப் பெரிய அளவிலும் சிறந்த முறையிலும் கட்டப்பட்டுள்ள இரண்டு கட்டடங்களில் ஒன்று 'நெற்களஞ்சியம்'; மற்றொன்று 'உடற்பயிற்சிக் கூடம்'.

நெற்களஞ்சியக் கட்டடம், இராஜகிரிக் கோட்டை மலைமீது செல்ல அமைக்கப்பட்ட படிகளின் அருகே, பாதையின் தெற்காக இடதுபுறம் மலையடி வாரத்தில் அமைந்துள்ளது என்பதை முன்பே கண்டோம்.

இருபத்திரண்டு மீட்டர் நீளமும், இருபத்து ஒன்பது மீட்டர் அகலமும், சுமார் இருபது மீட்டர் உயரமும் கொண்ட இக்கட்டடம், மூன்று நீண்ட சதுர அறைகளைக்கொண்டு அமைந்துள்ளது. கிழக்குப்புறம் அமைந்துள்ள வாயிலின் வழியாக உள்ளே சென்றால் நடுவே அமைந்த பகுதியில் பக்கவாட்டிலும் எதிர்ப் புறத்திலுமாகச் சிறிய படிகள் அமைந்துள்ளன. இவற்றின் வழியே ஏறிச் சென்றால் தனித்தனி வாயில்கள் வழியாக மூன்று களஞ்சியக் கூடங்களையும் காணலாம். மாபெரும் அறைகள் மூன்றும் வில் போன்று வளைந்த கூரைகளைக் கொண்டவையாகும்.

நுழை வாயிலின் இடதுபுறம் சுவரையொட்டி அமைந்துள்ள குறுகலான படிகளில் ஏறிச் சென்றால், மேல் தளத்தை அடையலாம். இப்பகுதி மூன்றும் தனித் தனி வில்போன்ற வளைவான கூரைகளைக் கொண்டுள்ளன. அக்கூரைகளின் நடுவே சிறிய துவாரங்களையும் அமைத்துள்ளனர்.

உணவுத் தானியங்களை இத் துவாரங்களின் வழியாக மேலிருந்து கொட்டி அறைகளில் நிரப்புவர். அவ்வாறு சேமித்த தானியங்களைத்தேவையான பொழுது கீழே உள்ள வாயில்கள் வழியாக எடுத்துக்கொள்வர் என்று தெரிகிறது.

மேற்கில் குறுக்கே அமைந்துள்ள கிடங்கு இருபத்தைந்துமீட்டர் நீளம், 8.60 மீட்டர் அகலம் உடையது. வடக்கிலும் தெற்கிலும் அமைந்துள்ள களஞ்சியக் கூடங்கள் ஒவ்வொன்றும் 18.5 மீட்டர் நீளமும் 8 60 மீட்டர் அகலமும் உள்ளவையாகும்.

## கொள்ளளவு

இம் மூன்று களஞ்சிய அறைகளிலும் ஒரே காலத்தில் எவ்வளவு தானியம் சேமித்து வைக்க முடியும் என்பதை அவற்றின் கொள்ளளவைக் கணக் கிட்டும், ஊரில் ஒரு வீட்டில் சேமித்து வைத்துள்ள 95 மூட்டைகளை அளந்து

அவற்றின் அளவைக்கொண்டும் கீழ்க்கண்டவாறு கணக்கிட்டுப் பார்த்தோம். அதன் விரவத்தை வாசகர்களுக்கு அப்படியே தருகிறோம்.

அ) தானியக் கிடங்குகள் மூன்றின் கொள்ளளவு.

வடக்கிலும் தெற்கிலும் அமைந்துள்ள தானியக்கிடங்கு அறைகள்: $2 \times 18.50 \times 8.60 \times 18.00 = 5727.60$ கனமீட்.

மேற்கேயுள்ள அறை $1 \times 25. \times 8.60 \times 18.00 = 3870.00$ க. மீ.

மொத்தம் 9597.60 க. மீ.

ஆ) 95 மூட்டைகள் அடுக்கிப் பார்த்ததில் கிடைத்த அளவு

$3.07 \times 2.76 \times 2.46 = 20.84$ க.மீ.

ஆகவே $\frac{95 \times 9597.60}{20.84} = 43,751.055$ மூட்டைகள்

அல்லது 1 மூட்டை ஒன்றுக்கு ஒன்றரை கலம் வீதம்

$43751.055 \times 1.5 = 65626.58$ கலம்

அல்லது 65,627 கலம்

ஆகவே இந்த ஒரு களஞ்சியத்தில் மட்டும் 65,627 கலம் தானியங்களை ஒரே சமயத்தில் சேமித்து வைக்க முடியும் என்று அறியமுடிகிறது. 75 கிலோ, ஒரு மூட்டை என்றால், 43,751 மூட்டைகளுக்கு 32, 81, 325 கிலோ (3, 28 13 குவிண்டல்) எடை ஆகும்.

★

**உடற்பயிற்சிக் கூடம்**

தானியக் களஞ்சியத்தின் எதிரே கிழக்கில், யானைக் குளத்தின் மேற்கில் அமைந்த மற்றொரு பெரிய கட்டடம் ‘உடற் பயிற்சிக் கூடம்’ என இப்பொழுது அழைக்கப்படுகிறது.

முற்றிலும் கருங்கற்களினால் ஆன சுவர்களைக் கொண்ட இக்கட்டடம் அரைவட்ட அல்லது வில் போன்ற வடிவில் உள்ள மேற்கூரையுடன் கட்டப் பட்டுள்ளது. கூரை செங்கற்களால் அமைக்கப்பட்டுள்ளது.

இவ் உடற்பயிற்சிக் கூடம் முப்பத்திரண்டு (32) மீட்டர் நீளமும் 29 மீட்டர் அகலமும் கொண்டு, பத்தொன்பது மீட்டர் உயரத்தில் காணப்படுகிறது.

இதன் உள்ளே படைவீரர்கள் உடற்பயிற்சி செய்து வந்ததாகக் கூறுவர். ஆயினும் உடற்பயிற்சி செய்பவர்கள் சாதாரணமாகத் திறந்த வெளியில் தான் செய்வார்கள் என்பதையும், பயிற்சிசெய்யும் வீரர்கள் எண்ணிக்கையில் அதிகம் இருந்திருப்பர் என்பதையும் மனதில் கொண்டால், இவ்வறையினுள்ளே 'உடற் பயிற்சி செய்து வந்தனர்' என்ற கூற்று பொருத்தமாக இல்லை.

ஆகவே, உடற்பயிற்சிக்கு வேண்டிய சாதனங்களை, கருவிகளை வைக்கும் அறையாக இது இருந்திருக்கலாம் என்றே நாம் கொள்ளலாம்.

**யானைக்குளம்!**

உடற்பயிற்சிக் கூடத்தின் கிழக்கில், கல்யாண மகால் கட்டடத்திற்குத் தெற்கில், (எதிரில்) கருங்கற்களால் ஆன அழகிய படிக்கட்டுகளும் திருச்சுற்றும் அமைந்த பெரிய குளம் ஒன்று காணப்படுகிறது.

இக்குளம் ஏனோ யானைக்குளம் என்று அழைக்கப்படுகிறது! அழகிய படிக்கட்டுக்களையும் மண்டபங்களையும் கொண்டு இக்குளம் மிகச் சிறந்த முறையில் அமைக்கப்பட்டுள்ளது. மேற்கில் உள்ள நுழைவாயில் சிறந்தமுறையில் காணப்படுகிறது. வடக்கில் தரைப்படிகள் அமைந்துள்ளதும் சிறந்த அமைப் பாகும்.



இராஜகிரி மலையிலுள்ள தங்க மண்டபம் என்னுமிடத்திலிருந்து காணும் தோற்றம்.

வளைந்து செல்லும் பாதையை ஒட்டியுள்ள மதிற்சுவர்களையும் மண்டபவாயில்களையும் பார்த்து வியக்கலாம்.





மலைக்கச் செய்யும்
மலைக்கோட்டை!

**வேணுகோபாலர் கோயில்**

இராஜகிரி மலையடிவாரத்திலுள்ள தானியக்களஞ்சியத்தை யொட்டித் தெற்கில், தென்புறக் கோட்டைவாயில் அருகே கிழக்கு நோக்கி அமைந்துள்ள இக்கோயில், விமானங்கள் ஏதுமில்லாததாலும், மிகவும் பழுதடைந்துள்ளதாலும் கண்ணுக்கு எடுப்பாகத் தெரியாத நிலையில் உள்ளது.

இக்கோயில், கோனேரிக்கோன் [கி. பி. 1270 — 1290], மற்றும் கோவிந்தக்கோன் (1290—1310). ஆகிய கோனார்களின் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் செஞ்சியை ஆண்டு வந்த சமயம் கட்டப்பட்டதாகும்.

முற்றிலும் செங்கற்களால் அமைக்கப்பட்ட சுற்று மண்டபம், சுவர் முதலியன இப்பொழுது இடிந்தும் கூரையின்றியும் காட்சியளிக்கிறது.

உள் மண்டபத்தில் தெற்கு நோக்கிய இயற்கையான பாறையில்புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப்பட்ட ஸ்ரீ வேணுகோபாலஸ்வாமி உருவம், சற்றே சிதைந்த நிலையில் உள்ளது.

குழலூதும் நிலையில் நிற்கும் இக் கோபாலனின் இருபுறமும்
ராதையும் ருக்குமணியும் உள்ளனர்.

இடதுபக்கம் தனியாகச் சந்நிதிபோல் விமானத்துடன் இணைத்துச் செதுககப்பட்ட கோயிலில், லட்சுமியின் உருவம் தனியாகச் செதுக்கப்பட்டுள்ளது. வலதுபுறம் நின்றகோலத்தில் ஆண்டாளின் திருவுருவம் அமைக்கப்பட்டுள்ளது. இச்சிற்பங்கள் யாவும் கலை நுணுக்கங்களுடன் மிக அழகிய முறையில் அமைக்கப் பட்டுள்ளன.

இச்சிலைகளுக்கு முன்புள்ள பாறையை நன்றாக வழவழப்பாகச் செதுக்கித தளம் அமைததுள்ளனர். மற்ற பாகங்கள் மிகவும் சிதைந்த நிலையில் உள்ளன. இவை யாவும் ஒருகாலத்தில் இக்கோயில் மிகவும் உன்னத நிலையில் இருந்ததை நமக்கு உணர்த்துகின்றன.





## குறிப்பிடத்தக்க சிறப்பிடங்கள்!

**உள்கோட்டைக்கும் வெளிக்கோட்டைக்கும் இடையேயுள்ள சில முக்கிய கோயில்கள், கட்டடங்கள்.**

### வேங்கடரமணர் ஆலயம்

**(திருவேங்கடமுடையான்)**

சாதத்துல்லாகான் மசூதியிலிருந்து புதுவை வாயிலுக்குச் செல்லும் சாலையில், வலதுபுறம் தெற்கு நோக்கித் திரும்பும் பாதையில் சென்றால், வேங்கடரமணர் ஆலயத்தைக் காணலாம்.

இக்கோயில், சக்கிலிதுர்க்கம் மலையின் இடது (வடக்கு) அடிவாரத்தில் உள்கோட்டையின்தென்கிழக்கு மூலையில் அமைந்துள்ளது.

பிற்காலவிஜயநகரக் கலைப்பாணியில், மிகப் பெரிய அளவில் அமைக்கப்பட்டுள்ளது. இக்கோயில் முத்தியாலு நாயக்கர் (கி. பி. 1540-1550)என்பவரால் இது கட்டப்பட்டுள்ளது.

## மிகப் பெரிய கலைக்கோயில்

150 மீட்டர் நீளமும் 64 மீட்டர் அகலமும் உள்ள பரப்பளவில்இக்கோயில் அமைந்துள்ளது. செஞ்சியைச் சுற்றிலும் இவ்வளவு பெரிய திருக்கோயில் வேறு எங்கும் இல்லை என்பது திண்ணம்.

கிழக்கு நோக்கி அமைந்துள்ள இக்கோயில், இரண்டு நுழைவாயில்களை (கோபுரங்களை)க் கொண்டது. வெளிக்கோபுரம் 17.50 மீட்டர் நீளமும் 12.50 மீட்டர் அகலமும் கொண்டுள்ளது; சுமார் 40 மீட்டர் உயரத்தில் கம்பீரமாகத் தோற்றமளிக்கிறது.

நாயக்கர் காலத்துக் கோபுரக் கலைக்கு எடுத்துக்காட்டாக இது சிறந்த கலை எழிலுடன் அமைக்கப்பட்டுள்ளது.

உள்சுற்று, வெளிச்சுற்று ஆகிய இரு தனிச் சுற்றுகளைக் கொண்ட இக் கோயிலின் உள்ளே மூன்று முக்கிய விமானங்களையும் கட்டியுள்ளனர்.

## அழகிய அமைப்பு

நடுவில் அமைந்த விமானம் சிறப்பானது, அதன் கீழே உள்ள கருவறை எனும் உள்நாழியில் இப்பொழுது சிலைகள் ஏதும் இல்லை.

அர்த்தமண்டபம், மகாமண்டபம், முப்பத்து நான்கு தூண்களைக் கொண்ட முக மண்டபம் ஆகிய பகுதிகள் அமைந்து, முழுமையான கலைக் கோட்டமாகத் திகழ்கின்றது இக்கோயில்.

கீழே கருங்கல் வேலைப்பாடுகளும் மேற்குபகுதியில் செங்கல் சுதை வேலைப்பாடுகளும் கொண்டு அமைந்துள்ள அழகிய கோயில் இது.

மிகவும் அற்புதமாக அமைந்துள்ள முதல் கோபுரத்தின் இரு பக்கங் களிலும் வெளிப்புறமாக இரண்டு மண்டபங்கள் அமைந்துள்ளன. வலது புறம் அமைந்த 16 தூண்களை உடைய மண்டபம், நடுவில் ஒரு மேடையைக்கொண் டுள்ளது. இது முற்கால மண்டபமாகும்.

## புதிய கண்டுபிடிப்பு

இடதுபுறம் தற்போது கூரையில்லாமல் உள்ள மண்டபப்பகுதி 1975ஆம் வருடம் அகழ்வாராய்ச்சியின்போது கண்டுபிடிக்கப்பட்டுப் பழுது பார்க்கப்பட்ட தாகும்.

கோயிலின் வெளியே ஒரே கல்லிலான கொடிக்கம்பம் நிற்கக் காண்கிறோம். கோயிலைச்சுற்றி நாற்புறமும் ஆங்காங்கே அமைந்துள்ள தூண்களைக் கொண்டும் மேற்புறச் சுதை வேலைகளுடன் கூடிய விமானத்தைக் கொண்டும் அமைக்கப்பட்டுள்ள மண்டபங்களும் பழங்கால நிலையை உணர்த்த வல்லவை. இக்கோயில் ஒரு காலத்தில் விழாக்கோலம் பூண்டு ஒளிமயமாய்த் திகழ்ந்திருக்க வேண்டும் என்பதை நமக்கு உணர்த்துகிறது.

முதல் கோபுரத்திற்கும் இரண்டாவது கோபுரத்திற்கும் இடையேயான வளாகத்தில் (200 அடி நீளம் 150 அடி அகலம்) மதிற்சுவரை ஒட்டித் திருச்சுற்று மாளிகை அமைந்துள்ளது. இடதுபக்கம் அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் அமைந்த கல்யாண மண்டபம் காணப்படுகிறது. அதையடுத்து உற்சவ மண்டபமும் வலது மூலையில் யாகசாலை அறையும் காணப்படுகின்றன. அழகிய நடைபாதைக் குளமும் அதையடுத்து மண்டபமும் அமைந்துள்ளன.

முதல் கோபுரத்தில் உள்ளே நுழையும்போது, கோபுரவாயிலில் வலது புறமாக மேலே செல்ல கோபுரத்தின் உட்புறம் படிகள் அமைக்கப்பட்டுள்ளன.

## சிற்பக் கலை விருந்து

இக்கோபுர நுழை வாயில் கருங்கற்சுவர் மீது அழகிய புடைப்புச் சிற்பங்கள் அமைந்துள்ளன. இடதுபுறம் மேலே லட்சுமியின் உருவம், திருப்பாற் கடல் கடையும் காட்சி, இராமர் பட்டாபிஷேகக் காட்சி முதலியன மிகஅற்புதமான சிற்பங்களாகக் காட்சி தருகின்றன.

வாயில்படியின் நிலைகள் இரண்டிலும் அற்புதமான மகர தோரண வேலைப்பாடுகளும் அவற்றின் திருமாலின் தசாவதாரக் காட்சிகளும் மிக அழகான முறையில் செதுக்கப்பட்டுள்ளன.

வலதுபுறம் மேலே கஜலட்சுமியும், இராமாயணத்திலிருந்து சில காட்சிகள், திருமாலின் தசாவதாரச் சிற்பங்கள், மேலே வைகுண்டத்தில் அரவணை மீது திருமால் ஆகிய சிலைகளும் காணப்படுகின்றன.

அதே போல உட்புறமுள்ள ஸ்ரீதேவி, பூதேவியுடன் திருமாலும் திரிவிக்கிரம அவதாரக் காட்சியும் சிறப்பானவை; கோபியருடன் கோபாலனும் காணத் தக்கவரே! பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகியவர்களின் சிற்பங்களும், இராமாயணத்திலிருந்து சில காட்சிகளும் இங்கு அழகிய சிற்பங்களாகக் கல்லிலே கலைவண்ணமாகக் காட்டியுள்ளனர்.

## கட்டடக் கலைக் காட்சி

மேற்குப்பகுதியில் இரண்டாவது கோபுரத்தை யொட்டியுள்ள நூற்றுக் கால் மண்டபத்தையும் வடக்கு நோக்கியவாறு அமைந்த இரண்டு உற்சவ மண்டபங்களையும் காணலாம். இந்நான்கு மண்டபங்களும் தெற்கு வடக்காகச் சேர்ந்தாற்போல அமைக்கப்பட்டுள்ளன.

நடுவே, வடக்குப் பகுதியில் உள்ளே இறங்கக்கூடிய வகையில், படிகள் அமைக்கப்பட்ட அழகிய நடைபாதைக் கிணறு ஒன்றும் உள்ளது.

வட பகுதியிலும் தென் பகுதியிலும் பகுதிக்கு இரண்டாக அமைந்த தூண்கள் நிற்கின்றன. அவை அந்தக் காலத்தில் கோயில்மணிகளைத் தாங்கி நின்றவையாக இருக்கலாம். அல்லது ஊஞ்சல் அமைப்பதற்காகவும் பயன்பட்டு இருக்கலாம்.

இரண்டாவது கோபுரத்தைத் தாண்டும்போது ஆறுபடிகள் மேலே ஏறிக் கோபுரத்தைக் கடந்து திரும்பவும் அதே அளவுள்ள படிகளில் உட்புறமாகக் கீழே இறங்கவேண்டும்.

இக்கோபுரத்தின் சுதை வேலைப்பாடுகளும் அதில் அமைக்கப்பட்டுள்ள சுதைச் சிற்பங்களும் அற்புதமான முறையில் செஞ்சிநாயக்கர் காலத்துக் கலைப் பண்புக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளன.

கோயிலின் வெளி மதிற்சுவர் வடபுறமும் கிழக்குப் புறமும் சிதையாமல் இன்றும் அப்படியே இருக்கின்றன. ஆயினும் தென்புறமும் மேற்குப்புறமும் மிகவும் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றன.

உள்பிராகார மதிற்சுவரைக் கவனித்தால், வடக்குப் பகுதியைத் தவிர, மற்ற பகுதிகள் நல்ல நிலையில் உள்ளன.

கோயிலின் உள்பிராகாரத்தின் தென்மேற்கு மூலையில் கிணறுடன் கூடிய பெரிய மடப்பள்ளியறை உள்ளது. சமீபத்திய அகழ்வாராய்ச்சியில் இம்மடப் பள்ளியின் (சமையற்கூடம்) முன்புறம் முற்றிலும் கருங்கற்களாலேயே கட்டப்பட்டு மூடப்பட்டுள்ள கிணறு ஒன்று தரையில் கண்டு பிடிக்கப்பட்டது.

## கடவுளர் அறைகள்

இந்த வேங்கடரமணர் ஆலயத்தின் உட்பிராகாரப் பகுதியில் இரு தனிச் சன்னிதிகள் உள்ளன. வலதுபுறம், தாயார் சன்னிதி என்றும் இடதுபுறம் ஆண்டாள் சன்னிதி என்றும் கூறுவர்.

இது தவிர, திருச்சுற்று மாளிகையில் மேற்குப்புறம் சிறிய விமானத்துடன் அமைந்துள்ள கோயில் நரசிம்மர் சன்னிதி ஆகும். விமானங்கள் மூன்றும் அழகிய சுதை வேலைப்பாடுகளுடனும் சிற்பங்களுடனும் காணப்படுகின்றன.

## கல்லெழுத்துப் பட்டயம்

இக்கோயிலில் பல கல்வெட்டுகள் காணப்படுகின்றன. அவற்றில் முக்கியமாக அச்சுத விஜய ராமச்சந்திரநாயக்கர் அளித்துள்ள மானியமும் ஆரம்ப நாயக்கர், சதாசிவ தேவர் ஆகியோரின் மானியங்களும் கூறப்பட்டுள்ளன. உற்சவத்திற்காக அடப்பட்டு மல்லப்பட்ட நாயக்கர் என்பவரால் அளிக்கப்பட்ட மானியமும் இக்கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

கல்வெட்டு வாசகத்தில் இக்கோயில் இறைவன் பெயர் திருவேங்கடமுடையான் என்றே குறிப்பிடப் பெற்றுள்ளது. ஆனால் வேங்கடரமணர் எனும் பெயர் எப்படி வழங்கலாயிற்று என்பது தெரியவில்லை.

நடு நாட்டில் உள்ள திருவண்ணாமலை, முதுகுன்றம், சிதம்பரம் முதலான பெருங்கோயில்களின் வரிசையில் செஞ்சியிலுள்ள வேங்கடரமணர் ஆலயமும் வைத்து எண்ணத்தக்கது.

இக்கோயிலில் கொலுவீற்றிருந்த அருள்மிகு கலைத் தெய்வங்கள், செஞ்சிக்கும் புதுவை போன்ற பிற இடங்களுக்கும் குடி பெயர்ந்ததாகத் தெரிகிறது. அவை குடியிருந்த பெருங்கோயில் இன்று சீரும் சிறப்பும் இழந்து வெறுங்கோயிலாக, காட்சிக் கூடமாக நிற்கின்றது.

மிகப் பெரிய அளவில் மோசமாகப் பழுதடைந்திருந்த இக்கோயில், தொல்பொருள் இலாக்காவினால் அதன் பழமை மாறாமல் பழுது பார்க்கப்பட்டு வருகிறது. இப்பொழுது பார்ப்பவர்கள் மனதைப் பரவசமடையச் செய்யும் நிலையில் உள்ளது.



செஞ்சி வேங்கடரமணர் எனக் கூறப்பெறுகிற
திருவேங்கடமுடையான் திருக்கோயில் கல்லெழுத்துப் பட்டயம்.



கல்லெழுத்து வாசகங்கள் அமைந்துள்ள நீண்ட தொடரின்
தொடக்கப் பகுதியின் படக்காட்சி இது.



அறக்கொடை அளித்ததற்குரிய முழுமையான செய்தியை
அடுத்த இரு பக்கங்களில் படித்து மகிழ்வோம்.

# செஞ்சி வேங்கட ரமணர் ஆலயம்

## ( திருவேங்கடமுடையான் )

### ( தெற்குச் சுவர் மகா மண்டபம் )

*விஜய நகரர் அரசு — : சதாசிவ தேவ மகாராயர்*

***ஆண்டு : சகம் 1472 = கி. பி.1550.***

கல்வெட்டு, படிக்கும்பொருட்டு இப்பொழுதுள்ள எழுத்துவடிவில் கொடுக்கப்பெறுகிறது. கிரந்த எழுத்துக்கள் அதில் கலந்திருக்கும். இதில் குறில், நெடில் திருத்தம் செய்யப் பெற்றுள்ளது.

வரி . சுபமஸ்து ஸ்வஸ்திஸ்ரீ விஜயாப்யுதயா சாலிவாகந சகாப்தம் 1472 மேல் செல்லா நின்ற ஸாதாரண வருஷம் மீநனாயிற்று பூர்வபட்சத்து பௌர்ணமியும் சுக்ர வாரமும் பெற்ற திருவோண நட்சத்திற நாள் ஸ்ரீமன் மஹா மண்டலேஸ்வர ராஜாதி ராஜ பரமேஸ்வர ஸ்ரீ வீரப்ரதாப ஸ்ரீ வீர சதா சிவ தே

வரி 2. வ மஹா ராயர் விஜய நகரத்தில் ரத்னசிம்மாஸன ரூடராய் பிரிதிவி ராஜ்யம் பண்ணி அருளுகையில் ஜயங்கொண்ட சோழ மண்டலத்தில் பனையூர்நாட்டில் ராஜராஜ சதுர்வேதி மங்கலமாகபிரம்ம க்ஷேகரம் எண்ணாயிரம் வட மேல்பிடாகை சிங்கம்பொருத வளநாட்டில் செ

வரி 3, ஞ்சியில் திருவேங்கட முடையான் நிற்றபடி திருவாராதனைக்கும் விசேஷ பூசை விசேஷத்திருநாள் திருத்தேர் திருநாள்அமுது செய்தருளுகிற திருப் போனக வகை திருப் பணியார வகைக்கும் அங்கரங்க வைபோகங்களுக்கும் திருப்பணிக்கும் நடக்கத் தக்கதாக கட்டளை பண்ணின

வரி 4. ஸ்ரீஸஷா சிவ தேவ மஹாராயர் தாரா தத்தம் பண்ணி சமர்பித்த திருவிளையாட்டம் கிறாமங்களுக்கு சிலா ஸாசனம் உள்ளூர் செஞ்சியில் திருவேங்கட முடையான் திரு விளையாட்டமான குத்துக் கல்லுக்கு கிழக்கும் நிலபாறைக்கு சூலக்கல் வெட்டினத்துக்கு

வரி 5. தெற்கு இதுக்குள்ளாக இருந்த பல பட்டையும் சித்தாயமும் செஞ்சிக்குள் நடக்கிற சுக்கிறவார சந்தை ஆயமும் பெருங் காஞ்சி சீர்மையில் பொன்பற்றி கிறாமம் ஒன்றும் நரசிங்க நல்லூர் கிறாம மொன்றும் எட்டி ஏந்தல் கிறாமமொன்றும் செஞ்சி சீர்மையில் தளவா நல்லூர் கிறாமம்

வரி 6 ஒன்றும் வீரவநல்லூர் சீர்மையில் கங்கராய நல்லூர்கிறாம மொன்றும்கற்பை கிறாம மொன்றும் திருவதி சீர்மைக்குள் பெண்ணை வடகரை கற்பட்டு இங்கனாபட்டு கஞ்சிபட்டு கிறாம மூன்றும் தேவனார் சீர்மையில் மங்கலபுரம் கிறாம மொன்றும் முடியரை சீர்மையில் கோணை கிறாமம் மொ

வரி 7. ன்றும் சதாசிவ தேவ மஹாராயற்கு புண்ணியமாக சூரப்ப நாயக்கர் வீரவ நல்லூர் சீர்மையில் பிராமணர் கையில் கொண்ட கவறை கிராம மொன்றும் கயப் பாக்கத்தில் சீர்மையில் பிராமணர் கையில் கொண்ட நல்லாவூற் கிறாம மொன்றும் திருப்பாடி வேட்டை

வரி 8. திருனாள் உபையத்துக்கு அடப்பத்து மல்லப்ப நாயக்கர் சம்மதித்து குன்றத் தூர் சீர்மையில் அணிலாழ்விலிய மகாதேவி கிறா(ம)ம் இரண்டும் இந்தத் திருவிளையாட்ட கிறாமங்கள் திருவேங்கட முடையான் திருவாராதனை திருப்பணி நடத்தி முடித்து ஆசந்திரா

வரி 9. ர்க்கஸ்த் தாயீ ஆக நடக்கும் படிக்கு கட்டளையிட்ட சிலா சாஸநம் இந்த தன்மத்துக்கு யா தொருவர் அகிதம் நினைத்தவன் திருவேங்கட முடையானுக்கு துரோகியுமாயி தன்னுடைய மாதா பிதாவை யும் தன்னுடைய குருவையும் கங்கைக்கரையிலே வதைத்த தொ

வரி 10. ஷத்திலே போகக் கடவ னாகவும் ஸ்ரீவைஷ்ணவ ரக்ஷை. இந்த சிலாசாசனம் கோயில் கணக்கு பிரமநாயன் எழுத்து உ.





கிழக்கு (அலங்கம்) வெளிமதிலின்
உட்புறப் பாதையின் தென்கோடியில்
சக்கிலி மலையடிவாரத்தில்
குன்றில் அமைந்துள்ள
சிவன்கோயில் வெளிமண்டபம்



வேங்கடரமணர் ஆலய
முன்கோபுரத்தின் உள்தோற்றம்



வேங்கடரமணர் ஆலயம் நூற்றுக்கால் மண்டபம்



வேங்கடரமணர் ஆலயம் உற்சவமண்டபம்



பட்டாபிராமர் கோயில் கோபுரமும் 12கால் மண்டபமும்
உயர்ந்துகாணும் உன்னதத் தோற்றம்



பட்டாபிராமர் கோயில் கல்யாண மண்டபம் சிற்பத்தூண்கள்;
சீரழிந்த நிலையிலும் சிறப்பாகக் காட்சி தருகின்றன.

பட்டாபிராமர் கோயில் கோபுர நுழைவாயிலில் அமைந்துள்ள
புடைப்புச் சிற்பக் காட்சி. (புராணக் கதைவிளக்கக் காட்சிகள்)







பாறையில் வடித்த அனுமனின் அரிய தோற்றம்



ஏழுகன்னியர் கோயில்களில் இப்பொழுது காட்சி தருவன



வேலூர் வாயிலின் முகப்புத் தோற்றம்



வேலூர் வாயில் உட்புறத் தோற்றம்



பக்தி செய்யும் நாயக்கமன்னர் குடும்பம்



ராணிபாயுடன் குதிரையின் மீது தேசிங்குராஜன்

## சாதத்துல்லாகான் மசூதி

இராஜகிரி உள்கோட்டை முகப்பின் அருகே கிழக்கில் உள்ளது சாதத்துல்லா கான் மசூதி. இது கி. பி. 1714 இல் தேசிங்கு ராஜனை வென்றதன் நினைவாகக் கட்டப்பட்டதாகும்.

நாற்புறமும் உயரமான சுவர்களும் உள்ளே மசூதிக்குரிய சின்னங்களும் அழகிய முறையில் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றின் மேலே வளைவுகளும் கலசம் போன்ற பாகமும் இஸ்லாமிய பாணியில் மிக அழகாக அமைக்கப்பட்டுள்ளதும் காணத்தக்கதாகும்.

மசூதியின் உட்புறம் அழகிய தளம் அமைந்துள்ளது.

பலரும் அமர்ந்து தொழுகை செய்யும் வகையில் விசாலமான கூடம் அமைத்துள்ளனர். இக் கட்டடத்தின் முழுமையும் இப்பொழுதும் நல்ல நிலையில் உள்ளது. அழகிய முறையில் கட்டப்பட்டுள்ளது. இதன் தென்புறம் மேல் நிலைத் தண்ணீர்த் தொட்டியை அக் காலத்தில் அமைத்துள்ளனர்.

நீர்த்தொட்டிக் கட்டடத்தில் உள்ள கல்வெட்டின் மூலமாகக்கி.பி. 1723இல் செஞ்சி நகரத்திற்கான குடிநீர் வசதி அப்போதுள்ள கவர்னரால் அதிகரிக்கப் பட்டதாக அறிகிறோம்.

இந்தச் சாதத்துல்லாகான் மசூதியின் பின்புறம் தென் கிழக்கே உள் கோட்டை அகழியை ஒட்டியுள்ள பாதை, சக்கரைக்குளம், செட்டிக் குளம் நோக்கிச் செல்வதாகும். அப் பாதை இப்பொழுது மண் சாலையாக உள்ளது. அதன் கிழக்குப் பகுதி விளைநிலங்களாக்கப் பட்டிருக்கிறது. அந்தப் பயிர் நிலங்களின் இடையிலே முகமதியரின் நல்லடக்க இடங்கள் காணப்படுகின்றன.

பெரிய நல்லடக்கக் கட்டடம் ஒன்றுள்ளது. அதன் எதிரில் கிழக்கே ஒரே கல்லில் வடிவமைக்கப்பட்டுள்ள நல்லடக்க மேடை காணப்படுகிறது. அதற்கு அருகிலேயே மற்றொரு சிறிய நல்லடக்க மேடையும் உள்ளது. அது சிறிய வயதுடையோர் அடக்கம் செய்யப்பட்டதாக உணரமுடிகிறது.



புதுவை வாயிலுக்குச் செல்லும் கிழக்குச் சாலையின் வடபுறம் பயிரிடப் படும் நிலத்தில் ஓர் இஸ்லாமியக் கட்டடம் உள்ளது. அக்கட்டடமும் நல்லடக்கம் செய்யப்பட்ட இடமாகத் தெரிகிறது.

தேசிங்கின் மரணத்துக்குப் பின் இசுலாமியர் வசம் செஞ்சிக்கோட்டை இருந்த காலத்தில் இத்தகைய நல்லடக்கக் கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன.

சிவன் கோயிலும் வைணவக் கோயில்களும் இடிபாடுற்றுள்ளன. ஆனால் பிற்காலத்தில் (250 ஆண்டுகட்குமுன்) கட்டப்பெற்ற முகமதியர் தொழுகையிடமும் நல்லடக்க இடங்களும் ஓரளவு நல்ல நிலையிலேயே காணப்படுகின்றன. முட் புதர்கள் மண்டிக் கிடப்பதால் பயிர் செய்வோரும் அப்பக்கம் செல்லாது இருப்பதை உணர்கிறோம்.



உள் கோட்டையில் சிவன் கோயிலுக்குத் தெற்கிலும் சாதத்துல்லாகான் மசூதிக்கு வடக்கிலும் நடுவிலுள்ள பரந்தவெளியில் காணப்படுகிற முகமதியர் நினைவிடம்.



நரசிங்கராயன் பேட்டை எனும் பரந்த நிலப்பரப்பில் உயர்ந்த கோபுரத்துடன் தோற்றம்தரும் பட்டாபிராமர் கோயிலுக்குக்கிழக்கே, இப்பொழுதுள்ள சாலைக்கு மேற்கே விமானத்தோடு கூடிய இம் மண்டபம் காணப்படுகிறது. திருவுலாச் செல்லும் உற்சவ மூர்த்திகளை இம் மேடையில் ஏற்றிச் சேர்ப்பர். பின்னர் தேருக்குள் எடுத்து வைக்க வசதியாக இவ் விமான மேடை அமைக்கப்பட்டிருக்கிறது.



## நரசிங்கராயன் பேட்டை

## பட்டாபிராமர் கோயில்

செஞ்சிக் கோட்டைக்கு வெளியில் தென் கிழக்கில் உள்ளது இக் கோயில்.

சக்கிலிதுர்க்கம் மலைக்கு இடது புறம் அடிவாரத்தில் வடக்கில் வேங்கடரமணர் ஆலயம் அமைந்துள்ளதைப்போல,வலப்புறம் [தெற்கில்] மலைஅடிவாரத்தின் அருகில் இந்தப் பட்டாபிராமர் கோயில் அமைந்துள்ளது.

வேங்கடரமணர் ஆலயத்தைக் கட்டிய அதே காலத்தில் இக்கோயிலும் கட்டப்பட்டுள்ளது.

இக்கோயிலை அடைய கோட்டைக்கு வெளியே செஞ்சி நகரம் செல்லும் பெருஞ் சாலையில் கிழக்கே சென்றால், இப்பொழுதுள்ள ஏரிக்கரையை அடைவோம். அடுத்து,தென்புறம் செல்லும் அனந்தபுரம் சாலையில் சுமார் 4 கிலோ மீட்டர் தொலைவில் சென்று வலப்புறம் [மேற்கில்] திரும்ப வேண்டும்.

சாலையிலிருந்தே கோவில் வளாகம், மற்றும் உயர்ந்த கோபுரம்,12 கால் ஊஞ்சல் மண்டபம் முதலான யாவும் நம் கண்களுக்கு விருந்தாகத் தோற்றமளிக்கின்றன.

சாலையிலிருந்து செல்லும் குறுகிய பாதையில், இப்பொழுது தனியார் விளைநிலமாயுள்ள பகுதியில் இறங்கி நடந்து சற்றுத் தூரத்தில் உள்ள கோயிலை அடையலாம்.

கோபுரத்திற்கு முன்பாகவே உயர்ந்த அழகிய சிற்பவேலைப்பாடுடைய பன்னிரண்டு தூண்களையும் மேலே விமானங்களுடன் கூடிய உயர்ந்த மண்டபத்தையும் காணலாம்.

உயரமான அம் மண்டப விமானம், மிக அழகான சுதை வேலைப்பாடுகளுடன் சித்திரத் தொகுப்பாக உருவாக்கப்பட்டுள்ளது.



ஊஞ்சல் மண்டபம் போன்று உயர்ந்து காணும்
12கால் மண்டபத்தின் அமைப்பை விளக்கும் வரைபடம்.



நான்கு முகப்புகளுடன் உச்சியில் தனித்தனி விமானங்களுடன் நெடிதோங்கி நிற்கும் கலைத்தொகுப்பான மண்டபம்! நாற்புறமும் அழகிய படிகளமைந்த நாய்க்கர் கலைப் படைப்பு!

செஞ்சிக்கோட்டைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் தவறாமல் சென்று காணத் தகுந்த கலைக்கோட்டமாகத் திகழ்கிறது பட்டாபிராமர் திருக்கோயில்.

கலை அழகுடன் உயர்ந்து காணும் இம் மண்டபத்தின் அடிப்பகுதியும் சிறப்பாக அமைந்துள்ளது. நான்கு புறங்களிலும் ஏறிச் செல்லும் படிகள் அமைந் துள்ளன. படிகளின் புறச்சுவர்களிலுள்ள சிற்பங்கள் நான்கு புறமும் வெவ்வேறு சிற்பங்களோடு அமைத்துள்ள கலைநோக்கு மிகச் சிறப்பானதாகும்.

ஒரு வாயிற்புறம் மாபெரும் பறவையை உருவகப்படுத்தி எழில் சிற்ப மாக்கியுள்ளனர். நீண்ட தோகையுடன் காணப்படும் பறவை அதன் வாயில் ஒரு யானையைக் (மீனைப்போல்) கவ்வியுள்ள காட்சி, காண்போரை வியப்பிலாழ்த்து கிறது. பறவையின் கால் விரலிடுக்கிலும் யானை ஒன்று செதுக்கப் பெற்றுள்ளது. பெரும் யானைகளைச் சிறுபொருள்போல் தூக்க வல்ல பெரிய பறவை என்பதை நன்கு உணரும்படி அக்காலச் சிற்பிகள் கற்பனைத் திறங்காட்டி உருவாக்கி யுள்ளனர்.

நாற்புறமும் உள்ள வேறு வேறு உருவங்களுடன் அமைந்துள்ள படி யமைப்புகள் நம்மைச்சிந்திக்கச்செய்துவியப்பில் ஆழ்த்துகின்றன. செஞ்சிநாயக்கர் தம் கலையுணர்வை இதனைப் பார்ப்போர் எவரும் எளிதில் உணரலாம்.



இம் மண்டபத்திற்கு மேற்கிலுள்ள உயர்ந்த கோபுரம் கண்கொள்ளாக் காட்சியாகும்.

கோபுரத்தை யொட்டிச் சுற்றிலும் உள்ள திருச்சுற்றுச் சுவர்களும் மதிற் சுவர்களும் ஒருகாலத்தில் இருந்திருக்கவேண்டும். கொடுமையான போர்களினால் இடிந்து விழுந்து, இருண்ட காலத்தினால் மறைந்து போனதை இங்குள்ள அவற்றின் சுவடுகளின் மூலம் அறியலாம்.

ஓங்கி உயர்ந்து நிற்கும் கோபுரத்தின் உள்ளே நுழைந்து சென்றால், வலப்புறம் திறந்தவெளியில் அழகான மண்டபத்தூண்கள் மட்டும் கூரையின்றிக் காணப்படுகின்றன. கலைச்சிற்பங்கள் நிறைந்த கருங்கல் மண்டபத் தூண்கள்

நம் கண்களில் வியப்பையும் ஏக்கத்தையும் ஒரு சேர உருவாக்கி விடுகின்றன். எதிரே மேற்கில் மூன்று விமானக் கோயில்களைக் காணலாம். அவற்றில் நடுவே உள்ள பெரிய விமானத்தின் கீழ் நீண்டசதுரமான அமைப்பில் கருவறையும் அதன் முன்னே அர்த்த மண்டபமும் அமைந்துள்ளன.

இதன் விமானத்தில் அழகிய சுதை வேலைப்பாடுகளும் சுதைச்சிற்பங்களும் கண்ணுக்கு விருந்தளிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன.

இக்கோயிலின் இருபுறமும் இரு தனித் தனி சிறிய சன்னிதிகளைக் காண்கிறோம். அவற்றுக்கும் அழகிய சுதை விமானங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கோயிலுக்கு முன்பாகக் கருடன்சன்னிதி, பலிபீடம் ஆகியனவும் முறையோடு அமைக்கப்பட்டுள்ளன.

கோயிலின் வெளிப்புறத்தில் நாற்புறமும் உயர்ந்த நான்கு தூண்களையுடைய நாயக்கர் காலப் பாணியிலான மண்டபங்கள் காணப்படுகின்றன. இவை தவிர, ஆங்காங்கே உட்புறமாக இறங்கும் படிகளைக் கொண்டு அமைக்கப்பட்ட நடைபாதைக் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன.

ஒரு காலத்தில் மிகவும் உன்னத நிலையில் இருந்த இக்கோயிலை அடைவதற்குத் தற்சமயம் சரியான பாதைகூட இல்லாதது வருந்தத்தக்க நிலையாகும்.

இம் மாபெரும் கோயிலை அமைத்தவர்கள் அதற்குரிய சரியான பாதையையும் அமைத்திருப்பார்கள் என்பது திண்ணம். ஆயினும் பிற்காலத்தில் அப் பாதைகள் பலரது சொந்த நிலங்களாக மாறியுள்ளன என்பது கசப்பான உண்மையாகும்.

எனினும், இந்திய அரசின் தொல்பொருள் ஆய்வுத்துறையினர் சாலையொன்று அமைப்பதற்காக இப்பொழுது தனியாரிடமிருந்து நிலங்களைக் கையகப்படுத்தும் பணியில் உள்ளனர். அதற்கான ஏற்பாடுகள் செய்துவருகின்றனர். இச் செய்தி சற்று மகிழ்ச்சி அளிக்கிறது.

கோயிலுக்குரிய இடம் பிற்காலத்தில் ஒரு சில தனியாருக்கு உடைமையாயுள்ள நிலை பல்வேறு ஊர்களிலும் உள்ளதுதான். அடிமை வாழ்வும் ஆசையால் அபகரித்து அதைச் சொந்த உடைமையாக்கி அனுபவிப்பதும் எங்கும்பொதுவான நெறியாகிவிட்டது.

வரலாற்று உணர்வும், பொதுச் சொத்து, அறக் கொடைகள் பற்றிய நேரிய உண்மையுணர்வும் உள்ளவர்கள், மக்களிடம் மனம் விட்டுப் பேசி விளக்கிட வேண்டும். பொதுச் சொத்துக்கள், அறக் கொடைகள் நாட்டின் பொதுவாகும் எனும் நோக்கு இங்கு, நம்மவரிடையே நன்றாக உணர்த்தப் பெறவேண்டும்,

## அனுமார் கோயில்



கிழக்கில் செட்டிக்குளம், மேற்கில் சக்கரைக்குளம் ஆகிய இரு நீர் நிலைகளிடையே செல்லும் பாதையில் தெற்கு நோக்கிச் சென்றால், சற்றுத் தொலைவில் உள்ள வீர அனுமனின் கோயிலை நாம் அடையலாம்.

கோயில் சற்றே தாழ்வான பகுதியில் அமைந்துள்ளதால் புதிதாக அமைக்கப்பட்ட படிகளில் இறங்கிக் கோயிலை அடைய வேண்டும்.

இயற்கையாகவே அமைந்த மிகப்பெரிய பாறையில் செதுக்கப்பட்ட வீர அனுமார் சிலையின் முன்புறம் பிற்காலத்தில் மண்டபம் அமைத்து இக்கோயிலை உருவாக்கியுள்ளனர்.

இதற்கு முன்புறம் கல்தூண்கள் மட்டும் உள்ளன. சில இடங்களில், போதிகை, உத்திரம் ஆகிய பாகங்கள் சிதறிக் கிடக்கின்றன.

முன்மண்டபம் கூரை இல்லாமல் இருப்பதைக் காணும்போது, இப்பகுதியில் அழகிய மண்டபம் ஒன்று அமைக்கவேண்டித் தொடங்கப்பட்ட பணி முடிவு பெறாமல் நின்றுவிட்டதை உணர்கிறோம்.

இக் கோயிலில் உள்ள ஆஞ்சநேயர் இப்பொழுதும் செஞ்சிமக்களின் அன்றாட வழிபாட்டுக்குரிய தெய்வமாக விளங்குகிறார்.

எல்லாவிடங்களிலும் செய்வது போன்றே இங்குள்ள அனுமார் சிற்பத்திற்கும் எண்ணெய்க் காப்பு செய்கின்றனர் மக்கள். அழகிய கற்சிற்பத்தை எண்ணெய்ப் பிசுக்கு படைபடையாய் மூடிக் கொண்டிருக்கிறது. கற்சிற்பங்களுக்கு நன்னீர் சொரிந்து வழிபடுதலே தக்கது என்பதை நம்மவர் எப்போது உணர்ந்து செயல்படுவார்களோ!

★

## கைதிகளின் சிறை

வீரஅனுமார் கோயில் வளாகத்தின் பின்புறமாக அமைந்துள்ள இராஜகிரிமலைப் பகுதியில் செங்குத்தான பாறை ஒன்று காணப்படுகிறது. அதன் மீது செங்கற்களால் ஆன தாழ்ந்த கைப்பிடிச்சுவர்ஒன்று உள்ளது. அங்கிருந்து நோக்கினால் கீழே செங்குத்தான பகுதியில் கிணறு போன்ற அமைப்பு உள்ளதை நாம் காணலாம்.

மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளைச் செங்குத்தான பாறை மேலிருந்து கீழேயுள்ள கிணறு போன்ற அமைப்பில் தள்ளி விடுவார்கள் என்றும், அவ்வாறு தள்ளப்பட்ட கைதிகள் கீழே விழும்போதே இறந்துவிடுவார்கள்; தப்பித் தவறி உயிர் தப்பினாலும் அக்கிணற்றுக் குள்ளிருந்து அன்ன ஆகாரம் இன்றிச் சில நாள்களில் உயிர் இழப்பார்கள் என்றும் கூறுகின்றனர்.

சக்கிலிமலையின் மேற்குப் பகுதிக்கும் இராஜகிரி மலையின் தென்புறப் பகுதிக்கும் இடையே உள்ளஇடைவெளி வழியே தெற்கே சென்றால் காட்டுப் பகுதி தென்படுகிறது.




வேலூர் வாயில் தோற்றமும்




இராஜகிரிமலைக்கோட்டையும்

# கோட்டையின் நுழை வாயில்கள்

## வேலூர் வாயில்

திருவண்ணாமலையிலிருந்து வரும் பேருந்துச் சாலையில் வெளிக்கோட்டை மதில் - அகழிக்கு முன்பாகவே வலதுபுறம் அதாவது தென் திசையில் உள்ள ஒற்றையடிப் பாதை, வேலூர் வாயிலை நோக்கிச் செல்கிறது.

அகழிப் பாலத்தின்மீது நடந்து வேலூர்வாயிலின் உள்ளே இடதுபுறம் திரும்புகிறோம். அவ் வாயிலின் எதிர்ச் சுவரில் அனுமார் உருவம் ஒன்று மாடத்தில் அமைத்துள்ளனர்.

வாயில் மிகப்பெரிய முகப்புடையது. நல்ல தோற்றத்துடன் விளங்குகிறது. வலப்பக்கமாக வளைந்தும் பின்பு இடப்புறம் திரும்பியும் செல்லும் இவ்வாயிலின் அமைப்பு, எதிரிப்படைகள் வேகமாக முன்னேற முடியாதவாறு தடுக்கும் வண்ணம் உள்ளது. மாபெரும் வாயிலை ஒட்டி மேற்கில் சிறிய வாயில் ஒன்றும் உள்ளது.

உள்பக்கம் பார்த்தால் வாயிலின் இருபுறமும் கற்றூண்களைக் கொண்ட மண்டபங்களும், அதனை ஒட்டிய அறைகளும், படைவீரர்கள் தங்குவதற்கும் எதிரிகள் வரும்போது பாய்ந்து தாக்குவதற்கும் ஏற்றவாறு அமைக்கப்பட்டுள்ளதை உணரலாம். காவலர் தங்கவும் மண்டபம் பயன்பட்டிருக்கும்.

வேலூர் வாயிலின் இரண்டாவது மண்டபத்தில் கிழக்கு வாயில் நிலையில் தூணிலிருந்து வெளிப்படும் நரசிங்க மூர்த்தியின் திருவுருவம் மிக நேர்த்தியாக உருவாக்கி வைத்துள்ளனர். நாயக்கர் காலச் சிற்பிகளின் கருத்தையும் கலை நேர்த்தியையும் இச்சிறிய சிற்ப அமைப்பிலும் கண்டு வியக்கிறோம்.

இதன் மீதுள்ள முதல் நிலை மண்பமும் சிறந்த முறையில் தோற்றமளிக்கிறது. இவ்வழியும் தற்சமயம் அதிக உபயோகத்தில் இல்லை. உல்லாசப் பயணிகள் இந்த அரிய, அழகிய கோட்டை வாயிலைத் தவறாமல் பார்க்கவேண்டும். இதைப் பார்த்து கோட்டைவாயில் கட்டட அமைப்பை நன்கு அறிந்து கொள்ளவேண்டும்.



வேலூர் வாயில்



## புதுச்சேரி வாயில்
### அல்லது
## 'டெல்லி' வாயில்

இந் நுழைவாயில் வெளிக்கோட்டையின் கிழக்குமதிலில் அமைந்துள்ளது.

கிழக்கிலுள்ள வெளிக் கோட்டைச் சுவரை ஒட்டி, அகழியடுத்துள்ள மேடாகவுள்ள பாதையில் இருந்து இதன் உள்ளே நுழைவதற்கு வட புறம் வாயிற்படி அமைந்துள்ளது.

உள்ளே நுழைந்தால் அரை வட்ட வடிவமாக அமைக்கப்பட்ட கட்டடம் தெரிகிறது. தூண்கள் கொண்ட மேடையுள்ளது. தூண்களில் வைணவத் திருச்சின்னங்களும் காணப்படுகின்றன. தூண்களின் மீது குறைந்த உயரமுள்ள தளத்துடன் கூடிய மாடி அமைப்பு காணப்படுகிறது.

கோட்டையின் உட்புறமிருந்து கிழக்கில் நுழைய, மேற்கில் அமைந்த வாயிற் படியின் மூலம் செல்லவேண்டும்.

இவ்வாயிலை ஒட்டித் தென்புறத்தில் ஏறிச் செல்லும் படிகள் அமைந்த தாழ்வான கூரையைக் கொண்ட சிறைச்சாலை புதுமையானது. இது உயரமான கோட்டை மதிற்சுவரோடு இணைத்துக் கட்டப்பட்டுள்ளது. சிறைபோன்ற உயரம் குறைந்த அறையின் அமைப்பு வெளியே தெரியாத வண்ணம், வாயிலின்வட்டமான கட்டடப் பகுதியிலேயே அடங்கியுள்ளது. இது ஒரு சிறப்பான அம்சம் ஆகும்

இதிலுள்ள சிறையில் அடைக்கப்படும் கைதிகள் நிமிர்ந்துநிற்க முடியாது; குனிந்த நிலையிலேயே இருக்கவேண்டும்.

வடமேற்கில் ஓர் அறையின் மேல்தளம் ஒரே கற்பலகையால் மூடப்பட்டுள்ளது காணத்தக்கது. வடக்கு வெளி வாயிலில் பாரசீகமொழிக் கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது. சாதத்துல்லாகான் கி. பி. 1712—13இல் இக்கோட்டையைக் கைப்பற்றிய விவரம் இக்கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாயிலுக்கு வெளியில் அகழிப் பாதை தற்சமயம்(காலத்தினால்)மறைந்து போய்விட்டது. இப்போதுள்ள வழி அதிக உபயோகத்தில் இல்லை. ஆயினும் வருடத்தில் ஒருமுறை இராஜகிரி மலைமீது கொண்டாடப்படும் 'கமலக்கண்ணி அம்மன்' திருவிழாவின்போது ஊர் மக்கள் இவ்வழியையே இன்றைக்கும் பயன் படுத்துகின்றனர்.

செஞ்சிக்கோட்டை



பாண்டிச்சேரி அல்லது தில்லி வாயில்

மேற்குப்புறத் தோற்றம்

## திருச்சிராப்பள்ளி வாயில்

மிகவும் சாதாரண கட்டடக் கலையில் மரக்கதவுடன் அமைந்துள்ளது இவ் வாயில். உள்கோட்டையின் தென்புறத்தில் வேணுகோபாலர் கோயில் அருகே இது அமைந்துள்ளது.

இதைத் 'திருச்சி வாயில்' என்று கூறினாலும் அவ்வூருக்கும் இவ்வாயிலுக்கும் எவ்விதச் சம்பந்தமும் இருப்பதாகத் தெரியவில்லை.

ஏனெனில் உள்கோட்டையில் நெற்களஞ்சியத்திற்கு அருகே உள்ள இவ் வாயில் வழியாக வெளியே சென்றால், இவ்வழி அங்கு அமைந்துள்ள ஏழு கன்னிகைகளுக்கு அமைக்கப்பட்ட கோயில்களையும், செட்டிக்குளம், 'சர்க்கரைக் குளம், ஆஞ்சநேயர் கோயில் முதலான இடங்களை மட்டுமே நாம் அடைய முடியும்.

அதற்கும் அப்பால் 'சக்கிலி துர்க்கம்' மலைத்தொடர் அமைந்துள்ளதால், இவ்வழியாகத் திருச்சிராப்பள்ளிக்குச் செல்வது சாத்தியம் இல்லை என்பதே உண்மை. ஒருவேளை இது திருச்சிராப்பள்ளியிலுள்ள திக்கில் அதாவது தென் புறத்தில் அமைந்துள்ளதால் அப்பெயர் ஏற்பட்டிருக்கலாம்.







## பிற முக்கிய இடங்கள்

### தேசிங்கு ராஜனுடன் அவன் மனைவி உடன்கட்டை ஏறிய இடம்

இராஜகிரிக் கோட்டை முன்புள்ள முகப்புவாயிலருகே 'சாதத்துல்லாகான் மசூதிக்குப் பின்புறமாக அமைந்துள்ள அகழியை ஒட்டியவாறு தெற்கு நோக்கிச் செல்லும் மண்பாதை உள்ளது அவ்வழியே சற்று தூரம் சென்று கோட்டைச் சுவரையொட்டி வலப்புறம் திரும்பி அகழியைத் தாண்டிச் செல்வோமானால், நமது இடப்புறத்தில், செட்டிக்குளத்து வடகரையில் மேடை ஒன்றுள்ளது.

இந்த இடத்தில் தேசிங்கு ராஜனின் உடல் தகனம் செய்யப்பட்டு அவன் மனைவியும் உடன்கட்டை ஏறியதாகக் கூறுவர்.

செஞ்சியிலிருந்து வேலூர் செல்லும் சாலையில், 7 கி. மீ. தொலைவில் நீலாம்பூண்டி எனும் ஊர் உள்ளது. சாலைக்குத் தென்புறம் உள்ளடங்கியதாகக் கடலி என்ற இடத்தில் தேசிங்கு குண்டடி பட்டு விழுந்து இறந்தான். ஆனாலும் அவனது உடலை 'சாதத்துல்லாகான்' அரசு மரியாதைகளுடன் கொண்டு வந்து செஞ்சிக் கோட்டைக்குள் இருந்த தேசிங்குராஜனின் மனைவியிடம் ஒப்படைத்தான் எனத் தெரிகிறது.

பிறகு மேற்கூறிய இடத்தில் அவனது உடல் தகனமும், அரசி உடன் கட்டை ஏறுதல் ஆகிய இரு நிகழ்ச்சிகளும் நடைபெற்றன என்றும் கூறப்படுகிறது

இம்மாவீரனுக்குப் புகழஞ்சலிகள் செலுத்தி நிற்கும் நேரத்தில், அவன் மண்ணில் கலந்த இவ்விடத்தை மங்கிய நிலையில் வைத்திருக்கின்றோம் என்ற எண்ணம், கவலை நமக்குத் தோன்றுவது இயற்கையே.

## ஏழு கன்னியர் கோயில்கள்

இதற்கு அடுத்தாற்போல ஆங்காங்கே தனித்தனியே தென்புறக் கோட்டைச் சுவரையொட்டி அலங்கத்தில் அமைந்துள்ள சிற்றாலயங்கள் ஏழு கன்னியருக் கானவையாகும். இவற்றில் தற்சமயம் எஞ்சியுள்ளவை நான்கேயாகும். மற்றவை அழிக்கப்பட்டு விட்டன என்பதும் இருப்பவையும் சேதமடைந்த நிலையிலேயே உள்ளன என்பதும் கண்கூடு.

கருங்கல் கட்டடங்களும் சுதை விமானங்களும் கொண்ட இவை, சிறியவையேயாயினும் கலையழகு பொருந்தியவையாகும்.

செஞ்சியில் ஏழு கன்னிகைகளுக்கான கோயில்கள் ஏழு பகுதிகளில் தனித் தனியே அமைந்துள்ளல். அவை தவிர, இங்கு ஏழு கன்னியருக்கும் ஒரே இடத் தில் அமைக்கப்பட்ட கோயில்கள் இவை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## காளியம்மன்

இதையும் தாண்டிப் பாதையில் முன்னே சென்றால் குளக்கரையில் வலது புறமாகச் செல்லும் குறுகிய பாதை மூலம் நாம் மலை அடிவாரத்திலிருக்கும் 'செஞ்சி அம்மன்' கோயில் என்னும் சிறிய கோயிலை அடையலாம். கருவறை, மண்டபம், விமானம் போன்ற பகுதிகள் இல்லாவிடினும் இவ்வம்மனை ஊர்மக்கள் வழிபட்டு வருகின்றனர்.

## செட்டிக்குளம், சர்க்கரைக்குளம்

வீர அநுமார் கோயிலுக்குச் செல்லும் பாதையின் இருபக்கமும் உள்ள இயற்கையான நீர்நிலைகள் இரண்டும் செட்டிக்குளம், சர்க்கரைக்குளம் என்று அழைக்கப்படுகின்றன. இவற்றில் எப்போதும் நீர் வற்றாமல் இருக்கும். செஞ்சி மக்கள் தினமும் இங்கே வருகை தந்து, இக்குளங்களை நன்கு பயன்படுத்திக் கொள்கின்றனர்.



## கிருஷ்ணாபுரம் சமணர் கோயில்

கிருஷ்ணகிரி மலையின் கிழக்கேயுள்ள கிருஷ்ணாபுரத்தில் சமணர் கோயில் ஒன்று உள்ளது. இதன் கட்டடக்கலையைக் கொண்டு இது 16-17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதலாம்.

இக்கோயிலில் சிலை எதுவும் இல்லை. கருவறை,அர்த்த மண்டபம், மகாமண்டபம் மற்றும் முக மண்டபம் ஆகிய பகுதிகளைக் கொண்ட இக்கோயிலின் தென்கிழக்கு மூலையில் சேதமடைந்த மண்டபம் ஒன்றும் உள்ளது.

மகாமண்டபம் வரையிலான பகுதியைச் சுற்றியும்சுவர்கொண்டு மூடப்பட்டு முகமண்டபம் மட்டும் திறந்த மண்டபமாக உள்ளது. இம்முகமண்டபத்தூண் ஒன்றில் சமண முனிவர் கும்பிட்ட கைகளுடன் நின்ற கோலத்தில் புடைப்புச்சிற்ப வடிவில் காட்சியளிக்கிறார்.

மற்றொரு தூணில் கொடிச் சீலை என்னும் அஷ்டமங்கலத்தில் ஒரு மங்கலச்சின்னம் சிற்பவடிவில் அமைந்துள்ளது.

கோயிலின் உட்புறங்களில் ஓவியங்கள் இருந்ததற்கான சுவடுகள் தெரிகின்றன. கருவறையின் பின்சுவரிலும் ஓவியம் இருந்திருக்க வேண்டும் என்பதை அங்குள்ள வண்ணங்களும் சிதைந்த சித்திரமும் விளக்குகின்றன.

இக்கோயில் மிகவும் சிதைந்த நிலையில் கேட்பாரற்றுக் கிடக்கிறது என்பதை நினைக்கையில் மனம் வேதனையடைகின்றது.

## சக்கரவரம் (சக்கராபுரம்)

செஞ்சியின் ஒரு பகுதியான சக்கராபுரம் மிகப்புராதனமான இடமாகும். இங்கு இன்றும் சமணர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

சுற்றுப்புறத்தில் உள்ள சமணர் கோயில்கள் சிலவற்றிலிருந்து சமண முனிவர்களின் ஐம்பொன்சிலைகள் மற்றும் அனந்த தீர்த்தங்கரர் என்ற சிலை முதலியவைகளடங்கிய புதிய கோயில் ஒன்று உருவாகி வருகின்றது.

செஞ்சியிலிருந்து 15 கி. மீ. தொலைவிலுள்ள அகலூர் மலையிலிருந்து 1947 ஆண்டில் அனந்த தீர்த்தங்கரர் சிலை இங்குக் கொண்டு வரப்பட்டது என்பர்.

இளஞ்சிங்கமெனும் தேசிங்கு ராஜனின் (கற்பனை உருவம்)



# தேசிங்கு ராஜன் வரலாறு

சாதாரணமாகவே குழந்தைகள் துடுக்காக இருந்தால் புகழ்கிறோம், மகிழ்கிறோம். அதிலும், அவை அதிசயிக்கத்தக்க செயல்களைப் புரிந்துவிட்டால் பாராட்டுகிறோம், பரவசம் அடைகிறோம். அதே குழந்தை மாவீரர் பலராலும் சாதிக்க முடியாத வீரச்செயல்களைச் செய்து முடிக்கும்போது மாநிலமே போற்றிப் புகழும் என்பது கண்கூடு· இத்தகைய வீரச்செயலுக்கு உதாரணமாகப் புராணத்திலிருந்தும் சரித்திரத்திலிருந்தும் பல நிகழ்ச்சிகளைக் கூறலாம்.

'பாரத தேசம்' எனப் பெயர் வரக்காரணமாக இருந்த துஷ்யந்தனின் மகனான 'பரதன்' சிறுவயதிலேயே சிங்கத்தின் பிடரியைப் பிடித்து விளையாடினான் என்ற சரித்திரத்தைக் கேட்கும்போது அச்செயலைப் புரிந்தவன் சிறுவன் என்பதனால் பெருமிதமடைகிறோம்.

'துருவன்' என்ற குழந்தை சிறுவயதிலேயே காட்டிற்குச் சென்று தவம் செய்து வரம் பெற்று இன்றைக்கும் நட்சத்திரமாக விளங்குகிறான் (துருவ நட்சத்திரம்) என்ற புராணக்கூற்றைக் கேட்டுஅதிசயிக்கிறோம். ஏன்?அச்செயலைப் புரிந்தவன் ஒரு சிறுவன் என்பதால்!

அதேபோல மற்றொரு புராணக் கதையில் 'பிரகலாதன்' என்ற சிறுவன் கம்பத்தில் [தூணில்] கடவுளை வரவழைத்துக் காட்டினான் என்று அறியும்போது அக்குழந்தையின் உறுதியான பக்தியை நினைத்துப் பரவசமடைகிறோம்.

பாரதப்போரில் அர்ஜுனன் காட்டிய வீரத்தைக் காட்டிலும் சிறுவனாக இருந்த அபிமன்யுவின் வீரமே மிகவும் போற்றப்படுகிறது.

சைவ சமய அடியார்கள் அறுபத்து மூவரில் நால்வரைச் சிறப்பாகக் கொண்டாடுகிறோம். அந்நால்வரிலும் 'திருஞானசம்பந்தரை' நாம் அதிகம் விரும்பிப் போற்றுதற்குக் காரணம், அவர் குழந்தையாய் இருந்தபோதே குளக்கரையில் 'தோடுடைய செவியோனைப்' பாடும் சக்தி பெற்றதுதான்.

அதேபோல் கடவுள்களை எடுத்துகொண்டாலும்கூட குழந்தையாக இருந்தபோதே அர்த்தமுள்ள குறும்புகள் பலவற்றைப் புரிந்த 'கண்ணனும்', 'குமரனும்' மிகவும் விரும்பிப் போற்றப்படுகின்றனர் என்பது நாம் அனைவரும் அறிந்ததே.

அவ்வளவு ஏன்? கிரிக்கெட் பந்தயத்தில் விளையாட்டு வீரர்கள் பலர், பல சாதனைகள் புரிந்திருந்தாலும், சமீபத்தில் வேகப்பந்து வீச்சாளர்களைச் சமாளித்து சதம் எடுத்த நமது இளம் 'டெண்டுல்கரை' உலகம் போற்றிப் புகழுரை பாடியது என்றால், அச்சாதனையை அவர் தனது 16 ஆம் வயதிலேயே புரிந்தார் என்பதால்தான்.

ஆகவே சிறு வயதில் செய்யப்படும் சாகசங்களும், சாதனைகளும், செய்தவர் யாராயிருந்தாலும், அவர்களைப் போற்றிப் புகழ்வது உலக மரபு.

இந்நிலையில் நோக்கும்போது தேசிங்குராஜன் தனது 16 வயதிலேயே வீரதீரச் செயல்கள் பல புரிந்ததனால் மக்கள் நெஞ்சில் அவன் பெயர் நிலைத்து நிற்கின்றது என்பது புலனாகும்.

நாட்டுப்புறப் பாடல்கள் பல அவனது அல் வீரத்தைப் போற்றிப் பாடப் பட்டுள்ளன என்பதைக் கண்கூடாகக் காண்கிறோம்.

இனி அவனது சரித்திரத்தையும் செய்த சாகசங்களையும் காணலாம்

செஞ்சி என்ற ஊரின் பெயரைக் கூறினால், நம் நினைவுக்கு வருபவன், தேசிங்குராஜனே ஆவான்! இன்னும் சொல்லப்போனால் அவனால் கட்டப்படா விட்டாலும்கூட இக்கோட்டையைத் 'தேசிங்குராஜன் கோட்டை' என்றே இன்றும் பலர் அழைக்கின்றனர்.

ஆயினும், இவன் அரசாண்ட காலம் பத்து மாதங்கள் மட்டுமே. இக்குறுகிய காலத்தில், இக்கோட்டை அமையக் காரணமாயிருந்த ஏனைய அரசர்களைக் காட்டிலும் தேசிங்குராஜனின் பெயர்மட்டும் நம் நினைவில் நிற்கிற தென்றால், அதற்கு ஏற்கனவே நாம் கூறியபடி சிறுவயதிலேயே அவன் புரிந்த வீரதீரச் செயல்களேயாகும்.

மொகலாயத் தளபதிகளில் ஒருவரான சொரூப்சிங் ஓர் இராஜபுத்திர வீரராவார். இவரால் தென்னாட்டில் கிடைத்த வெற்றியை மெச்சியே கி.பி. 1700 இல் இவரை இச் செஞ்சியின் அரசராக (மேலதிகாரியாக) டில்லிப் பேரரசு நியமித்தது.

அக்காலத்தில் டில்லியை ஆண்டுவந்த பாதுஷாவின் கீழ் சிற்றரசர்கள் பலர் இருந்து வந்தனர். செஞ்சிக்கு அரசரான சொருப்சிங்கும், அதைச்சுற்றியுள்ள பாளையங்களுக்குரிய மன்னர்களும், டெல்லி பாதுஷாவிற்கு ஆற்காட்டு நவாபின் மூலம் கப்பம் கட்டி வந்தனர்.

தன் மனைவி ராமாபாயுடனும், குழந்தை தேசிங்குடனும் செஞ்சியை ஆண்டுவந்த சொருப்சிங் இந்து முஸ்லீம்கள் ஒற்றுமையாக வாழும்படிச் செய்திருந்தான்.

சிறு வயது முதலே தேசிங்கு, வீர விளையாட்டுகளில் ஆர்வம் உள்ளவனாயிருந்தான். ஆயுதங்களே இவனுக்கு விளையாட்டுப் பொருள்களாயிருந்தன. வழுதாவூரைச் சேர்ந்த முகமது கான் என்பவன் தேசிங்கின் சிறுவயது நண்பன் ஆவான். இருவரும் ஒன்றாகவே விளையாடி, கல்வியிலும், போரிலும் வீர விளையாட்டுகளிலும் சிறந்து விளங்கினார்கள்.

பிரெஞ்சுவீரன் கொண்டு வந்த சிங்கத்தை ஒடுக்கியதாகவும், பதினாறு வயதிலேயே தேசிங்கு வேங்கையை அடக்கியதாகவும், வீரம் பேசி வந்த அயல் நாட்டு வீரர்களை வென்றதாகவும் அவனைக் குறித்து சரித்திரம் புகழ்கிறது.

(தேசிங்கின் கதை என்று 5, 6 நூல்கள் காணப்படுகின்றன. அவற்றில் அவனது வயது, மரணம் பற்றிய காலங்கள் மாறுபாடாகவே உள்ளன.)

இந்நிலையில் டெல்லி பாதுஷாவிற்கு, துருக்கியிலிருந்து பாராசாரி என்ற அதிசயக் குதிரை ஒன்று பரிசாகக் கிடைத்தது. அக்குதிரையை அடக்கி அதன்மீது சவாரி செய்ய யாராலும் முடியவில்லை.

குதிரைச் சவாரியில் தேர்ந்தவரான தேசிங்கின் தந்தை சொருப்சிங் குதிரையை அடக்க டெல்லிக்கு வரவழைக்கப்பட்டர். ஆனால் அவராலும் அக்குதிரையை அடக்க முடியவில்லை. குதிரையை அடக்காமல் நாடு திரும்புவதில்லை என்று அவர் டெல்லியிலேயே தங்கிவிட்டார்.

கணவர் திரும்பி வராத நிலையில் ராமாபாயின் உடல்நிலை குன்றியது. காரணத்தைக் கேள்வியுற்ற சிறுவன் தேசிங்கு, எப்படியும் குதிரையை அடக்குவது என்ற தீர்மானத்துத் தன் தோழன் முகமதுகானுடன் டெல்லிக்குச் சென்றான்.

டெல்லி பாதுஷாவிடம் நேரில் சென்று குதிரையைத் தான் அடக்கப் போவதாகக் கூறினான். பாதுஷாவும் மற்றவர்களும் முதலில் பயந்தனர். பின்பு வியந்தனர்.

---

இப் பகுதி செவிவழிச் செய்திகளே; சரியான வரலாறில்லை.

'பச்சிளம் பாலகனால் பாராசாரிக் குதிரையை அடக்க முடியுமா? பாய்ந்து வரும் குதிரையைப் பதினாறு வயதும் நிரம்பாத சிறுவனால் பணியவைக்க முடியுமா?' எனப் பரிகசித்தனர்.

சீறிவரும் சிங்கம் போன்ற குதிரையை இச்சிறுவனால் சினம் தணிவித்துச் செலுத்த முடியுமா என்று சிரித்துப் பேசலாயினர்.

எனினும் சிறுவன் தேசிங்கு மன உறுதியுடனும் நிதானத்துடனும் குதிரையைக் கொண்டு வரச் சொன்னதைக் கண்டு, வாய்ப்பேச்சடைத்து செயலில் ஈடுபட்டனர். பாராசாரிக் குதிரையைப் பலர் பிடித்தவாறு அழைத்து வந்தனர்.

தேசிங்கு மிகவும் லாவகமாக அக் குதிரைமீது தாவி ஏறி, 'சிமிட்டா' கொடுத்து அதை அடக்கினான்.

'பாராசாரியைச் சலாம் வாங்கிப் பாய்ந்தேறினானாம்,
ஏறின உடனே பாராசாரி யென்ன செய்யுது பார்!
தட தட வென்று தவிக்குது பார், அந்தக் குதிரைதானும்

கிடுகிடு வென்று கிளம்பிக் குதிக்குது அந்தக் குதிரைதானும்
லகானை இழுத்துக் கையிலே பிடித்தான் ராஜாதேசிங்கு'

என்னும் பழைய நாட்டுப்பாடல் பகுதி இதைக் குறிக்கின்றது. பின்பு அக்குதிரை தேசிங்குக்கே பரிசாகத் தரப்பட்டது. அதேபோல் முகமதுகானுக்கு நீலவேணி என்ற குதிரை பரிசாக அளிக்கப்பட்டது.

இச்சம்பவத்தையும் தேசிங்கின் வீரச் செயலைப் பற்றியும் விளக்கும் நாட்டுப்பாடல் வருமாறு:-

## குதிரையின் மீது தேசிங்கு

'குதிரை தட்டின வேகத்தாலே குழந்தை தேசிங்கு
குலுங்க நகைத்துச் சிமிட்டா கொடுத்தான் குதிரைக்கானாலும்
நிமிஷ நாழிகைக்கு ஐநூறு காதம் நிலையாய்ப் பறக்குது
ஊரைச்சேர்ந்த காடுமலைகள் ஒதுங்கி கடக்குதுபார்
குன்றிலிருக்கும் சிங்கம் யானை குலுங்கி நடுங்குது பார்
தேசத்திலிருக்கும் ஜனங்களெல்லாம் திரண்டு நடுங்குது பார்...'

## குதிரையை அடக்கி இறங்குதல்

‘ போன உடனே தேசிங்கு பாலன் புரவியை என்ன செய்தான்
மெள்ள சிமிட்டா கொடுத்துக்கொண்டு பாலன் வாரானே
பக்கஞ் சிமிட்டா கொடுத்துக்கொண்டு பாலன் வாரானே
கலகல கலகல கலகல வென்று கனைத்து வருகுது பார்
கனைத்த சத்தத்தைக் காதிலே கேட்டார் கன்னடதேசத்தார்
ஐம்பத்தாறு தேசராஜரும் ஆகாயமே பார்த்தார்
சூரியனைப் போல் துலங்கி வருகுது சொர்ணமேகக் குதிரை
சந்திரனைப் போல தகதகவென்ன சாரி வருகுது பார்
வருகிற பாலனைக் கண்ணால் கண்டு மகிழ்ச்சியடைந்தார்கள்
தேரணி ராஜனும் டில்லிப துரையும் தேடித் ஓடி வந்தார்!...

டில்லி சேனைத் தலைவர் *பீம்சிங்கின்* மகளான *ராணிபாயைத்* தேசிங்குக்கு மணமுடித்து வைத்தனர். இவ்வளவையும் அவன் செய்து முடித்தது தனது 15 ஆவது வயதிலேயே ஆகும். பிறகு தந்தை, நண்பன் மற்றும் மனைவியுடன் தேசிங்கு ஊர் திரும்பினான்.

கி. பி. 1714 இல் சொரூப்சிங் இயற்கை எய்தினார். தேசிங்கு ஆட்சிப் பீடத்தில் ஏறினான். அது முதல் அவன் ‘ராஜா தேசிங்கு’ என அழைக்கப்பட்டான்.

டில்லி பாதுஷாவுக்குக் கப்பம் கட்டி அடிமை அரசனாக வாழ அவன் விரும்பவில்லை. கப்பம் கட்ட மறுத்தான் தேசிங்கு. இதனால் ஆர்க்காட்டு நவாப் சாதத்துல்லாகான் என்பவனுக்கும் ராஜா தேசிங்குக்கும் பெரும் பூசல் ஏற்பட்டது.

ஆர்க்காடு நவாப் செஞ்சியின் மீது முன் அறிவிப்பின்றி படையெடுத்து வந்தான். அச்சமயம் ராஜா தேசிங்கின் நண்பனான முகம்மதுகான். தன் திருமணத்தின் பொருட்டுச் சொந்த ஊரான வழுதாவூருக்குச் சென்றிருந்தான். நவாப்பின் படையெடுப்பை அவன் கேள்வியுற்றுத் தன் திருமணத்தைநிறுத்திவிட்டு உடனே குதிரை மேலேறி செஞ்சி வந்து சேர்ந்தான்.

தேசிங்கிடம், ‘முதலில் வெற்றி, பிறகு திருமணம்!’ என்று முகமதுகான் [மகமத்கான்] கூறிப், புயல் வேகத்தில் போர்க்களம் புகுந்தான். எதிரிகள் அவன் வாள் வீச்சிற்கும் வேகத்திற்கும் ஈடுகொடுக்க முடியாமல் தத்தளித்தனர். வெற்றி வாகைசூடி அச்செய்தியை அறிவிக்க முகம்மதுகான் அரண்மனை திரும்பினான்,

அப்போது, கொடியவன் ஒருவன் போர்மரபை மீறி மகமத்கானை மறைந்திருந்து கொன்றான்.

தோழனின் மரணச் செய்தியைக் கேட்டுத் துயர்கொண்ட ராஜாதேசிங்கு பகைவரின் சூழ்ச்சியை முறியடிக்கத் தனது பஞ்சகல்யாணி என்ற குதிரையின் மீது ஏறிப் போர்க்களம் நோக்கிப் புயலெனப் புறப்பட்டான்.



## ராணியிடம் விடை பெறுதல்

அது நாள் வரை தன் இளம் மனைவியின் முகம் பாரா திருந்த தேசிங்கு, போருக்குப் புறப்படும் போது, அவளது இருப்பிடம் சென்று, அவள் முகம் பாராம லேயே விடை பெற்றுக் கொண் டான்.

தேசிங்கு போருக்குப் புறப் பட்டதைக் கேள்வியுற்ற சாதத் துல்லாகானின் படைகள் கலங்கி நின்றன.

நவாபைச் சேர்ந்தோர் மேல்மலையனூர் ஏரி, தேவனூர் ஏரி ஆகியவைகளின் கரைகளை உடைத்து, சங்கராபரணி யாற்றில் வெள்ளம் பெருக்கோடச் செய்து, தேசிங்கு அதைக் கடந்து வர முடியாதவாறு தடை செய்ய முயன்றனர்.

ஆயினும் இதையெல்லாம் துச்சமாக மதித்து, தேசிங்கின் குதிரை பறந்து வந்தது. தடைகளைக் கடந்து நீலாம்பூண்டி என்னும் இடத்தில் அமைந்திருந்த நவாப்பின் முகாமை நோக்கிச் சென்ற குதிரையின் கால்கள் பகைவன் ஒருவனால் வெட்டப்பட்டது. கீழே விழுந்த குதிரைமீது இருந்து தேசிங்குராஜன் பாய்ந்து எழுந்தான்.

ஆயினும் முகாமில் இருந்து வெடித்த பீரங்கிக் குண்டுக்கு அவன் பலியானான்.

நடு நடுங்கிப் போயிருந்த நவாப், தேசிங்குராஜனின் உடலை உரிய மரியாதையுடன் செஞ்சிக்கு எடுத்துச் சென்று முறைப்படி இறுதிச் சடங்குகள் செய்வித்தான்,

கணவனின் உயிர் பிரிந்ததைக் கேள்வியுற்ற அவனது இளம் மனைவி ராணிபாய் கணவனுடன் உடன் கட்டை ஏறி உயிர் நீத்தாள்.

நவாபு, இளம் வயதுடைய ராணிபாயின் கற்பையும் தீரத்தையும் வியந்து போற்றும் வகையில், பாலாற்றின் மறு கரையிலுள்ள ஆர்க்காட்டின் பகுதிக்கு அவள் பெயரிலேயே 'ராணிப்பேட்டை' என்று பெயரிட்டதாகக் கூறுவர். ஆயின் இது பொருத்தமாகத் தெரியவில்லை.

இவ்வாறு வீரசிங்கமாக விளங்கிய தேசிங்குராஜனைப் பற்றிக் கூறும் நாட்டுப் புறப் பாடலில் சில வரிகள் வருமாறு:-





# தேசிங்கு ராஜன் கதை

## தேசிங்கு போரிடுதல்

கனைத்துக் கதும்பி எழுந்தானையா
ராஜா தேசிங்கு
பரத நாட்டியம் ஆடி வருகுது
பாரா சாரி குதிரை ...

குதிரைச் சேனைக்குச் சைகை ஊதினான்
தாவுத்துக் காரனும்
ஊதிய வுடனே சூழ்ந்து கொண்டார்கள்
சிப்பாய் மார்களும்
முப்பதினாயிரம் குதிரை வளைத்தன
ராஜாவை, ஆனாலும் ...

இரண்டு கையிலே பட்டா வாங்கினான்
ராஜா தேசிங்கு! ...

துண்டு துண்டாய்த் துரத்தி வெட்டினான்
ராஜா தேசிங்கு!...
நெருப்பு மாரியாய்ப் பொழிகிறான் ஐயா
தாவுத்துக் காரனும்,
அந்தக் குண்டுக்குத் தப்பி வருகுது ஐயா
பாரா சாரிக் குதிரை!
குண்டுக்கு மேலே பறக்குது ஐயா
பாரா சாரிக் குதிரை!
வாழைத் தண்டை அறுத்தாற் போல
அறுத்துப் போடுகிறான்
இனியிங் கிருந்தால் பிழைக்கமாட்டோம்
தேசிங்கு முன்னாலே!
என்றே கள்ளக் குறிச்சிக் கோடிப்
போகுது பாளையமும்
ஆரணிக் கோட்டைக் கோடிப் போகுது
நவாபு பாளையமும் ...

## ராஜாதேசிங்கு உயிர் பிரிந்த இடம்

செஞ்சியிலிருந்து ஆர்க்காடு செல்லும் சாலையில் ஏழு கிலோ மீட்டர் தூரத்தில் *நீலாம்பூண்டி* என்ற ஊர் உள்ளது. இதன் தென்புறம் சற்று உள்ளடங்கி *கடலி* என்ற சிற்றூர் அமைந்துள்ளது. இவ்வூர் பிற்காலத்தில் ஏற்பட்ட ஊராகும்.

இப்பகுதியில்தான் 280 ஆண்டுகளுக்குமுன் (கி. பி. 1714 இல்) ஆற்காட்டு நவாபான சாதத் துல்லாகான் படைகளும் தேசிங்குராஜன் படைகளும் மோதிப் போர் புரிந்தன.

ராஜாதேசிங்கு வீழ்ந்து உயிர்விட்ட இடம், இவ்வூரில் இப்போது அழிந்த நிலையில் ஒரு கல்திட்டு மேடை போன்று காட்சியளிக்கிறது.

இந்த இடத்திற்கு வடமேற்கில் அமைந்துள்ள மொட்டை செட்டிக் குளம் என்னும் பெயரில் உள்ள ஓர் பெரிய குளக்கரையின் கிழக்கில், ராஜா தேசிங்கின் உயிர்த்தோழனும் அவனது தளபதியுமான மகமத்கான் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ள இடம் உள்ளது. இது சுற்றுச்சுவர் எழுப்பப்பட்டு முஸ்லீம் மக்களால் நன்கு போற்றப்பட்டு வருகிறது.

இச் சமாதிக்கு வடக்கே அவனது நீலவேணி குதிரைக்கும் ஒரு சமாதி அமைந்துள்ளது. இது, செவ்வக வடிவில் சிதைந்த நிலையில்தோற்றமளிக்கிறது.



## செஞ்சியில் சிதறிய சில முத்துக்கள்

1 செஞ்சி என்ற பெயர் அருகில் உள்ள சிங்கவரம் என்ற பெயர் மாற்றத்தில் ஏற்பட்டது; அல்லது ஏழு கன்னிகைகளில் ஒரு தெய்வ மான செஞ்சியம்மன் என்ற பெயரிலிருந்து ஏற்பட்டது.

2 செஞ்சிக் கோட்டையை அமைத்த கிருஷ்ணப்ப நாயகன் பெயரால் கிருஷ்ணாபுரம் என வழங்கி வந்தது. இன்றைக்கும் ஊரின் ஒருபகுதி 'கிருஷ்ணாபுரம்' என்றே அழைக்கப்பட்டு வருகிறது.

3 பிஜப்பூர் சுல்தான்களின் காலத்தில் (கி. பி. 1660-77) இவ்வூர் 'பாதுஷாபாத்' என அழைக்கப்பட்டு வந்தது.

4 மராட்டியர் காலத்தில் இவ்வூர் சங்கிரி அல்லது சிண்டி என வழங்கப் பட்டது.

5 முகலாயர் காலத்தில் கி. பி. 1698இல் இவ்வூர் 'நசரத் கட்டா' (Nasarat Gaddah) என நசரத் ஜங் என்பவனின் பெயரால் வழங்கப்பட்டது.

6 பிரெஞ்சியர் மற்றும் பரங்கியர் காலத்தில் சின்ஞ்சி (Sinji) அல்லது ஜிஞ்சி (Jinji) என வழங்கப்பட்டது.

7 தற்போது செஞ்சி (Gingee) என அழைக்கப்படுகிறது.

## வரலாற்றில் செஞ்சி!

| | | |
|---|---|---|
| கி. மு. இரண்டாம் நூற்றாண்டு முதல் கி. பி. 6ஆம் நூற்றாண்டுவரை | : | சமணர்களின் உறைவிடம் |
| கி பி. 600 முதல் கி. பி. 900 வரை | : | பல்லவர் ஆட்சி |
| கி. பி. 900 முதல் கி. பி 1190 வரை | : | சோழர்கள், ராஷ்டிர கூடர்கள் ஆட்சி |
| கி. பி. 1190 முதல் 1330 வரை | : | கோனார் பரம்பரையினர் ஆட்சி |
| கி. பி. 14ஆம் நூற்றாண்டில் | : | ஹொய்சாளர் ஆட்சி |
| கி. பி. 14ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் | : | கோபண்ணராயர், வையப்ப நாயகர் (விஜயநகர அரசனின் ஆட்சி) |

| | |
|---|---|
| **கி. பி. 1490-1521** | : துபாகி கிருஷ்ணப்ப நாயக்கர் (செஞ்சி நாயக்கர் ஆட்சியை நிறுவியவர்.) |
| **கி. பி. 1520 முதல் 1540 வரை** | : அச்சுத விஜய ராமச்சந்திர நாயக்கர் |
| **கி. பி. 1540 " 1550 ''** | : முத்தியால் நாயக்கர் |
| **கி. பி. 1570 " 1600 ''** | : வெங்கடப்ப நாயக்கன் |
| **கி. பி. 1600 " 1620 ''** | : வரதப்ப நாயக்கன் |
| **கி. பி. 1620 " 1649 ''** | : அப்பி நாயக்கர் |
| **கி. பி. 1649 டிசம்பர் முதல் 1677 வரை** | : பிஜப்பூர் சுல்தான்களின் ஆட்சி |
| **கி. பி. 1677இல்** | : சத்ரபதி சிவாஜி படையெடுப்பு; ஆட்சி. |
| **கி. பி. 1698இல்** | : முகலாயரின் படையெடுப்பு; ஜுல்பிர்கான் கான் என்ற ஔரங்கசீப்பின் தளபதி செஞ்சியின் ஆட்சியைக் கைப்பற்றுதல். |
| **கி. பி. 1700இல்** | : பண்டேல்கண்டின் தளபதியான சொரூப்சிங் என்பவனிடம் செஞ்சியின் ஆட்சி ஒப்படைக்கப்பட்டது. |
| | நவாப் தாவூத்கான், தலைநகரை செஞ்சியில் இருந்து ஆர்க்காட்டிற்கு மாற்றுதல். |
| **கி. பி. 1708இல்** | : முகம்மது சாயித் என்ற சாதத்துல்லாகான்எனும் தாவூத்கானின் திவான் பவுஜ்தாரராக நியமிக்கப் பட்டான். |

| | | |
|---|---|---|
| கி. பி. 1714 இல் | : | ராஜா சொருப்சிங் இயற்கை எய்தினான். நவாபுக்கு இவன் கட்ட வேண்டிய பாக்கி கப்பத் தொகை ரூபாய் 70 லட்சம் எனக் கூறப்பட்டது. |
| | | ராஜாதேசிங்கு அரசனாதல். நவாபுக்கு அவன், அடிமைத் தனத்தை எதிர்த்துக்கப்பம் கட்ட மறுத்தான். |
| கி. பி. 1714 டிசம்பர் 3ஆம் தேதி | : | சாதத்துல்லாகான் செஞ்சியின் மீது படையெடுத்து இளஞ்சிங்கம் தேசிங்குராஜனை மரணமடையச் செய்தான். பின்பு நவாப் ஆட்சி. |
| கி. பி. 1750 செப்டம்பர் 11 ஆம் தேதி | : | புஸி என்ற பிரெஞ்சியர் தளபதி செஞ்சி ஆட்சியைக்கைப்பற்றல். |
| கி. பி. 1750 இல் | : | பிரெஞ்சியர்களால் செயின்ட் ஜார்ஜ் மலை மீது (சந்திராயன் மலை) கிறிஸ்துவர் கோயில் கட்டப்பட்டது. இது 1761 இல் ஆங்கிலேயர்களால் தரைமட்ட மாக்கப்பட்டது. |
| கி.பி. 1761 ஏப்ரல், 6ஆம் தேதி | : | செஞ்சிக்கோட்டை ஆங்கிலேய ரின் வசமானது. கேப்டன் ஸ்மித் எனும் ஆங்கிலேயரின் தளபதிஇக் கோட்டையைப் பிரெஞ்சியரிட மிருந்து கைப்பற்றினான். |
| கி.பி. 1780 இல் | : | கர்நாடகத்தின் மீது ஹைதர் அலியின் படையெடுப்பு; ஆயினும் தோல்வி. |
| கி.பி. 1799 | : | ஸ்ரீரெங்கப் பட்டணத்தில் ஆங்கி லேயருடன் ஏற்பட்டபோரில் திப்பு சுல்தானின் தோல்வி; மரணம். |

கி.பி. 1803 — அப்போதைய தென்னார்க்காடு கலெக்டர் செஞ்சிக் கோட்டையை முழுவதும் இடித்துவிடலாம் என்று மேலிடத்திற்கு சிபாரிசு செய்தார். நல்லவேளையாக அப்பரிந்துரை ஒப்புக்கொள்ளப்படவில்லை.

கி.பி. 1800 முதல் 1921 வரை — செஞ்சிக்கோட்டை ஆங்கிலேயர்கள் வசம் இருந்தது.

கி.பி. 1850 முதல் — செஞ்சிக் கோட்டையை உப்பு சேமிக்கும் கிடங்காக மாற்ற பரிந்துரைக்கப்பட்டது. (நடைபெறவில்லை.)

கி.பி. 1860 முதல் — செஞ்சி மிகவும் சுகாதார பாதிப்பு ஏற்பட்டு மலேரியா காய்ச்சல் உற்பத்தி இடம் எனப் பிரகடனம் ஆனது. பின்பு கள்ளர்களின் உறைவிடமாகவும் வனவிலங்குகளின் வாழ்விடமாகவும்மாறியது.

கோட்டைக்குள்ளிருந்தும் கோயில்களிலிருந்தும் கலையமைப்புடன் கூடிய சிற்பங்கள் ஆகியவை பாண்டிச்சேரி போன்ற பிற இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

கி.பி 1867 — கோட்டைச் சுவர்களைக் குறுக்காக இடித்து செஞ்சி- திருவண்ணாமலை சாலை அமைக்கப்பட்டது.

கி.பி. 1921 முதல் — இந்திய அரசுத் தொல்பொருள் ஆய்வுத் துறையின் பராமரிப்பில் வந்தது.

## பொற்காசு



## செப்புக்காசுகள்





முன்புறம் பின்புறம்





முன்புறம் பின்புறம்

செஞ்சி அரசின் நாணயங்கள் கிடைத்திருக்கின்றன.
அவற்றுள் இரண்டின் கோட்டுருவப்படங்கள்இவை.

**சுவைக்க**

**ஒரு செய்தி**

செஞ்சியில் வழிபாட்டில் உள்ள ஏழு கன்னியரைப் பற்றிக் கூறினோம். இவை இராஜகிரி மலைமீதுள்ள கமலக்கண்ணியம்மனோடு, ஊரில் ஆங்காங்கே உள்ள கோயில்களிலுள்ள கன்னியர்களையும் சேர்த்து ஏழு அம்மன் கோயில்கள் எனக் குறிப்பிட்டோம். ஆயினும் இவ்வேழு அம்மன் சிலைகளும் ஒரே இடத்தில் அமைக்கப்பெற்று அவற்றைத் தொன்றுதொட்டு வழிபடும் இருளர் எனும் ஓர் இனத்தார் இன்னமும் இவ்வூரில் வாழ்ந்து வருகின்றனர். இது அதிசயிக்கத்தக்க ஒரு வரலாற்றுச் செய்தியாகும்.

இராஜகிரி மலைப்பகுதியின் பின்புறம் அதாவது மேற்குப்புறம் கிருஷ்ணாபுரம் எல்லைப் பகுதியில் வழுக்கம்பாறை எனும் இடத்தில் பாறை ஒன்றில் ஏழு கன்னியர்களின் திருஉருவங்கள் புடைப்புச் சிற்பங்களாக அமைக்கப் பெற்று இவ்வினத்தவரால் இன்றுவரை வழிபாடு செய்யப்பட்டு வருகிறது. இவர்களின் குலதெய்வம் 'கன்னிமார் அம்மன்' எனக் கூறுவர்.

கன்னிமார் என்பது பொதுவாக ஏழு கன்னியர்களையும் குறிக்கும். ஆயின் இவர்கள், திருவிழாவின்போது மாரியம்மன் சிலை ஒன்றைப் பூஜையில் வைத்து விழாக் கொண்டாடுகின்றனர். இவ்விழா ஒவ்வொரு வருஷமும் ஆடி மாதம் 10 நாட்கள் தொடர்ந்து நடைபெறும். இவ்விழா இம் மாதத்தில் செவ்வாய் அல்லது வெள்ளிக்கிழமை தொடங்கும்.

இத்திருவிழா நடைபெறும் சமயம் இவ்வினத்தவர் அனைவரும் ஒன்று கூடி நாட்டுப்பாடல் போன்றமைந்த பக்திப் பாடல்களை இசையுடன் இணைத்துப் பாடி ஆடித் தொழுது மகிழ்வர்.

இதைப் போன்று சித்திரை மாதம் இராஜகிரி மலைமீது கோயில் கொண்டிருக்கும் கமலக்கண்ணியம்மனுக்கு 10 நாட்கள் திருவிழா நடைப் பெற்று வருகிறது. இவ்விழாவினை முக்கியமாக வன்னியர்குலத்தவர்கள் கொண்டாடுகின்றனர். இத் திருவிழாவும் மிக நேர்த்தியாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

# இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறையின் பராமரிப்பில் செஞ்சிக்கோட்டை

செஞ்சிக் கோட்டையும் அதில் அடங்கியுள்ள கட்டடங்கள், கோயில்கள் முதலியனவும் 1921ஆம் ஆண்டு முதற்கொண்டே, 1904 ஆம் ஆண்டின் தொல்லியல் சட்டப்படி, இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறையின் பராமரிப்பின் கீழே கொண்டு வரப்பட்டது.

அதற்கு முன்பு இக்கோட்டை அப்போதைய சென்னை அரசின் பொதுப் பணித் துறையினால் பராமரிக்கப்பட்டு வந்தது.

1921ஆம் ஆண்டுக்குப் பிறகும், சுமார் 20 ஆண்டுகள்வரை இக்கட்டடங்களைப் பராமரிப்பதும் பழுது பார்ப்பதும் பொதுப்பணித்துறையிடமே (இந்திய தொல்லியல் ஆய்வுத்துறைக்காக) இருந்து வந்தது.

எவ்வாறெனில், இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறையின் அதிகாரிகள் அக் கட்டடங்களுக்கு என்னென்ன முறையில் பழுது பார்க்கப்பட வேண்டும் என்பதைத் தாங்கள் பார்வையிடும்போது ஆய்வுக் குறிப்புகளில் எழுதித் தயார் செய்வர். அவற்றின் அடிப்படையிலும், மற்றும் அளிக்கப்பட்ட நிதி வசதியைப் பொறுத்தும், பொதுப்பணித் துறையாரால் மதிப்பீடுகள் தயார் செய்யப் பட்டு, தொல்லியல் ஆய்வுத் துறையினரின் அனுமதிக்கு அனுப்பப்படும். அவற்றைப் பரிசீலித்துத் தொல்பொருள் ஆய்வுத்துறை அனுமதி வழங்கிய பின், அம் மராமத்துப் பணிகள் பொதுப்பணித் துறையினரால் மேற்கொள்ளப்படும்.

பின்பு, தொல்லியல் ஆய்வுத் துறையிலேயே பராமரிப்பு நிபுணர்கள் நியமிக்கப்பட்டு, அவர்களைக் கொண்டே (இந்திய சுதந்திரத்திற்குப் பின்) பழுது பார்க்கும் பணிகள் நடைபெறலாயின,

பொதுப்பணித்துறையின் பராமரிப்பில் அப்போதைய முக்கிய நோக்கம், ஏற்கனவே பழுதடைந்திருந்த கட்டடங்கள் மேலும் பழுது அடையாத வண்ணம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதாகும். இதைத் தவிர அவற்றை முழுதும் பழுது பார்க்கும் பணியில் அத்துறை ஈடுபட முடியவில்லை.

ஏனெனில், அப்போதைய நிதிவசதி மிகவும் குறைவு. அதுவும் தவிர, பொதுப்பணித்துறையில் இத்தகைய புராதன கட்டடங்களைப் பழுது பார்க்கத் தகுந்த நிபுணர்கள் இருந்திருக்க நியாயம் இல்லை.

பழமையான சின்னங்களைப் பழுது பார்த்துப் பாதுகாக்கும் முறைக்கும் பொதுப் பணித்துறை ஈடுபட்டுள்ள பணிகளின் முறைக்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன.

பொதுப் பணித்துறை நிறைய புதிய கட்டடங்களைக் கட்டுவதும் அவற்றைப் பராமரிப்பதும் முக்கிய பணியாகச் செய்து வருகிறது. பழமையான இத்தகைய கட்டடங்களை, அதன் தொன்மை சிதையாமல் பழுது பார்ப்பது அவர்களது பணிக்கு வேறுபட்ட செயல் ஆகும். எனினும் அப்போதைய சூழ் நிலையிலும் இருந்த வசதியிலும் அவர்கள் ஆற்றியுள்ள பராமரிப்புப் பணிகள் மிகவும் சிறந்தவை என்றே கூறவேண்டும்.

கட்டடங்கள் பல விழுந்துவிட்ட நிலையிலும், சாய்ந்து நிற்கும் நிலையிலும், மற்றும் பல, எந்நேரமும் விழுந்துவிடும் என்ற அபாய நிலையிலும், அவற்றை மேலும் பழுது அடையாமலும், விழுந்துவிடாமலும் இருக்கவேண்டி அவற்றின் அருகேயும், கீழேயும் கருங்கல் கட்டடங்களைக் கட்டி முட்டுக் கொடுத்துப் பாதுகாத்திருக்கின்றனர். அவ்வாறு செய்ததன் மூலம் இன்றைக்கும் பல பழமையான கட்டடங்களை நாம் முழுமையாகப் பெற்றிருக்கிறோம்.

இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறை இவற்றைப் பராமரிக்கத் தொடங்கியதும் முதற்கட்டமாக, மிகவும் அபாயகரமான நிலையில் இருந்த கட்டடங்களைப் பழுது பார்க்க எடுத்துக்கொண்டன. ஆங்காங்கே கீழே சரிந்து விழுந்த கோட்டைச் சுவரை அவற்றிலிருந்து சரிந்த கற்களைக் கொண்டே திரும்பவும் பழைய பாணியில் கட்டப்பட்டன.

இவ்வாறு சரிந்த கட்டடங்கள் இன்றைக்கும் பல இடங்களில் மீண்டும் கட்டப்பட்டு வருகிறது. இப்பணி தொடர்ந்து சுமார் 15 வருடங்களாக நடைபெற்று வருகிறது.

இதே போல விழுகின்ற நிலையில் இருந்த பல கட்டடங்களைப் பிரித்து மீண்டும் அதே போல, ஆனால் உறுதியுடன் கட்டப்பட்டுள்ளது.

வேங்கடரமணர் ஆலயம், பட்டாபிராமர் கோயில், சிவன் கோயில், ரங்கநாதர் ஆலயம், கிருஷ்ணன் கோயில், ஆஞ்சநேயர் கோயில் முதலிய பல கட்டடங்கள் பழுதடைந்த நிலையில் இருந்தன. இக் கட்டடங்களை மீண்டும் பிரித்துப் பழமை மாறாமல் கட்டப்பட்டுள்ளன.

கல்யாணமகால், நெற்களஞ்சியங்கள், உடற்பயிற்சிக் கூடம், கிருஷ்ணகிரி மலைமேல் உள்ள தர்பார் மண்டபம் முதலியவற்றின் இடிந்த பாகங்கள் சரிசெய்யப் பட்டு, பூச்சு வேலை செய்து, அனைவரும் கண்டு மகிழும் வகையில் கட்டடங்கள் பழமை நிலையில் அழகுபடுத்தப்பட்டுள்ளன.

இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறை இப்பணிகளை அதிக விளம்பரம் ஏதுமின்றிச் செய்து வருவதைப் பலர் அறிவர்.

இக்கோட்டையில் உள்ளேயும், வெளிக்கோட்டைப் பகுதியிலும் உள்ள நிலங்கள் பெரும்பாலும் தனி நபர்களின் சொந்த நிலங்களாக மாறி உள்ளன.

உள்கோட்டைப் பகுதியில் இருந்த நிலச் சொந்தக்காரர்கள், தங்கள் நிலங்களில் பயிரிடுவதற்கும், ஆடு மாடுகள் மேய்ப்பதற்கும் அதைப் பயன்படுத்தி வந்தனர். இதனால் பார்வையாளர்கள் மிகுந்த தொல்லை அடைந்து வந்தனர்.

தவிர, கட்டடங்களின் மீதும் கோட்டைச் சுவர்களின் மீதும் பயிரிடுவோரின் கால்நடைகள் செல்வதால் அவற்றிற்குச் சேதம் ஏற்பட்டு வந்தது.

ஆகவே, இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறை உள் கோட்டையில் உள்ள நிலங்களைத் தன்னகப்படுத்த ஏற்பாடு செய்தது.

மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒத்துழைப்புடன் உள்கோட்டையில் இருந்த தனிநபர்களுக்குச் சொந்தமான நிலங்களை, இந்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறை, தமிழக அரசு நிர்ணயித்த விலைப்படி அதற்குண்டான கிரையம் கொடுத்து இந்திய அரசுக்கு உரிமை செய்துகொண்டது.

இதனால் உள்கோட்டைப்பகுதி இப்போது நல்ல முறையில் பாதுகாக்கப் பட்டு வருகின்றது.

மேலும் இத்துறை, அகழ்வாராய்ச்சி பல செய்து அரண்மனைக் கட்டடப் பகுதிகளையும் சிலை, சிற்பங்கள் முதலியவற்றையும் கண்டுபிடித்து வருகிறது:

இவ்வாறு அகழ்ந்தெடுத்த பகுதிகளையும் அவற்றில் புதிதாகக் கண் டெடுத்த பொருள்கள், கட்டடங்கள் முதலியவற்றையும் பாதுகாப்பதில் இந்தியத் தொல் பொருள் ஆராய்ச்சித் துறை அரும்பணி ஆற்றி வருகிறது.

இத்துறையின் பணிகள் தொடரவும் நமது பழமையான கலாச்சாரச் சின்னங்கள் நல்ல முறையில் பாதுகாக்கப்படவும் பொதுமக்கள் நல்ல முறையில் பல ஒத்துழைப்புகள் தரவேண்டும்.

எவ்வாறெனில், இவைகளைப் பார்வையிட வருபவர்கள் கண்ட இடங்களில் குப்பைக் கூளங்களைப் போடுவதும், அசுத்தம் செய்வதும் தவிர்க்கப்பட வேண்டும்.

முக்கியமாகச் சுவர்களின் மீதும் பாறைகள் மீதும் தங்கள் பெயர்களைப் பதித்தல் கூடாது. இச் செயல்கள் தொல்லியல் ஆய்வுச் சட்டப்படி தண்டனைக் குரிய குற்றமாகும். எனினும் பொதுமக்களின் பூரண ஒத்துழைப்பின்றி இத்தகைய செயல்களைத் தடுக்க இயலாது.

இவற்றை நல்லமுறையில் செப்பனிடுவதும் பாதுகாப்பதும் நம்முன்னோர்களுக்கு நாம் செய்யும் நன்றிக் கடன் மட்டும் அல்ல, நமது சந்ததிகளுக்கு நாம் செய்யக் கூடிய நற்பணியும் ஆகும்.



# முடிவுரை

செஞ்சிக்கோட்டை அழகிய சிற்பவேலைப்பாடுகளுடன் கூடிய பல கோயில் களைத் தன்னுள்ளே கொண்டிருந்தது. அவற்றில் வேங்கடரமணர் ஆலயமும், பட்டாபிராமர் கோயிலும் மிகப் பிரம்மாண்டமான அளவில், பிரமிக்கத்தக்க முறையில் அமைந்திருந்தன.

முஸ்லீம்கள் படையெடுப்பின்போது இவைகளுக்குப் பெரும்பான்மையான சேதம் விளைவிக்கப்பட்டது.

அற்புதமான கற்சிலைகள் பல உடைத்தெறியப்பட்டன என்பது தற்போது அகழ்வாராய்ச்சியில் கிடைக்கும் ஓரிரு உடைந்த சிற்பங்களின் மூலம் தெரிகிறது.

அதற்குப்பின் இக் கோயில்களில் பூசை வழிபாடு இல்லாமலும் கேட்பாரற்றும் கிடந்தமையால் மேலும் அவை பாழ்பட்டுவிட்டன.

பிரெஞ்சுக்காரர்கள் தங்கள் வசம் இக்கோட்டையை எடுத்துக்கொண்டபோது இக் கோயில்களிலுள்ள சிலைகள், சிற்பவேலைப்பாடுகள் கொண்ட தூண்கள் ஆகியவற்றை இங்கிருந்து, அவர்கள் தலைநகரான புதுச்சேரிக்கு எடுத்துச் சென்றனர். அச்சிலைகள் இன்னும் புதுச்சேரியில் அருங்காட்சியகத்திலும், பூங்காக் களிலும் காட்சிப் பொருள்களாக வைக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

மிகப் பெரிய அழகிய தூண்கள் பல, புதுவையில் கடற்கரை ஓரமாகக் காட்சிப் பொருளாக நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதை இப்பொழுதும் காணலாம்.

பட்டாபிராமர் கோயிலில் கற்கள் உடைக்கப்பட்டு 'டுப்ளேயின்' சிலைக்குப் பீடமாக உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. இன்னும் சில கோயில் கட்டடப் பாகங் கள் சித்தாமூரில் உள்ள ஜெயினர் ஆலயத்திற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஆங்கிலேயர் ஆட்சியின்போது அவர்கள் சென்னைக்கு முக்கியத்துவம் கொடுத்ததால், இக்கோட்டை முற்றிலுமாகக் கவனிப்பாரற்றுக் கிடந்தது.

பிறகு 1921ஆம் ஆண்டுமுதல் தொல்பொருள் இலாக்காவின் பராமரிப்பின் கீழ், அரசியல் சாசனத்தின் மூலம் கொண்டுவரப்பட்டு, கொஞ்சம் கொஞ்சமாகப் பழுது பார்க்கப்பட்டு, தற்போதைய உன்னத நிலையை அடைந்துள்ளது.

ஆயினும் 'இவ்வூர் இழந்த கலைச் செல்வங்களை இனிப் பெறமுடியுமா?' என்று இவ்வூர் மக்கள் ஏங்கி நிற்கின்றனர். இவ்வூர் மக்கள் மட்டுமா? இக்கோட் டையைக் கண்டு திரும்பும் ஒவ்வொரு கலையுள்ளமும் அவ்வாறே எண்ணி ஏங்கும் என்பதில் ஐயமில்லை.

# செஞ்சியைச் சுற்றிலும்

## மண்டகப்பட்டு குகைக்கோயில்

செஞ்சி — விழுப்புரம் சாலையில் செஞ்சியிலிருந்து 17 கி.மீ. தொலைவில், சாலையிலிருந்து சுமார் ஒரு கி.மீ. கிழக்கில் இவ்வூர் உள்ளடங்கி அமைந்துள்ளது.

பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மனால் நிறுவப்பட்ட முதற்குகைக் கோயில் இதுவே யாகும். இங்கேயுள்ள அவரது வடமொழிக் கல்வெட்டுச் செய்தியின் சாரம்:

பல்லவ மன்னன்
*மகேந்திர வர்மன்* (1)
(கி. பி. 580 - 630)

புதுக்கோட்டையடுத்த
சித்தன்ன வாசல்
குகைக் கோயில்
மண்டபத் தூணில்
காணப்பெறும்
ஓவியம்.



'செங்கல் சுதை, மரம், உலோகம் ஆகிய எளிதில் சிதைந்து விடக் கூடிய பொருள்களைப் பயன்படுத்தாமல் லட்சதாயதன் என்னும் இக்கற்றளியை பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மும்மூர்த்திகளுக்கு 'விசித்திர சித்தனால்' நிர்மாணம் செய்யப்பட்டது.'

மலையைக் குடைந்து கற்றளிகள் செய்யும் புதியமுறையைத் தமிழகத்தில் புகுத்தியவன் பல்லவமா மன்னன் மகேந்திர வர்மனே ஆவார். இதனால்தான் அவருக்கு லட்சுதாயன், விசித்திரசித்தன் போன்ற பல பட்டப் பெயர்கள் வழங்கப் பட்டன.

இக்கற்றளி, மிக எளிய மண்டபம் போன்ற அமைப்பு கொண்டது. மண்டபம் இரு பிரிவுகளாக,முன்னே முகமண்டபமும் உள்ளே அர்த்தமண்டபமும் உருவாக்கப் பட்டுள்ளன. தூண்களும் அவற்றின் போதிகைகளும் வேலைப்பாடின்றி எளிய முறையில் அமைந்துள்ளன.

குகையின் வெளிப் பக்கம் இரு துவாரபாலகர் கம்பீரமாக நிற்கின்றனர். மண்டபத்துள்ளே பின் சுவரில் மூன்று கருவறைகள்குடையப்பட்டுள்ளன. கருவறை களின் பின் சுவரில் கண்ணாம்பு வேலைப்பாடுகளின் சிதைவுகளும் ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்த அடையாளங்களும் காணப்படுகின்றன. இவற்றிலிருந்து இங்கு மும்மூர்த்திகளும் ஓவியங்களாகவே வரையப்பெற்று வணங்கப்பட்டு வந்தனர் என்று ஊகிக்க இடமுள்ளது.

## 2. தளவானூர் 'சத்ரு மல்லேஸ்வரம் ஆலயம்'

இவ்வூர் செஞ்சியிலிருந்து சுமார் 15 கி. மீ. தூரத்தில் அமைந்துள்ளது. பல்லவ மன்னன் முதலாம் மகேந்திர வர்மன் (கி. பி. 580 - 630) செய்வித்த அழகிய குடைவரைக் கோயில் ஆகும். இதில் பல அரிய அம்சங்களைக் காணலாம்.

வேலைப்பாடுகளுடன் கூடிய அதிஷ்டானம் பக்க வாட்டில் அமைக்கப்பட்ட படிகள், அழகிய சிற்பங்களுடன் அமைந்த குகை முகப்பு மேலே காணப்படும் அழகிய கூடுகளுடன் கூடிய *சபேர* நுழை வாயிலும், அந் நுழைவாயிலிலுள்ள வனப்பு மிக்க மகர தோரணமும், கபோதத்தின் மீதுள்ள பிரஸ்தர அமைப்பு ஆகிய இவையனைத்தும் இக்கோயிலில் காணப்படும் சிறந்த கலை நுணுக்கங்களாகும்.

மண்டபத்தின் பக்கச் சுவரில் கிழக்கு நோக்கிக் கருவறை அமைக்கப் பட்டுள்ளது அதையொட்டியே ஒரு சிறு முன்மண்டபமும் குடைவிக்கப்பட்டுள்ளது, ஒரு தனி சிறப்பாகும்.

குகை முகப்பில் இரண்டும் உள்ளே கருவறை முன் இரண்டுமாக மொத்தம் நான்கு துவார பாலகர்கள் இங்குக் காட்சி தருகின்றனர்.

இக்கோவிலில் மகேந்திர வர்மனின் ஒரு சமஸ்கிருத கல்வெட்டும் ஒரு தமிழ் கல்வெட்டும் உள்ளன. 'சத்ரு மல்லேஸ்வராலயம்' என்கின்ற இக் கற்றளியை நரேந்திரன் என்கிற சத்ரு மல்லன் செய்வித்த செயல்களை இக்கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

பிற்காலப் பல்லவ அரசன் இரண்டாம் நந்திவர்மனின் தமிழ் கல்வெட்டொன் றும் இக்கோயிலில் உள்ளது.



## 3. பனைமலை சிவன் கோயில்



செஞ்சியிலிருந்து தெற்கிலுள்ள அனந்தபுரம் அருகே சுமார் 18 கி. மீ. தூரத்தில் மலைமீது சிவன்கோயில் அமைந்துள்ளது. மமைல்லபுரத்துக்கடற்கரை கோயிலையும் காஞ்சி கைலாசநாதர் கோயிலையும் கட்டிய பல்லவ மாமன்னன் ராஜசிம்மனால் [700-728] இக்கோயிலும் கட்டப்பட்டுள்ளது.

இதன் முக்கிய விமானம் கிழக்கு நோக்கி மூன்று தளங்களையும், சுற்றிலும் சிறிய சந்நிதிகளை அங்கங்களாகவும் கொண்டு அமைந்துள்ளது. முக்கிய சந்நிதி யின் கருவறை சதுரமாகவும் பக்க சந்நிதியின் கருவறை நீண்ட சதுரமாகவும் அமைக்கப்பட்டுள்ளது. விமானத்தின் மூன்றாவது தளத்தில் [சிகரம்] மேல்புறம் செங்கற்களால் கட்டப்பட்டுள்ளது. இது பிற்காலத்திய கட்டடமாகும். முக்கிய விமானத்தின் சுவர்களில் ஆங்காங்கே முன் கால்களைத் தூக்கிய நிலையில் சிங்கங் கள் (யாளிகள்) அமைக்கப்பட்டுள்ளன.

கருவறையின் உள்ளே பின் சுவரில் சோமாஸ்கந்தரும் நடுவில் லிங்கமும் உள்ளன. அர்த்த மண்டபத்தில் இரு சுவர்களிலும் பிரம்மா, விஷ்ணு உருவங்கள் சுதைச் சிற்ப வடிவில் உள்ளன.

வடக்குப் பக்கத்தில் உள்ள சிறிய சந்நிதியில் மிகவும் அழகான பல்லவர் கால ஓவியங்கள் காணப்படுகின்றன. அவை மிகவும் சிதைந்த நிலையில் உள்ளன. வனப்புமிக்க ஓர் குடையின்கீழ் நின்ற நிலையில் பார்வதி தேவியின் அழகிய உருவ மும் சற்றுத் தள்ளி ஆடும் நடராஜரின் உருவமும் மிக அற்புதமாக வரையப் பட்டுள்ளன.

கருவறை வெளிச்சுவரின் அதிஷ்டானத்தில் பல்லவரின் சிறந்த எழுத்துகளில் கல்வெட்டுக்களைக் காணலாம். அவை ராஜசிம்மனுடைய விருது களையும் கோயிலுக்கு வழங்கப்பட்ட மானியங்களையும் கூறுகின்றன.

இங்குள்ள முதலாம் குலோத்துங்கன் கல்வெட்டு, ஈசனைக் 'குன்றுடைய மகா தேவர்' என்கிறது. சாதத்துல்லாகானின் கல்வெட்டில், பனைமலை 'பனசைநகர்' என்றுள்ளது.

மலை மீது செல்லும் வழியில் ஓர் குகை போன்ற வடிவில் பல்லவர் காலத்திய எழில் மிக்க துர்க்கைசிலை ஒன்று அமைந்து உள்ளது. அதன் அருகே ஸ்ரீபரா, சித்ரகார்முக, ஏகவீரன், சிரம சூடாமணி' போன்ற விருதுகளால் ராஜசிம் மனை வாழ்த்துகின்ற கல்வெட்டு வாசகம் உள்ளது.

பிற்காலத்திய மண்டபங்களும் அம்மன் கோயிலும் இங்குக் காணப் படுகின்றன.

## 4. திருநாதர் குன்று (சிறுகடம்பூர்)

செஞ்சி நகரத்திலிருந்து வடக்கில் சிங்கவரம் செல்லும் சாலையில், ஒன்றரை கிலோ மீட்டர் தூரத்தில் 'திருநாதர் குன்று' என அழைக்கப்படும் சமணர்களின் முக்கியத்துவம் வாய்ந்த இடம் அமைந்துள்ளது.

சாலையிலிருந்து மேற்குப் புறமாகச் செல்லும் கிளைப் பாதையில் செல்வோமானால் குன்றின் அடிப்பாகத்திலிருந்து அமைக்கப்பட்ட படிகளின் வழியாக இம் மலை மீது ஏறிச் செல்லலாம்.

உச்சியில் அமைந்த மிகப் பெரிய பாறையில் கிழக்கு நோக்கியவாறு இருபத்து நான்கு சமணத்தீர்த்தங்கரர்களின் சிலைகள் புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப் பட்டிருப்பதைக் காணலாம். கழுகுமலையிலும் இத்தகைய அமைப்பு உருவாக்கப் பட்டுள்ளது.

சமண முனிவரின் சிலை ஒன்று இரண்டாக உடைந்த நிலையில் அருகில் காணப்படுகிறது. இப்பாறை அருகே உள்ள மண்டபம் போன்ற இயற்கையான அமைப்பு, மிகவும் அற்புதமாயிருக்கிறது.

மதுரையிலுள்ள, கி. பி. முதல் மூன்று நூற்றாண்டுகளைச் சார்ந்த, சமணப் படுக்கைகளில் உள்ளதுபோலப் 'பிராமி' எழுத்துக்களைக்கொண்ட கல்வெட்டு இவ்வூர் குன்றின் மீதும் உள்ளது.

குன்றின் மேற்குப்புறத்தில் உள்ள இக்கல்வெட்டு, *'சந்திர நந்தி ஆசிரியர்'* என்ற சமண முனிவர், ஐம்பத்து ஏழு நாட்கள் *'யல்லேகனம்'* என்னும் (வடக்கு நோக்கி) உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்தார்' என்ற செய்தியை நமக்கு அளிக்கிறது.

ஒவ்வொரு ஆண்டும் சமணசமயப் பெருமக்கள் பலர் இங்கு வந்து விழாநடத்தி வழிபடுகின்றனர்.

## 5. சிங்கவரம்

செஞ்சி நகரத்திலிருந்து வடக்காகச் சுமார் ஐந்து கிலோமீட்டர் தொலைவில் *சிங்கபுரம்* என்னும் ஊர் உள்ளது. முற்காலத்தில் இப்பகுதி 'விஷ்ணு செஞ்சி' அல்லது சிங்கபுரநாடு என அழைக்கப்பட்டு வந்தது.

சிங்கபுரம் என்பது பல்லவமன்னன் சிம்மவர்மன் அல்லது சிம்மவிஷ்ணுவின் பெயரால் வந்திருக்கலாம். பல்லவமன்னன் மகேந்திர வர்மன் கட்டிய இக்கோயில், ராஷ்டிரகூட அரசனான கன்னரதேவன் கல்வெட்டிலும், சோழர் காலக் கல்வெட்டிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கோயில் கோப்பெருஞ் சிங்கன் காலத்தில், 'திருப்பன்றிக் குன்று எம்பெருமான்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளதால், ஆதியில் இங்கு வராகமூர்த்தியின் கோயிலும் இருந்திருக்கலாம் எனத் தெரிகிறது. பூதேவியுடன் வராகமூர்த்தியின் சிலை ஒன்று உடைந்த நிலையில் இன்றும் இக்கோயில் வளாகத்தில் உள்ளதைக் காணலாம்.

செஞ்சிநாயக்க அரசராயிருந்த கோபணார்யா என்பவர் காலத்தில் இக் கோயில் புதுப்பிக்கப்பட்டது.

ஊருக்குத் தென்புறம் அமைந்துள்ள குன்றின் அடிவாரத்திலிருந்து மேலே செல்லும் படிகள் உள்ள பாதையில் ஏறி, மலைஉச்சியில் இருக்கும் 'அரங்கனின்' ஆலயத்தை அடையலாம்.

ஒரே பாறையைக் குடைந்து முன்புறம் இரு தூண்களை அமைத்து, உட்புறம் நீண்ட கருவறை உருவாக்கியுள்ள திறம் வியப்பைத் தருகிறது. பள்ளி கொண்ட நிலையில் உள்ளே உருவாக்கப்பட்டுள்ள அரங்கனின் நெடிய திருவுருவம் கண்கொள்ளாக் காட்சியாகும்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் 'திருமயம்' என்னும் ஊரில் அமைந்துள்ள அரங்கனின் உருவம் போலவே இச்சிலையும் மிகப் பெரிய அளவில் அமைக்கப் பட்டுள்ளது.

கோயிலின் எதிரிலே விசாலமான மண்டபமும் அருகில் பாறையிலேயே வெட்டப்பட்டுள்ள வற்றாத குளமும் [சுனைநீர்] மிக அழகாகக் காட்சி அளிக்கின்றன.

அருகில் அம்மன் சந்நிதி அமைந்துள்ளது. இங்கு அம்மன் சிலைக்குப் பின்னால் காளியின் திருவுருவச் சிலை ஒன்று இருப்பதைக் காணலாம்.

இம்மலை மீது முன்பு காளி கோயில் ஒன்று தனியாக இருந்ததாகவும் பிற்காலத்தில் அது சிதைந்து போனதால், கோயிலிலிருந்த சிலையை மட்டும் இங்குப் பத்திரப்படுத்தி வைத்திருப்பதாகவும் கூறுவர்.

இவ்வம்மன் சந்நிதியின் அருகே சுரங்கப்பாதை ஒன்று செஞ்சிக் கோட்டைக்கு அமைந்திருந்ததாகவும், தேசிங்கு ராஜன் அச்சுரங்கப்பாதை வழியே அடிக்கடி வந்து அரங்கனை வழிபட்டுச் செல்வது வழக்கம் என்றும் கூறுவர்.

மலையின் உச்சிப் பாகத்தில் இலட்சுமி கோயிலும் அதனருகே 'இலட்சுமி தீர்த்தம்' என்று அழைக்கப்படும் சுவை நீரும், இதேபோல இராமர் கோயிலும் அதையடுத்து 'இராமதீர்த்தம்' என்று அழைக்கப்படும் குளமும் உள்ளன.

இக்கோயில் திருவிழாக்களில் வைகுண்ட ஏகாதசி விழா மிகவும் சிறப்பான தாகும். ஒவ்வொரு வருடமும் மக நாளன்று இங்குள்ள உற்சவ மூர்த்தியைப் புதுச்சேரிக்கு எடுத்துச்சென்று கடற்கரையில் நீராட்டி விழாக் கொண்டாடுவது வழக்கம்.

அச்சமயம் வழியில் செஞ்சியிலுள்ள சக்கராவரம் என்னு மிடத்திலுள்ள குளக்கரை மண்டபத்திலும் இவருக்குத் திருவிழா நடைபெறும்.

கோயிலின் வடபுறம் உள்ள வாயில் வைகுண்ட ஏகாதசி அன்று மட்டும் திறக்கப்படும் சொர்க்கவாயிலாகும். இவ்வாயிலுக்கு அருகே வடக்கில் சிறிது தூரத்தில் சிதைந்த நிலையிலிருக்கும் நரசிங்கப் பெருமாள் கோயிலும் காணத் தக்கதாகும். அதனருகேயும் ஒரு நீர்ச்சுனை உள்ளது.

## 6. மேலச்சேரி

சிங்கபுரத்திற்கு மேற்கே சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள பழமை வாய்ந்த கிராமம் மேலச்சேரி என்று அழைக்கப்படுகிறது. அக்காலத்தில் செஞ்சி நகரம் இவ்வூர்வரை பரவி இருந்தது. ஆகவே இதற்குப் 'பழைய செஞ்சி' என்ற பெயரும் உண்டு.

இவ்வூருக்கு வடக்கேயுள்ள சிறிய குன்றின் மேல் சிவன்கோயில் ஒன்று உள்ளது. கல்லைக்குடைந்து அழகிய வேலைப்பாடுகளுடன் இக்கோயில் உருவாக் கப்பட்டுள்ளது.

இவ்வூருக்குத் தென்மேற்குத் திசையில் புகழ் வாய்ந்த பாஞ்சாலி அம்மன் கோயில் உள்ளது.

ஊருக்குத்தெற்கே நடுக்காட்டில் அமைந்துள்ளது பச்சையம்மன்கோயில். இது இவ்வூர் மக்களின் குலதெய்வம் எழுந்தருளியுள்ள கோயிலாகும்.

இக்கோயிலின் எதிரே அமைந்துள்ள ஏழு ஜடா முனிகளின் உயரமானஉருவச் சிலைகள் பார்ப்பவர் மனத்தில் பயத்தைத்தோற்றுவிப்பதாக உள்ளன. இக்காட்டுப் பிரதேசம் இச் சடா முனிகளின் காவலில் உள்ளதாக மக்கள் நம்பிக்கை வைத்திருக் கிறார்கள்.

செங்கை எம். ஜி. ஆர். மாவட்டத்திலுள்ள இந்தளூர் என்ற இடத்தில் உள்ள கி. பி. ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டு ஒன்றில், '*கீழைச்சேரி கோழி கொடு கொத்து*' என்ற செய்தி காணப்படுகிறது.

நச்சினார்க்கினியர் தொல்காப்பிய உரையில், 'கீழச்சேரி கோழி அலைத்தது என்றால் மேல்சேரி கோழி அலைப்புண்டதும் அது' எனக் குறிப்பிட்டுள்ளார். ஆகவே, இங்குள்ள கீழைச்சேரி, மேலைச்சேரி என்னும் ஊர்கள் தொன்மையான தென அறிகின்றோம்.

மேலைச்சேரி விரிவடைந்து செஞ்சியாக மாறியது என்பர். ஆகவே மேலைச் சேரியை *ஆதி செஞ்சி* என்றும் அழைப்பர்.

கர்நாடக ராஜாக்கள் சுவிஸ்தர சரித்திரத்திலும், 'மேலைச் சேரி அதுவும் செஞ்சிக்குள்ளே சேர்ந்தது' என்று கூறப்படுகின்றது. இங்குள்ள தீப்பாய்ந்தாள் கோயில் அல்லது திரௌபதி அம்மன் கோயில் மிகவும் புகழ் பெற்றதாகும்.

## 7. மேல் சித்தாமூர்

தமிழகத்தில் திகம்பரப்பிரிவு சமணசயமத்தினருக்குத் தலைமைப் பீடமாக அமைந்து, மடத்தினைக் கொண்டியங்கும் இடம் மேல்சித்தாமூர். இவ்வூர் செஞ்சியிலிருந்து கிழக்கே பத்து கி. மீ. தொலைவில் அமைந்துள்ளது.

இவ்வூரில் மலையநாதர், பார்சுவநாதர் ஆகிய சமண தீர்த்தங்கரர் இரு வருக்கான கோயில்களும் இந்துக்களின் கோயில்கள் இரண்டும் மற்றும் கிறிஸ்துவர்களுக்கான கோயில்கள் இரண்டும் உள்ளன.

மலையநாதர் கோயிலில் உள்ள பாறைச் சிற்பங்களில் ரிஷபநாதர், நேமிநாதர், பார்சுவநாதர், கோமதீஸ்வரர் ஆகிய தீர்த்தங்கரர்களுக்குச் சிற்பங் கள் தூண்களிடையே மிக அழகாக செதுக்கப்பட்டுள்ளன. இங்குள்ள சிற்பங்கள் யாவும் முதலாம் ஆதித்த சோழனது காலத்தைச் சேர்ந்தவை (கி. பி. 871 - 907) எனக் கூறுவர்.

மற்றுமொரு கோயிலான பார்சுவநாதர் கோயில் பதினாறாம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. இதன் எஞ்சியுள்ள மண்டபமும் மற்ற பகுதிகளும் 19ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டவையாகும். இவை செஞ்சிக் கோயிலிலிருந்து கொண்டு வரப்பட்ட சிற்ப வேலைப்பாடுள்ள கட்டடப்பகுதிகள் என ஒருசாரார் கூறுவர்.

எப்படியாயினும் இங்குள்ள கோயில்கள் கண்கவரும் கலை நுணுக்கங்களோடு கட்டப்பட்டவை என்பது கண்கூடு.

சமணர்களுக்கான தமிழகத்தின் ஒரே மடம் இங்குதான். இயங்கி வருகின்றது.

சித்திரைமாதக் கடைசியிலும் வைகாசி முதலிலுமாக ஆண்டுதோறும் இங்கு பிரம்மோற்சவம் மிகவும் சிறப்பாக நடைபெறுகிறது. அவ்வமயம் நாடெங்கிலுமுள்ள சமணர்கள் கூடி இங்கு விழாவினைச் சிறப்பாகச் செய்வார்கள்.

## 9. எண்ணாயிரம்

செஞ்சியிலிருந்து விழுப்புரம் செல்லும் நெடுஞ் சாலையில் 27 கி. மீ. தொலைவில், இடதுபுறம் அமைந்துள்ள பாதையில் (கிழக்கில்) சென்றால் அங்கிருந்து சுமார் எட்டு கி. மீ. தூரத்தில் எண்ணாயிரம் — பிரம்மதேசம் என்னும் ஊர்களை அடையலாம்.

இவ்வூரில் எட்டாயிரம் சமணர்கள் வாழ்ந்து வந்தனர் என்றும், வைணவ ஆச்சார்யரான இராமானுசர் இங்கு விஜயம் செய்தபோது அவரை எதிர்த்த சமணர்களை வாதத்தில் வெற்றி கொண்டு,அவர்களை வைணவர்களாக மாற்றியதால் இவ்வூருக்கு 'எண்ணாயிரம்'(எட்டு ஆயிரம்)என்ற பெயர் ஏற்பட்டது என்றும் கூறுவர்.

பழங்காலத்தில் பருத்திக் கொல்லை என்னும் பெயரில் இவ்வூர் வழங்கப் பட்டுள்ளது.

எண்ணாயிரத்தில் நரசிம்மசுவாமி கோயிலிலுள்ள சோழர்காலக் கல்வெட்டு, இவ்வூர்க் கோயிலில் விடுதிகளுடன் கூடிய வேத ஆகமக் கல்லூரி ஒன்று அக்காலத்தில் அமைந்திருந்ததாகக் கூறுகிறது.

இக்கல்லூரியில் சமஸ்கிருத மொழியும் திவ்ய பிரபந்தமும் ஓதப்பட்டு வந்தன என்பதை அறியும்போது இவ்விரு மொழிகளும் தமிழக மக்களின் முக்கிய மொழிகளாக இருந்தன என அறியலாம், இவ்வரலாற்றுச் சிறப்புமிக்க செய்தியைக்கூறும் கல்வெட்டு தமிழிலேயே பொறிக்கப்பட்டுள்ளது என்பது தமிழுக்கு அக்காலத்தில் அளிக்கப்பட்ட சிறப்பு எனலாம். தமிழக வரலாற்றிலேயே இத்தகைய சிறப்பான கல்லூரி சோழர் காலத்தில் இருந்ததை நாம் இதன் மூலம் அறிகிறோம்.

சோழப் பேரரசர்களான இராசராசனும் (கி. பி. 985— 1014) இராஜேந்திர சோழனும் (கி. பி. 1014- 1044) வழிபட்ட கோயில்கள் பல தமிழகத்தில் இன்றும் சிறப்புற்று விளங்குகின்றன. அவற்றில் முதலாம் இராஜேந்திரன் காலத்தைச் சேர்ந்த இக்கோயில் மிகவும் சிறப்பு வாய்ந்தது எனலாம்.

இவ்வூருக்கு அருகில் 'எசாலம்' என்னும் இடத்தில் முதலாம் இராஜேந்திர சோழனின் செப்பேடு கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இவ்வூரில் சிவன் கோயில் ஒன்றும் உள்ளது.

இதை அடுத்துள்ள பிரம்மதேசம் என்னும் ஊரிலும் இரண்டு பழமையான கோயில்கள் அமைந்துள்ளன. அடுத்துள்ள நந்தி (கிரி) மலையிலும் அதையடுத்த மேல்கூடலூரிலும் சமணப்படிமங்களும் கல்வெட்டுக்களும் அண்மைக் காலத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

## நரசிங்கப் பெருமாள் கோயில்

இக்கோயில் எண்ணாயிரத்தில் ஊரின் மத்தியில் அமைந்துள்ளது. கோயிலில் கருவறை, இடைநாழி, அர்த்தமண்டபம், முன் மண்டபம் ஆகிய முக்கிய கோயில் பகுதிகளுடன் திருச்சுற்று மாளிகை, திருமதில் ஆகியவையும் அழகிய கலைச் சிற்பங்களும் அமைந்துள்ளன.

கருவறையில் உள்ள பெருமாள், வைகுண்ட வாசர் எனப் பெயர் கொண்டு திருமகள், நிலமகள் ஆகிய இருவரும் இருபுறமிருக்க அமர்ந்த கோலத்துடன் காட்சி தருகிறார்.

இந்தக் கோயில் பத்தாம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாகத் தெரிகிறது. பிற்காலச் சோழர்களும் இக்கோயிலில் திருப்பணிகள் செய்துள்ளனர்.

## சிவன் கோயில்

இவ்வூரில் சனிமூலையில் சிவன் கோயில் ஒன்று சிதைந்த நிலையில் இருப்பதைக் காணலாம். ஊருக்குத் தெற்கில் ஒரு கிலோ மீட்டர் தொலைவில் 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சிவாலயம் ஒன்று இருந்திருக்க வேண்டும். இதை அங்குள்ள இடிபட்ட கோயிற்பகுதிகளிலிருந்து அறிகிறோம்.

இவ்வூரில் மான்குளம், வண்ணான் குளம், வைணவக்குளம், பெரியான் குளம், தக்ரான்குளம், பெருமாள் குளம், மதிகெட்டான் குளம், செம்மேரி குளம் ஆகிய பெயர்கள்கொண்ட எட்டுக்குளங்கள் உள்ளன. இக்கோயிலில் உள்ளத்தைக் கவரும் உதிரிச் சிற்பங்கள் பல உள்ளன.



## 9. பிரம்மதேசம்

எண்ணாயிரம் அருகில் உள்ள வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த சிற்றூர் பிரம்ம தேசம் ஆகும். இங்குப் பாடலீஸ்வரமுடையார் எனும் திருநாமம் கொண்ட சிவன் கோயில் அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் அமைந்துள்ளது.

இக்கோயிலில் முதலாம் இராஜேந்திரனுடைய இருபத்து நான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டும் இராஜாதிராஜனுடைய இருபத்து ஒன்பதாம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டும் அமைந்துள்ளன.

வீர இராஜேந்திரன், முதலாம் குலோத்துங்கன், இரண்டாம் குலோத் துங்கன், மூன்றாம் குலோத்துங்கன் ஆகிய சோழ அரசர்களின் கல்வெட்டுகளும் இங்குவுள்ளன.

மற்றுமொரு சிவன் கோயிலான பிரம்மேசுவரர் எனும் சிவபெருமானின் கோயிலும் பிற்காலச் சோழர் கலைப்பாணிக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைந் துள்ளது. இங்கும் பல கல்வெட்டுகள் உள்ளன. இக்கோயில் ஊருக்கு வட மேற்கில் அமைந்துள்ளது. இது கருவறை, இடைநாழி, அர்த்த மண்டபம் ஆகிய வற்றுடன் இரண்டு சுற்றுப் பிராகாரங்கள் கொண்டு அழகிய முறையில் அமைந்த கோயில் ஆகும்.



★★★

★ செஞ்சிக் கோட்டை ★ ஏ.கே. சேஷாத்திரி ★

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 20 | 9 | அறிடைமை | அறிவுடைமை |
| 21 | 20 | இருந்தன | இருந்தது |
| 23 | 32 | இருந்துள்ளது | இருந்துள்ளன |
| 33 | 22 | கீழ்கண்டவாறு | கீழ்க்கண்டவாறு |
| 37 | 8 | மறுத்ததான் | மறுத்தான் |
| 38 | 12 | பிரிதொரு | பிறிதொரு |
| 39 | 30 | வள்ளாலராஜன் | வள்ளாளராஜன் |
| 40 | 29 | அமைக்கப்பட்டது | அமைக்கப்பட்டன |
| 54 | 2 | பாத்திரரான | பாத்திரமான |
| ” | 18 | ஆண்டு காலம் | ஆண்டுக்காலம் |
| 55 | 17 | செஞ்சி | |
| 57 | 5 | ஆங்கியேர் | ஆங்கிலேயர் |
| ” | 10 | நிர்பந்திக்க | நிர்ப்பந்திக்க |
| 58 | 5 | நவாபு | நவாபுக்கு |
| ’ | 13 | தேசிங்கு | மகமத்கான் |
| 59 | 15 | பதினொரு | பதினோர் |
| 59 | 21 | 761 | 1761 |
| ” | 28 | தலைகராக | தலைநகராக |
| 62 | 15 | வத்தனர் | வந்தனர் |
| ” | 22 | இச்சயத்தை | இச்சமயத்தை |
| 63 | 6 | வெள்ளிமேடுப்பேட்டை | வெள்ளிமேடுபேட்டை |
| 64 | 6 | இன்னும் | இன்றும் |
| 69 | 7 | அரண்களில் | அரண்கள் |
| 79 | 28 | அமைத்துள்ள | அமைந்துள்ள |
| 100 | 2 | பட்டுள்ளது | பட்டுள்ளன |
| 108 | 16 | Voulted roof | Vaulted roof |
| 105 | 12 | மண்டமும் | மண்டபமும் |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 151 | 17 | நிலைகளை கொண்ட | நிலைகளைக்கொண்ட |
| 161 | 21 | அவற்றின் | அவற்றில் |
| 175 | 2 | நாய்க்கர் | நாயக்கர் |
| 182 | 13 | கற்தூண் | கல்தூண் |
| ,, | 21 | மண்பமும் | மண்டபமும் |
| 188 | 10 | அமைந்துள்ளல். | அமைந்துள்ளன. |
| 192 | 15 | அல்வீரத்தைப் | அவ்வீரத்தைப் |
| ,, | 22 | மாதங்கன் | மாதங்கள் |
| 193 | 10 | சேர்த்த | சேர்ந்த |
| ,, | 22 | வரவழைக்கப்பட்டர். | வரவழைக்கப்பட்டார். |
| 217 | 27 | அமைந்திருந்த | அமைத்திருந்த |
| ,, | 30 | சுவைநீரும் | சுனைநீரும் |



## பாராட்டுக்கள் சில...!

'தஞ்சைப் பெரியகோயில்' நூலாசிரியர் ஏ.கே. சேஷாத்திரி, எம்.ஏ.,
(சேகர் பதிப்பகம் 66, பெரியார் தெரு, எம்.ஜி.ஆர். நகர், சென்னை - 600 078)

**Dr. இரா. கலைக்கோவன் அவர்கள்**
**திருச்சிராப்பள்ளி - 620017**

மேலோட்டமாகப் பார்த்தேன். நன்றாக வந்திருக்கிறது. தங்கள் உழைப்பில் உருவான நூல் அல்லவா!

★

**குமுதம்**

3-3-94 மதி: 47; மலர்: 22

கி.பி. 1004 — 1010'ல் ராஜராஜ சோழனால் கட்டப்பட்ட தஞ்சைப்பெரிய கோவிலின் வரலாற்றுச் சான்றுடன் கூடிய செய்திகள் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆசிரியரின் கடுமையான உழைப்பு தெரிகிறது.

★

**'தினமலர்' — சென்னை 8-12-93**

மொத்தத்தில் இந்நூல் தஞ்சைப் பெரிய கோவில் பற்றிய அருஞ் செய்திகள் பலவற்றை அளிப்பதுடன் கவர்ச்சியான அட்டை, அரியபல வரைபடங்கள், வண்ணப்படங்கள், நிழற்படங்கள் ஆகியவற்றைத் தாங்கியுள்ள தமிழ்நூல் என்ற முறையில் ஒவ்வொருவர் இல்ல நூலகத்திலும் இருக்கவேண்டிய நூல் எனலாம்.

—புலவர் வே. மகாதேவன்

**ஆவணம்**

இதழ்-4 சனவரி, 1994

இந்நூல் தஞ்சைப்பெரிய கோயிலின் கட்டிடம், சிற்பம், ஓவியம் மற்றும் படிமக்கலைகளின் சிறப்பை வரலாற்றுக் கண்ணோட்டத்தில் பல ஒளிப்படங்கள் மற்றும் வரை படங்களைக் கொண்டு எளிய முறையில் விளக்குகிறது. சில மரபு வழிச் செய்திகளுக்கு இந்நூல் ஆசிரியர் புதிய விளக்கங்கள் அளித்துள்ளார். காட்டாக, ஓவியத்தில் கருவூர்த் தேவர், இராஜராஜன் இருப்பதாகக் கருதப்படும் இரு உருவங்களை ஆடையணிகளைக் கொண்டு முறையே மதுராந்தக உத்தம சோழன், இராஜராஜன் என்றோ, இராஜராஜன் அவர் தம் மகன் இராசேந்திரன் என்றோ இருக்கலாம் என்று கூறுகிறார் (ப.8.) அக்கால கட்டிடக்கலையின் பொறியியல் நுணுக்கங்களும் பேசப்படுகின்றன.

★

**தமிழுக்கு நன்கொடை!**

சிறந்த வரலாற்று நூல். வண்ணப் படங்கள் அருமை; வரைபடங்களும் புகைப்படங்களும் நிறைந்த பதிப்பு! தமிழுக்கு ஒரு நன்கொடை!

— டாக்டர் புலவர்
வரத. கோவிந்தராசன் எம். ஏ.,

டாக்டர் கி. சேகர் அவர்கள்,
தமிழ்த்துறை,
உருமு தனலட்சுமி கல்லூரி,
திருச்சி-620019

புலிக் கொடியைப் புகழ்க் கொடியாக்கிய இராஜராஜனின் கற்கோயிலுக்குச் சொற்கோயிலாக அமைகிறது இந்நூல். பகைவர்களுக்குக் கொட்டும் தேளாய், நண்பர்களுக்குச் சொட்டும் தேனாய் விளங்கிய மாமன்னனின்மாட்சியைக் காணும் வாய்ப்பை நூல்வழி அறிகிறோம்.

தஞ்சைச் சோழ மன்னர்கள் குலமுறை கிளத்துப் படலமாகத் தொடக்க இயல்கள்அமைந்து வரவேற்கின்றன.

கோட்டையும்,கோயில் அமைப்பும், கோயில் சிற்பங்களும், கோயில் ஓவியங்களும் நேரிலே காணும் உள்ளுணர்வை ஏற்படுத்தியதிரு. சேஷாத்திரி அவர்கள் சொற்சித்தராகக் காட்சி தருகிறார்.

நாட்டிய முத்திரைகள் கொண்டு நம் உள்ளத்தில் சிற்பங்கள் நடனமாட வைத்திருக்கும் பாங்கு ஆசிரியரின் பல்கலைப் புலமைக்குச் சான்றாக அமைகிறது.

கல்லிலே உள்ள சொற்களைக் கரும்பினும் இனிய சொற்களால் அளிக்கும் பாங்கு உணர்ந்து மகிழ்தற்குரியது.

★

**விடுதலை**
***ஞாயிறுமலர் 16-1-94***

ஒரு உண்மைத் தேடல் ஆவணமாகவே விஞ்சிநிற்கும் இந்தப் புத்தகம், தஞ்சைப் பெரிய கோயிலை இனிப் பார்க்கச் செல்பவர்களுக்கு முற்றிலும் புதியதொரு பார்வையினைத் தரும் என்பதில் அட்டியில்லை.

முன்னுரையில், தான் ஏழாண்டு காலம் அங்கு நடுவணரசுப் பணியாற்றியதும், முது நிலை அலுவலரான செல்லப் பிள்ளை என்பவரின் வழிகாட்டுதலும்தான் இந்தப் புத்தகம் உருவாக அடிப்படைக் காரணிகள் என விளக்கமுறப்பட்டுள்ளது,இந்தஉண்மைத் தேடல் ஆவணத்துக்கு மேலும் பெருமை சேர்க்கின்றது.

தொல்கலை - அகழ்வியலில் முதுகலை பயில்வோருக்கு இந்தப் புத்தகம் அரியதொரு துணையாக இருக்கும். தஞ்சைப் பெரிய கோயிலின் உள் அழகினை, அகல—ஆழங்களை வெளிக்கொணர முயலும் ஆய்வுமாணவருக்கும் கை விளக்காக இந்நூல் அணி செய்யும்.

★



# எமது வெளியீடுகள்

## தொல்பொருள், கல்வெட்டுத்துறை நூல்கள்

| | |
|---|---|
| டாக்டர் மா. இராசமாணிக்கனார் | கல்வெட்டுக்களில் அரசியல் சமயம் சமுதாயம் |
| இராமமூர்த்தி | மாசிமகமும் மங்கல நீர் வழிபாடும் |
| டாக்டர் கே.வி. இராமன் | தொல்லியல் ஆய்வுகள் |
| முத்து. எத்திராசன், எம்.ஏ., & மா. சந்திரமூர்த்தி எம் ஏ., | குந்தவையின் கலைக் கோயில்கள் (தமிழக அரசின் முதல் பரிசு) |
| சி.எம். கணபதி, எம்.ஏ , | தமிழக வரலாறும் பண்பாடும் |
| நடன. காசிநாதன், எம்.ஏ., | காலச் சுவடுகள் |
| | தொல்லியல் கட்டுரைகள்; முத்தரையர் |
| அனந்தபுரம் கோ. கிருஷ்ணமூர்த்தி | கல்வராயன் மலைமக்கள் (தமிழக அரசின் முதல் பரிசு) |
| ச. கிருஷ்ணமூர்த்தி எம்.ஏ., | திருவோத்தூர் வரலாறு (இரண்டாம் பரிசு) |
| பாகூர் புலவர் சு. குப்புசாமி | பல்லவனும் பராந்தகனும் |
| | மலையமான்கள் |
| கொடுமுடி சண்முகப் பிரகதம் | ஏரிப்பாசன வரலாறு |
| பி. எல். சாமி, ஐ.ஏ.எஸ். | தமிழ்நாட்டில் சிந்துவெளி எழுத்தோவியம் |
| வெள்ளையாம்பட்டு சுந்தரம் | கல் சொல்லும் கதைகள் |
| ஏ. கே. சேஷாத்திரி, எம்.ஏ., | தஞ்சைப் பெரிய கோயில் |
| | செஞ்சிக் கோட்டை |
| | (வேலூர் கோட்டை) |
| புலவர் தாமரைக்கண்ணன் எம்.ஏ., | வரலாற்றுக் கருவூலகம் |
| டாக்டர் க. த. திருநாவுக்கரசு | இலங்கையில் தமிழ்ப்பண்பாடு |
| டாக்டர் இரா. நாகசாமி | கல்லும் சொல்லும் |
| பேராசிரியர் மா. பசுவலிங்கம் | சங்க கால வஞ்சி |
| இரா. பவுன்துரை, எம்.ஏ., | தமிழகப் பாறை ஓவியங்கள் (தமிழக அரசின் இரண்டாம் பரிசு) |
| இரா. மதிவாணன், எம்.ஏ., | இலெமூரியா முதல் அரப்பா வரை |
| லட்சுமி மூர்த்தி, பி.ஏ., | வரலாற்றில் வளவனூர் |
| பேராசிரியர்கா.ம.வேங்கடராமய்யா | கல்வெட்டுகளில் தேவார மூவர் |
| புலவர் ந. வேங்கடேசன் | வரலாற்றில் வில்லியனூர் |
| | வரலாற்றுச் சின்னங்கள் |
| | பல்லவன் கண்ட பனைமலைக் கோயில் |
| | வரலாற்றில் அரிக்கமேடு |
| | கல்வெட்டுகளில் புதுவைமாநில ஊர்ப்பெயர்கள் |
| | வரலாற்றில் அரிய செய்திகள் |
| | வரலாற்றில் ஆரிய வைசியர் |
| | புதுவை மாநிலக் கல்வெட்டுகளில் நாடும் வளநாடும் |

## இலக்கியம், வரலாறு சார்ந்த நூல்கள்

| | |
|---|---|
| அறிவுலகின் குருதேவர் [தெ.பொ.மீ.] | பேராசிரியர் மா. ரா. இளங்கோவன் [தொகுப்பு] |
| இத்தாலியில் | தூக்கோவளன் எம்.ஏ., பி. எச்டி., |
| ஈயல் - அறிவியல் விளக்கம் | அனந்தபுரம் கோ. கிருஷ்ணமூர்த்தி |
| உரைவேந்தர் ஔவை | தி நா. அறிவுஒளி எம் ஏ., வித்துவான் ம. வி. இராகவன் |
| எழுத்துலக நாயகி | அருட்கவி அரங்க. சீனிவாசன் |
| கடல் வாணிகமும் தரை வாணிகமும் | புலவர் மு. த. வேலாயுதனார் |
| கம்பரும் காந்தியடிகளும் | சிலம்புச் செல்வர் ம. பொ. சி. |
| காவடிச் சிந்தும் கவிஞன் வரலாறும் | அருட்கவி அரங்க. சீனிவாசன் (தமிழக அரசின் முதல் பரிசு) |
| சாதனைப் பூவின் சரித்திர வசந்தம் | டாக்டர் சா. சகத்ரட்சகன் |
| சிந்தனையாளர் இங்கர்சால் பாகம் 1 | ப. செங்குட்டுவன் பி.எஸ்சி., பி.டி., |
| ,, பாகம் 2 | ,, ,, |
| சிந்தனைச் சிற்பிகள் | ,, ,, |
| ஞானியார் அடிகள் | வெள்ளையாம்பட்டு சுந்தரம் |
| தாயகம் தந்த நாயகம் [நீதிபதி வேதநாயகர்] | பேராசிரியர் மது. ச. விமலானந்தம் |
| தாயுமானார் கதை | வெள்ளையாம்பட்டு சுந்தரம் |
| நகைச்சுவை நாவலன் | புலவர் க. அரசுமணி |
| நல்லாசிரியரும் நன்மாணாக்கரும் | வெள்ளையாம்பட்டு சுந்தரம் |
| நெஞ்சில் நிறைந்தவர் [கடலூர் கதர் குப்புசாமி] | பேராசிரியர் த. பழமலய் |
| பாரதத்திலகம் மோதிலால் நேரு | புனிதவதி இளங்கோவன் எம்.ஏ.,பி.டி., |
| பாரதியும் பாரதிதாசனும் | டாக்டர் சா. சகத்ரட்சகன் |
| புத்துலக வழி காட்டிகள் | புலவர் க. அரசுமணி |
| புனித தோமையர் | தூக்கோவளன் எம்.ஏ., பி. எச்டி., |
| மக்கள் திலகம் (எம்.ஜி.ஆர்.) | வித்வான் வே. லட்சுமணன் |
| ராஜநந்திவர்மன் | ,, |
| ம.பொ.சி. படைத்த புதிய தமிழகம் | வெள்ளையாம்பட்டு சுந்தரம் [தொகுப்பு] |
| வ.உ.சி. கடிதங்கள் | ஆ. ரா. வெங்கடாசலபதி |
| வரலாற்றுக் களஞ்சியம் [புதுவை திருமுடி ந. சேதுராமன் செட்டியார்] | பாகூர் புலவர் சு. குப்புசாமி |
| வாழ்விக்க வந்த வள்ளலார் | டாக்டர் ஔவை நடராஜன் |
| விந்தனும் விமர்சனமும் | மு. பரமசிவம் |
| வெற்றிக் கதைகள் | வெள்ளையாம்பட்டு சுந்தரம் |
| வேதநாயகர் வாழ்வும் வளமும் | புலவர் க. அரசுமணி |

| | |
|---|---|
| The Maind and Thoght of Thiruvalluvar | பன்மொழிப் புலவர் க. அப்பாத்துரையார் |
| The Pagent of Tamil Literature | பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் |
| கல்விச் சிந்தனைகள் | ,, |
| நாடகக் காப்பியங்கள் | ,, |
| இரவீந்திரநாததாகூரின் கீதாஞ்சலி (கவிதை) | தஞ்சை கோ. நடராஜபிள்ளை |
| இங்கர்சாலின் உண்மை | 'கவிரத்ன' நலங்கிள்ளி |
| ,, எவ்வழி நல்வழி | ,, |
| மானுட விடுதலை (இங்கர்சால்) | மு.வளர்மதி எம்.ஏ., |
| தந்தை பெரியார் கருத்துரைகள் | |
| மங்கையர் சாதனைகள் | கோகிலா சுந்தரம் |
| சங்க நூல்களில் மீன்கள் | அறிஞர் பி.எல்.சாமி, ஐ.ஏ.எஸ். |
| ,, விந்தைப்பூச்சி | ,, |
| இலக்கியத்தில் அறிவியல் | ,, |
| இலக்கிய ஆய்வு | ,, |
| சங்க இலக்கியத்தில் அறிவியற்கலை | ,, |
| சங்க நூல்களில் செடி கொடிகள் | ,, |
| ,, மரங்கள் | ,, |
| ,, உயிரினங்கள் | ,, |
| ,, முருகன் | ,, |
| சங்கப்பாட்டில் பொங்கும் உணர்ச்சி | அறிஞர் அ.வெ.சுப்பிரமணியன் |
| சங்கப் பாட்டில் புதிய பார்வை | , |
| பேரெழில் வாழ்க்கை | ,, |
| அளபெடையும் ஆழ்பொருளும் திருக்குறள் நுண்ணாய்வு | ,, |
| The Bangle and The Javelin | ,, |
| சொல்லாய்வுக் கட்டுரைகள் | பன்மொழிப்புலவர் இரா. மதிவாணன் |
| கற்றதனால் ஆய பயன் | டாக்டர் கி. வேங்கட சுப்பிரமணியன் |
| கல்விக் கட்டுரைகள் | அருள் தந்தை இ. யோ. குழந்தையரசு எம் ஏ., பி.எல்., எம்.எட்., |
| உளவியலும் கல்வியும் | ம. அய்யாசாமி எம்.ஏ.,பி. எட்., |
| முற்காலத் தமிழ் இதழ்கள் | பேராசிரியர் 'இதழியல்' |
| சிலம்புச் செல்வரின் தலையங்க இலக்கியம் | மா. ரா. இளங்கோவன் |
| இந்திய இதழ்கள் | ,, |
| இதழியல் நோக்கு | ,, |
| முதல் நாளிதழ்கள் மூன்று | ,, |

| | |
|---|---|
| நினைவுப் பயணம் | அருட்கவி அரங்க. சீனிவாசன் |
| மனம் ஓர் ஆய்வு | கு. வை. இளங்கோ எம்.ஏ.,எம்.எட்., |
| இயற்கை பேசுகிறது | ,, |
| அரிமதியின் உவமைப் பூங்கா | ,, |
| கம்பனில் சில முத்துக்கள் | முத்து. எத்திராசன் எம். ஏ., பி. எட்., |
| சிந்தனைக் கதைகள் | புலவர் க. முனிசாமி எம்.ஏ., |
| இங்கர்சால் பேசுகிறார் | ப.செங்குட்டுவன். பி.எஸ்சி. ,பி.டி , |
| அறிவியலில் மறைக்கப்பட்ட தியாகங்கள் | ,, |
| எதிர்காலச் சிந்தனை (சுற்றுச்சூழல்) | டாக்டர் ஆ. யோகமூர்த்தி |
| பூம்பொழில் | புலவர் சி. செந்தமிழ்ச்சேய்,பி.இ., |
| பாடும் குயில் | கவிஞர் வரத. கோவிந்தராசன் |
| கச்சதேவயானி (யயாதி) | 'கவிரத்ன' நலங்கிள்ளி |
| வண்ணக் களஞ்சியம் | வெள்ளையாம்பட்டு சுந்தரம் |



சேகர் பதிப்பகம் 66, பெரியார் தெரு, எம்.ஜி.ஆர். நகர், சென்னை-600078


சேகர் பதிப்பகம்